1979

# தமிழ்நாடு சட்டப் பேரவை

## நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

VOL. 8 APL 1989 எண் : 3

V211,=1'N89
N54.5.3
133894.

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

தமிழ்நாடு · வணக்கப்பகம் · 23 செப் · எழும்பூர், சென்னை-600008.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஏப்ரல் 8, 1989 - தொகுதி 8 - எண் 3
Saturday, the 8th April, 1989-Volume 8-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

8—4—1989


பக்கங்கள்

1 இரங்கல் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் மறைவு .. .. 397—398

2 வினாக்கள் விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 398—424

3 தகவல் கோரல்—

(அ) சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிப் பாராளு மன்றத்தில் குறிப்பிட்டுள்ளது, பேரவைத் தலைவரின் தீர்ப்பு பற்றி மத்திய அமைச்சர் வெளியில் விமர்சித்துள்ளது, பேரவைத் தலைவரின் இல்லத்திற்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட சிலர் சென்று முற்றுகைப் போராட்டம் நடத்தியுள்ளது ஆகியவை பற்றிய பிரச்சினைகள் .. .. 425—446

(ஆ) பத்திரிகையாளர் மாடத்தில் செய்யப் பட்டுள்ள இட ஒதுக்கீடுகள் குறித்து .. 448—450

4 விதி 109இன் கீழ் அமைச்சரின் தன்னிலை விளக்கம்—

உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்து குறித்து அறநிலையத் துறை அமைச்சரின் விளக்கம்.. 447—448

5 கவன ஈர்ப்பு—

(அ) திருச்செங்கோடு வட்டம், குச்சிபாளையத் தில் தீ விபத்தினால் ஏற்பட்ட பாதிப்பு .. 450—453

(ஆ) சென்னை, முகப்பேர் பகுதியில் கட்டப் பட்ட வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள் அகற்றப் பெற்றுள்ளது .. .. 453—456

பக்கங்கள்

6 மானியக் கோரிக்கைகள், 1989–90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 17—கல்வி (தொடர்ச்சி).

| | | | |
|---|---|---|---|
| திரு. பி.எச். பாண்டியன் | .. | .. | 456—463 |
| *திரு. ஆஸ்கார் சி. நிக்லி | .. | .. | 463—468 |
| *திரு. செ. இராமலிங்கம் | .. | .. | 468—474 |
| திரு. எம். அப்துல் லத்தீப் | .. | .. | 474—485 |
| திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் | | .. | 486—492 |
| திரு. எஸ்.எஸ். ராமசுப்பு | .. | .. | 492—498 |
| *திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் | | | 498—518 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | | .. | 518—547 |

7 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 548—550

V2.1, P1 N89
N89. 4.3

தமிழ்நாடு ... 600 009.
138694

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1989, ஏப்ரல் 8, சனிக்கிழமை.**

**பங்குனி 26, விபவ— திருவள்ளுவராண்டு 2020**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

> ''யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு''

கற்றவன் ஒருவனுக்கு இதுதான் இவன் நாடு, இது தான் இவன் ஊர் என்பதில்லை. உலகில் உள்ள அனைத்தும் இவன் நாடாகும், இவன் ஊராகும். இப்படியிருக்கும்போது ஒருவன் சாகும்வரையிலும் கல்லாமல் காலம் கழிப்பது ஏன்?

### 1. இரங்கல் ( ப்பு

#### முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. வீ. சின்னையா அவர்கள் 28-1-1989 ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. சின்னையா அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டுவரை திருமயம் தனித் தொகுதியிலிருந்தும், 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டுவரை ஆலங்குடி தனித் தொகுதியிலிருந்தும் மற்றும் 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை புதுக்கோட்டை மாவட்டம் கொளத்தூர் தொகுதியிலிருந்தும் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து, அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இந்தப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1989 ஏப்ரல் 8

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மவுனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் நிலவரி ரத்து.

*46—(*வினா எண். 78)* திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டமும், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டமும் மழையின்றி வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ளதால் நிலவரியை ரத்துச் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) வறட்சி நிவாரண வேலைகளைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, (அ) பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் இராம நாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப் பட்ட நிலங்களுக்கு நிலவரியை ரத்துச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஆம். வறட்சி நிவாரணப் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் ஆகியவற்றில் மழையின்றி மக்கள் வறட்சியால் மிகவும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள மக்களெல்லாம் அங்கேயிருந்து வெளியூருக்குச் செல்கிற அளவுக்கு அங்கே வறட்சி தாண்டவம் ஆடிக்கொண் டிருக்கிறது. ஆகவே வறட்சி நிவாரணப் பணிகளை மிகவும் துரிதப்படுத்தி, அங்கே உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டியது மிகவும் முக்கியமாக இருப்பதால், அதைத் தீவிரப்படுத்த அரசு சீக்கிரமாக உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத் தைப் பொறுத்தவரை, நிலவரி முதலியன தள்ளுபடி செய்யப் படுவதற்கான செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து பெறப்பட்டு, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் ஆகிய பகுதிகளில் வறட்சி ஏற்பட்டிருப்பதைப்போல், ஆலங்குளம் தொகுதியும் மிகவும் வறட்சிப் பகுதியாக இருக்கிறது. நான் ஏற்கெனவே கலெக்டர் அவர்களிடமும் அரசிடமும் இதுகுறித்து சமர்ப்பித் துள்ளேன். அந்தப் பகுதியையும் வறட்சிப் பகுதியாக அறிவித்து, அங்கே வறட்சி நிவாரணப் பணி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவரவர்களே, பசும் பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைப் பொறுத்தவரைவறட்சி யால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி முதலியனவற்றைத் தள்ளுபடி செய்வதற்கு செயற் குறிப்பு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. அதுமட்டுமல்லாமல், வருகிற 15, 16ஆம் தேதிகளில் மாவட்டக் கலெக்டர்களின் கூட்டத்தை முதல்வர வர்கள் நடத்த இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றிய வறட்சி கொடுமைகள், மற்றைய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றிக் கேட்டுத் தெரிந்து, தகவல் பெற்ற தற்குப் பிறகு உரிய நடவடிக்கைகளை முறையாக இந்த அரசு உடனடியாக எடுக்குமென்ற உத்திரவாதத்தை அரசின் சார்பிலே வழங்குகிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வறட்சி நிவாரணம் அளிக்கின்றபோது வட்ட வாரியாக, தாலுக்காக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா என்று கணக்கிடுகிறார்கள். ஆனால் சில வட்டங்களில் ஒரு பகுதி வறட்சி உள்ள பகுதியாகவும், மறு பகுதி மிகவும் பாதிக்கப் பட்ட பகுதியாகவும் இருக்கின்றது. எனவே கிராம வாரியாகக் கணக்கு எடுத்து வறட்சி நிவாரணம் தருவதற்கு அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவரவர் களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அது பற்றிப் பேசப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் வேடசந்தூர் பகுதி யில் மிகப் பெரிய அளவுக்கு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற

காரணத்தால் கால்நடைகளுக்குக்கூட போதிய உணவு, தீவனம் அற்ற நிலை நீடிக்கின்றது. அரசு அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவரவர்களே, கேட்கப்பட்டிருக்கிற கேள்வி பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைப் பொறுத்தும், இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தும் இருக்கிறது. உறுப்பினரவர்கள் வேறு சில பகுதிகளையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஒட்டு மொத்தமான பதில் கலெக்டர் மாநாட்டுக்குப் பிறகு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் ஆகிய மாவட்டங்களில் நிலவரியை ரத்துச் செய்யும் உத்தேசம் அரசுக்கு இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்து விட்டார்கள். அதுபோல் கூட்டுறவுக் கடன்களை, தமிழக அரசு தள்ளுபடியாக அறிவித்திருந்தாலும், நடப்பாண்டில் செலுத்த வேண்டிய கூட்டுறவு கடனை தயவு செய்து அரசாங்கம் தள்ளி வைப்பதாக ஏதேனும் உத்தேசம் உண்டா? அதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : : தலைவரவர்களே, இது கூட்டுறவுத் துறைக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தலைவரவர்களே, தற்போது தமிழகத்தில் இருக்கின்ற 12 மாவட்டங்களில் கடுமையான வறட்சி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் வறட்சிப் பணிகளாக, வேலை வாய்ப்பை இழந்து இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ஏதாவது திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா? அவர்களுக்கு மறு வாழ்வுக்கு ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் பொதுவாக கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இதுபற்றியெல்லாம் பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதைத் தெரிவிக்கிற அதே நேரத்தில், இன்னொரு செய்தியையும் தெரிவிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட வறட்சி பல்வேறு பகுதிகளில் ஆங்காங்கே குடிநீர் பற்றாக்குறையை, விவசாயத் தொழிலாளர்களிடையே வேலை இன்மையை ஏற்படுத்தியிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, தமிழகத்தில் தற்போது ஐந்து





ஆயிரம் குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கான ஆணை அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் 175, இராமநாதபுரம் மாவட்டத்தில் 125 கிணறுகள் அமைக்க உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும். பல்வேறு இடங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் இதுவரை 11.32 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திற்கு 17.90 லட்சமும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 53.40 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலே விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் பல்வேறு அரசுத் துறைகளின் இயல்பான திட்டங்களான தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டங்களான திட்டங்களை பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னுரிமை அளித்து நிறைவேற்றுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு ஏற்கெனவே அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. திரு, உகம்சந்த் அவர்களுக்கு இந்தப் பதில் போதுமென்று கருதுகிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பருவமழை தவறியதன் காரணமாகப் பல ஆண்டுகளாகத் தமிழகமே வறட்சியின் கொடுமையினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. வளம் கொழிக்கும் மாவட்டம் என்று சொல்லக் கூடிய தஞ்சை மாவட்டமே இந்த ஆண்டு வறட்சியினாலே பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினாலே உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளைத் துவங்குவதற்காக இந்த அரசு முன்கூட்டி எடுத்துள்ள நடவடிக்கை என்னவென்பதைத் தங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இதுபற்றி எனது பதிலில் நான் தெரிவித்திருக்கிறேன். வறட்சியாலே வாடுகின்ற மாவட்டங்களைப் பார்வையிட்டு, என்னென்ன துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிப்பதற்காகக் கலெக்டர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. அது பரிசீலனையில் இருக்கிறது. அது வருகிறவரை இந்த அரசு சும்மாயிருக்காமல் உடனடியாக வேண்டிய காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினரவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்கள் என்று தீர்மானங்கள் போட்டு இங்கே மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் மூலமாக வந்திருக்கின்றன? அதோடு, வறட்சி நிவாரணப் பணிகளுக்கும், இதர பணிகளுக்காகவும் மத்திய அரசு 225 கோடி ரூபாய் கொடுப்பதாகச் சொல்லப்பட்டதே, அதில் இதுவரை எவ்வளவு பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாவட்டமான தர்மபுரி மாவட்டம் இன்றைக்குக் கடுமையான வறட்சியால் பாதிக்கப் பட்டு, குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் மக்கள் அலைகின்ற நிலையும், அதே நேரத்தில் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர் கள்ஆடு மாடுகளுக்குப் புல் போட முடியாத காரணத்தால் அவைகளையெல்லாம் அடி மாடுகளாக கேரளாவிற்கு விற் கின்ற நிலைமையும், வறட்சியின் கொடுமையால் வேலை வாய்ப்பை இழந்து கர்நாடக மாநிலத்திற்கு மக்கள் செல்லுகின்ற அவல நிலையும் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் அதற்கு முன்னுரிமை அளித்து, அதை வறட்சி மாவட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : வறட்சி மாவட் டமா, அல்லவா என்பதைத் தெரிந்ததற்குப் பிறகுதான் அறி விக்க முடியுமே தவிர, பொதுவாக வறட்சி மாவட்டம் அல்லது வறட்சிப் பகுதிகள் என்று அரசு அறிவிப்பதில்லை. அதற்கு மாறாக வறட்சியிலே வாடுகின்ற அந்தப் பகுதிகளுக்கு அல்லது அந்த மாவட்டங்களுக்குக் குடிநீர் வசதி, மற்றைய தேவையான வசதிகளைச் செய்து தருவதற்குப் போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற வாய்ப்பினை இந்த அரசு பெற்றிருக்கிறது. திருப்பித் திருப்பிக் கேட்கின்ற கேள்விகள் அத்தனையும், நான் ஏற்கெனவே பதில் சொன்னதைத் சுற்றிச் சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றன என்று நான் கருதுகிறேன். Repetition may be avoided.

திரு. எம். கே. கரீம் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் பூராவுமே 50,000-க்கும் மேற்பட்ட ஏக்கரில் தேயிலை, காப்பி, ஏலம் போன்றவை கருகிப் போயிருக்கின்ற காரணத்தினால், அங்கிருக்கும் நிலவரியை ரத்துச் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவரவர் களே, அதுபற்றி அரசு சிந்திக்கும். வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் அதற்குரிய பதிலைத் தர முடியும்.

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கழக ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட வறட் சியின் கொடுமையின் காரணமாகச் செயற்கை மழை பொழி விக்கின்ற திட்டம் முன்பு இருந்ததே, அதற்கு மீண்டும் அரசு ஆவனசெய்யுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவரவர் களே, அந்தத் திட்டம் உருப்பட்டதாக வரலாறு இல்லை. அது பயன்படத்தக்க வகையில் அமையுமானால் அதைச் செய்வதற்கு முதலமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, புதுக்கோட்டை மாவட்டம் கடந்த நான்காண்டுக் கால மாக பருவ மழை, பொய்த்து விட்டதால் மிகவும் வறட்சியாக உள்ளது. அங்குள்ள மக்களும், மாக்களும், தண்ணீர்ப் பற்றாக் குறையினால், வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள். அங்குள்ள விவசாயிகளுக்கு நிலவரியை ரத்துச் செய்து அவர்களுடைய வறுமையைப் போக்க முடியுமா என்பதை அமைச் சரவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கும், மாக்களுக்கும், பூக்களுக்கும், அத்தனைக்கும் இந்த அரசு நல்ல காரியங்களில் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு)

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தலைவர் அவர் களே, வறட்சியின் கொடுமையால் பல ஜில்லாக்கள் பாதிக்கப் பட்டிருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தண்ணீர் இல்லாத காரணத்தால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக் கிறது. எனவே, கூலி விவசாயிகளுக்கு வேலை கொடுக்கக்கூடிய முறையில் அதாவது ஆங்காங்குள்ள கண்மாய்களைத் தூர் எடுப்பது, சப்ளை சானல்களை ஒழுங்குபடுத்துவது, ரோடுகளை ரிப்பேர் செய்வது போன்ற வேலைகளை அவர்களுக்குச் கொடுத்து ஏதாவது கூலி கொடுப்பதற்கான வழிவகையை செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வழிவகை செய்ய முடியுமா என்பதல்ல, வழி செய்து தீரவேண்டும் என்பது இந்த அரசின் கடமை, பொறுப்பு. அதை இந்த அரசு செய்யும். உறுப்பினர் அவர்களுக்குத் திருப்தி தானே ?

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : அவை எப்போது செய்யப் படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : உடனடியாகச் செய்வதற்கு அரசு முயற்சி செய்யும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்கள் அதிகம் இருக்கிறார்கள். ஏனைய மாவட்டங்களை விட தஞ்சை மாவட்டத்தில் தான் வ்வசாயத் தொழிலாளர்கள் இதில் வேலை வாய்ப்பை நம்பி வாழ்கிறார்கள். இப்போது ஏற்பட்டிருக்கிற தண்ணீர்ப் பற்றாக்குறை, வறட்சி காரணமாக விளைச்சல் அதிகம் இல்லையென்பதால் அவர்கள் வேலை வாய்ப்புகள் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஆர்.எல்.இ.ஜி.பி. மூலமாகவும் என்.ஆர்.இ.பி. மூலமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்க

முடியுமென்று சொன்னார்கள். நான் அவர்களை கேட்டுக் கொள்வதெல்லாம் உள்ளாட்சித் துறை மூலமாக அங்கேயிருக்கிற தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து, அவர்களுடைய ஒதுக்கீட்டுத் தொகையை அதிகமாக்குவதற்காக, உள்ளாட்சித் துறைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வளம் கொழிக்கும் தஞ்சை மாவட்டம் வறுமையால், வறட்சியால் வாடுவது வேதனைக்குரியது. ஆனால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கொடுத்து வைத்தவர்கள். ஏனென்றால், அந்த மாவட்டம்தான் தமிழகத்தின் தலைமகன், முதல்வர் கலைஞர் அவர்களை உருவாக்கிய மாவட்டம். ஆகவே, நிச்சயமாக உங்களுடைய மாவட்டத்திற்கு, தஞ்சை மாவட்டத்திற்கு என்னென்ன வசதிகள் தேவையோ, அவைகளை உடனடியாக செய்கிற பொறுப்பிலே வருவாய்த்துறை அமைச்சர் என்கிற முறையில் நானும், என்னைவிட அதிகமான முயற்சியில் முதல்வர் அவர்களும் ஈடுபடுவார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் வறட்சி பரவியிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தென் மாவட்டங்களில், குறிப்பாக, காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் மாவட்டங்களில் வறட்சியின் நிலவரம் குறித்து அரசிற்கு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்களா? அந்த ரிப்போர்ட் அடிப்படையில் அரசு நிவாரண வேலைகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்டக் கலெக்டர்களிடமிருந்து தேவையான விவரங்கள் கோரப்பட்டிருக்கின்றன. சில மாவட்டங்களைப் பொறுத்தவரையில் வந்திருக்கின்றன. கலெக்டர்கள் மாநாடு 15, 16-ஆம் தேதிகளில் கூடவிருக்கிறது. அந்த மாநாட்டில் இதைப் பற்றி விரிவாக விவாதித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) பாலு அவர்களுக்கு என்ன ?

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள், ஒரு சிறிய மரபை மீறுகிறார். அமைச்சர் அவர்களும் பேரவைத் தலைவர் ஒப்புதல் இல்லாமல் உங்களை அழைத்திருக்கக்கூடாது. நீங்களும் என்னுடைய ஒப்புதல் இல்லாமல் கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாது.



மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உங்களை மீறுகின்ற மரபு எனக்கு இல்லை. நான் திரு. பாலசுப்பிரமணியத்தை அழைக்கவில்லை. பாலசுப்பிரமணியம் அவர்கள் என்னைப் பார்த்த போது, பாலசுப்பிரமணியம், என்ன என்று கேட்டேன், தம்பி என்ற முறையில். அவ்வளவு தானே தவிர, அவரை நானும் அழைக்கவில்லை. என்னை அவரும் பார்க்கவில்லை. நீங்களாக பார்த்து கற்பனை செய்து கொண்டு, ஒரு பெரிய பழியை என் மீது சுமத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றி இருந்தோம். அந்தத் தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா? வந்திருக்கிறது என்றால், என்ன நடவடிக்கையை அதன்மீது அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

(முற்பகல் 9.20)

நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய், பாமாயில்

47—(*வினா எண். 161) திரு. கே. ரமணி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் முழு அளவும் ஒரே நாளில் கொடுக்கவும், பாமாயில் அளவை அதிகப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் முழு அளவும் தற்போது குடும்ப அட்டைதாரர்கள் ஒரே நாளில் பெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் பாமாயில் அளவினைத் தற்போது அதிகப்படுத்த இயலாது.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் வினியோகத்தில் தான்—எல்லாப் பொருட்களையும் விட—அதிகப்படியான தகராறு நடக்கிறது. இதை வினியோகம் செய்யக்கூடிய கடைகளில் கடைசி நாள் வரைக்கும் அதை வினியோகம்

பண்ணாமல் வைத்து, கடைசி 2, 3 நாட்கள் இருக்கிற போதுதான் மண்ணெண்ணெய் வந்தது என்று சொல்லி, பாதிப் பேருக்குக் கிடைக்கிறது, பாக்கியிருப்பவர்களுக்குக் கிடைப்பதில்லை. பாக்கியிருக்கிற மண்ணெண்ணெய் அடுத்த மாதம் ஆனவுடன் கள்ள மார்க்கெட்டுக்கு அனுப்பப்படுகிறது. எனவே இதை உறுதியான முறையிலே தடுப்பதற்கும், முழு மண்ணெண்ணெயும் அவர்களுக்கு, மாதத்தின் மூன்றாவது வாரத்திற்குள்ளே கிடைப்பதற்கும், அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களாஎன்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஜனவரி மாதத்திற்கு முன்னால் வரையில் அப்படிப்பட்ட நிலைமை இருந்தது உண்மை. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடனே சோதனைகள் இட்ட நேரத்தில், மண்ணெண்ணெய் வினியோகிப்பதில் சில முறைகேடுகள் நடப்பதைக் கண்டு பிடித்து, சிலர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவருடைய உரிமத்தை ரத்துச் செய்வதற்குக்கூடப் பரிந்துரை செய்யப் பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஒவ்வொரு மாதமும் எவ்வளவு தேவைப்படுகிறதோ, அதை முன்கூட்டியே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டு இருக்கின்றன. இப்போது மண்ணெண்ணெய் வினியோகத்தில் எந்தவிதமான முறைகேடுகளும் இல்லை. சில இடங்களில் அளவு குறைவதாக அரசுக்கு வந்த புகார் மீதும் அரசு தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, அடுத்தது பாமாயில். பாமாயில் சம்பந்தப்பட்ட வரையிலும், அது வந்த ஆரம்பத்திலே ஜனங்களுக்கு அதைப் பற்றி ஒரு பயம் இருந்தது. இந்த ஆயிலைச் சாப்பிட்டால் நமக்கு ஏதாவது கெடுதல் வருமோ என்ற பயம் இருந்தது. இபபோது அதை எல்லா ஜனங்களும் விரும்பு கிறார்கள். காரணம் என்னவென்றால், இன்றைக்கு அதைத்தான் குறைந்த விலையில் மக்கள் வாங்கக் கூடிய நிலைமையிருக்கிறது. எனவே பாமாயிலை அதிகப்படுத்த முடியாது என்று ஒரே பதிலாக நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னால், அது ஜனங்களுக்கு ஒரு மிகப் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கும். உண்மையிலே, மத்திய சர்க்கார் மறுபடியும் ஏராள மான எடிபிள் ஆயில் இறக்குமதி செய்து கொண்டிருக் கிறார்கள் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அவர்கள் நமது தமிழ்நாட்டிற்கு என்ன கோட்டப் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ? அதை அதிகா



படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பீர்களா ? நிச்சயமாக 2 மாதத்திற்கு ஒரு கிலோ பாமாயில் என்று கொடுத்தால், யாரும் அதை வைத்து வாழ முடியாது. ஒரு மாதத்திற்கு 2 கிலோவாவது கொடுக்க வேண்டும். அந்த முறையில் மத்திய சர்க்காரை வற்புறுத்தி, வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பாமாயில் முதலில் வந்து அறிமுகம் செய்த போது, மக்கள் பயந்தார்கள். இப்போது மக்கள் விரும்புகின்ற நேரத்தில், மத்திய அரசாங்கம் கொடுக்க மறுக்கிறது. 1988 ஜனவரி மாதம் 10,500 டன் நமக்கு பாமாயில் மத்திய அரசாங்கம் வழங்கியது. ஆனால் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம், மார்ச் மாதத்தில் 3,600 டன் தான் வழங்குகிறது. கேட்டால் ஃபாரின் எக்ஸ்சேஞ் பிராப்ளம் இருக்கிறது. எனவே, அதிகமாக இறக்குமதி செய்ய முடியவில்லை என்று மத்திய அரசாங்கம் கூறுகிறது. ஒரு குடும்பக் கார்டுக்கு ஒரு லிட்டர் என்று சொன்னாலும்கூட மாதத்திற்கு நமக்கு 13,000 டன் பாமாயில் தேவைப்படுகிறது. ஆனால் 3,600 டன்தான் மத்திய அரசாங்கம் கொடுக்கிறது. இந்த அரசாங்கம் தொடர்ந்து அதைக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்துகிறது.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் காவலர்களுக்கு மிகக் குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வினியோகம் செய்வதைப் போல, தீயணைப்புப் படையில் பணிபுரிகின்றவர் களுக்கும், மிகவும் குறைந்த சம்பளத்தில் யாரும் செய்ய முன்வராத தொழிலைச் செய்கின்ற மாநகராட்சி நகர சுத்தித் தொழிலாளர்களுக்கும், குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வினியோகிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆறகாடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் இப்போது அரசாங்கத் திடம் இல்லை.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : தலைவர் அவர்களே, ரேசன் கடைகளில் கிடைக்கக்கூடிய அரை லிட்டர் பாமாயில் எண்ணெயும்கூட ஏழை, விவசாய, அரிசன மக்களுக்குக் கிடைக்காத ஒரு நிலைமை இன்னும் கிராமப் புறங்களில் இருந்து கொண்டு வருகிறது. இதையாவது

[1989 ஏப்ரல் 8

உத்திரவாதப்படுத்துவதற்கும், அதிகப்படுத்துவதற்கும் அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நமக்கு பாமாயில் 3,600 டன்தான் கிடைக்கிறது என்று சொன்னாலும் கூட இப்போது பாமாயிலுக்கு அதிகமான கிராக்கி இல்லை. ஏன் என்று கேட்டால், கடலை எண்ணெய் ஒரு லிட்டர் 45 ரூபாய்க்கு விற்ற போது, பாமாயிலுக்கு நிறைய டிமான்ட் இருந்தது, தற்போது ஏறக்குறைய பாமாயில் விலைக்கும் கடலை எண்ணெய் விலைக்கும் 1 ரூபாய் வித்தியாசம்தான் இருக்கிற காரணத்தால், இப்போது யாரும் அதைப் பற்றி அதிகமாகக் கவலைப்படுவதில்லை.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் ஒவ்வொரு குடும்பக் கார்டுக்கும் எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாநகராட்சிகள் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் மாதத்திற்கு 10 லிட்டர் மண்ணெண்ணெயும், மற்ற நகராட்சிகளிலும், நகரியங்களிலும் 6 லிட்டர் மண்ணெண்ணெயும், நகரப் பஞ்சாயத்துக்களில் 5 லிட்டர் மண்ணெண்ணெயும், மற்றும் கிராமப் பஞ்சாயத்துக்களில் 3 லிட்டர் மண்ணெண்ணெயும் இப்போது வழங்கப்படுகிறது.

திரு. இரா. மதிவாணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் அநியாயம் செய்யும் பெருச்சாளிகள் இருக்கின்றன. இதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : அநியாயம் செய்கின்ற பெருச்சாளிகளும் இருக்கின்றன. உண்மையான பெருச்சாளிகளும் இருக்கின்றன என்பதை அரசு அறியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால், அதற்கு அநியாய விலைக் கடை என்ற பெயர் வைக்கலாமா ? (சிரிப்பு).

மாண்புமிகு ஆற்காடு நா. வீராசாமி : அந்த அநியாயங்களை அகற்றுவதற்குத்தான் இப்போது அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது.



1989 ஏப்ரல் 8]

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நியாய விலைக் கடைகளில் கொடுக்கப்படுகின்ற அரிசி, பாம் ஆயில் போன்றவைகள் எடை குறைவாக இருப்பதாக புகார்கள் வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அதைத் தடுப்பதற்காக பிளாஸ்டிக் கவரிலே பேக் செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பொதுவாக ரேஷன் கடைகளில் எடை போடுகின்றவர்கள் குறைவாகப் போடுகின்ற புகார் வந்த பிறகு, தீவிர பரிசோதனையின் மூலம் இன்றையதினம் அது தடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு, கலந்து விவாதித்திருக்கின்றேன். இதிலே இருக்கின்ற குறைபாடு என்னவென்றால், பேக் செய்து கொடுப்பது என்றால், ஒரு கிலோ அரிசிக்கு 30 பைசா அதிகமாக பேக்கிங் சார்ஜ்-ஆக செலவு செய்ய வேண்டியிருக்கிறது. எனவே இந்த விலையேற்றத்தை மக்கள் தாங்கிக் கொள்வார்களா என்று பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இது சம்பந்தமாக தேவைப்பட்டால் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, பிறகு அரசாங்கம் முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். முத்தையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீமை எண்ணெய் கடைகளில் கூட்டுறவு முறையில் கொடுக்கிறார்கள். அதைத் தனியாருக்கு லைசன்ஸ் கொடுத்து ஏற்பாடு பண்ணுகிறார்கள். தனியார் பெயரால் சீமை எண்ணெய் எவ்வளவு கோட்டா வாங்கினாலும், அதை விற்றுவிடுவார்கள். பொது மக்களுக்குக் கிடைப்பதில்லை. இதை நாம் ஒழித்துக் கட்ட வேண்டும். எனவே சொசைட்டி மூலமாக சீமை எண்ணெய் எல்லாம் கொடுப்பதற்கு நம்முடைய சர்க்கார் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அப்படிப் புகார்கள் வந்த இடத்தில், இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. குறிப்பாக செங்கை—அண்ணா மாவட்டத்தில் தனிப்பட்ட ஒரு வியாபாரி தவறு செய்தார் என்பதற்காக அவருடைய உரிமம் ரத்து செய்யப்பட்டு, கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

[1989 ஏப்ரல் 8

**திரு. சி. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் 10,000 டன்னிலிருந்து 3,600 டன் பாமாயில் இன்றையதினம் தமிழக அரசுக்குக் கிடைப்பதாகக் கூறினார்கள். இந்த பாமாயில் மத்திய அரசால் எஸ்.டீ.சி. நிறுவனத்தின் மூலமாக இறக்குமதி செய்யப்படுகிறது. ஆகவே இப்படி குறைவாகக் கிடைப்பதால் நம்முடைய தமிழக அரசே நேரடியாக பாமாயிலை இறக்குமதி செய்யவும் போதுமான அளவிற்கு பொது மக்களுக்குமலிவான விலையில் கொடுப்பதற்கும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மாநில அரசாங்கத்தாலே நேரடியாகக் கொள்முதல் செய்து இறக்குமதி செய்ய முடியாது. இதிலே அந்நியச் செலாவணிப் பிரச்சினை இருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் இங்கே இறக்குமதி செய்ய வேண்டும். பொதுவாக மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட சமையல் எண்ணெய் இறக்குமதியை மாநில அரசுக்குக் கொடுப்பது இல்லை.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ரேஷன் பொருட்களை வாங்குவதற்குக் கிராமப்புறங்களில் 5 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. கிராமப்புறங்களில் வாழ்கின்ற தாய்மார்கள் எல்லாம் பெரும்பாலும் விவசாயக் கூலிகள். ஆகவே ரேஷன் பொருட்களை வாங்குவதற்கு அவர்கள் தங்களுடைய பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாமல் ரேஷன் பொருட்களை வாங்க அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தக் குறையைப் போக்குவதற்கு வாரத்திற்கு ஒரு முறை ரேஷன் பொருட்களை நேரடியாக அந்தக் குக்கிராமங்களுக்குச் சென்று விநியோகம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புவதோடு, ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று ரேஷன் பொருட்களை விநியோகம் செய்கின்ற நேரத்திலே டிரான்ஸ்போர்ட் சார்ஜ் கொடுக்க வேண்டுமென்று அந்தக் கிராமத்திலே வற்புறுத்துகின்றார்கள். பெரும்பாலும் ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கின்ற கிராமப்புறங்களிலே எல்லாம் ஓலைக் குடிசைகள் தான் இருந்து கொண்டிருக்கின்றன. . . . .
(மணியடிக்கப்பெற்றது)



1989 ஏப்ரல் 8]

(முற்பகல் 9–30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாவை எப்படி அமைப்பது என்பதை நீங்கள் பார்த்து அமைத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** அந்த விதிகளைத் தளர்த்தி ரேஷன் பொருட்களைக்கிராமப்புறங்களிலே வழங்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, ரேஷன் பொருட்களை குக்கிராமங்களுக்கு கொண்டுபோய் வீடு வீடாகக் கொடுக்கிற திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் ஏதாவது ஒரு ரேஷன் கடையில் டிரான்ஸ்போர்ட் சார்ஜுக்கு என்று கேட்டு அதை வாங்கியிருக்கிறார்கள் என்ற புகார் இருக்குமானால் அதன் மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எம். அண்ணாமலை :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மலிவு விலைக் கடைகளுக்குக் கொடுக்கப்படும் மண்ணெண்ணையும் சரி, அரிசியும் சரி, எடை குறைவாக இருக்கிறது என்ற புகார்கள் அரசுக்கு ஏதாவது வந்ததா ? அல்லது அந்த விநியோகம் செய்யும்போது, கோடவுனிலேயிருந்து ரேஷன் கடைகளுக்குக் கொண்டு போகும்போது ஸ்பாட்டிலேயே எடைபோட்டுக் கொடுக்க அரசு உத்திரவாதம் அளிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இந்த வினாவிற்குப் பல முறை பதில் சொல்லியிருக்கிறேன். அப்படிப்புகார்கள் வந்தது உண்மை. அவற்றின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதும் உண்மை. கோடவுனிலேயிருந்து கொண்டு போகக் கூடிய பொருள்களை எடைபோட்டு வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டார்கள். யார் கோடவுனிலே போய் இந்த அரிசி மூட்டைகளையெல்லாம் எடுக்கிறார்களோ அவர்கள் அங்கேயே எடைபோட்டுத்தான் எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது.

**கோவை நகரில் ள்ள ரேஷன் கடைகளுக்கு வழங்கப்படும் ணவுப் பொருட்கள்.**

48—(*வினா எண். 181) **திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் உள்ள ரேஷன் கடைகளுக்கு, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கோடவுன்களிலிருந்து வழங்கப்படும் உணவு தானியங்கள், சர்க்கரை, எண்ணெய் ஆகியவை அளவு குறைவாகவே கொடுக்கப்படுகிறது என்பது உண்மையா ?

(ஆ) இதனால் ரேஷன் வாங்கும் பொதுமக்கள் பாதிக்கப் படுவது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, (அ) கோவை மாநகரில் உள்ள ரேஷன் கடைகளுக்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கோடவுன்களிலிருந்து கட்டுப் பாட்டுப் பொருட்கள் அளவு குறைவாகக் கொடுக்கப்பட்டதாக எழுத்து மூலமாகப்புகார் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) பொதுமக்களுக்கு சரியான எடையில் கட்டுப்பாட்டுப் பொருட்கள் கிடைப்பதற்கான எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளின் மொத்தத் தேவையில் 80 சதவீதம் மட்டுமே பொருள்கள் வழங்கப்படுவதாக சம்பந்தப்பட்ட பகுதியைச் சார்ந்திருக்கிற சிவில் சப்ளைஸ் அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். அதிலும் குறிப்பாக சென்ற பிப்ரவரி, மார்ச் மாதங்களில் 80 சதவீதம் கொடுக்கப்படுவது கூட 70 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதாக என்னுடைய திருப்பூர் தொகுதியிலே கூறப்படுகிறது. அதன் காரணமாக 1,200 கார்டுகள் இருக்கின்ற ஒரு கடையில் 300 கார்டுகளுக்குப்பொருள் கிடைக்காத ஒரு நிலையால் அந்த மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகிற நிலை இருக்கிறது. ஆகவே, மொத்தத் தேவை எவ்வளவோ அதற்குரிய வகையிலே பொருள்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : ஒவ்வொரு ரேஷன் கடைக்கும் எவ்வளவு தேவையோ அதை இந்த அரசாங்கம் இதுவரையில் குறைக்கவில்லை. எவ்வளவு தேவையோ அந்தத் தேவை நிறைவேற்றப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல புகார் இருக்குமானால், அரசுக்குத் தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ரேஷன் கடைகளிலும் மண்ணெண்ணெய் அங்கே இருப்பு வைத்திருக்கப்போதுமான பெரிய பேரல்கள் இல்லாத காரணத்தினாலே அன்றாடத் தேவைக்குத் தினமும் போய் சப்ளை எடுத்துவந்துதான் விநியோகிக்க வேண்டியிருக்கிறது. அதனால், வாடிக்கையாளர்கள் ஒன்றாகப்பெற முடியாமல் பல தினங்கள் அடுத்தடுத்து வரவேண்டியிருக்கிறது. இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு ரேஷன் கடைகளிலே இருப்பு வைப்பதற்குத் தேவையான மண்ணெண்ணெய் டின்கள் அல்லது பெரிய பேரல்கள் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?





மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பேரல்களை வைப்பதற்குக் கூட அரசாங்கம் ஏற்பாடு செய்யலாம். ஆனால், அந்த பேரல்களை வைப்பதற்குத் தேவையான இடம் கிடைப்பதில்தான் சென்னை போன்ற நகரங்களில் சில சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, எங்கெங்கே அப்படிப் பட்ட குறைபாடுகள் இருக்குமோ அங்கேயெல்லாம் வேறு இடங்களுக்கு மாற்றி நிறைய ஸ்டாக் வைக்கும்படி கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஆர். இராஜேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 10, 12 ஆண்டுகளாக ஒரு இடத்தில் இயங்கி வந்த நியாய விலைக் கடை இன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் வேறு இடத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இப்படி அந்த நியாய விலைக் கடையை வேறு இடத்திற்குக் கொண்டு போனதால் 10, 12 ஆண்டுகளாக இயங்கி வந்த அந்த இடத்தில் உள்ள கிராமப்புற மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே வாரத்திற்கு ஒரு முறை புதிய இடத்திலும், 10, 12 ஆண்டுகளாக இயங்கிவந்த இடத்தில் ஒரு முறையும் போட அரசு உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, எந்தக்கிராமத்திலே எந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படிச் செய்தார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவார்களேயானால், இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். பொதுவாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ரேஷன் கடைகளை மாற்றுவதில்லை. அங்கிருக்கக்கூடிய மக்கள் ஏதாவது எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்து அதிலே நியாயம் இருக்குமானால், ரேஷன் கடைகள் மாற்றப்பட்டு இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் புகார் இதுவரையிலே அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வரவில்லை.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : தலைவர் அவர்களே, நகரப் பகுதிகளைவிட, கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்குத் தான் மண்ணெண்ணெய் அதிகம் தேவை என்ற காரணத்திற்காக இந்த அரசுக்கு அதன் அளவினை உயர்த்தித்தர உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற முறையை மாற்றுவதற்கு எந்த விதமான யோசனையும் இல்லை.

திரு. கே. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த டீலர்கள் மூலம் நியாய விலைக் கடைக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. ஒரு பேரலில் 200 லிட்டர்

மண்ணெண்ணெய் இருக்கிறது என்று சொன்னால், வழங்கப்படுகின்ற போது ஏறத்தாழ 20 லிட்டர் குறைவதாக நியாயவிலைக் கடை ஊழியர்கள் கூறுகிறார்கள். இதை அரசு அறியுமா? அறியுமானால சரியான அளவிற்கு அதைத் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, ரீடெயில் ஷாப் வைத்திருப்பவர்கள் மொத்த வியாபாரிகளிடத்திலே எடுக்கும்போது அவர்களேதான் அளந்து எடுக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எந்தவித நியாயமும் இல்லை.

**திரு. இராம நாராயணன் :** தலைவர் அவர்களே, ப்ளாஸ்டிக் பேக்கட்டுகளில் உணவுப் பொருள்கள் அடைத்துத் தரப்படும் திட்டம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட நேரத்தில் அவைக்கு வந்துவிட்டால் திரும்பத் திரும்ப அந்தக் கேள்வி எழாது. ஏற்கனவே ஒருவர் கேள்வி கேட்டு பதில் சொல்லிவிட்டேன்.

**திரு. ஜி. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, சிவில் சப்ளையிலிருந்து, கூட்டுறவுச் சங்கத்திற்கு மாற்றப்பட்ட பின்னால் காலத்தோடு கூட்டுறவுக் கடைகளுக்கு உணவுப் பொருட்கள் வருவதில்லை என்ற புகார்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. உடனடியாக அவை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்ட்டிலிருந்து கூட்டுறவுத் துறைக்கு மாற்றப்பட்டு இப்போது கடைகள் நடந்துகொண்டு இருக்கின்றன. ஏற்கெனவே சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்ட்டிலே இருந்தவர்கள் ஏறத்தாழ 3,000 பேர்கள் வேலை செய்யாமலேயே சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மறுபடியும் சென்னை நகரத்திற்கு மட்டுமாவது சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்டிற்கு இந்தக் கடைகளை ஒப்படையுங்கள், மீதி தமிழகம் பூராவும் கோ-ஆப்பரேடிவ் டிபார்ட்மென்டிற்கு ஒப்படையுங்கள் என்று வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். 3,000 பேர்களுக்கு அவர்கள் எந்த வேலையும் செய்யாமல் அரசாங்கம் சம்பளம் கொடுத்துக் கொண்டிருப்பதை பரிசீலித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி இதுபற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, நடமாடும் நியாயவிலைக் கடைகள் தமிழகத்திலும் அமைக்கப்படுமா ? எப்போது அமைக்கப்படும்?





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இருக்கின்ற நியாயவிலைக் கடைகளிலே குறைபாடுகளைப் போக்க இந்த அரசு முயற்சிக்கிறது. இன்னும் நடமாடுவதற்கு அனுமதித்தால் அது எங்கெங்கே நடமாடும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

**திரு. பி. காளியப்பன் :** தலைவர் அவர்களே, தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் அரசு வழங்க இருக்கின்ற இலவச அரிசி 5 கிலோவை ஒரே நாளில் வழங்க இயலாது என்பதால் அதை ஒரு வாரம் முழுவதும் வழங்க அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடைபெற்றபோது அறிவித்தபடி இந்த அரசாங்கம் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற அடிப்படையில் முதல் கட்டமாக, இம்மாதம் 14 ஆம் தேதி தமிழ்ப் புத்தாண்டையொட்டி 300 ரூபாய்க்கும் குறைவாக வருமானம் இருக்கக்கூடிய குடும்ப அட்டைதாரர்களுக்கு 5 கிலோ அரிசி இலவசமாக வழங்க இருக்கிறது. காலை 8 மணி முதல் மாலை வரையிலே எல்லாக்குடும்பதாரர்களுக்கும் அந்த அரிசி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி யாராவது விடுபடுவார்களேயானால் அவர்கள் மறுநாளே அதை வாங்கிக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அரிசி வழங்குகின்ற விழாவில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, மாண்பமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவரவர்களுடைய தொகுதியில் காலை 8 மணிக்கு இந்த இலவச அரிசி வழங்குகின்ற திட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்தும்படி இந்த வினா மூலமாக அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

**திரு. ஆர். சாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் விற்கப்படுகின்ற ரவை, மைதா மாவு போன்ற மாவுப் பொருட்கள், விற்பனை ஆகவில்லையென்று சொன்னால், புழுவாகிக் கெட்டு விடுகின்ற நிலை உருவாகின்றது. எனவே, நியாய விலைக் கடைகளில் இருக்கின்றவர்கள் மீண்டும் அதைச்சரி செய்வதற்குத் தள்ளுபடியாகக் கேட்கின்ற நேரத்தில் கிராமக் கூட்டுறவு வங்கி அதை மறுக்கின்றது. எனவே, நியாய விலைக் கடைகளில் புழு உருவாகி விற்பனை செய்ய முடியாத பொருட்களுக்கு, அதைச் சரிக்கட்டத் தவறி விடுகின்றது. அந்தத் தவறை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பொதுவாக, ரவா, மைதா போன்ற பொருட்களை ரேஷன் கடைகளில் அதிகமாக மக்கள் விரும்பி வாங்கவில்லை. ஏனென்றால், சில நேரங்களில் ரேஷன் கடைகளிலே இருக்கின்ற ரவா, மைதாவை விட அந்தந்த சீசன்களுக்கேற்றாற்போல, வெளிமார்க்கெட்டிலே விலை குறைந்து விடுகிறது. எனவே, அப்படிப்பட்ட நிலை ரேஷன் கடைகளில் ஏற்படுகிறது. இவைகளையெல்லாம் இந்த அரசாங்கம் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

## கிராமங்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி.

49—(*வினா எண். 51) திரு. எஸ். டி. உகம்சந்த் : மற்றும் திரு. கே.ஏ. மணி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, விடை : (அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கிராமத்திலே வாழுகின்ற மக்களுக்குப் பொழுது போக்குச்சாதனமாகவும், அவர்களுக்கு அரசினுடைய பல்வேறு நலத் திட்டங்களையெல்லாம் அறிகின்ற ஒரு வாய்ப்பாகவும் இந்தத் தொலைக்காட்சி பெட்டிகள் விளங்கி வருகின்றன. அதற்காக அரசாங்கத்தில இன்றைக்குத் திட்டம் இல்லை என்று சொன்னாலும் வருகின்ற காலங்களில் எல்லாக் கிராமங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதற்கு ஏதாவது கடன் தொகையை வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டில் முதலில் சென்னை மற்றும் கொடைக்கானல் உயர் சக்தி அஞ்சல் நிலையங்கள் மற்றும் வேலூர், ஏற்காடு, கோவை, கும்பகோணம், பாண்டிச்சேரி மற்றும் திருச்சியிலுள்ள குறைந்த சக்தி அஞ்சல் நிலையங்கள் மூலம் தொலைக்காட்சி ஒளிபரப்புக்குட்பட்ட பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டு 8,322 தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்க அரசு தீர்மானித்து, 4,417 தொலைக்காட்சிப் பெட்டிகள்,



ரூபாய் 90 இலட்சத்து 72,000 அரசு மானியத்தில் வழங்கப்பட்டன. 1986-87, 1987-88, 1988-89 ஆம் ஆண்டுகளில் அரசு மானியத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அரசின் நிதிநிலை கருதி. வாங்கி வழங்கப்படவில்லை,

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில ஊராட்சி ஒன்றியங்கள் ஒன்றிரண்டு தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்குகின்றன. ஆனால் ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதில் சிரமங்கள் இருக்கின்றன, வழங்கப்படாமல் இருக்கின்றன என்ற குறைபாடு இருக்கின்றது. ஆகவே, குறைந்த பட்சம் ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்காவது அரசின் மூலமாக அரசு நிதியின் மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டியை வழங்க ஆவன செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலையை ஒட்டி, அரசுத் தரப்பில் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கித் தர இயலாவிட்டாலும், ஊராட்சி அளவில் நிதிநிலை உள்ள ஊராட்சிமன்றங்கள் அப்படி டி. வி. போன்றவைகளை வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்று 1987—இலேயே உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. எ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிமன்றங்கள் அதன் நிதியில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குவதற்கு ஏதாவது தடை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்ன பதில்படி, ஊராட்சி மன்றங்களில் நிதிநிலை இருந்தால், அவர்கள் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கிக் கொள்ளலாம்.

திரு மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் இருக்கின்ற சில மாநகராட்சிப் பூங்காக்களில் மாத்திரம் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மீதமிருக்கின்ற மாநகராட்சிப் பூங்காக்களில் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைக்கின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுடைய கேள்வியைக் கருத்தில் கொண்டு மாநகராட்சியினுடைய எல்லாப்பூங்காக்களிலும் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி வைக்க நடவடிக்கை எடுக்க அரசு தகுந்த ஆலோசனையை சென்னை மாநகராட்சிக்கு வழங்கும்.

[1989 ஏப்ரல் 8

திரு. எல். முக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை இல்லாத ஊராட்சிப்பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்துதொலைக் காட்சிப் பெட்டி வாங்கிக் கொடுக்கலாம் என்று அரசு உத்திரவு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

மாநகராட்சி தேர்தல்களில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு.

50—(*வினா எண். 308) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரவிருக்கும் மாநகராட்சித்தேர்தல்களில் வேட்பாளர் களில் பெண்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதி திராவிட மக்கள் தங்களுக்கு 18 சதவீத இட ஒதுக்கீட்டை இந்த மாநகராட்சித் தேர்தலில் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்பியிருக் கிறார்களா ? அதன் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கை அரசுக்கு இன்னும் வரவில்லை. வெளியில் பேசப்படுகிறது. ஆனால் மாநகராட்சியினுடைய சட்டப்படி சென்னை மாநக ராட்சியில் தாழ்த்தப்பட்டவர்கள் மாநகராட்சி உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது பழங்குடி வகுப்பினர் 15 பேரை நியமனம் செய்து கொள்ள ஏற்கெனவே விதி இருக்கிறது. அதைப்போலவே பெண்களும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக் கப்படாவிட்டால் 8 பேரை மாநகராட்சி உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள இடம் இருக்கிறது. மதுரை, கோவை மாநக ராட்சிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லது பழங்குடி



1989 ஏப்ரல் 8]

வகுப்பினர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படா விட்டால் 5 பேரையும், பெண்கள் 5 பேரையும் முறையே சேர்த்துக்கொள்ளலாம் என்று ஏற்கெனவே கழக ஆட்சி இருந்த காலத்திலேயே நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம். 1981-ல் மட்டும் முன்பு இருந்த ஆட்சியும் கோவையில் அதைச்செய்து இருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா
நாயகர் அவர்களே, இந்த ஒதுக்கீடு பெண்களுக்கும், தாழ்த்தப்
பட்ட மக்களுக்கும் மாநகராட்சிகளில் உண்டு என்று மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இது existing strength of
the membe.s of the Corporation-க்கு உட்பட்டதா அல்லது அதற்கு
அதிகப்பட்டதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகுதிரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, குறைவுதான். ஏன் என்றால்
சென்னை மாநகராட்சியில் 150 டிவிஷன்கள் இருக்கின்றன.
150 டிவிஷன்களில் 150 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படு
கிறார்கள். அதிலே தாழ்த்தப்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்படா
விட்டால் 15 உறுப்பினர்கள்தான் சேர்த்துக்கொள்ளப்படு
கிறார்கள். அதேபோல் பெண்கள் 8 பேர்தான் சேர்த்துக்கொள்
ளப்படுகிறார்கள்.

திருமதி . எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நல்ல கேள்வியை இங்கே எழுப்பியிருக்
கிறார்கள். எல்லாத் துறைகளிலும் பாரதியார் சொன்
னதை நீங்கள் கடைப்பிடித்து வருகிறீர்கள். ''பட்டங்கள் ஆள்
வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள்
நடத்தவந்தோம்'' என்று பாரதி பாடியிருக்கிறார்; புதுமைக்
கவிஞர். அந்த அடிப்படையிலாவது நீங்கள் எல்லாத்துறை
களிலும் பாப்புலேஷன் பேசிஸ்—ஜனத்தொகை அடிப்படையில்,
பெண்களுக்கு எப்படி வேலையில் 30 சதவீதம் என்று வைத்து
இருக்கிறீர்களோ அதைப்போல் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனி
யன், சட்டமன்றம்—சட்டமன்றத்தில் இருந்தால்தான் எங்களை
பாதுகாத்துக்கொள்ள முடியும்—ஆகவே அந்த அளவுக்கு பெண்
களுக்கு இட ஒதுக்கீடு செய்வதற்கான முயற்சியை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என அறிய
விரும்புகிறேன்,

(முற்பகல் 9-50)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பெண்களுக்கு உரிமை அளிப்பதில் பாரதி
வழியில் இந்த அரசு நடப்பதாக அம்மையார் அவர்கள் இங்கே

[1989 ஏப்ரல் 8

எடுத்துச் சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நிச்சயமாக மாநகராட்சி மன்றத்தில்,—இப்போது நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், பெண்கள் இடம் பெறாவிட்டால், இத்தனை பேர் எண்ணிக்கையுள்ள பெண்களை இடம் பெறச் செய்வதற்கு வழி இருக்கிறது. அதைப்போல ஆதிதிராவிடர்கள் இடம் பெறாவிட்டால் இத்தனை பேர் இடம் பெறச் செய்வதற்கு வழி இருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். சில தொகுதிகளை, தேர்தல் நேரத்திலேயே பெண்களுக்கு என்றும், ஆதிதிராவிடர்களுக்கு என்றும் மாநகராட்சி மன்றத் தேர்தலிலே ஒதுக்க முடியுமா என்பதற்கு, இந்த அவையிலேதான் சட்டம் கொண்டு வரவேண்டும். அதுகுறித்து விரைவிலே அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதித்து முடிவு செய்யப்படும்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு அடையார் கேன்சர் இன்ஸ்டிடியூட் நிகழ்ச்சியில் நம்முடைய முதல்வர் அவர்கள் மனிதர்குல மாணிக்கங்களுடைய பெயர்களைச் சூட்ட வேண்டுமென எடுத்துச் சொன்னார்கள். கழக ஆட்சியில் பெண்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கியிருக்கின்ற மாபெரும் திட்டத்திற்கு மனிதர்குல மாணிக்கங்களில் யாருடைய பெயரையாவது அறிவிக்கின்ற திட்டம் அரசுக்கு உண்டா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் திருத்திக்கொள்ள வேண்டும். நான் மனிதர்குல மாணிக்கம் என்று சொல்லவில்லை, மாதர்குல மாணிக்கங்கள் பெயர் என்றுநான் குறிப்பிட்டேன். அப்பொழுது பேசும்போது, அந்த நிறுவனம், அந்தக் கேன்சர் இன்ஸ்டிடியூட், திருமதி முத்துலட்சுமி ரெட்டி அவர்களால் 1927ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்பதை நினைவிலே வைத்துக்கொண்டு, இந்தியாவிலேயே முதல் டாக்டர் பட்டம் பெற்ற பெண்மணியாக அவர்கள் இருந்து, அயல் நாட்டிற்குச் சென்று புகழ்பெற்றார் என்ற காரணத்திற்காகவும், தி. மு. கழக அரசு கொண்டு வருகின்ற பெண்களுக்குரிய திட்டங்களில் ஒன்றுக்கு முத்துலட்சுமி ரெட்டி அவர்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன் என்று குறிப்பிட்டேன். ஆனால் இப்போது அறிவிக்க இயலாது அவை நடைபெறும் போது அறிவித்தால் உரிமைப் பிரச்சினை வந்துவிடும். ஆசைப் படுகிறேன், ஆனால் அறிவிக்கவில்லை என்று சொன்னேன். இந்தக் கேள்வி மூலமாக அதை அறிவிக்கின்றேன். தி. மு. கழக அரசு கொண்டு வந்துள்ள பெண்கள் நலச் சட்டங்கள், திட்டங்கள் இவைகளுக்கு—முத்துலட்சுமி ரெட்டி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், நாகம்மையார் போன்ற, தமிழ்நாட்டிலே சமூக சேவை செய்த பெண்களுடைய பெயர்கள் இந்தத் திட்டங்களுக்குச் சூட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



1989 ஏப்ரல் 8]

### சாலவாக்கம் கிராமத்தில் கால்நடை மருந்தகம்

51. (*வினா எண். 359— திரு கே சுந்தர் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் ஒன்றியம் சாலவாக்கம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சாலவாக்கம் கிராமத்திலே ஒரு கால்நடை மருந்தகம் வாடகைக் கட்டிடத்திலே இயங்கி வந்தது. ஊராட்சிகள் கலைக்கப்பட்ட பொழுது, அதற்கு வாடகை செலுத்துவதற்கு வசதி இல்லாத காரணத்தால் தற்போது இல்லாமல் இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு கால்நடை மருந்தகம் வருவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே சாலவாக்கம் கிராமத்திலே கால்நடைமருந்தகம் இயங்கி வந்ததாகக் குறிப்பிடுகின்றார்கள். அவ்வாறு சாலவாக்கம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் இயங்கியதாக என்னிடம் குறிப்புகள் இல்லை. உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்திலே, உத்திரமேரூர் மற்றும் களியாம்பூண்டி ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. உத்திரமேரூர் ஒன்றியத்திலும் மற்றைய 8 இடங்களிலும் கால்நடை மருந்தகத்தின் கிளை நிலையங்கள்தான் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்திலே, மூன்றாவது இடமாக சாலவாக்கம் கிராமத்திலே கால்நடை மருந்தகம்

அமைக்கப்படுவதற்கு அந்த ஒன்றியத்திலே ஒரு தீர்மானத்தை இயற்றி, பொது நிதியிலிருந்து 50 சதவீதம் மானியமாகக்கொடுப் பதற்கும் தீர்மானித்திருக்கிறார்கள். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள், சாலவாக்கம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளதாக இங்கே தெரிவித்துள்ளார்கள். அவர்களுடைய ஊராட்சி ஒன்றியத்தினுடைய தீர்மானத்தின் தகுதிக்கேற்ப கால் நடை மருந்தகங்கள் அமைக்கப்படும்போது இதுவும் கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருத்துவ மனைகள் அமைகின்ற போது முதல் கால்நடை மருத்துவ மனைக்கு மட்டும் முழு மானியம் அளிக்கப்படுகிறது. அதைப் போல இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது என்று எல்லா மருத்துவமனைகளுக்கும் அரசு முழு அளவிலே, முழு நிதியை மானியமாக வழங்கி கால்நடை மருத்துவமனைகளைக் கட்ட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அது இயலாது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் மொத்தம் எத்தனை கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன ? எந்த மாவட்டத்தில் கால்நடை கள் அதிகமாக இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் மொத்தம் 806 கால்நடை மருந்தகங்களும் மருத்துவமனைகளும் செயல்படுகின் றன. எந்த மாவட்டத்தில் கால்நடைகள் அதிகமாக இருக்கின்றன என்ற குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. அதற்கு தனிக் கேள்வி எழுப்பவேண்டும்.

**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் பர்கூர் என்ற இடத்தில் பெரிய மலை இருக்கிறது. அங்கே ஆதிவாசிகள் அதிகமாக இருக் கிறார்கள்; கால்நடைகளும் அதிகமாக இருக்கின்றன. கால்நடை கள் அதிகமாக இருக்கின்ற அந்த ஊரில் கால்நடைகளுக்கு ஏதாவது நோய்கள் ஏற்பட்டு, அந்தக் கால்நடைகளுக்கு வைத்தியம்



செய்யவேண்டும் என்றால் அங்கிருந்து 27 கிலோமீட்டர் தொலை வில் இருக்கிற அந்தியூருக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்க பர்கூரில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சாலவாக்கத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது பற்றிய கேள்வி. அந்தியூர் அருகில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை. தனி வினா எழுப்பினால் விடை அளிக்கப்படும்.

**திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்கள் வாடகைக் கட்டடங்களில் பெரும்பாலும் நடைபெற்று வருவதால் இந்த ஆண்டு புதிதாகக் கட்டடம் கட்டத் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்களுக்கு நிரந்தரமாகக் கட்டடம் கட்டுகின்ற வரையில் அந்த ஊராட்சி ஒன்றியமோ அல்லது ஊராட்சி மன்றமோ கட்டடத்தை வாடகை இல்லாமல் இலவசமாக வழங்க வேண்டுமென்பது அரசின் கொள்கை. ஒவ்வொரு வருடமும் அரசின் நிதிநிலைக்கு ஏற்ப புதிதாக நிரந்தரமாக கால்நடை மருந்தகங்களுக்கு கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இதுவரையில் எத்தனை கட்டடங்கள் கட்டப் பட்டன; இந்த ஆண்டு எத்தனை கட்ட அனுமதிக்கப்பட்டது என்கின்ற விவரங்கள் என்னிடம் தற்போது இல்லை. தனி வினா எழுப்பினால் விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பல கால்நடை மருந்தகங்களில் மருத்துவர் கள் இல்லை என்கிற ஒரு செய்தி சொல்லப்படுகின்றது. அப்படிப் பட்ட கால்நடை மருந்தகங்களுக்கு மருத்துவர்களை நியமிக்க முடியுமா ? மருத்துவர்கள் இல்லாத காலி இடங்கள் எத்தனை இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் இவ்வாறு காலியாக இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் நட வடிக்கை எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரெ. பிச்சைமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் கால்நடை மருந்தகங்களை அதிகமாகச் செயல்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

[1989 ஏப்ரல் 8

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தமிழ்நாட்டில் 50 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதற்கு மேலும் இப்போது அமைக்கின்ற வாய்ப்பு நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சனிக்கிழமை. உறுப்பினர்கள் முன்னால் ஒரே இறைச்சி மயமாக இருக்கிறது. அதனால் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தீட்சிதர், திரு. பூவராகன் போன்றவர்களுக்கு சங்கடம் அளிப்பதாக இருக்கிறது. எனவே, இறைச்சி பரிமாற்றம் நாளைக்கு மாற்றப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கேட்பது வினா தானா ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : இது ஒரு வேண்டுகோள் அல்லது தகவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி வினா நேரத்தில் வேண்டுகோள் வைப்பது முறைதானா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இறைச்சி நிறுவனம் பற்றிய கருத்துக்கும் சனிக்கிழமைக்கும் தொடர்பு இல்லை. இது வெறும் கருத்து மட்டும் தான்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : கனம் சபாநாயகர் அவர்களே, இங்கே இறைச்சி பற்றி சொல்கிறார்கள், தமிழ்நாட்டிலிருந்து கால்நடைகள் ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அதைத் தடுக்க ஏதாவது குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசுக்கு ஏற்கெனவே பல கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே, இது மிகுந்த கவனத்துடன் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வினா உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



3. தகவல் நேரம்

(அ) சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிப் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளது, பேரவைத் தலைவரின் தீர்ப்புப் பற்றி மத்திய அமைச்சர் வெளியில் விமர்சித்துள்ளது, பேரவைத் தலைவரின் இல்லத்திற்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட சிலர் சென்று முற்றுகைப் போராட்டம் நடத்தியுள்ளது ஆகியவை பற்றிய பிரச்சினைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள், என்னுடைய முன்னிசைவைப் பெற்றபடி இங்கே ஒரு செய்தியைச் சொல்வார்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒழுங்குப் பிரச்சினை இந்த அவை சம்பந்தப்பட்டது; உங்கள் சம்பந்தப்பட்டது; இந்த அவையின் மாண்பை எந்த அவையாலும் குறைக்க முடியாது. இந்த அவையின் அதிகாரத்தையும், மாண்பையும் வெளியே இருக்கக்கூடிய யாரும் குறைக்கக்கூடிய அளவுக்குப் பேசக்கூடாது, பேசவும் முடியாது. சபாநாயகருடைய தீர்ப்பைப் பற்றி வெளியே—பணிய வைக்கக்கூடிய அளவுக்கு—பேச முடியாது. அது விதி. Within the four walls of this House அதாவது இந்த அவையின் நான்கு சுவர்களுக்குள் நீங்கள் எந்தத் தீர்ப்பை வழங்குகிறீர்களோ அதுதான் தீர்ப்பு. அது தான் சட்டம். இதை நான் சொல்லவில்லை. ஐவர் ஜென்னிங்ஸ் சொல்கிறார். நான் சொன்னால்தான் பிரச்சினை. Iver Jennings சொல்கிறார். Within the four walls of the House, the word of the Speaker is the law. அப்படி நீங்கள் வழங்கிய தீர்ப்பைக் குறித்து, ஒரு கட்சி உங்கள் இல்லத்தை நோக்கி வந்து உங்களை முற்றுகை இடுவதை நான் பத்திரிகையில் பார்த்தேன். இந்த அவையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை வைத்து அவைக்கு வெளியே சபாநாயகருடைய இல்லத்தை முற்றுகையிடுவது ஜனநாயக பாரம்பரியத்திற்கு உகந்தது அல்ல என்பதை உணர்ந்துதான் நான் இதை இங்கே எழுப்ப முயல்கிறேன்.

பாராளுமன்றத்தில் கூட மத்திய உள்துறை அமைச்சர் பேசும்போது, சட்டமன்ற நிகழ்ச்சிகள் குறித்த சம்பவங்கள் குறித்து எங்களுக்கு அறிக்கை வந்திருக்கிறது, என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை— திரு. பூட்டாசிங்—சொன்னார். அதுவும் தவறு. அங்கேயும் பேச முடியாது. அந்த மன்றத்திலே இந்த மன்றத்தின் சம்பவங்களைக் குறித்து விவாதிக்கவும் முடியாது; கருத்துச் சொல்லவும் முடியாது; நடவடிக்கை எடுக்கவும் முடியாது. This House is sovereign and supreme. இங்கே தமிழ்நாட்டிற்கு வந்த மத்திய அமைச்சர் திரு. தினேஷ் சிங் இந்த அவையின் சம்பவங்களைக் குறித்துப் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார். நேற்றைய தினம் மத்திய அமைச்சர் திரு. சிதம்பரமும் பேசி இருக்கிறார். அதாவது உங்களுக்கு அவர் ஒரு டைரக்ஷன் தருகிறார். இந்த அவை

யில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து, சம்பவங்கள் குறித்து,
போட்டோக்களை வெளியிட வேண்டுமென்று உங்களுக்கு டைரக்
ஷன் கொடுப்பது போல் பேசி இருக்கிறார். அது தவறு.
மத்திய அமைச்சர் பாராளுமன்றத்தில்தான் பதில் சொல்ல
வேண்டும். வெளியே பேசினால் கூட அது ஜனநாயகத்துக்கு
உகந்தது அல்ல. நீங்கள் கூட பாராளுமன்ற சபாநாயகருக்குக்
கடிதம் எழுதலாம். ஒரு பாராளுமன்ற உறுப்பினராக உள்ள
மத்திய அமைச்சர் இங்கே வந்து தமிழ்நாட்டு சபாநாயகருக்கு,
இப்படிச் செய்ய வேண்டும், நீங்கள் இப்படித் தீர்ப்பு வழங்கி
இருக்க வேண்டும், இதைச் செய்திருக்க வேண்டும் என்றெல்லாம்
சொல்ல முடியாது. இங்கே இந்த அவையில் நடைபெறுகிற
நிகழ்ச்சிகள் எல்லாம் பிரைவேட்டாக நடப்பது போல்தான்.
இந்த அவைக்குள் நீங்கள் யாரையாவது அனுமதித்தால்தான்
உள்ளே வர முடியும். அதாவது பார்வையாளர் மாடத்திற்கு
இங்கே உறுப்பினர்களைத் தவிர யாரும் வர முடியாது. இதை
நான் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். நீதிமன்றத்தை நாம் பப்ளிக்
கோர்ட் என்று சொல்ல வேண்டும். அங்கே யார் வேண்டுமா
னாலும் வரலாம். அங்கே ஏதாவது நிகழ்ச்சிகள் நடைபெற்றால்
அதற்கு இந்த விமர்சனங்கள் பொருந்தும். ஆனால், சட்டமன்
றத்தைப் பொறுத்தவரையில் சபாநாயகருடைய அனுமதி பெற்று
—உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் இங்கே வந்து அமர
முடியாது—பார்வையாளர் மாடத்திற்குத்தான் வர முடியும்.
Because there is open interaction of open mind and open heart.
வெளியே இருந்து அச்சுறுத்தல் வந்தால், வெளியே இருந்து
யாராவது மூன்றாவது மனிதர் இங்கே இருக்கக்கூடிய நடவடிக்
கையில் ஈடுபட்டுப் பேசினால், இங்கே நம்முடைய தன்னிச்சை
குறைந்துவிடும் என்ற காரணத்தினால்தான் அப்படி அறிஞர்கள்
சொல்கிறார்கள்.

ஆகவே, உங்களிடத்தில் நான் தெரிவித்துக் கொள்வ
தெல்லாம், இந்த அவையின் சம்பவத்தைக் குறித்தோ,
இந்த அவையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்தோ இந்த அவை
யில்தான் விவாதித்து முடிவெடுக்க வேண்டும்; இந்த அவையில்
சபாநாயகர் அவர்கள் என்னென்ன உத்தரவுகளை வழங்குகிறார்
களோ அதுதான் உத்தரவு. உங்களுடைய உத்தரவுக்கு மேல்
எங்கேயும் அப்பீல் கிடையாது. There is only one Speaker and
there is no Speaker-General in India. ஒரு மாநில உயர்நீதிமன்றம்
ஒரு தீர்ப்பு வழங்கினால் கூட அண்டை மாநில உயர்நீதிமன்றம்
அதை மறுத்தோ, அதைப் புறக்கணித்தோ, குறைத்தோ, சொல்ல
முடியாது. அதுபோல்தான் இது. மாண்புமிகுந்த அதாவது
" சாவரின் லெஜிஸ்லேச்சர் ". ஆகவே, இப்படி இங்கே வந்து
நம்முடைய சட்டமன்றத்தின் மாண்பையும் சபாநாயகருடைய
அதிகாரத்தையும் வெளியே விமர்சிக்கக்கூடிய இந்த மத்திய
அமைச்சர்கள் மற்றும் இன்னும் பல கட்சியினர் எடுக்கக்கூடிய
நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக நீங்கள்
ஏதாவது ஒரு வழிவகையைப் பின்பற்ற வேண்டும் என்ப
தற்காகத்தான் இதை நான் இங்கே சொல்கிறேன்.



எல்லாக் கட்சிகளையும் அழைத்துப் பேசுங்கள். வெளியிலே
முற்றுகையிடக்கூடிய கட்சி மெம்பர்களும் இங்கேதான் இருக்கின்
றார்கள். அவர்களை அழைத்துச் சொல்ல வேண்டும். இப்படிப்
பணிய வைப்பது, சபாநாயகருடைய தீர்ப்பை மாற்றச் சொல்
வது, சபாநாயகர் இப்படித்தான் செயல்பட வேண்டும் என்று
சொல்வது, உண்மையிலேயே இந்தச் சட்டசபையின் மாண்பைக்
குறைப்பது போல ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தன்னிச்சையாகச் செயல்படக்கூடியவர்தான் சபாநாயகர்.
காரணம், நேரு அவர்கள் கூட ஒரு முறை சொல்லியிருக்
கிறார்கள். "The Speaker represents the House; the House
represents the nation." நீங்கள் எல்லாம் தமிழ்நாட்டில் இன்
றைக்கு சட்டமன்றத்தில் பிரதிநிதியாக இருந்துகொண்
டிருக்கின்ற காரணத்தினால், வெளியிலே யாராவது உங்களைக்
குறைத்துச் சொன்னாலும் கூட இந்தச் சட்டமன்றத்தி
னுடைய உறுப்பினர்களுடைய மாண்பு குறைந்து விடுகிறது.
எங்களை உள்ளடக்கியதுதான் இந்த சட்டமன்றம் என்ற காரணத்
தினால், நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இதற்கு
ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பாராளுமன்றத்தில் இது
போன்ற விவாதங்களை அனுமதித்ததே கிடையாது. பாராளு
மன்ற சபாநாயகர் பல்வேறு நிகழ்ச்சிகள் இங்கே நடைபெற்ற
தைக்கூட அங்கே அனுமதித்தது கிடையாது. இங்கே வரக்கூடிய
அமைச்சர்கள் இப்படி அவர்கள் தங்களுடைய கருத்துக்களைச்
சொல்லி, இந்த சட்டமன்ற நிகழ்ச்சிகள் இப்படித்தான் இருக்க
வேண்டும், நீங்கள் போட்டோக்களை வெளியிட வேண்டும் என்று
உங்களுக்கு ஒரு direction கொடுப்பது போலப் பேசுவது இந்த
சபையின் மாண்பைக் குறைப்பது போலாகும். ஆகவே, கண்ட
னத்திற்குரியதுதான். அப்படிச் சொல்லக் கூடாது. ஆகவே,
இங்கே என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் இன்றைக்கே
இதற்கு ஒரு முடிவு கட்டுங்கள். இல்லாவிட்டால் நாள்தோறும்
பத்திரிகையில் பார்த்தால், ஒவ்வொரு மத்திய அமைச்சரும்
குறைத்துப் பேசுவதுபோல, இந்த மன்றத்தின் மாண்பைக்
குறைத்துப் பேசுவதுபோல பல செய்திகள் வந்து கொண்டு இருக்
கின்றன. எனவே, வருகின்ற அமைச்சர்கள் எல்லாம் சட்ட
மன்ற நிகழ்ச்சிகள் குறித்து அரசியலுக்காகப் பேசக்
கூடிய ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால் அதற்கு ஒரு
முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். எல்லாக் கட்சி மெம்பர்களை
யும் அழைத்துப் பேச வேண்டும். இனிமேல் இதற்கு ஏதாவது
நடவடிக்கையும் எடுக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்
மீது நடவடிக்கை எடுக்கலாம். இந்த அவையிலே எடுத்திருக்
கிறோம். நடவடிக்கை எடுத்து பரிந்துரை செய்து பாராளுமன்
றத்திற்கு அனுப்புவது நல்லது. இந்த மன்றத்தை அவமதித்தது
மத்திய அமைச்சர் என்றாலும், நிச்சயமாக இந்த அவையின்
உரிமையை மீறிய செயலுக்காக prima facie நேரடியாக வந்து
விட்டது, பத்திரிகையிலே வந்துவிட்டது. நேரடியாகவே நட
வடிக்கையும் எடுக்கலாம். அது குறித்து நான் உங்களின் எண்
ணத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 8

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இங்கே சபையிலே இல்லாதவர்
களைப் பற்றி திரு. பாண்டியன் அவர்கள் பேசினார்கள்.
அது எந்த அளவுக்கு மரபுக்குட்பட்டது என்று அறிந்துகொள்ள
விரும்புகிறேன். இது ஒன்று. இரண்டாவது, மாண்புமிகு உள்
துறை அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் பேசியது, உங்
களுக்கு direction என்று சொன்னார்கள். நிச்சயமாக it is not a
direction, it is simply a request "வெளியிட வேண்டு
கிறேன்" என்றுதான் கேட்டிருக்கிறார்கள். That is not a
direction. இதுபோன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
அடிக்கடி இங்கே சபையிலே இல்லாதவர்களைப் பற்றியும் மற்ற
வர்களைப் பற்றியும் பேச அனுமதிக்கப்படுவது முறைதானா
என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

திரு. சோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள்
குறிப்பிட்டார்கள், சபையிலே இல்லாதவர்களைப் பற்றிப்
பேசலாமா என்று. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்
திரு. பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து நான்
புரிந்து கொண்டது—சபையில் இருக்கக்கூடியவர்கள், சபைக்கு
தலைமை ஏற்றிருக்கக்கூடிய உங்களைப் பற்றிய பிரச்
சினை—உங்களுடைய வீட்டை நோக்கி ஒரு நாடாளுமன்ற
உறுப்பினர் தலைமை தாங்கி அழைத்து வந்து முற்றுகை
யிடுவதற்காக வந்திருக்கிறார்கள். அதை அனுமதிக்கக் கூடாது
என்ற முறையிலேதான் சொன்னார்கள் என்பதை நான்
புரிந்து கொண்டேன். எனவே, சபையில் இருக்கக்கூடிய, சபைக்
குத் தலைவராக இருக்கக்கூடிய உங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை
என்ற முறையிலே இதைக் குறிப்பிடுவது தவறல்ல என்று நான்
குறிப்பிட விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்
டியன் அவர்கள், முன்னாள் அவைத் தலைவராக விளங்கியவர்
கள். இந்த அவையினுடைய மதிப்பைக் காப்பாற்றுவதற்கு,
உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு, தாங்கள் பொறுப்பேற்றிருக்
கிறீர்கள் என்ற முறையில் ஒரு வேண்டுகோளைத் தங்களிடம்
தெரிவித்திருக்கிறார்கள். இந்த நாட்டிலே பல பிரச்சினைகள்
ஏற்படுகிறபோது, ஒவ்வொரு அமைப்பினுடைய தனித் தகுதிகள்
மறக்கப்பட்டு விடுகின்றன. இந்த அமைப்பு, சட்டமன்றம்,
இறையாண்மையுள்ள ஓர் அமைப்பு. அதற்குரிய அதிகாரங்களுக்
குட்பட்டு, அரசியல் சட்டத்தாலே வழங்கப்பட்டிருக்கிற உரிமை
களுடன், அவற்றைப் பற்றி முடிவு செய்து நடைமுறைப்படுத்து
கிற ஒரு முறை, இறையாண்மை உள்ள ஓர் அமைப்பு. இந்தி
யாவிலேயுள்ள மாநிலச் சட்டமன்றங்கள், சட்டமன்ற அதிகார
வரம்புக்குட்பட்ட இறையாண்மை உள்ள அமைப்பு. இறையாண்
மையுள்ள அமைப்பு மட்டுமல்ல, ஜனநாயகத்தினுடைய சின்ன
மாகவும் பாதுகாவலனாகவும் அந்த அளவிற்குள்ளே இயங்குவது.





(முற்பகல் 10–10)

எனவேதான் இந்த அவைக்கு, இந்த அவையினுடைய தலைவ
ருக்கு தனித் தகுதிகள், உரிமைகள், இந்த அவையினுடைய செயல்
முறைகளைப் பொறுத்து இருக்கின்றன. இந்த அவையினுடைய
நடைமுறையில் ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகளில் ஏதேனும் சிக்கல்
கள் ஏற்படுமானால், பிரச்சினைகள் இருக்குமானால்
எந்த நீதிமன்றத்திலும் இந்தப் பிரச்சினையை எழுப்ப
முடியாது. இந்த அவைக்குள் நடப்பதை, பிரச்சினையை
நீதிமன்றத்திலே எழுப்பக்கூடாது. சட்டமன்ற உறுப்பினர்
கள் கிரிமினல் குற்றம் செய்தால் அதை எழுப்பக்
கூடாதா என்ற கேள்வி வெளியிலே எழுப்பப்படுகிறது.
சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலே தடுமாற்றத்
திற்கு ஆளானாலும், குறைகளுக்கு ஆளானாலும் மறுபடியும்
அவர்கள் ஒன்று சேர்ந்து இயங்கித்தான் ஜனநாயகக் கடமை
களை ஆற்ற வேண்டும். ஒன்றுபட்டு இயங்க வேண்டிய ஓர்
அமைப்பாக மறுபடியும் செயல்படுவதற்கு ஏற்ப தனியாகச் சட்ட
மன்றத்திற்கு ஏற்புடைய முறைகளைத்தான் வகுத்துக்கொள்ள
முடியுமே தவிர, சட்டமன்றத்திற்கு வெளியே இருந்துகொண்டு
முறைகளை வகுத்துத் தர முடியாது. எனவே, இப்படிப்
பட்ட அந்தச் சட்டமன்ற முறைகளை வகுக்க, காப்
பாற்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் மரியாதையைக்
காப்பாற்ற, அதற்கான ஒரு பெரிய பொறுப்பு இந்த
அவைத் தலைவருக்கு, சபாநாயகருக்கு இருக்கிற காரணத்
தால், சபாநாயகர் எப்படி நடந்துகொள்ள வேண்டு
மென்பது குறித்து, பொதுக் கருத்தாக நாட்டிலே எப்போதும்
ஆலோசனைகள் வழங்கப்படலாமே தவிர, ஒரு குறிப்பிட்ட
நிகழ்ச்சியைப் பற்றி, சட்டமன்றத்திலே நடைபெற்ற ஒரு சம்ப
வம் பற்றி, சட்டமன்றத்தின் சபாநாயகருக்கு இருக்கிற உரிமை
யைப் பற்றி, ஐயுறத்தக்க அளவுக்கு அதுவும் ஒரு பொறுப்பிலே
இருப்பவரே பேசுவது கூடாது. அதுவும் அரசியல் கண்ணோட்
டத்தில் பேசுவது அதை விட மிகப் பெரிய தவறு. படங்களை
வெளியிடலாமா, கூடாதா என்பது குறித்து ஏற்கெனவே இந்த
அவையில் பல கட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு படங்களை வெளி
யிடக் கூடாது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிற காரணத்
தாலேதான் ஆளும் கட்சிக்குச் சாதகமாகவே படங்கள் இருந்
தாலும்கூட அவற்றைக்கூட வெளியிடாமல் கூடுமானவரை
கட்டுப்பாட்டைக் காப்பாற்ற வேண்டிய ஓர் அவசியம் தங்களுக்கு
இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட நிலையில் அவைத் தலை
வர் அவர்கள் ஏதோ இந்த அவையிலே முறைகேடு நடப்பதற்குத்
துணையாக இருந்ததைப் போல ஒரு கருத்தை ஏற்படுத்துவதற்
காக, வேண்டுமென்றே பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது
பாராளுமன்றத்திலே அமைச்சுப் பொறுப்பில் இருக்கின்றவர்
களோ நடந்துகொள்ளும் நிலை இருப்பதைச் சுட்டிக் காட்ட
வேண்டியவர்களுக்குச் சுட்டிக்காட்டி, இந்த அவையினுடைய

கண்டனத்தை, இந்த அவையினுடைய வருத்தத்தோடு கூடிய ஒரு கருத்தை அவர்களுக்குத் தெரிவித்து, உரிய நடவடிக்கை, எச்சரிக்கை செய்யத் தாங்கள் முன்வரவேண்டுமென்று இந்த அவையின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். வேண்டுகோள் என்கிற பெயராலே கூட, மறுபடியும் சொல்கிறேன், வேண்டுகோள் என்கிற பெயராலே கூட இந்த அவையின் தலைவரைக் கட்டுப்படுத்த, வெளியார் முயற்சிப்பது சரியல்ல, முறையல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசியல் சட்டம் அமலுக்கு வந்த 1952 ஆம் வருஷத்திலிருந்து, இந்திய மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களுடைய பாராளுமன்றத்தையும், சட்டமன்றத்தையும் மற்றுமுள்ள உள்ளாட்சி அமைப்புகளையும் உருவாக்கியதிலிருந்து இங்கே சென்னை மாநகரில் நடந்து கொண்டிருக்கும்படியான நிகழ்ச்சிகளை இதற்கு முன்பு நாங்கள் பார்த்ததில்லை. பாராளுமன்றத்தைத் தலைமை தாங்கி நடத்துகின்ற மதிப்புற்குரிய பாராளுமன்ற தலைவர் அவர்கள் அங்கே தலைமை தாங்கி அவையை நடத்துகின்ற நேரத்தில் அவையில் நடைபெறுகின்ற பிரதிபலிப்புகளையும், பலவிதமான நிகழ்ச்சிகளையும் நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். இங்கே நடைபெறுவதைவிட பன் மடங்கு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற அந்த அவையில் கூட அவற்றை எல்லாம் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, தன்னால் முடியாத நேரத்தில் சில சமயம் அவையை கூட ஒத்திவைத்துவிட்டு கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டுப் பேசி சபையை ஒழுங்குபடுத்தி சபையை நடத்திக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். சட்டசபைக்குத் தலைவராக இருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவருடைய வீட்டுக்குச் சென்று, அந்த வீட்டை முற்றுகையிட்டு, அவர்களைப் பணியவைப்பதற்கான பலவிதமான முயற்சிகளில் ஈடுபட்டு, மக்களுக்கு ஒரு போதனையைக் கற்றுக் கொடுப்பது மாதிரி, இந்த வழியில் போகலாம், பாராளுமன்றம் என்ன, சட்டமன்றம் என்ன என்கிற வகையில் செயல்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அரசியல் சட்டத்திலே உருவாக்கி இருக்கும்படியான சட்ட விதிகளும் அதை அமலாக்கி இருக்கும்படியான பழக்க வழக்கங்களும் எல்லாம் பிரச்சினை அல்ல. ஆனால், பிரச்சினைகளைத் தெருவிலே தீர்த்துக்கொள்ளலாம் என்கிற நிலைமைக்கு, தூண்டுதலை உருவாக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக இது உருப்பெற்றிருக்கிறது. அதுவும் நம் சென்னை மாநகரத்திலே நடைபெற்றிருப்பதை இந்த அவையின் சார்பிலே மிகுந்த வேதனையுடன் கண்டிப்பதுடன், இப்படிப்பட்ட முறைகளை நடத்திக்காட்ட அவர்கள் புறப்பட்டுக்கொண்டு இருக்கும்படியான சூழ்நிலைகளை எப்படி நாம் தமிழ்நாட்டில் அனுமதிக்கலாம்? அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையைத்தான் நாம் இன்றைக்குப் பார்க்கிறோம்.





இந்த விஷயத்தை நாங்கள் கூர்மையாகக் கவனித்திருக்கிறோம், ஆகவே எந்தக் காரணத்தைக் கொண்டும், எந்த நியாயத்தையும் யாரும் சொல்ல முடியாது. நமது மதிப்புமிக்க அவைத் தலைவரவர்களுடைய வீட்டை முற்றுகையிட்டு, போராட்டம் நடத்துவதென்பது திட்டவட்டமாக நாம் சிந்திக்க முடியாத ஒன்று. அமைச்சர்களுடைய வீட்டுக்குச் செல்கிறார்கள். மதிப்புமிக்க இந்தியாவின் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய வீட்டுக்கு முன்னால்கூடப் போய் சத்தியாக்கிரகம் பண்ணுவதையும் உண்ணாவிரதம் இருப்பதையும் நாம் பார்க்கிறோம். ஆனால் அவைத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட நடவடிக்கை எக்காரணத்தைக் கொண்டும் எடுக்க முடியாது. அது சட்டமல்ல, ஒழுங்கல்ல, நியாயமுமல்ல. 'லாலெஸ்னெஸ்', சட்டமில்லாத ஒரு சூழ்நிலையைத்தான் அது உருவாக்கும். அதற்கு இது இட்டுச் செல்லுமென்று பயப்படவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதற்கு முன்னால் இந்த அவையிலே நான் குறிப்பிடும்போது பாராளுமன்றத்தில் நடந்த விவாதம் பற்றிக் குறிப்பிட்டேன். அதைப்பற்றி விமர்சிக்க, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது. அன்றைக்கு ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் கோடிட்டுக் காட்டியபோது, பாராளுமன்றத்திலே நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்முடைய சபையிலே நடந்த விஷயம் பற்றி அங்கே கிளப்பியபோது, பாராளுமன்றத் தலைவர் என்ற மரியாதையோடும் மதிப்போடும் அந்த நிகழ்ச்சி பற்றி அங்கே பேச முடியாதென்று திட்டவட்டமாக மறுத்தார்கள். அதற்கு அடுத்ததாக திட்டவட்டமாக மற்றொரு அமைச்சர் அப்படிப் பதில் கொடுத்தார். பிறகு, பாராளுமன்றத்திலே ஆளுங் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் அதை எதிர்த்து அங்கே பேசினார்கள். அதை இங்கே குறிப்பிட்டு, இது ஒரு அபாயத்தினுடைய சூசகமாக இருக்கிறதென்று நான் எடுத்துக் காட்டினேன். மதிப்புமிக்க தலைவரவர்களே, இந்த நிலைமையை நம்முடைய தமிழ்நாட்டில் அனுமதிப்பதென்பது சரியல்ல. மத்திய அரசுக்கும், பாராளுமன்றத்திற்கும், பாராளுமன்றத் தலைவருக்கும் நாம் இந்த நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லவேண்டும். நாம் இதனால் ஆத்திரப்படுவதற்கோ அல்லது அதே போன்ற உணர்வுகளைத் தூண்டுவதற்கோ இரையாக முடியாது. நம்முடைய தமிழ்நாட்டினுடைய சூழ்நிலை அப்படிப்பட்டதல்ல. தேச விடுதலை இயக்கத்தில் ஜீவனைக் கொடுத்தவர்கள் எத்தனை பேர் என்று கணக்கு எடுத்தால், அன்றைக்குத் தெரியும் தமிழ் நாட்டு மக்களின் பாரம்பரியம், அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் எடுத்த பங்கு. ஆகவே நம்முடைய பாரம்பரியம் அப்படிப்பட்டதல்ல. இதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, நம்முடைய முன்னாள் சபைத் தலைவராக இருந்தவர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் நியாயமானதும், சரியானதுமாகும். அமைதியையும், சமாதானத்தையும் தமிழ்நாட்டிலே காப்பதற்காக இருக்கும்படியான வேண்டுகோளாக அந்தப் பிரச்சினை

வந்திருக்கிறது. இதைத் தாங்கள் பரிசீலனை செய்து, இந்த அவையின் சார்பிலே இந்த அவையினுடைய கருத்துக்களைக் கேட்டு இந்தமாதிரி நிலைமைகளை எந்த மாநிலத்திலும் அனுமதிக்கக் கூடாது, தமிழ்நாட்டில் நிச்சயமாக அதை அனுமதிக்க வேண்டிய சூழ்நிலை இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அது இந்த அவையிலேயே இருக்கும். அந்த உறுதியோடு நாம் இருக்கிறோம். நம்முடைய மக்கள் அந்த உறுதியோடு இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பிரச்சினையை இங்கேயே தீர்ப்போம். அப்படியில்லாமல் அந்தப் பிரச்சினைக்காக அவைத் தலைவர் அவர்களுடைய வீட்டை முற்றுகையிடுவது, பாராளுமன்றத்திலே இங்கே நடப்பதைக் கிளப்புவது, அங்கேயுள்ள அமைச்சர்கள் இங்கே வந்து அதைப் பரப்பிவிடுவது போன்ற காரியங்களை நாம் ஏற்க முடியாது. பாராளுமன்ற மரபு, அரசியல் சட்டம் நமக்கு தந்திருக்கும்படியான உரிமைகளின்—அது போதாது என்று நாம் போராடுகிறோம்—அடிப்படையில் இன்றைக்கு நாம் அதை அனுமதிக்க முடியாது. இதை இந்த அவையினுடைய கருத்தாகத் தெரிவிக்க வேண்டியதவசியம் என்று எங்களுடைய கட்சியின் சார்பில் நாங்கள் கருதுகிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. கோ. பூவராகவன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே தாங்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எல்லோராலும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அவர்கள், இந்த மன்றத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றித் தீர்ப்பு வழங்கிவிட்டீர்கள். அந்தத் தீர்ப்பை எதிர்த்து ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் உங்கள் வீட்டின் முன்னாலே போராட்டம் நடத்தினார்கள் ; அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருக்கின்ற ஒருவர் தலைமையிலே வந்தார்கள். அவர்கள் பாராளுமன்ற முறையை நன்கு உணர்ந்தவர்கள். அப்படியிருந்தும் அந்தக் கட்சி அதற்கு ஊக்குவித்து, உங்களுடைய வீட்டு முன்னாலே முற்றுகைப் போராட்டம் நடத்துகிறது. அதோடு, நேற்றையதினம் விமர்சனம் செய்கின்றபோது, பொதுக் கூட்டங்களில், சகட்டுமேனிக்கு விமர்சனம் செய்திருக்கிறார்கள். இவ்வளவு, அவ்வளவு என்றல்ல. ஆனால் பத்திரிகையில் வந்தது சில செய்திகள்தான். குறிப்பாக ஆட்சியைப் பற்றி விமர்சனம் செய்யலாம். இல்லையென்றால் அமைச்சர்களைப் பற்றிக்கூட விமர்சனம் செய்யலாம்.

சட்டமன்ற சபாநாயகரைப்பற்றி விமர்சனம் செய்வது பாராளுமன்ற ஜனநாயக முறைக்கு உகந்தது அல்ல. அதுமாத்திரமல்ல. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்-காங்கிரஸ் கட்சியின்



உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் '' ஒரு வேண்டுகோள்தான் விடுத்தார்கள் '' என்று சொன்னார். ஒரு அமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுவது என்பது ''இன்புளுயென்ஸ்'' செய்வது மாதிரி ஆகிறது. அதாவது, மறைமுகமாகச் சிபாரிசு செய்து, இதையெல்லாம் நீங்கள் செய்ய வேண்டும் என்று சொல்லுகிற மாதிரி, ஒரு 'உத்தரவுக்கு' அடுத்த நிலையில் வருகிற ஒன்றாக இருக்கிறது. இது சரியல்ல. பாராளுமன்ற மரபுகளை நன்றாக உணர்ந்தவர்கள், அதிகாரிகளைப் பற்றியும் அமைச்சர்களைப் பற்றியும் சட்டசபைத் தலைவரைப் பற்றியும் விமர்சிப்பது அவ்வளவு உகந்ததாகத் தெரியவில்லை. இப்படியே பாராளுமன்றத்தினைப் பற்றி நாம் விமர்சிக்க முற்படுவோமானால், பிறகு ஒருவருக்கொருவர் மோதல் ஏற்படும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, இதைத் தவிர்க்கின்றவகையில் தலைவர் அவர்கள் பாராளுமன்றத்தின் தலைவர் அவர்களுக்கு எழுதி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

அதுமட்டுமல்லாமல், தங்கள் வீட்டின் முன்னாலேயே முற்றுகையிட்டவர்களையெல்லாம் மன்னித்து விட்டுவிடுகிற நிலை இருக்கக் கூடாது. நல்ல முறையில் தகுந்த முறையில் தாங்கள் நடவடிக்கை எடுத்து, இதுபோல் மேலும் மேலும் இனித் தொடராதவாறு அதாவது முற்றுகைப் போராட்டம் இனியும் நடைபெறாதவாறு தடுக்க—நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற என் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

*திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய உரிமையைப்பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசிய நேரத்தில் உங்களுடைய தீர்ப்பைப்பற்றி வெளியே விமர்சனம் செய்யக்கூடாது என்ற உணர்வோடு இங்கே கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்து எந்த அளவுக்குச் சரி என்று மாண்புமிகு பேராசிரியர் அவர்களிடம் மறுபடியும் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய ஆட்சிக் காலத்தில், மரியாதைக்குரிய திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் தி.மு.க. வைச் சார்ந்த 10 சட்டமன்ற உறுப்பினர்களைச் சட்டமன்றத்திலிருந்து நீக்கிய நேரத்தில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்களை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதையும் தவிர்த்து

மரியாதைக்குரிய திரு. பி. எச். பாண்டியன் அவர்களை— அவருடைய தீர்ப்பை எதிர்த்துத்தான் அன்றைக்கு வெளியே பேசியதோடு போராட்டங்களையும் நடத்தினார்கள் என்பதை நான் உங்கள் மத்தியில் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே, இங்கே நடக்கிற நிகழ்ச்சிகளைப்பற்றிப் பொதுமக்கள் மத்தியிலே விமர்சித்துச் சொல்வதில் தவறு இல்லை. ஆகவே, உங்களுடைய உரிமைகள் எப்படி மீறப்பட்டிருக்கின்றன என்பதற்கு இந்த நிகழ்ச்சியின் மூலமாக அவர் பதில் அளிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்குள்ளே இயங்குவதற்கு, செயல்படுவதற்கு இடையூறாக மன்றத்தின் செயல்பாடுகளை யாராவது தடுப்பார்களானால், அவர்களை நீக்குவது. அதாவது இத்தனை நாட்களுக்கு நீக்குவது என்பதற்கு ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. சட்டமன்றத்திலிருந்து எந்த ஒரு உறுப்பினரையும், வெளியே நடைபெற்ற ஒரு காரியத்திற்காக நிரந்தரமாக நீக்குவது என்னும் ஒரு அதிகாரம், பாராளுமன்றத்தின் தலைவருக்கே கூட இருப்பதாக ஏற்றுக் கொள்ளப் படவில்லை.

தேர்தல் ஆணைக் குழுவிடமே இதுபற்றிக் கேட்டபோது, இரண்டாண்டுக் காலத்திற்கு மேலாக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவராக ஓர் உறுப்பினர் சட்டமன்றத்தில் இருப்பாரானால், அவரை விலக்குவதற்குத்தான்—அதுவும் தேர்தல் ஆணைக் குழுவிற்குத்தான்—அந்த அதிகாரம் இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அதிகாரத்தை, சபாநாயகர் பயன்படுத்தினால்கூட அது தவறு அல்ல. ஆனால் ஒரு குற்றம் வெளியே இழைக்கப்பட்டதாகவும் அந்தக் குற்றம் இந்த அவையிலே எடுத்துக் கொள்ளப்பட்ட உறுதிமொழியை மீறியதாக இருப்பதாகவும் சபாநாயகர் கருதி அல்லது அவையிலே உள்ள பெரும்பான்மைக் கட்சியினர் கருதி, அதன் அடிப்படையில் எதிர்க்கட்சியின் உறுப்பினர்களை நீக்குவது என்பது இந்த அவையின் சபாநாயகருடைய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாக இருந்தது என்ற அடிப்படையில்தான் அப்போது அந்தக் கருத்து விமர்சிக்கப்பட்டதே தவிர, இந்தச் சபையின் கண்ணியத்தை, இந்தச் சபையின் உரிமையைக் காப்பதற்கு மாறாக அந்த விமர்சனம் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு நானும் போயிருந்தேன். மாண்புமிகு





அமைச்சர் அவர்கள் பேசிய நேரத்தில் சபாநாயகரைப்பற்றி மொத்தத்தில் கேட்ட கேள்வியெல்லாம் ''அந்தக் கடிதம் எப்படி வந்தது? வெளியே நடந்தது எப்படி வந்தது'' என்பதுதானே தவிர, அவர் வேறு விதமாக விமர்சனம் செய்யவில்லை.

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். அப்துல் லத்தீப் அவர்களும் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களும் தங்கள் இருக்கையிலிருந்து எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் திரு. லத்தீப் அவர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : No, No, முதலில் என்னை அனுமதிக்க வேண்டும். என்னைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். எங்கள் கட்சியைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். எனவே என்னை முதலில் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் திரு. லத்தீப் அவர்கள் பேசி முடிக்கட்டும். பிறகு உங்களை அனுமதிக்கிறேன் (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : No, No, நான் முதலில் எழுந்தேன். அப்போது திரு. ரமணி என்று சொல்லி விட்டீர்கள். பிறகு எழுந்தபோது திரு. கே. கே. எஸ்.எஸ் ஆர். இராமச்சந்திரன் என்று சொல்லிவிட்டீர்கள். எனவே இப்போது எனக்கு முதலில் சான்ஸ் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எதிர்வாதம் செய்ய நான் அனுமதிக்கவில்லை. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்திற்கு ஒரு வாய்ப்பு உண்டு. அது கொடுக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் வாய்ப்புக் கேட்டால் முடியாது. அடுத்தடுத்துக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நான் பலமுறை கேட்டாகிவிட்டது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும்போது ஒருமுறை வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. அதைப்போல் இப்போது திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசிய பிறகு, நீங்கள் பொறுமையாக அமர்ந்தால் உங்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கப்படும். (குறுக்கீடு) நீங்கள் எல்லா வாய்ப்பையும் பெற்றாக வேண்டும் என்று கண்டிப்பாக என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு)

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : முன்னால் நான் 30 செகண்டுக்கு மேல் பேசவில்லை. எனவே நீங்கள் என்னை அனுமதிக்கவேண்டும்.

[1989 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவு நேரம் பேசியிருக்கிறீர்கள் என்பதல்ல. (குறுக்கீடு) ஏற்கெனவே ஒருமுறை பேசியிருக்கிறீர்கள். திரும்பத் திரும்பப் பேச வேண்டும் என்பது அவசியமில்லை. திரு. அப்துல் லத்தீப் பேசிய பிறகுதான் அனுமதிக்க முடியும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : எங்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. எனவே எங்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கோள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வக்காலத்து வாங்க முடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நாங்கள் சார்ந்திருக்கிற கட்சி மீது குற்றம் சுமத்தி இருக்கிறார்கள்.** (குறுக்கீடு) என்னைப் பேச அனுமதிக்கப்போகிறீர்களா, இல்லையா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : உறுப்பினரவர்கள் இவ்வாறு பேசக்கூடாது என்பதால் அவர் சொன்ன வார்த்தையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினார்கள்.)

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பேச வாய்ப்புக்கொடுத்து, பேசாமல் வெளிநடப்புச் செய்ததற்கு என்ன பொருளென்று புரியவில்லை. திரு. அப்துல் லத்தீப் பேசாமல் அமர்ந்திருக்கிறார். திரு. பாலசுப்பிரமணியம் பேசலாமென்று நீங்கள் சொல்லிவிட்டீர்கள்; சொன்ன பிறகும் ''வாக் அவுட்'' செய்யலாம் என்றால் பேச இயலாத காரணத்தால் ''வாக் அவுட்' என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே,** அந்த வார்த்தைகளை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட அமைச்சர் குறிப்பிட்ட அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1989 ஏப்ரல் 8]

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, பேரவைத் தலைவரைக் குறித்த பிரச்சினை இங்கே விவாதத்திலே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால் நாம் மிகுந்த நிதானத்தோடு நம்முடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். பேரவைத் தலைவர், வெளியிலே நடக்கின்ற நிகழ்வுகளைக் குறித்து நேரடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. யாராவது இந்த சபையிலே எடுத்துச் சொல்ல வேண்டும். அப்போதுதான் அவர் தன்னுடைய கவனத்திற்கு வந்த வெளியிலே நடக்கக்கூடிய நிகழ்வுகள் குறித்த நடவடிக்கைகளை எடுக்க முடியும். அதைப்போலத்தான், வெளியிலே இருப்பவர்கள், சபாநாயகரைக் குறித்து, சபையிலே நடந்த அவருடைய தீர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டும், அவருடைய நடைமுறைகளைக் குறித்தும், விவாதம் செய்யக் கூடாது; விமர்சனம் செய்யக் கூடாது என்பது நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற மரபு. இப்போது இருக்கிற பிரச்சினை சபையிலே நடந்த ஒரு நிகழ்வின் அடிப்படையில் சபாநாயகர் அவர்களை விமர்சனம் செய்வதோ, அல்லது அவர்களுடைய வீட்டுக்குச் சென்று தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிப்பதோ முறையற்றது என்பது மட்டுமல்லாமல் கண்டிக்கத்தக்கதும், தண்டிக்கத்தக்கதும் ஆகும் என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இங்கே ஒன்றைச் சொன்னார்கள். கடந்த காலத்தில் சபாநாயகரைப் பற்றி விமர்சனம் செய்யப்படவில்லையா என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். கடந்த கால விமர்சனம் என்பது சபாநாயகரை நேரிடையாக விமர்சனம் செய்ததல்ல. ஏனென்றால், ஏதோ ஒரு கட்சி ஒரு நிலையை மேற்கொண்டு, ஒரு காரியத்தைச் செய்ய, அந்தக் காரியம் அரசியல் அமைப்புச் சட்டத்தை அவமதித்ததற்கு ஒப்பானதாகும் என்ற கருத்து இன்னொரு கட்சியால் வெளியிடப்பட்ட சூழ்நிலையில், வெளியே நடந்த அந்த நிகழ்வைச் சபாநாயகர் தன்னுடைய கருத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற மரபை மீறி, ஒரு மரபை மேற்கொண்டார் என்பதற்காக வெளியிலே நடந்த அந்த நிகழ்வை சபையிலே விவாதித்திருப்பதும், அதன் மீது நடவடிக்கை எடுத்திருப்பதும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஏற்புடையதல்ல; அரசியல் அமைப்புச் சட்டத்தின் மரபுக்கும் ஏற்புடையதல்ல என்ற அளவுக்குத்தான் விமர்சனம் செய்யப்பட்டது. நான் கூட அந்த நேரத்தில் பொது மேடையில் பேசி இருக்கிறேன். வெளியிலே "who has happened outside the House should not be taken due cognizance." எங்களுக்கு உங்களுடைய கருத்து மாறுபடலாம்; உங்களுடைய கருத்து உங்களுக்கு மாறுபடாது.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, இந்த ஆசனத்திலிருந்து ஒரு நேரத்தில் அளித்த தீர்ப்பை மறு நேரத்தில் இங்கே விவாதிப்பது மரபு கிடையாது. ஆகவே அதுகுறித்து பேசியது

அவைக் குறிப்பில் இருக்கக் கூடாது. அதிலே ஒவ்வொரு சபாநாயகரும் கொடுக்கிற தீர்ப்பு குறித்து விமர்சித்தால், நாளைக்கு அவர் எம்.எல்.ஏ.வாக வந்தால் கஷ்டமாக இருக்கும்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு திரு. பாண்டியன் அவர்கள் அவைத் தலைவரின் தீர்ப்பை விமர்சிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். இந்த அவையில் அவைத்தலைவர் தந்த தீர்ப்பு எப்படி ஏற்கப்படமுடியும் என்பதைப்பற்றி வெளியிலே ஒரு பிரச்சினை ஏற்பட்டபோது அதற்காக ஒரு தீர்மானம் அன்று முன்னவராக இருந்தவர் கொண்டு வந்து இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எனவே, தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது, உள்ளபடியே அவைத்தலைவருடைய கருத்து என்ற அளவில் முடிவு என்ற அளவில் அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டால் அது இந்த அவைத்தலைவருடைய உரிமைக்கு உரியதாக இருக்காது என்ற காரணத்தால்தான் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. இப்பொழுது இருக்கிற இந்த அவையும்கூட நினைத்தால் அந்தத் தீர்மானத்தை மாற்றிடும் வகையில் இன்னொரு தீர்மானம் நிறைவேற்ற முடியும் என்பதையும், சட்டமன்ற முறைகளுக்காக மட்டும் நான் இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்துல் லத்தீப் அவர்கள் நேரிடையாக என் தொடர்பான செய்திகளை மட்டும் பேசினால் சரியாக இருக்கும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அது தவறான கருத்து. ஏனென்றால் தங்களுடைய தீர்ப்பையும், ஏற்கெனவே கடந்த சட்டசபையில் நடந்த ஒரு நிகழ்வையும் ஒப்பிட்டு, சம்பந்தாசம்பந்தம் இல்லாமல் பேசிய காரணத்தால் நான் அதை விளக்கிச் சொல்ல வேண்டி வந்தது. எனவேதான், அது வேறு, இது வேறு. அது அரசியல் அடிப்படையில் நிகழ்ந்தது. ஆனால் இது சபாநாயகரை, நேரிடையாகத் தாக்குவது மட்டுமல்ல; அவருடைய வீட்டுக்கே சென்று, இனிமேல் இப்படி நீங்கள் நடந்து கொள்ளக்கூடாது, நடந்ததற்கு நாங்கள் உங்களைத் தண்டிப்போம், கண்டிப்போம், உங்கள் வீடு புகுந்து உங்களை அடிப்போம் என்பது சரியல்ல உங்களுக்கு யாரும் பாதுகாவலர்கள் இல்லாமல் இருந்தால் உங்களுடைய கதி என்னவாயி இருக்கும் என்று எனக்குத் தெரியாது. அது இந்த அவைக்கே விடப்பட்ட சவால்.





ஒரு சபையினுடைய கண்ணியத்தினுடைய நடமாடும் உருவமாக இருக்கிற, இந்த அவையினுடைய இறையாண்மையினுடைய நடமாடும் விளக்கமாக, அதனுடைய இலக்கணமாக இருக்கிற இந்தச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட அதனுடைய தலைவர் பேரவைத் தலைவர், அரசமைப்புச் சட்டத்தால் கண்ணியமான, இடம் ஒதுக்கப்பட்டிருக்கிற, அளிக்கப்பட்டிருக்கிற ஒரு தலைவர், யாருடைய விமர்சனத்திற்கும் ஆளாகக் கூடாத ஒருவர்பற்றி ஒருகட்சியால் பகிரங்கமாக அறிவிப்பு செய்யப்பட்டு அவர்கள் படைகளைத் திரட்டிக்கொண்டு அவர்களுடைய வீட்டுக்குச்சென்று ஆயுதங்களோடு அவர்களைத் தாக்குவோம் என்று சொல்லி தாக்குவதற்கு வருகிறார்கள். சபாநாயகர் அவர்கள் தெய்வாதீனமாகத் தப்பி சபைக்கு வந்து விட்டார்கள். இந்த அவையை அவமதித்திருக்கிறார்கள். தங்களை அவமதித்ததன் வாயிலாக, தங்களைத் தாக்குகிறோம் என்று சொல்வதன் வாயிலாக இந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர்கள் அறைகூவல் விடுத்திருக்கிறார்கள் எனக்குத் தெரிந்து இதிலே அரசியல் இல்லை. யார், எந்தக் கட்சிக்காரர்கள் செய்தார்கள் என்று அரசியல் அடிப்படையிலே பேசவில்லை. ஒரு கட்சிக்காரர்கள் செய்தார்கள் என்று இருந்தாலும், வந்தவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், ஒரு படையைத் திரட்டிக்கொண்டு வந்திருக்கிறார். எனவே, அரசியல் கலப்பு இல்லாத, நம்முடைய கண்ணியத்தையும், இந்த அவையினுடைய கண்ணியத்தையும் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக இதை அப்படியே அரசியல் காரணங்களுக்காக விட்டுவிடக்கூடாது; நமக்கிருக்கிற நெளிவு சுளிவுகளெல்லாம் என்னவென்றால், ஏன் வீணுக்குப் போய் அவர்களை வம்புக்கு இழுக்க வேண்டுமென்ற ஒரு அரசியல் நோக்கமும் வந்து விடலாம், அந்த அரசியல் நோக்கம் அங்கே வரக்கூடாது. அவர்களை உடனே குண்டர் சட்டத்திலே கைது செய்ய வேண்டுமென்று உங்களுடைய ஆசனத்தில் இருந்தே நீங்கள் ஒரு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், அவர்களைப்பற்றி நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. ஏனென்றால் அதிலேயும் அரசியல் கலந்து விடும். ஏனென்று உங்களுக்குத் தெரியும். அவருக்கும் எனக்கும் இருக்கிற அந்தத் தொடர்பு காரணமாகப் பழைய விரோதத்தை இப்பொழுது சட்டமன்றத்திலே தீர்த்துக்கொள்கிறான் லத்தீப் என்று நினைத்து விடக்கூடாது. அவர் எனக்கு ரொம்ப வேண்டியவர். என்னுடைய தம்பியைப் போன்றவர். ஆனால். பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலேதான் நான் அவர்களை விமர்சனம் செய்கிறேன். எனவே, இந்தச் சபையிலே குறைந்தபட்சம் மாண்புமிகு முன்னவர் அவர்களை நான் கேட்டுக் கொள்வது, சபாநாயகர் மீது நடந்த இந்தத் தாக்குதலைக் குறித்து ஒரு (Censure Motion) ஒரு கண்டனத் தீர்மானமாவது நிறைவேற்றப்பட வேண்டுமென்று நான் மிகவும் வற்புறுத்திக்

கேட்டுக்கொள்கிறேன். அதிலே அரசியல் வரக்கூடாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலிலே ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் குண்டர்கள் தடைச் சட்டத்தின் கீழே கைது செய்ய வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே பேசுவது மிகமிகத் தவறானதும் கண்டனத்திற்கு உரியதுமாகும். சட்டமன்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது நீங்கள் மூலப் பகுதிக்குச் செல்ல வேண்டும். சபாநாயகரை முற்றுகையிட்டது பற்றிய பேச்சு. அது தொடர்பான பாராளுமன்ற உறுப்பினரைப்பற்றித்தான் பேச வேண்டும். மற்றபடி அவையில் இல்லாத பாராளுமன்ற உறுப்பினரைப்பற்றி யாரும் மரபுக்கு மாறாகப் பேசவில்லை. ஆகவே, மூலச் செய்தியிலேயிருந்து வாருங்கள். அப்பொழுதுதான் சரியாக இருக்கும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் பின்னாலேயிருந்து முன்னாலே போகிறேன். அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னாலேயிருந்து பின்னாலே வாருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பரவாயில்லை, எப்படி வேண்டுமானாலும் போகலாம். முன்னாலேயிருந்து பின்னாலும் வரலாம்; பின்னாலேயிருந்து முன்னோக்கியும் போகலாம்.

ஆகவே, முன்னாலேயிருக்கிற பிரச்சினைகளைப்பொறுத்தவரையில் சட்டமன்றத்திலே சபாநாயகரினுடைய உரிமைகளைப் பொறுத்தவரையில் சட்டமன்றத்திற்குள்ளே சபாநாயகர் அவர்களுக்குப் பிரத்தியேகமான சில உரிமைகள் உண்டு என்பது எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்டதுதான். ஆனால் சட்டமன்ற, நாடாளுமன்றங்களுக்கு உள்ளேயேகூட சபாநாயகர் மேசையைச் சுற்றி நின்று மறியல் செய்வதும், கோஷமெல்லாம் போடுவதும் இப்பொழுது பாராளுமன்றத்திலேயும் சட்டமன்றங்களிலேயும் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற சம்பவங்களாக இருக்கின்றன எனவே ஒரு இயக்கத்தின் சார்பில் வீட்டிற்கு முன்னால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதனால் அது சரியென்று சொல்கிறீர்கள், அப்படித்தானே ?





திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, உங்களுடைய உயிருக்கு ஏதாவது பாதுகாப்பில்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்குமானால், அது வருந்தத்தக்கது. கண்டிக்கத்தக்கது. அப்படி ஏதாவது வன்முறை நடந்திருந்தால் அதை நாங்களும் சேர்ந்து கண்டிக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உயிருக்கு ஏதாவது ஏற்பட்டால் மட்டும்தான் கண்டிப்பீர்கள், மற்றப்படி சாதாரணமாக சபாநாயகருக்கு ஏதாவது ஏற்பட்டால் கண்டிக்கவே மாட்டீர்கள். .

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக உரிமைகளைக் கண்டிக்க முடியாது. எனவே, எதிர்க்கட்சிகளுக்கு இருக்கிற ஜனநாயக உரிமைகள் அவை. தங்கள் வீட்டிற்கு முன்னால் உண்ணாவிரதம் இருப்பதும் மறியல் செய்வதும் சட்டவிரோதம் என்கிற அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டு, நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கிறது. அது அனுமதிக்கப்படவில்லை. எனவே சட்டம் அதனுடைய வேலையைச் செய்திருக்கிறது. மறியலுக்குப் போகிறபோது எம். பி. என்று பார்க்கவில்லை. அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்., பின்னால் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். எனவே, சட்டம் தன்னுடைய கடமையைச் செய்திருக்கிறது. எதிர்க்கட்சிகள் அவர்களுடைய கடமையைச் செய்திருக்கிறார்கள் அந்த உரிமை தார்மீக ரீதியாக ஜனநாயக நாட்டிலே அவர்களுக்கு உண்டு. அந்தச் சம்பவத்தின் மூலமாக வன்முறையோ, தாக்குதலோ நடந்திருந்தால் அது கண்டனத்திற்குரியது. எனவே அதிலே எந்த ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை. சென்ஷர் மோஷன் கொண்டு வந்து இங்கே விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினை அல்ல. வெளியே நடவடிக்கை சட்டப்படி எடுக்கப்பட்டிருக்கிறது. அவை சட்டத்தை ஒட்டிய பிரச்சினைகள் ஆகும். உள்ளே இது குறித்து விவாதித்து—முன்னாலே சொன்னதைத் திரும்பச் சொல்கிறேன்—ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மீது ஏதாவது ஒழுங்குப் பிரச்சினை கொண்டு வரவேண்டும், சென்ஷர் மோஷன் கொண்டுவரவேண்டும், குண்டர்கள் சட்டத்தில் கைது செய்யப்பட வேண்டுமென்று எல்லாம் இங்கே விமர்சிப்பது, ஜனநாயகத்தினுடைய நெறிமுறைகளை அழிக்கிற முயற்சிகளாகும். அதை நீங்கள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்களால் எழுப்பப்பெற்று, அநேகமாக எல்லா கட்சிகளுடைய தலைவர்களாலும் பேசப்பட்டு—வெளிநடப்பு செய்த காங்கிரஸ் கட்சி கூட ஒருமுறை பேசிவிட்டு தான் வெளிநடப்பு செய்திருக்கிறது—தங்களுடைய

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 8

தீர்ப்பிற்காக காத்துக்கொண்டிருக்கிற இந்தப் பிரச்சினை மீது
ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.
சபாநாயகர் அவர்களுடைய இல்லத்தின் முன்னால் தங்களுடைய
கோரிக்கைகளைச் சொல்ல ஜனநாயகத்திலே உரிமை இருக்கிறது
என்று எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் சொன்னார்கள்.
அதிலே கூட எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. நம்முடைய
நண்பர் லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அவர்களையெல்லாம்
கடுமையான சட்டத்திலே தண்டிக்க வேண்டும்; அதற்கு சபா
நாயகர் உத்தரவிட வேண்டுமென்று சொன்னார்கள். சபாநாய
கருக்கு இருக்கிற அதிகாரத்தைக்கொண்டு வெளியிலே இருக்
கிறவர்களை கூட தண்டிக்கலாம் என்பதற்கு முன்மாதிரிகள் பல
இருக்கின்றன. இதே அவையில் 1963ம் ஆண்டு அன்றைக்கு
எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நாவலர் 1963ம் ஆண்டு
இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஒட்டி அரசியல் சட்டத்
தினுடைய நகல்களைக் கொளுத்துகிற முயற்சியில் ஈடுபட்ட
திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நடவடிக்கையெடுக்க
வேண்டுமென்று காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் குரல் எழுப்பிய
போது நாவலர் சொன்னார். வெளியில் நடைபெற்ற சம்பவங்கள்
குறித்து இங்கே நடவடிக்கையெடுப்பது நியாயமல்ல என்று
அழுத்தந்திருத்தமாகப் பேசினார்கள். ஆனால், காலத்தின்
கோலம், அதே நாவலர் அவர்கள் இந்த அவையின் முன்னவராக
பொறுப்பேற்று, வெளியே நடந்த நிகழ்ச்சிக்காக நடவடிக்கை
யெடுக்கலாம் என்று சொல்லி, பேராசிரியர் அவர்களையும்,
அவரோடு சேர்த்து ஒன்பது உறுப்பினர்களையும் சட்டமன்றத்
திலேயிருந்து வெளியேற்ற வேண்டிய தீர்மானத்தை, நாவலர்
அவர்களே முன்மொழிந்துஅப்போது பெரும்பான்மையாக இருந்த
ஆளும் கட்சியினர் அதை ஏற்றுக்கொண்டார்கள். நான் அதிலே
விரிவாக ஆராய்ச்சி நடத்த விரும்பவில்லை. இப்போது உருவாகி
யிருக்கிற பிரச்சினை, மத்தியிலே, பாராளுமன்றத்திலே நம்
முடைய சட்டமன்றத்தைப்பற்றி விமர்சிக்கப்படுவதும், முத
லமைச்சரைப் பற்றி விமர்சிக்கப்படுவதும் முறைதானா என்று
நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே வருவதற்கு
முன்பு பலரும் பேசியிருக்கிறார்கள். அதை அங்கேயிருக்கிற
பாராளுமன்றத்தினுடைய அவைத் தலைவர் தடுத்து நிறுத்தி
யிருக்கிறார்கள். மத்தியிலே இருக்கிற ஒரு அமைச்சரும்
இது விவாதிக்கத்தக்கதல்ல என்று கூறியிருக்கிறார்
கள். இன்னொரு அமைச்சர் மீண்டும் திரும்ப எழுந்து, இதை
விவாதிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். இப்படி பாராளு
மன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் மோதல் ஏற்படலாமா?
அந்த நிலை உருவாகலாமா என்ற கருத்துக்களின் அடிப்படையில்
தான் இங்கே நம்முடைய கட்சிகளுடைய தலைவர்கள் பலரும்
பேசியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப்
பொறுத்தவரையில் மத்திய அரசோடு மோதிக்கொண்டு அரசியல்
நடத்த வேண்டுமென்கிற இயக்கம் அல்ல. ஆனா• அதே
நேரத்தில் அதற்காகத் தமிழ்நாட்டினுடைய, மாநிலத்தினுடைய



1989 ஏப்ரல் 8] [டாக்டர் மு. கருணாநிதி]

உரிமைகளை எள்ளளவும் விட்டுக் கொடுத்து விட்டு ஆட்சியிலே இருக்கவேண்டுமென்று எண்ணுகிற அரசும் திராவிட முன்னேற்ற கழக அரசு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி).

(முற்பகல் 10—40)

நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அண்ணா அவர்கள் காஞ்சியில் 'ஹோம் லேண்ட்' பத்திரிகையில் கடைசியாக எழுதிய கட்டுரை. அந்தக் கட்டுரையிலே அவர்கள் குறிப்பிடும்போது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதைச் சொல்கிற நேரத்தில் சொல்லுகிறார்கள். வேறு சில முதலமைச்சர்களைப் போல, நான் தம்பி, மத்திய அரசோடு மோதிக்கொள்ளுகின்ற கொள்கையை பின்பற்றுகின்றவன் அல்ல." ஆனால் அதே நேரத்தில் மத்திய அரசில் குவிந்து கிடக்கின்ற அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். மத்திய அரசுக்கு மாநில அரசுகள் ஏதோ எடுபிடிகள் அடிமைகளைப் போல இருக்கவேண்டும் என்ற அந்த நினைப்பு அகற்றப்படவேண்டும். என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நிலையில்தான் நிர்வாகத்துறையிலே, மோதிக்கொள்ள வேண்டுமென்கிற அந்த எண்ணம் நமக்கு இல்லாத காரணத்தாலேதான், சரி, பாராளுமன்றத்திலே பேசினார்களா, அப்படியானால், சட்டமன்றத்திலே நாமும் பேசுவோம் என்கிற ஒரு நிலையை நாம் எடுக்கவில்லை. சரி, மத்திய அமைச்சர்கள் பேசினார்களா, அப்படியானால் நாமும் அவர்களை விமர்சிப்போம் என்கிற நிலையை இங்கே எடுக்கவில்லை.

இன்னும் சொல்லப்போனால் இங்கே வந்து பேசிய அமைச்சர் அவர்கள், நேற்றைய தினம் பேசிய அமைச்சர் மாண்புமிகு திரு. ப.சிதம்பரம் அவர்கள் எனக்கு தாங்கள் ஏதோ வளைந்து கொடுப்பதைப்போல, நான் சொல்கிறபடி தாங்கள் ஆடுவதைப் போல சூசகமாக அவர்கள் பேசிய பேச்சு இன்று பத்திரிகையிலே வெளிவந்திருக்கிறது.

அதுமாத்திரம் அல்ல. தங்களை அவர்கள் பகிரங்கமாகக் கேட்டிருக்கிறார்கள் எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்கள் எழுதிய ராஜினாமா கடிதத்தை உங்களிடத்திலே கொடுத்தது யார்? அதைச் சொல்லுங்கள் என்று. அது வேண்டுகோளோ அல்லது எச்சரிக்கையோ, அல்லது உத்தரவோ எனக்குத் தெரியாது. அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் நீங்கள் தான் பதில் அளிக்கவேண்டும்.

இன்னொன்று, படங்களை ஏன் வெளியிடவில்லை என்ற பிரச்சினை. சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில் நிதிநிலை அறிக்கை வெளியிடும்போதோ அல்லது கவர்னர் உரை ஆற்றுகிறபோதோ, உள்ளே புகைப்படம் எடுக்க அனுமதிப்பது

வழக்கம். என்ன காரணத்தால் என்றால், கவர்னர் உரை ஆற்றுவார், அது புகைப்படம் எடுக்கப்படும், அதேபோல் நிதியமைச்சர் உரையாற்றுவார், புத்தகத்தைப் படிப்பார், அது படம் எடுக்கப்படும், அது பத்திரிகையில் வரும், இதுதான் வழக்கம். ஆனால், உள்ளே கலவரங்களோ, அமளிகளோ நடைபெற்றால், அந்தப் படங்கள் பத்திரிகையிலே வந்ததாக முன்மாதிரி இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் இல்லை. வேறு சட்டமன்றங்களிலே இருந்ததா என்பது எனக்குத் தெரியாது. எனக்கு உள்ள அரசியல் ஞானத்திலே சொல்கிறேன். இந்தச் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் இல்லை.

1988, ஜனவரி 28 ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சிகள் கூட, சட்டமன்றத்திற்குள் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எதுவும் புகைப்படங்களாகவோ, அல்லது தொலைக்காட்சியாகவோ அன்று காட்டப்படவில்லை. காட்டுவதற்கு அனுமதிக்கப்படவும் இல்லை. சட்டமன்றத்திற்கு வெளியே, இந்தக் கோட்டைச் சுற்று அடைப்புக்குள்ளே நடைபெற்ற சில சம்பவங்கள், இவைகள்தான் அன்றைக்குப் படங்களாக வெளியிடப்பட்டன. ஏதோ ஆளுங்கட்சிக்குப் பாதகமாக இருக்கின்ற படங்கள், என்பதால் வெளியிடப்படவில்லை என்று யாராவது கருதிக் கொண்டால் தவறு. தாங்களே கூட எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களையும் அழைத்து, அலுவல் ஆய்வுக் குழுவில் ஒரு சமரசமாக அமைதியாக இந்தச் சபை நடைபெறவேண்டும் என்ற எண்ணத்தோடு பேசினீர்கள். அதிலே நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் கூட வந்து இருந்தார்கள். அப்போது, தாங்களே கூட அந்தப் படங்களை எல்லாம் அந்தத் தலைவர்களிடத்திலே காட்டியிருக்கிறீர்கள். அது சாதகமான படமா, பாதகமான படமா, இவைகளைப் பற்றிய ஆராய்ச்சியில் நான் இங்கே இறங்க விரும்பவில்லை. மீண்டும் ஒரு தொடர்கதை தேவையில்லை என்பதற்காக. இங்கே, படங்களைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதன் மூலமாக, அவையினுடைய மரபுகளுக்கு குந்தகம் ஏற்படக்கூடும் என்ற அந்த முன்மாதிரியைப் பின்பற்றித்தான் அந்தப் படங்களை வெளியிடக் கூடாது என்றும், ஏற்கெனவே இருந்த முன்மாதிரியின்படி, கருத்து வெளியிடப்பட்டு இருக்கிறது.

கடந்த 1988 ஜனவரி 28 ஆம் தேதி எப்படி வெளியிலே எடுக்கப்பட்ட படங்கள் பத்திரிகையில் வெளிவந்தனவோ, அதைப்போலத்தான், அன்றைக்குக் கூட வெளியிலே எடுக்கப்பட்ட படங்கள், எதிர்க்கட்சித் தலைவர் காரிலே ஏறுகின்ற படம், பின்னாலே நண்பர்கள் எல்லாம் செல்லுகின்ற படம், இவைகள் எல்லாம் சட்டசபைக்குள்ளே, இல்லை என்றாலும் கூட, இந்த வளாகத்திலே—இந்தக் கோட்டைச் சுவருக்குள்ளே எடுக்கப்பட்ட படங்கள் எல்லாம் கூட வெளியிடப்பட்டு இருக்கின்றன. எனவே, ஒரு முன்மாதிரியைப் பின்பற்றுகிற நேரத்திலே, அதைப் பின்பற்றலாமா



என்று சபாநாயகரைக் கண்டித்தது முறைதானா என்பதும், அதற்கு மத்தியிலே உள்ளவர்கள் துணைபோகலாமா என்பதும்தான் விவாதத்திற்குரியவை. எனக்குத் தெரிந்தவரை, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், தங்களுடைய இல்லத்திலே முற்றுகையிட வந்தார்கள் என்று இங்கே சொல்லப்பட்டது, அவர்கள் முற்றுகையிட வந்தாலும்கூட, அல்லது மறியல் செய்ய வந்தாலும்கூட, அவர்கள் உடனடியாக தடுக்கப்பட்டு, உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். வந்தவர்கள் 111 பேர்கள். நம்பரே நன்றாக இல்லை. இருந்தாலும் 111 பேர்கள் வந்தார்கள். வந்தவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே கூட இங்கே அறிவித்திருக்கிறார்கள். இப்போதுள்ள பிரச்சினை பாராளுமன்றம், சட்டமன்றம், இந்த இரண்டு பெருமன்றங்களுக்கு இடையே மோதுதல் தேவைதானா என்பதும், மத்திய அமைச்சருடைய நிர்வாகத்திற்கும் தமிழக மாநிலத்தினுடைய நிர்வாகத்திற்கும் ஒரு மோதுதல், நிர்வாக அளவிலே தேவைதானா என்பதும்தான் கவனிக்கப்படவேண்டிய பிரச்சினை இதிலே தேவையில்லாமல் உங்களுடைய பெயரும் இழுக்கப்படவேண்டுமா என்பதுதான் மிக முக்கியமான பிரச்சினை. எனவே இதிலே தங்களுடைய தீர்ப்புதான் தேவைப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்புமிகு உறுப்பினர்களே, சட்டப் பேரவைத் தலைவர் தொடர்பான இந்தச் செய்திக்கே நாம் இவ்வளவு நேரம் எடுத்திருக்க வேண்டியதில்லை என்றாலும் கூட, அனைவருடைய கருத்திற்கும் மதிப்பு அளித்து, அனைவரும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே மூன்று பகுதிகள் இருக்கின்றன. ஒன்று சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவருடைய, செல்வி ஜெயலலிதாவினுடைய கடிதம் தொடர்பானது. இது தொடர்பாக ஏற்கெனவே இங்கு சில தீர்மானங்கள் தரப்பட்டு, அது தொடர்பாக என்னுடைய தீர்ப்புகள் நிலுவையில் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, அந்தத் தீர்ப்பு வழங்கப்படும்போது என்னுடைய முழுமையான கருத்தும் அதில் தெரிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக மத்திய அமைச்சர், திரு. சிதம்பரம் அவர்கள் எனக்கு வேண்டுகோளாக விடுத்தாலும் சரி, direction என்று சொல்லப்படுகின்ற அந்த ஆங்கிலச் சொல்லுக்கு நேரான அந்தத் தமிழ்ச் சொல்லை அவர் பயன்படுத்தியிருந்தாலும் சரி, இரண்டு நிலையிலும் அவர் தனிப்பட்ட முறையில் ஒரு மத்திய அமைச்சர் என்ற முறையில், பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில், இந்தச் சட்டமன்றப் பேரவைத் தலைவருடைய செயல்பாடுகள் குறித்து ஒரு பொதுமேடையில் வேண்டுகோள் விடுவதோ, அல்லது நேரடியாக விமர்சனம் செய்வதோ முறை

யாக எனக்குப்படவில்லை. அப்படி இருக்கிறபோது அவர் அப்படிச் செய்தது முறைதானா என்பதை நானே பாராளுமன்றப் பேரவைத் தலைவருக்கு எழுதி, விளக்கம் கேட்கலாம் என்று கருதுகிறேன்.

மூன்றாவதாக, இதிலே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள். அவருடைய பெயரைச் சொல்ல வேண்டாம் என்றாலும்கூட, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் சட்டப் பேரவைத் தலைவருடைய வீட்டை முற்றுகையிட முற்பட்டு, அதன் காரணமாக 111 பேர் கைது செய்யப்பட்டு, மாலையில் விடுவிக்கப்பட்டார்கள் என்ற செய்தி அனைவருக்கும் தெரியும். எனக்கும் தெரியும். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இதுபோன்று ஒரு சட்டமன்றப் பேரவைத் தலைவருடைய வீட்டை முற்றுகையிட்டு, நீங்கள் அந்தப் படங்களை வெளியிட்டே ஆக வேண்டும் நீங்கள் சொன்ன அந்தத் தீர்ப்பை மாற்றிக்கொண்டு ஆக வேண்டும் என்று வற்புறுத்துவது சரிதானா என்ற கருத்து இந்த அவையில் வாதிக்கப்பட்டிருக்கிறது. நான் தனிப்பட்ட முறையில் ஒரு சட்டப் பேரவைத் தலைவர் என்றாலும்கூட, இந்தச் சட்டப் பேரவையில் இருக்கிற அனைத்து உறுப்பினர்களுடைய உணர்வுகளையும், கருத்துக்களையும் முழுமையாக அறிந்துகொண்டவன் என்ற முறையிலும், அவற்றைப் பிரதிபலிக்கின்றவன் என்ற முறையிலும் பாராளுமன்ற சபாநாயகராகிய, திரு. பல்ராம் ஜாக்கர் அவர்களிடம் இதையும் எழுதிக் கேட்டு, முறைப்படி அவருடைய கருத்தைத் தெரிந்துகொண்டதற்குப் பிறகுதான் என்னுடைய தீர்ப்பைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். இதற்கிடையில் இது கண்டிக்கத் தகுந்ததா, தண்டிக்கத் தகுந்ததா என்ற விமர்சனத்தில் யாரும் இறங்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், சட்டப் பேரவைத் தலைவராகிய நான் பலவற்றையும் தாங்கிக் கொள்ள வேண்டியவன். நம்முடைய திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். உங்களைச் சுற்றியே நாங்கள் சில நேரம் முற்றுகை இடுகிறோம், ஆர்ப்பாட்டம் செய்கிறோம் என்று. இதெல்லாம் எனக்கு மகிழ்ச்சி தரக்கூடியதுதான். ஜனநாயக அடிப்படையில் அவற்றையெல்லாம் நாங்கள் செய்கிறோம் என்று சொன்னார்கள். அதெல்லாம் எனக்கு மகிழ்ச்சிதான். எப்போதும் அவர்கள் சொல்லிவிட்டுத்தான் அப்படிச் செய்கிறார்கள். எனவே, அப்படி வருகின்றபோதுகூட, சட்டமன்ற ஜனநாயகத்திற்கு உட்பட்ட செயல்தான் அது. அதில் எனக்கு இரண்டாவது கருத்தே கிடையாது. நானும் இதிலே எந்த வகையான உணர்ச்சி வசப்படுதலுக்கும் இடம் அளிப்பது கிடையாது. எனவே, இப்போது இந்த அவையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களும், அவை முன்னவரும், தமிழக முதல்வர் அவர்களும் தெரிவித்த கருத்துக்களை எல்லாம் மனத்தில் கொண்டு நான் தக்கவாறு, இதற்கு விரைவில் தீர்வுகண்டு, இந்த அவைக்கு அறிவிப்பேன் என்று சொல்லி, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.



### 4. விதி 109-ன் கீழ் அமைச்சரின் தன்னிலை விளக்கம்.

**உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது ஓர் உறுப்பினர் தெரிவித்த கருத்து குறித்து அறநிலையத் துறை அமைச்சரின் விளக்கம்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி அவர்கள் 109-வது விதியின் கீழ் ஒரு தன்னிலை விளக்கத்தை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் மதிப்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள். 'தினகரன்' நாள் இதழ் மீது ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பினார். அங்கே என் மீதும், அறநிலையத் துறை அமைச்சர் என்ற வகையில் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கின்றார். ஆகவே பேரவையினுடைய விதி 109-ன்கீழ் நான் என்னுடைய தன்னிலை விளக்கத்தை இங்கே தர விரும்புகிறேன்.

உரிமைப் பிரச்சினை மீது நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஏனென்றால் இந்த அவையினுடைய கண்ணியத்தை யாரும் எந்த நிலையிலே இருந்தாலும் அவமதித்துவிட முடியாது, பாதிக்கச் செய்ய முடியாது என்ற கருத்திலே நான் யாருக்கும் குறைந்தவன் அல்ல. ஆனால் அந்த உரிமைப் பிரச்சினையை எழுப்புகின்றபோது அறநிலையத் துறை அமைச்சர் பெயரை இங்கே இழுத்து, என் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளை அவர் சுமத்தியிருக்கிறார்.

(முற்பகல் 10–50)

அவருடைய பேச்சிலேயிருந்து நான் இறுதிப் பகுதியை உங்களுடைய கவனத்திற்காக படித்துக் காட்டுகிறேன். "பிரீச் ஆப் பிரிவிலேஜ்" என்பதை—அவர் இங்கே பேசியது—"நான் சொல்வதற்கு உரிமை பெற்றவனாக இல்லை என்றாலும் இரகசியமாக நடந்து கொண்டிருந்த ஒரு பாராளுமன்றத்தினுடைய கூட்டத்தினுடைய செய்தியை வெளியிட்ட காரணத்திற்காக, அந்தச் செய்தியைக் கொடுத்தது யார் என்று கண்டு பிடித்து, அவர் அங்கே உறுப்பினராக இருந்த காரணத்தினாலே, உறுப்பினர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டார். ஆனால் நான் சொல்லக்கூடிய பத்திரிகை நிறுவனர் இங்கே அமைச்சர் பெருமகனாக இருக்கிறார், இருந்துகொண்டிருக்கிறார். இந்தச் சூழ்நிலையில் என்ன தண்டனை என்று சொல்லுகிற உரிமை எனக்கு இல்லை. நான் அந்தத் தண்டனையைக் கொடுக்க வேண்டுமென்று விரும்பவும் இல்லை" என்று சொல்லுகிறார்.

[திரு. கே. பி. கந்தசாமி] [1989 ஏப்ரல் 8

ஆகவே இங்கே நான் குற்றவாளி என்ற தீர்ப்பை மட்டும் சொல்லிவிட்டார். தண்டனையை மட்டும் அவர் கொடுக்க விரும்பவில்லை. நான் ஏதோ 'தினகரன்' பத்திரிகைக்கு இங்கே நிருபராக செய்தி கொடுக்கின்ற பணியிலே இருந்து கொண்டிருப்பதாக அவர் பேசியிருப்பது மிக மிகக் கண்டிக்கத் தக்கது. அவர் தான் சொல்வது என்னவென்று தெரியாமல் சொல்லக் கூடியவர் அல்லர். இலக்கியச் செல்வர், படித்தவர், மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஒரு பாராளுமன்றத்திலே இரகசிய கூட்டத்தினுடைய செய்தியை வெளியிட்ட காரணத்திற்காக அந்தச் செய்தியைக் கொடுத்தது யார் என்று கண்டு பிடித்து, அந்தச் செய்தியைக் கொடுத்தது அங்கேயிருந்த உறுப்பினர் என்ற காரணத்திற்காக அவையிலே இருந்து நீக்கப்பட்டார் என்பதை இங்கே குறிப்பிட்டு இங்கே இருக்கக்கூடிய அறநிலையத் துறை அமைச்சர் இங்கே தான் இருக்கிறார் என்று ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார். இங்கேயும் இருக்கிறார் என்று மீண்டும் வலியுறுத்துகிறார். இந்தச் சூழ்நிலையில் என்ன தண்டனை என்று சொல்கிற உரிமை மட்டும் அவருக்கு இல்லை என்று சொல்கிறார். ஆகவே குற்றவாளி என்று குற்றம் சுமத்தியிருக்கிறார். அதை நான் வன்மையாக மறுக்கிறேன். இது அவையினுடைய உரிமை மீறுகிற ஒரு பேச்சு என்று நான் கருதினாலும் கூட, ஒரு உறுப்பினருடைய உரிமை மீறப்படுகின்றது, அந்த உறுப்பினர் அமைச்சரவையில் அமைச்சராக இருக்கிற காரணத்தினாலே, கூட்டுப் பொறுப்பை ஏற்கிற அவையிலே அமைச்சராக இருக்கிற காரணத்தினாலே அமைச்சருடைய உரிமையை மீறப்படுகின்றது. இந்த அமைச்சரவை சட்டமன்றத்தினுடைய நிர்வாகக் குழுவாக இருக்கிற காரணத்தினாலே சட்டமன்றத்தினுடைய உரிமையே மீறப்படுகிறது, கண்ணியத்திற்கு களங்கம் கற்பிக்கப்படுகிறது என்ற வகையிலே இருந்தாலும் கூட, நான் அந்தப் பிரச்சினைக்குள் செல்ல விரும்பவில்லை. மேலும் இதைச் சூடாக்க விரும்பவில்லை.

ஆகவே இந்தக் குற்றச்சாட்டு என் மீது சுமத்தப்பட்டு இருக்கிறது. இதற்கு ஆதாரம் இல்லை. இதை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன் என்ற அளவுக்கு என்னுடைய விளக்கத்தைத் தந்து அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கே தெரியும். இதன் மீது எந்தவிதமான விவாதமும் கூடாது என்று.

### 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ). பத்திரிகையாளர் மாடத்தில் செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீடுகள் குறித்து.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் சொல்லப் போவது வேறு பிரச்சினை. தன்னிலை விளக்கத்திலே டிபேட் கிடையாது என்று தெரியும். ஆனால் நான் பேசினால் மட்டும் டிபேட் பண்ணுவார்கள். அன்று கூட, தன்னிலை விளக்கத்தை நான் படிக்கும்போது—டிபேட் கிடையாது ஆனால் அது அப்போது டிபேட் ஆகிறது.



1989 ஏப்ரல் 8] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

நான் ஒரு விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். "நமது எம்.ஜி.ஆர்." என்ற தினப் பத்திரிகை அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வினுடைய அதிகாரப் பூர்வமான வெளியீடாக இருக்கிறது. சட்டமன்றத்திலே பத்திரிகை நிருபர்களுக்கான இடம் ஒதுக்குகிற போது, பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற அனைத்திந்திய அண்ணா தி. மு. க.வின் நாளேடான "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகைக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முழுக்க முழுக்க பேரவைத் தலைவருடைய அலுவலகத் தொடர்பான செய்தி. இதை நீங்கள் என்னுடைய அறையிலே வந்து சொல்லுங்கள். என்ன வேண்டுமானாலும் அங்கே பேசலாம். இது இந்த அவையிலே பேசக் கூடிய செய்தி அல்ல.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இப்போது கேட்டால் இடம் ஒதுக்குவீர்கள் என்பதற்காகக் கேட்கிறேன். இது என்ன பதில் சொல்லக்கூடாததா....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இப்படி ஒவ்வொருவரும் எந்தெந்த நாளிதழுக்கு என்னென்ன இடம் கொடுக்கலாம், யாருக்கு இருக்கை இல்லை என்றெல்லாம் பேசத் தொடங்கினால் எப்படி debate-ல் பேச முடியும். அறையிலே வந்து சொல்லுங்கள், என்ன வேண்டுமானாலும் பேசலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நீங்கள் அனுமதித்திருந்தால் நான் இந்நேரம் பேசி முடித்திருப்பேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முடிக்கின்ற பிரச்சினை இல்லை. நீங்கள் முன்னாலே முடிக்கிறதா, பின்னாலே முடிக்கிறதா என்பது பற்றி எனக்கு ஒன்றும் இல்லை. நீங்கள் ஒரு மணி நேரம் பேசினாலும், இரண்டு மணி நேரம் பேசினாலும் மகிழ்ச்சிதான். நானும் பேரவைக் கூட்டம் முடிந்தது என்று அறிவித்து விட்டுப் போய் விடுவேன். அதனாலே இது தேவையா? இது என்னுடைய அறையிலே பேசப்பட வேண்டிய செய்தியா இல்லை, அவையிலே பேசப்பட வேண்டிய செய்தியா?

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிஷம். நான் இதைப் பெரிய பிரச்சினையாகவே ஆக்கவில்லை. அண்ணா தி.மு.க. வினுடைய பிரதான எதிர்க் கட்சியினுடைய நாளிதழ் அது. முரசொலி 7-வது, 8-வது இடத்திலே இருந்தது. ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே பி.டி.ஐ., யூ.என்.ஐ., எக்ஸ்பிரஸ் இவற்றை எல்லாம் தள்ளிப் போட்டு முன்னாடி போட்டிருக்கிறீர்கள். பரவாயில்லை.

[1989 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடை சொல்ல வேண்டிய பகுதி இருக்கிறது. என் அறையிலே கேட்டீர்களென்றால் உங்களுக்கு நான் நிறைய விடை சொல்லலாம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் தப்பாகவே சொல்லவில்லை. தப்பு கிடையாது. செய்திருக்கிறீர்கள். இது போல பிரதான எதிர்க் கட்சியாக இருக்கின்ற அண்ணா தி.மு.க. நாளிதழ் "நமது எம்.ஜி. ஆர்"க்கும் மேலே போட்டிருக்கிறீர்கள். தயவு செய்து அவர்களுக்குக் கீழே இடம் ஒதுக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வளவுதான். (சிரிப்பு).

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய முறையீட்டை நானும் தங்களுக்குப் பரிந்துரை செய்கிறேன். ஒன்று சொல்லியிருக்கிறார். "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகை அண்ணா தி.மு.க.வின் அதிகாரப் பூர்வமான பத்திரிகை என்று சொல்லியிருக்கிறார். அதை மாத்திரம் குறித்து வைத்துக் கொண்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு ஆவன செய்யப்படும். இரண்டு பேர்களுடைய உணர்வுகளையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு.

### '(அ) திருச்செங்கோடு வட்டம், குச்சிபாளையத்தில் தீ விபத்தினால் ஏற்பட்ட பாதிப்பு.

**திரு. வி. இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், தோக்கவாடி கிராமம், குச்சிபாளையத்தில் 20-3-1989 அன்று ஏற்பட்ட தீ விபத்தினால் 49 கூரை வீடுகள் முழுவதும் எரிந்துவிட்டன. இந்தத் தீவிபத்து மின் இணைப்பு கம்பிகளில் மின்கோளாறு காரணமாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே கொடுத்த தீர்மானத்தை மட்டும் படிக்க வேண்டும். விளக்க உரையை அல்ல. நீங்கள் இங்கே கொடுத்திருப்பது வேறு. அதை மட்டும் படியுங்கள்.

**திரு. வி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு வட்டம், தோக்கவாடி ஊராட்சி, குச்சிபாளையத்தில் 20-3-1989 அன்று ஏற்பட்ட பயங்கரமான தீ விபத்தால் 49 குடும்பங்கள் வீடிழந்து கட்டிய



1989 ஏப்ரல் 8] [திரு. வி. இராமசாமி]

ஆடையுடன் பெண்கள், குழந்தைகள் உட்பட அனைவரும் நடுத் தெருவில் நின்றுகொண்டு பரிதவிப்பதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டமான சூழ்நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் பின்வரும் அறிக்கை ஒன்றைப் படிக்கிறேன்:

### அறிக்கை.

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், தோக்கவாடி கிராமம், குச்சிப்பாளையத்தில் 20-3-1989 அன்று ஏற்பட்ட தீ விபத்தினால் 49 கூரை வீடுகள் முழுவதும் எரிந்துவிட்டன. இந்த தீ விபத்து மின் இணைப்பு கம்பிகளில் மின் கோளாறு காரணமாக திரு. திம்மநாயக்கர் மகன் ரங்கசாமி என்பவரது கூரை வீட்டில் காலை சுமார் 10-50 மணியளவில் தீ பிடித்தது. (குறுக்கீடுகள்) பின்னர் காற்று சற்று பலமாக வீசியதால் அருகிலுள்ள மற்ற 48 கூரை வீடுகளுக்கும் தீ பரவி கூரைகள் முழுவதும் எரிந்து விட்டன. இத் தீ விபத்தினால் உயிர்ச் சேதமோ, கால்நடைச் சேதமோ ஏதும் இல்லை என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இத் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 49 கூரை வீடுகளில் வாழ்ந்து வந்த 48 குடும்பங்களுக்கு அரசு நிவாரணத் தொகையான தலா ரூ. 400-, மற்றும் பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் தலா 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், 1 வேட்டி மற்றும் 1 புடவை ஆகியவை திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியத் தலைவர் முன்னிலையில் 21-3-1989 அன்று வழங்கப்பட்டன.

**திரு. வி. இராமசாமி:** அவைத் தலைவர் அவர்களே, 20-3-1989 அன்று வீடிழந்த இந்தக் குடிசை வாழ் மக்களுக்கு, குடிசை மாற்றுத் திட்டத்தின் மூலம், வாரியத்தின் மூலம் புதிய வீடுகள், ஓட்டு வீடுகள் கட்டித்தரப்படுமா, அரசு ஆய்வில் உள்ளதா என உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, தீ விபத்தினால் சேதம் அடைந்த குடும்பங்களுக்கு, திருப்பிக் கட்டிக் கொள்வதற்காக முழுவதுமாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ. 400 ஆகவும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூபாய் 200 ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1989 ஏப்ரல் 8
(முற்பகல் 11-00)

குடிசையில் வாடகைக்குக் குடியிருப்பவர் ஒரு குடும்பமானால் அவர்களுக்கு முழுத் தொகையும், ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பமாக இருந்தால் குடிசையில் குடியிருக்கும் குடும்பங்களுக்குச் சமமாகவும் பங்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. இது தவிர, தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்—24 மணி நேரம் தொடர்ந்து மின்சாரம் தடைபட்டு இருந்தால், மண்ணெண்ணெய்—ஒரு புடவை, வேஷ்டி ஆகியவை நிவாரணமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட நிவாரணங்கள் அனைத்தும் மாதச் சம்பளம் ரூ. 400-க்கு மேற்படாமல் இருப்பவர்களுக்கும்—அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி உட்பட, அல்லது 10 ரூபாய்க்கு மேற்படாமல் நில வரி செலுத்துபவர்களுக்கும் அளிக்கப்பட்டு வந்தது. 3–4–1989 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சட்டமன்றப் பேரவையில் விவாதங்களுக்குப் பதிலளிக்கையில், குடிசை வாழ் மக்கள் தீ விபத்தினால் பாதிக்கப்படுகிற நேரத்தில் இனிமேல் உடனடி நிவாரணம் அளிப்பதற்கு வருமான வரம்பு இன்றி நிவாரணம் வழங்கப்படும் என்பதனை அறிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து விரைவில் அரசு ஆணை வெளியிடப்படும். மற்றும் தீ விபத்தினால் இறந்தவர் குடும்பத்தலைவராகவோ, பொருள் ஈட்டுபவராகவோ இருந்தாலும், இல்லாவிட்டாலும், அல்லது குடும்பத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட இறப்புக்கள் ஏற்பட்டிருந்தாலும், ஒவ்வொரு இறப்புக்கும், குழந்தைகள் உட்பட, தலா இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் தீ விபத்தில் குடிசைகளையும், உடைமைகளையும் இழக்கின்ற நிலமற்ற விவசாயத் தொழிலாளிகள், ஊரகக் கைவினைஞர்கள், மற்றும் ஏழ்மையான குடும்பத்தினர் ஆகியோருக்கு ஆண்டு வருமானம் அனைத்து வகைகளிலும் ரூ. 4,800-க்கு மிகாமல் உள்ளவர்களுக்கு- - குடிசைக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒரு திட்டத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டம் 1988 ஆம் ஆண்டு மே திங்கள் 1 ஆம் நாளிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா நிறுவனத்தின் துணை நிறுவனமான யுனைடட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியும், மாநில அரசும் இணைந்து நடத்தப்படுவதாகும். இது ஊரகப் பகுதிகளுக்காக மட்டுமே உரிய திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் விபத்தில் குடிசை பாதிக்கப்பட்டால், இன்சூரன்ஸ் நிறுவனத்தினால் ஆயிரம் ரூபாய் மற்றும் உடைமைகளுக்கு 500 ரூபாய் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. இராமசாமி : தலைவரவர்களே, தீப் பிடிக்காத வீடுகள் நிரந்தரமாகக் கட்டிக் கொடுக்கப்படுமா என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, தீப்பிடிக்காத வீடுகள் நிரந்தரமாகக் கட்டித் தரப்படுமா என்பதுதானே மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி ? (குறுக்கீடு) தீப்பிடிக்காத வீடுகளை ஏன் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று தெரியவில்லை. அது ஒழுங்காக இருக்கட்டும், நீங்கள் தீப்பிடிக்கச் செய்யாமல் இருந்தால் சரி. (சிரிப்பு) இதற்கு மேல் கேள்வி இல்லை என்று கருதுகிறேன்.

(ஆ) சென்னை, முகப்பேர் பகுதியில் கட்டப்பட்ட வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் அகற்றப் பெற்றுள்ளது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை நகரில் முகப்பேர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் ஐந்தாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட குடியிருப்புகளை இடித்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, சென்னை நகர், முகப்பேர் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தால் டிசம்பர் 1980-ல் ரூ. 74.55 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 1,584 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தை ஹட்கோ நிதி உதவியுடன் நிறைவேற்ற தீர்மானித்து, அரசின் ஒப்புதலோடு 1,488 வீடுகள் மட்டும் கீழ்க்கண்ட நிலையில் கட்டப்பட்டன.

நிலை 1—400 கழிப்பறை மட்டும் ;
நிலை 2—272 குளியலறை மற்றும் கழிப்பறை ;
நிலை 3—336 இரண்டு பக்க சுவர் மற்றும் கூரை :
நிலை 4—480 முழு வீடுகள் :
ஆக மொத்தம் 1,488.

இந்த வீடுகள் வட்ட வடிவு அமைப்புடைய வீடுகளாகும். இது பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காகக் கட்டப்பட்ட வீடுகளாகும். கட்டி முடிக்கும் தருவாயில் ஒதுக்கீடு செய்ய விளம்பரம் செய்யப்பட்டு மனுக்கள் பெறப்பட்டன. இத்தருணத்தில் வீடுகள் குடியிருப்பதற்கு ஏற்றதல்ல என்ற ஒரு கருத்து எழுந்ததால், வாரியத் தொழில் நுட்ப உறுப்பினர் திரு. ஆழ்வார் அவர்கள் பார்வையிட்டு குறிப்பு அனுப்பினார். அதனையும் சேர்த்து ஆய்வு செய்து ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க திரு. அம்புரோஸ் மற்றும் திரு. சிவலிங்கம் ஆகியோர் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அரசால் அமைக்கப்பெற்றது. அவர்கள் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 6.50 இலட்சம் செலவு செய்ய பரிந்துரை செய்தனர். இதனை வாரியக் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு அரசு பணித்தது. வாரிய உறுப்பினர்கள் இத்திட்டத்தை 4–9–1985 அன்று

பார்வையிட்டனர். இக்கட்டிடங்கள் பற்றி முடிவு எடுப்பதற்கு இரண்டு வழி முறைகள் ஆலோசிக்கப்பட்டன. ஒன்று இக்கட்டிடங்களை இடித்து விட்டு புதிய திட்டங்கள் போட்டு கட்டிடங்கள் கட்டி விற்பது ; இரண்டாவது அத்தியாவசியமான மேம்பாட்டுப் பணிகளை மட்டும் செய்து, அவ் வீடுகளை குடியிருப்பதற்கு ஏற்புடையதாக்கி பின் அவற்றை ஒதுக்கீடு செய்வது.

இரண்டாவது வழிமுறையான அத்தியாவசியமான மேம்பாட்டுப் பணிகளை செய்வதே சாலச் சிறந்ததென அப்போது வாரியம் கருதி, நிலை 4 மற்றும் நிலை 3-ல் உள்ள 816 குடியிருப்புகளை மேம்படுத்த வாரியம் பணித்தது.

நிலை 2 மற்றும் நிலை 1 உள்ள குடியிருப்புகளுக்கு எவ்வித அபிவிருத்தியும் செய்யத் தேவையில்லை என வாரியம் முடிவு செய்தது. நிலை 3 மற்றும் 4-ல் முன்னேற்றப் பணிகள் நடக்கும் தருவாயில் நிலை 1-ல் உள்ள கட்டிட அமைப்புகளை அகற்றி, கிடைக்கும் நிலத்தை வாணிப முறையில் பயன்படுத்தி அதனால் வரும் இலாபத்தின் மூலம் ரூபாய் 34.19 லட்சம் செலவினத்தை ஈடு செய்யலாம் என வாரியம் முடிவெடுத்தது. இதன்படி நிலை 1-ல் உள்ள குடியிருப்புகள் அகற்றப்பட்டு அந்த நிலம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் (எல்.ஐ.சி.) பாலிசிதாரர்களுக்கு மாடி வீடுகள் கட்டும் திட்டத்தைச் செயல்படுத்த கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் ஒப்படைத்த நிலத்தின் விலையை நிர்ணயித்தபொழுது, மேம்பாட்டுப் பணிகள் செய்ய செலவிடப்பட்ட தொகை மற்றும் அகற்றப்பட்ட வீடுகளின் மதிப்பீடு ஆகியவை நிலத்தின் விலையுடன் சேர்க்கப்பட்டு மொத்த விலை நிர்ணயிக்கப்பட்டது.

இதனால் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியை அகற்றியதின் மூலம் வாரியத்திற்கு எந்தவித பொருளாதார நஷ்டமும் ஏற்படவில்லை.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகள் நீண்ட நாட்களுக்கு முன்பு கட்டப்பட்டு பயன்படுத்தப்படாமல் இருந்து இன்றைய தினம் இடிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு பகுதியை மட்டும் எல்.ஐ.சி.க்கு விற்று இருக்கிறீர்கள். எவ்வளவு இடத்தை விற்றிருக்கிறீர்கள் ? எவ்வளவு தொகைக்கு விற்றிருக்கிறீர்கள் ? மற்றப் பகுதிகளை எவ்வாறு பயன்படுத்த இருக்கிறீர்கள் ? நான் அந்த இடத்தைச் சென்று பார்த்தபொழுது ஒரு பகுதியில் இன்று குடிசைகள் வந்து விட்டன. அந்தக் குடிசைகளை அகற்றுவீர்களா ? எப்போது அகற்றுவீர்கள் ? என்ன என்ன காரியங்களுக்கு அதை பயன்படுத்த இருக்கிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்.ஐ.சி.க்கு விற்கப்பட்ட மொத்த நிலம் 225 கிரவுண்டுகள். அப்போது கிரவுண்டு ஒன்றுக்கு லட்சம் ரூபாய் என்று மதிப்பிட்டு அந்த நிலத்திற்கான தொகை 2¼ கோடி ரூபாயையும், அதற்கு மேல் அந்த நிலை-1 மற்றும் நிலை-2 என்று சொன்னேனே அந்த நிலைகளிலுள்ள கட்டிடங்களை இடிப்பதற்கு, அகற்றுவதற்கு இன்னும் அதைக் கட்டுவதற்கான செலவு அத்தனையையும் சேர்த்து ஏறத்தாழ 30 லட்சம் ரூபாய் என்று கணக்கிட்டு ஆக ரூபாய் 2.55 கோடியை எல்.ஐ.சி.யிடமிருந்து வாரியம் பெற்று இருக்கிறது. மொத்தத்திலே செலவான தொகை ஏறத்தாழ 1 கோடியே 10 இலட்சம் ரூபாயாகும். ஆகவே செலவு செய்த தொகையைவிட எல்.ஐ.சி.யிடமிருந்து பெற்ற தொகை அதிகம். ஆகவே, எந்தவிதமான பொருள் இழப்பும் ஏற்படவில்லை. இன்னும் மொத்தமுள்ள 155 கிரவுண்டுகளில் உள்ள அந்த வீடுகளை என்ன செய்வது என்று ஒரு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் யாரும் அங்கே வந்து குடியேறவில்லை. ஏறத்தாழ 816 வீடுகள் வட்ட அமைப்புள்ள வீடுகள், ஒரு கட்டிடத்திற்குள்ளேயே 16 வீடுகள் இருக்கின்ற அளவிற்கு இதுவரையில் நான் உலகத்திலே எங்கேயும் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட அமைப்புள்ள வீடுகள் யாரோ ஒருவருடைய ஆலோசனையால் கட்டப்பட்டுள்ளன. அந்த வீடுகளில், யாரும் வந்து குடியேற விரும்பவில்லை. மின்சார வசதியும் கூட இன்னும் செய்து தரவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்தக் கட்டிடங்களை வைத்துக் கொள்வதா அல்லது மீதமுள்ள கட்டிடங்களை இடித்துவிட்டு புதிய மாடிக் கட்டிடங்களை அதிக அளவிலே 155 கிரவுண்டுகளிலே, இதைவிட அதிகமான குடியிருப்புகளை நாம் கட்டித் தருவதா என்ற ஆலோசனை இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளை புல்டோசர்களை வைத்து எடுத்தவுடனே மீண்டும் அங்கே பரவலாக குடிசைகள் வந்திருக்கின்றன. இப்போது இருக்கின்ற அந்தக் கட்டிடங்களை, அமைச்சர் அவர்கள் சொன்னது போல அவைகளை அப்படியே பயன்படுத்த முடியாது. யாரும் அங்கே போக மாட்டார்கள். அதனால் நிரந்தரமாக அங்கே புதிய குடியிருப்புகளைக் கட்டுவதற்குப் பதிலாக அந்த வட்டாரத்திலே ஒரு பெரிய மார்க்கெட்டை கொண்டு வந்தால் அதனால் இந்தத் துறைக்கு நல்ல வருமானமும் வரும். அவ்வாறு ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடங்களையெல்லாம் இடித்து விட்டு புதிய மாடிவீடுகளைக் கட்டலாமா என்று வீட்டு வசதி வாரியமும் பரிசீலனை செய்து வருகிறது. இன்னும் வேண்டுமானால், ஒரு குழுவை அமைத்து மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்றபடி அங்கே ஒரு மார்க்கெட் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யலாமா என்பதையும் பரிசீலனை செய்யலாம்.

## 6. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 17. கல்வி—தொடர்ச்சி.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்திலே என்னுடையக் கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு வளருகின்ற சமுதாயத்தில் உருப்படியான சமுதாயத்தை உருவாக்குவதற்குக் கல்விதான் கருவியாக இன்றைக்கு நம்முடைய நாட்டில் இருந்து கொண்டு இருக்கிறது. பள்ளி மாணவர்களானாலும், கல்லூரி மாணவர்களானாலும் தாங்கள் பள்ளிகளில், கல்லூரிகளில் பயின்ற பாடத்தையும், அவர்கள் தெரிந்து கொண்ட கலாச்சார, பொருளாதார, சமுதாய, சுகாதார விவகாரங்களையும் தம்முடைய பிற்கால வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குக் கூட நம்முடைய 62-ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலமாக 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு சட்டமாகி இருக்கிறது. 18 வயது நிரம்பியவர்கள் எப்படி தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும், தங்களை பாவித்துக் கொள்ள வேண்டும், எப்படி சமுதாய, பொருளாதார, சுகாதார, கலாச்சாரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதை கல்விக் கூடங்கள்தான் அவர்களுக்கு வழி காட்டவேண்டும். 18 வயது நிரம்பிய சில மாணவர்கள் பள்ளிகளில்தான் பயின்று கொண்டு இருப்பார்கள். ஆகவே, பள்ளிகளிலே பயின்று கொண்டிருக்கும்போதே அவர்களுக்கு வாக்குரிமை இன்றைக்குக் கிடைத்திருக்கிறது.

அந்த வாக்குரிமையை அவர்கள் எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொடுக்கக்கூடிய பணி இன்றைக்கு கல்விக் கூடங்களுக்கு இருக்கிறது; ஏன், அரசாங்கத்திற்கு அந்தப் பொறுப்பு இருக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறேன். அந்த 18 வயது நிலையை ஆங்கிலத்தில் 'அடோலசன்ட் பீரியடு' என்று சொல்வார்கள். அந்தக் காலகட்டத்தில்தான் அந்த மாணவன், தான் எப்படி இருக்க வேண்டும்; தன்னுடைய 'ஐடன்டிட்டி' எப்படி



இருக்க வேண்டும்; தான் எந்த எந்த கலாச்சாரத்தைப் பின்பற்ற வேண்டும்; எந்த எந்த 'கஸ்டம்ஸை' பின்பற்ற வேண்டும்; எந்த எந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை முடிவு செய்யக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதாவது 'டீன் ஏஜ்' என்று சொல்வார்கள். இந்த 12 வயது முதல் 18 வயது வரை உள்ள பருவத்தை, அந்தக் காலகட்டம் அவர்களுடைய உள்ளத்தில், உடலில் ஏற்படக்கூடிய மாறுதல் எப்படி எல்லாம் இருக்கும் என்பதை நிர்ணயிக்கிறது. மூளை வளர்ச்சி, உடல் வளர்ச்சி அந்த அளவுக்கு அந்தக் காலகட்டத்தில் கிடைக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தை, ஒரு இளைய சமுதாயத்தை ஒரு உருப்படியான சமுதாயமாக வாழ வைப்பதற்கு கல்விக் கூடங்கள் பல்வேறு நடவடிக்கைகளை இனிமேல் எடுக்க வேண்டுமென்பது தான் என்னுடைய வேண்டுகோள். ஜன நெருக்கத்தை எப்படிக் குறைக்க வேண்டும்? 'பாப்புலேஷன் எக்ஸ்ப்ளோஷன்' என்ற நிலை வந்தபோது பள்ளியிலே இருந்து அவர்களுக்கு அந்தக் காரியத்தைக் கற்பித்து, அந்தப் பிரிவைச் சொல்லிவந்தார்கள். அதாவது 'பாப்புலேஷன் எக்ஸ்ப்ளோஷனை' எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்பதை பள்ளிப் பருவத்திலேயே, அந்தக் காலக் கட்டத்திலேயே மாணவர்களுக்குச் சொல்லித்தரக் கூடிய அளவுக்கு செயல்பட்டு வந்தார்கள். அதே நிலையில் இந்த 'பொலிட்டிக்கல் எஜுகேஷன்' என்பதும் அவர்களுக்குத் தெரியும். எப்படி அவர்கள் தங்களுடைய அரசியல் எண்ணத்தை வாக்குச் சீட்டின் மூலமாக வெளிப்படுத்த வேண்டுமென்பதை அரசாங்கம் அவர்களுக்கு முறையாகச் சொல்லிக் கொடுத்தாக வேண்டும். காரணம் அந்த 18 வயதுதான் எது நல்லது, எது கெட்டது என்று தெரியக்கூடிய அளவுக்கு உருவாக்கக்கூடிய காலகட்டமாகும். அந்த காலத்தில்தான் அவன் எந்தச் சமுதாயத்தோடு சேர்ந்திருக்க வேண்டும் என்றும் எந்தச் சமுதாயத்தோடு சேரக்கூடாது என்றும் நிர்ணயிக்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. ஒரு மாணவன் நல்லவனா, ஒருவன் நல்ல சமுதாயத்திலிருந்து பிரிந்து செல்லக் கூடியவனா என்பதைச் சொல்லக்கூடிய காலம் அது. அந்தப் பருவத்தில்தான் அவனுக்கு நாம் வாக்குரிமை கொடுத்திருக்கிறோம். பள்ளியிலே பாடமாக இல்லாவிட்டாலும் செய்தியாக, நம்முடைய நாடு முழுவதும் இனிமேல் அரசியல் மேற்கோள் கல்வியை கொஞ்சம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதை என்னுடைய எண்ணமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இல்லாவிட்டால் தேர்தல் நேரத்திலே யாரைத் தேர்ந்தெடுப்பது, யாருக்கு வாக்களிப்பது, யாரை முதலமைச்சராக்குவது என்பது அந்த மாணவனுக்குத் தெரியவேண்டாமா? ஒருவேளை அந்த மாணவன் நல்ல பாதையில் செல்லாமல் வேறு பாதையில் சென்று, அவர்கள் கொடுக்கிற தவறான

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 ஏப்ரல் 8

வாக்குறுதிகளை நம்பி, அவர்களுக்கு வாக்கைப் போட்டு விட்டால் இந்த நாடு எங்கே போகும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட ஒழுக்கம் உள்ளவர்களுக்குத் தான் வாக்களிக்க வேண்டும்; இப்படிப்பட்ட நல்ல வாழ்க்கை அமையப்பெற்றவர்களுக்கு வாக்களிக்க வேண்டும்; நாட்டுக்கு உழைக்கக்கூடியவர்களுக்கு வாக்களிக்க வேண்டும்; நல்ல ஒழுக் கங்களை உருவாக்கக் கூடியவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். கல்விக் கூடங்களில் இதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் 18 வயது நிரம்பிய வர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பதால் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் நிலைமை வேறு. கல்லூரிகளில் தங்களுடைய பாடங்களை மட்டும் பயின்று, தங்களுடைய வாழ்க்கைக்கு ஒரு உத்தரவாதத்தைத் தேடுவதுதான் மாணவர்கள் நிலை. பள்ளிகளிலேதான் வாழ்க்கைக்கு அடிப்படையான அடித் தளத்தை உருவாக்கக்கூடிய கல்வி கிடைக்கிறது. வாழ்க்கை யின் அடித்தளத்தை உருவாக்கும் இடம் பள்ளிக்கூடங்கள் தான். கல்லூரிகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இருக்கக் கூடிய சூழ்நிலையில் ஆங்காங்கே பல்வேறு கல்லூரிகள் தோன் றிக்கொண்டிருக்கின்றன. பல்வேறு இடங்களில் தோன்றியுள்ள சுய நிதிக் கல்லூரிகள் பற்றியெல்லாம் இங்கே சொல்லியிருக் கிறார்கள். நான் வரக்கூடிய வழியிலே ஒரு போர்டை பார்த்தேன். அதிலே எழுதியிருக்கிறார்கள். ஒரே ஆண்டில் பி.ஏ. பட்டம் பெறலாம். இரண்டே ஆண்டுகளில் எம்.எஸ்ஸி. பட்டம் பெறலாம். இப்படி எல்லாம் பல போர்டுகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 11-20)

கல்விக்கூடங்களில் 5 ஆண்டுகள் ஆகிறது பி.ஏ. படிப்பதற்கு. எம்.ஏ. படிப்பதற்கு 7 ஆண்டுக்காலம் ஆகிறது. ஆனால் ஒரு போர்டின் மூலம் ஒரே ஆண்டிலே இதை அடைய முடியும். அதிலும் உறுதி, உத்தரவாதம் எல்லாம் கொடுக்கப்படுகிறது. ஒரே ஆண்டிலே பி.ஏ. பட்டம் வழங்கப்படும்; இரண்டே ஆண்டில் எம்.ஏ இது எம்.பி.ஏ. வரை போய்விட்டது. சாதாரணமாக அல்ல. அப்படி ஒரு உத்தரவாதம் கொடுத்து ஆசை வார்த்தை காட்டக்கூடிய கூடங்களைக் கண்காணிக்க வேண்டும். பல காளான் கூடங்கள் இன்றைக்குத் தோன்றி இருக்கின்றன. இதை அரசாங்கம் உட்பட, பொது மக்களும் கண்காணிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டு கோளாகும்.



1989 ஏப்ரல் 8] [திரு. பி. எச். பாண்டியன்]

கல்விக்கூடங்கள் இன்றைக்குப் பட்டங்களைத்தான் வழங்கிக் கொண்டிருக்கின்றன. அதாவது We are Producing more Degree Holders. ஆனால் அந்தப் பட்டத்தினால் இன்றைக்கு இருக்கக்கூடிய பலன் என்ன? அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் வழங்கப்படாத காரணத்தால் சொல்கிறேன், அதிகமான பலன் இல்லை.

நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னதுபோல் டாக்டர் பட்டங்கள் 100 டாலர்களுக்கு வழங்கப்படுகின்றன. 100 டாலர் தான். மைலாப்பூரிலேயே வழங்கப்படுகிறது. வேறு எங்கேயும் போக வேண்டாம். (குறுக்கீடு) இப்போது அதிகமாகி இருக் கிறதா? இல்லை கம்மியாகத்தான் இருக்கிறது. இப்படி 100 டாலர்களுக்கு டாக்டர் பட்டம் என்று இருப்பதால் இதை எல்லாம் பல்கலைக் கழகங்கள் கண்காணிக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படி பட்டங்களை வாங்கக்கூடியவர்களை யாவது, அதை உபயோகிப்பவர்களையாவது பார்த்து அவர்கள் சொல்ல வேண்டும். பிராக்கெட்டில் இப்படி இப்படிக் குறிப்பிட வேண்டும் என்று. இப்படி ஐந்தாண்டுக் காலம், ஏழாண்டுக் காலம் உழைத்து ஒருவர் டாக்டர் பட்டத்தைப் பெறுகிறார். அது ரொம்பக் கடினம். அப்படி இருக்கும்போது தீசிஸ் கிடையாது, எதுவும் கிடையாது, வெறும் 100 டாலர் கொடுத் தால் போதும் டாக்டர் பட்டம் கிடைத்துவிடும் என்ற நிலைமை இருக்கிறது. இதையும் எல்லாப் பத்திரிகைகளும் போடுகி கிறார்கள். அதற்காகப் பாராட்டு விழாக்களும் கூட நடை பெறுகின்றன. எனக்குத் தெரியும் மூன்று உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு— அவர்கள் என்னுடைய நண்பர்கள்— இந்தப் பட்டம் வழங்கப்பெற்றது. நான்கு துணை வேந்தர்கள் பாராட்டினார்கள். மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஓட்டலிலே நடந்தது. ஆனால் துணிக்கடைக்காரர் கூட இந்தப் பட்டத்தை வாங்கி இருக்கிறார். ஆக இப்படி எல்லாம் நம்முடைய நாட்டில் கல்வி சில நேரங்களில் கேவலப்படுத்தப்படுகிறது. யார், யாருக்கு அதை வழங்க வேண்டுமோ அவர்களுக்கு மட்டும் தான் வழங்க வேண்டும்.

துணிக்கடைக்காரர் இந்த டாக்டர் பட்டத்திற்கு ஆசைப் படலாமா? அப்படி ஆசைப்பட்டிருந்தால் ஆரம்ப காலத்தில் ஒழுங்காகப் படித்திருக்க வேண்டும். இப்படி ஆரம்ப காலத் தில் படிக்காமல் பணம் சேர்ந்தவுடன் பட்டத்தைத் தேடி ஓடுகிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய காலம் அப்படித் தான். பணம் சேர்ந்தவுடனே பட்டம். ஏனென்றால் அதுதான் சமுதாயத்தில் ஒரு அந்தஸ்தைக் கொடுக்கிறது. பணம் முன்னால் நிற்பது கிடையாது; இந்தப் பட்டத்தைக் காட்டினால் ஒரு அந்தஸ்து கிடைக்கிறது. ஆகவே இப்படிப் பட்ட அகௌரவச் செயல்பாடுகளை எல்லாம் அரசாங்கம்

கண்காணித்துத் தடுக்கவேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உழைப்பவர்களுடைய வெளிப்பாடு அதிகமாக இருக்கவேண்டும். உழைக்காமல் பெறக் கூடிய பட்டங்களைப் பல்கலைக் கழகங்களே தடுக்க வேண்டும். அரசாங்கம் பல்கலைக் கழக விவகாரங்களில் தலையிட முடியாது என்று சட்டம் இருந்தாலும் கூட சில விவகாரங்களில் கல்வி அமைச்சர் அவர்கள் ப்ரோ சேன்சலராக இருக்கின்ற காரணத்தால் இதையெல்லாம் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொல்ல வேண்டும். அப்படிக் கட்டுப்படுத்தினால்தான் முடியும்.

காவலர்கள் கூட நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் யாரும் இதை நோட்டீஸ் பண்ணுவதில்லை. நோட்டீஸ் பண்ணினாலும் கூட நமக்கு என்ன என்று விட்டுவிடுகிறார்கள். ஆகவே தான் இதை இந்த மன்றத்தில் பேசக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது என்பதை நான் இங்கே இந்த அளவுக்குச் சொல்லியாகவேண்டும்.

அடுத்து தொழில் கல்விக்கூடங்கள் இன்றைக்கு அதிகமாகத் தோன்றியிருக்கின்றன. தொழிற்சாலைகள் அதிகமாகத் தோன்றினால்தான் தொழில் கல்விக் கூடங்களால் பலன்கள் ஏற்படும் என்பதை நாம் முதலில் உணரவேண்டும். கல்விக் கூடங்களைத் திறப்பது எளிது.

நேற்றுக்கூட மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது சொன்னார், ஒரு சீட் வேண்டும் என்றால் அதற்கு டொனேஷன் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று. இது ஒரு கேப்பிட்டேஷன் ஃபீ என்று சொன்னார். கேப்பிட்டேஷன் என்ற ஒரு ஃபீ நம்முடைய நாட்டில் எந்த ஒரு சட்டத்திலும் கிடையாது. இவர்களாகவே வைத்துக்கொள்வது. யாராவது தனி மனிதர் வாங்கினால் லஞ்சம், இவர்கள் வாங்கினால் கேப்பிட்டேஷன் ஃபீ, யாராவது தனி மனிதர் வாங்கினால் லஞ்சம், இவர்கள் வாங்கினால் டொனேஷன். அது ஒரு வார்த்தைதான். ஆனால் பொது மக்களுக்கு இழப்பு உண்டு. யாரிடம் கொடுத்தால் என்ன? யாரிடமாவது கொடுத்துத்தான் ஆகவேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. கேப்பிட்டேஷன் ஃபீ என்ற ஒரு ஃபீ நம்முடைய பல்கலைக் கழகச் சட்டத்திலே இல்லை. நம்முடைய தமிழ்நாடு அரசாங்கச் சட்டத்திலும் கிடையாது. அவரவர்கள் போடுகிற சட்டம்தான் அது. அந்தந்தக் கல்லூரிகள் தாங்களாகவே போட்டுக் கொள்வதுதான் அது. 10,000 ரூபாய், 20,000 ரூபாய் என்று போட்டுக்கொள்கிறார்கள். இதிலே முழுமையான ஒரு பாலிசியை ஏற்படுத்துகின்ற வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டுவரலாம். கன்ட்ரோல் பண்ணுவதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். கேப்பிடேஷன் ஃபீ கொடுத்துத்தான் ஒருவர் படிக்கவேண்டும்



என்ற கட்டாயம் வந்தால் அரசாங்கப் பணியில் சேரவேண்டும் என்றாலும் கூட நாளைக்கு, எனக்கு டெபுட்டி கலெக்டர் பதவி கொடுங்கள்; நான் ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கிறேன் அரசாங்கத்திற்கு என்று சொல்லக்கூடும். டெபுட்டி சூப்ரன்டென்டென்ட் பதவி கொடுங்கள் இரண்டு இலட்சம் ரூபாய் தருகிறேன் என்பார்கள். உண்மைதானே. கல்லூரிகளில் சேர்வதற்குப் பணம் வாங்கினால், அரசாங்கத்தில் வேலையில் சேரும்போது யாரும் இதை கேட்க மாட்டார்கள். ஒத்திட்டுப் பார்க்க வேண்டும். நம்முடைய சமுதாயத்தில் முன்பு இருந்த பண்டைக் கலாச்சாரத்தை இந்த நேரத்திலே மாற்றக் கூடாது, மாற விடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

இன்றையதினம் கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லும் போது, குறுக்கீட்டில், எங்கே அந்த கேப்பிடேஷன் பீஸ் போடப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். என்னுடைய நினைவு ஒரு பல்கலைக் கழக பிராஸ்பெக்டஸிலே, தமிழ் நாட்டிலே இவ்வளவு டாலர், மெடிகல் காலேஜிலே சேர இவ்வளவு டாலர் என்று போட்டிருக்கிறார்கள். வெளி நாட்டிலிருந்து ஒரு மொத்தமாகக் கொடுத்தால் ஒரு இலட்சம் டாலர், இன்ஸ்ட்டால்மென்டிலே கொடுத்தால் கூடுதல் 25 ஆயிரம். நம் நாட்டு பணத்திலே மட்டும் வாங்கவில்லை. டாலராகக் கூட வாங்குகிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டில் ஒரு தனியார் பல்கலைக் கழகத்தில் அப்படி இருக்கிறது. ஆகவே அவைகளைப் பற்றியெல்லாம் பல்வேறு நேரங்களில் எடுத்துச் சொன்னாலும் மாற்ற முடியவில்லை. பல்வேறு இடங்களில் கோளாறு உண்டு. இதிலே கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், எதற்கும் துணிந்து எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால்தான் இதையெல்லாம் கட்டுப்படுத்த முடியும். ஆகவே இன்றைக்கு வெளிப்படையாகச் சொல்லக் கூடிய காலம் வந்து விட்டது. யாராவது ஒரு லட்சம் ரூபாய் எம்.பி.பி.எஸ்.க்கு இடம் வாங்கித் தருகிறேன் என்று ஒருவர் போட்டால் உடனே 'சீட்டிங்'கில் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள். ஆனால் பிராஸ்பெக்டஸ் போட்டு, அட்வர்ட்டைஸ்மென்ட் பண்ணி பணம் வாங்கினால் தவறு கிடையாது. அதைச் செய்பவர்கள் ஒழுங்காகச் செய்ய வேண்டும். நேராகப் போய்க் கேட்டால் தவறாகி விடும். ஆனால் இன்றைக்கு இப்பேர்ப்பட்ட கல்விக் கூடங்கள் இருக்கின்றன. பெரிய கல்விக் கூடங்கள் இருக்கின்றன. சாதாரணமாக ஆரம்பித்து கொஞ்ச நாட்கள் வளர்ந்த பிறகு தான் இதையெல்லாம் செய்வார்கள். கல்வி வியாபாரமாக ஆகக்கூடாது. The temple of Saraswathi should not be polluted. அது தான் கொஞ்சம் ஒழுங்காக இருக்கிறது. எல்லா இடமும் போய் விட்டது. அதையும் நாம் விட்டு விட்டோம் என்று சொன்னால், நம்முடைய வருங்

கால சமுதாயத்தை, இளைய சமுதாயத்தை அழித்து விடும் என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களை உருவாக்கினார்கள். பல்கலைக் கழகங்கள் அதிகமாகத் தோன்ற வேண்டும். அதிகமாகப் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் திறக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அப்படியானால்தான் எல்லோரும் கல்வி அறிவு பெறுவார்கள்.

இப்போது நம்முடைய திருநாட்டில், இந்தியத் திருநாட்டில் 36.17 சதவிகிதம் தான் கல்வியின் தரம். கல்வியின் விகிதாசாரம் தமிழ்நாடு 45.78. தமிழ் நாட்டில் பெண்கள் 34.12. இந்தியாவில் 24.8. இந்தியாவின் கல்வித் தரமே குறைந்திருக்கிறது. ஆனால் நாம் கொஞ்சம் முன்னேறி இருக்கிறோம். தமிழ் நாட்டில் ஆண்கள் 57.19 சதவிகிதம். இந்த விகிதாச்சாரத்தில் கல்விச் செல்வத்தைப் பெற்றிருக்கிறார்கள். இந்தியாவில் 46.7என்று இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் நம்முடைய இந்திய நாட்டில் மக்கள் அதிகமான கல்வி அறிவைப் பெற வேண்டும். என்றைக்கு கம்ப்யூட்டரை நோக்கிப் போகப் போகிறார்கள் என்று பார்க்க வேண்டும். இந்த 24 சதவிகிதத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், சுதந்திரம் அடைந்து 40 ஆண்டுகள் ஆன பிறகு, 24 சதவிகிதம் தான். நூறு சதவிகிதத்தை அடைய வேண்டுமென்றால் இன்னும் 120 ஆண்டுகள் ஆகும். இன்னும் 120 ஆண்டுகளுக்கு, சின்னத்தை வைத்து நம்முடைய மக்கள் வாக்களித்துக் கொண்டேயிருந்தால் தான், 100 சதவிகிதத்தை நாம் எட்ட முடியும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே கல்விச் செல்வத்தில் நம் நாட்டின் வளர்ச்சியைக் காட்டுவதற்கு, அதிகமான கல்விக் கூடங்களை உருவாக்க வேண்டும்.

இன்றைக்கு திறந்த வெளிப் பல்கலைக் கழகம். 'ஓப்பன் யூனிவர்சிட்டி', திறந்த வெளிப் பல்கலைக் கழகம். வரவேற்கக் கூடியது. எல்லோரும் பயிலுகிறார்கள். எல்லோரும் பட்டம் பெறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லோரும் கல்விச் செல்வத்தைப் பெறுகிறார்கள். பாராட்டக்கூடியது தான். ஆனால் அந்த திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தில் பயின்ற பிறகு புரோபஷனல் கல்வி பெற முடியுமா என்ற கேள்வியைக் கேட்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலிருந்து பதிலை எதிர்



பார்க்கிறேன். அதற்கு மேல் போக முடியுமா? திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றுவிட்டு வயதைத் தாண்டினால் கூட புரோபெஷனலுக்குப் போக முடியுமா? அப்படி போக முடியுமானால் நல்லதுதான். அது முடியுமா என்பதை நான் இங்கே அறிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டு நம்முடைய தமிழகத்தில் நுழைவுத் தேர்வு உண்டா என்ற கேள்விக்கும் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பதிலை எதிர் பார்க்கிறேன். ஆகவே, நம்முடைய நாட்டிலே கல்விச் செல்வம் இன்னும் வளர வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி வளர்ந்தால்தான் நம்முடைய நாட்டிலே எழுச்சி மிக்க, பொறுப்பு மிக்க சமுதாயம் எதிர் காலத்தில் உருவாவதுடன் நல்லதொரு அரசியல் அமைப்பையும் நாட்டிலே நிலை நிறுத்திக் காட்ட முடியும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

(முற்பகல் 11-30)

***Thiru Oscar C. Nigli** : Hon. Deputy Speaker, Sir, I promise you that I will not take more than 10 minutes time, for two reasons. One is that, as you can see, Education does not seem to attract much crowd. Secondly, much has been spoken by many people on Education. So, I shall try to keep my speech to the barest minimum.

Education has been given the allotment of 900 crores of rupees as per this document and the scheme of providing 5 crores for basic facilities in the primary schools in panchayat union areas is very praiseworthy. As I said earlier, Education should start at the grass-root level. Our entire planning will be a failure and an absolute fiasco, if we go on talking from Yojana Bhavan at Delhi. We have to think in terms of Panchayat level. In fact our planning itself has come in for criticism many a time. A question has been raised : Have we failed to plan or have we planned to fail ? That is the question which has been asked by no less a person than Thiru Milton Freedman. Unless Education is given top priority, all our schemes—development schemes will come to naught. I am glad that this Budget has taken this fact into consideration. So, the stress on Education should always be at the primary level. The formative years of a child are the most important and it is only during this period, we make a child or mar a child.

In this context, it is very laudable that the Government has taken a decision that only women teachers should be appointed for the First and Second Standards. However, in this connection, I would like to

mention a point wherein I beg to differ with the Hon. Education Minister. Recently, he gave a suggestion that there should be examinations from Standard II itself. Actually it is unfortunate that our children in India are already heavily over-burdened even at a tender age and this practice of cramming will prove to be a disincentive. If we are going to have the examinations even at the lower classes, I think the only victims will be our young children. Not only in the western countries but also in the eastern countries, it is only after the age of five, that students attend schools. Now we send our students at the tender age of three, to study a second language at the age of four, that is, in the so-called U.K.G. Imagine for a moment–mother tongue, they study, English they study and then another language, they study. They have to study almost three languages, at the age of four.

Then I would like to bring to the notice of the Government the practice of collecting very large donations at the L.K.G. level—amounts ranging from Rs. 3,000 to Rs. 25,000. It is given to the highest bidder as in the case of an auction. All this is done in the name of building fund or some other lame excuse. There are certain schools which do not admit pupils in L.K.G. and they only admit in pre-L.K.G. class for which they charge Rs. 3,000 per seat in pre L.K.G. So, the racket starts not in L.K.G. but it starts even from pre-L.K.G. It is here that I would like to appeal to the Government to think seriously as to why we can't do away with L.K.G. and U.K.G., and as to why we should not start from Standard I. It will save a lot of trouble in the matter of mis-management, admission racket and donation and thereby we can make it even mandatory that every child should be admitted only after the age of five. This is not a problem in Government schools because children are admitted there only after the age of 5. I am talking about the problem in private schools. We can bring in the Private Schools Regulation Act and make it mandatory for them to admit pupils only in Standard I and there need not be L.K.G. I would also request the Government to grant permission for the starting of fee-levying English medium schools so that the burden does not fall on the Government. We can have more number of fee-levying schools so that the burden does not fall directly on the Government. It will also help to reduce the mad rush to the existing English medium schools. The fact cannot be denied that there is insatiable demand for English medium schools. It is our experience that the very same people who condemn English from several platforms queue up for admission in English medium schools. This is unfortunately what is happening all over India.

The other point which I want to make here is that Whatever may be the schools that have to be started, those schools should be under the stringent control of the Government because,





otherwise there will be attendency on the part of these schools to explorit, we have so many avenues of control. For the Anglo Indian Schools, we have the Inspector of Anglo Indian Schools. For the Matriculation School we have the Inspector of Matriculation Schools. We have already got these agencies of the Government and, so, we should make use of them.

The other thing which I would like to suggest is that, far as possible there should not be any change in the procedure. Here, I would like to cite only one example. In the year before last year, there was a change. It was said that the students could opt either for Engineering alone or for Medicine alone and, so, they should take either the Mathematics—Physics—Chemistry group or the Physics—Chemistry—Biology group. Then again, last year, there was a change and the status quo was restored. Now, everybody can go in both for Engineering and Medicine and, therefore, they can take the group with the subjects Mathematics, Physics, Chemistry and Biology. I would like to say that such interference should not be there because one set of students is affected if we bring in a particular change in one year and make some other change the next year.

The other aspect is with regard to the "non-utility courses" about which much has been spoken to in the past.In fact, to brand a particular subject as a "non-utility course" is itself a very sad state of affairs. In fact if we see who is the Adviser to the Hon. the Chief Minister, we find that he is a well known economist. I was indeed very happy to see the announcement that an economist was going to be the Hon. the Chief Minister's Adviser. But, one of the subjects which has been dubbed as "non-utility course" is Economics. Of coutse, we can restrict admissions to such courses rather than dubbing them as "non utility courses" and using terms like "non-utility courses" even in the relevant Government Order. I would request the Government to look into the matter and see whether the Government Order could be modified.

Regarding selections to the Indian Administrative Service and other All India Services, if we carefully go through the lists for the past few years, we find that not many have been selected from Tamil Nadu for the Indian Administrative Service. I think that one of the reasons for this may be that our syllabus is not oriented to the I.A.S. Examinations. In fact, in the 1962 batch, to which Thiru Sripal belongs, around 50 per cent of the candidates selected were from Tamil Nadu and there were 22 from the Loyola College itself. But, today, we have a situation where not even one or two are selected from Tamil Nadu for the Indian Administrative Service. If this continues, I think a situation will come, after some years, when we will have in our State I.A.S. Officers, not

[Thiru C. Oscar c. Nigili]

from Tamil Nadu, but from other States. When saying this, I am not trying to bring in any regional chauvinism, but only stressing that this is a serious matter which has to be locked into.

The other aspect which I want to speak about relates to the Navodaya Schools. In fact, I am firmly convinced that the starting of these Navodaya Schools is an exercise in futility. We have enough of private schools which cater to the rich and the *nuveau riche*. We do not need more schools of that type. We need schools to cater to the needs of the poor. Apart from this, the problem of language also arises. We already have enough of the Central Schools, known as Kendriya Vidyalayas, where three languages, viz., English, Hindi and Sanskrit, are taught but the regional language does not come into the picture at all. The students in these schools study three languages, viz., English Hindi and Sanskrit, but do not get exposure to the regionallanguage at all. We do not know how the life of such a student is going to be when he comes out of school and goes to a place like this Assembly. I am mentioning this because I am myself a victim of this policy.

Next, I would like to mention about the University Grants Commission Scales of pay which have been implemented by this Government. With the permission of the Chair, I would like to read out the Motion of Thanks from the Secretary of the Association of University Teachers. It reads :

"We, the College teachers and, in particular, the Members of the Association of University Teachers of Tamil Nadu thank the popular Government for the early and speedy implementation of U. G. C. Scales of pay to the satisfaction of the academic community.

Sd. ...................

Secretary of the AUT."

In this context, I would like to take one minute to explain how these U. G. C. Scales of pay came to be implemented. The then Education Minister, in 1987, announced that Tamil Nadu would be the first State to announce the U. G. C. pay scales. A Press statement was made to that effrect. But, subsequently, nobody made any announcement about the U. G. C. pay scales. Then, the Governor, Dr. Alexander, made a lot of efforts to implement the pay scales but the implementation did not come through. Now, I must say with satisfaction that, within two weeks of this Government assuming office, they have paid the U. G. C. pay scales. This is definitely an achievement.



[Thiru Oscar Nigliy]

Then, I want say a few words about the self-financing colleges There are about 72 Polytechnics and 28 Engineering Colleges with an intake of 180 students. This means that about 18,000 students are turned out by these institutions in a year. (The gong was sounded). Sir, I will finish in a few minutes. We can imagine the amount of black money which is being generated by this arrangement. I think there are some self-financing Medical Colleges also. I do not have the data about them'

(முற்பகல் 11-40)

The colleges without the facilities should be given short time so that they will be able to acquire the facilities, failing which they should be derecognised. There is no point in hurrying. Imagine, if we are going to have engineering colleges, medical colleges, which are professional colleges, dealing with human beings,—if these colleges do not have the basic facilities and proper training, tomorrow how are these Engineers and Doctors going to function ? Also it has been felt that even for Corporation Schools, there should be additional grant for them.

Lastly, before I wind up there is one aspect which I would like to mention here, and that is, the non-plan expenditure for the Anglo-Indian Schools and the Primary Schools in 1987-88 is Rs. 64.50 lakhs. In the Revised Estimate for 1988-89 it was Rs. 93.13 lakhs and in this year. in the Budget Estimate for 1989-90, the sum allocated is Rs. 76.05 lakhs which is higher than the amount allocated in 1987-88 but lower than the amount allocated in the previous year.I would like the Government to take a careful note of this.

In conclusion I would like to touch one more aspect concerning the teachers in a school which we have now in Tamil Nadu and there is a problem in that school, and that is, Asan Memorial School, where two teachers have been dismissed and 40 teachers were placed under suspension. No doubt these schools do not come under the purview of the State Government. But, however, we have to remember one more thing that this school is still in the State of Tamil Nadu. Then what happens to C. B. S. E. Schools ; they get No Objection Certificates from the Government of Tamil Nadu and it looks that the No Objection Certificate is a green signal for them to do what they please. As long as these schools are located in Tamil Nadu we have to take cognizance of that, as otherwise, there is mass exploitation.

[Thiru Oscar C. Nigly] [1989 ஏப்ரல் 8

Then about pay scales. Some of the schools are giving the State Government Scales and some others are giving the Central Government Scales. They have their own rules and regulations. But the argument put forward by them is, they do not have funds and therefore, donation is being collected by the C. B. S. E. Schools. With your permission Mr. Deputy Speaker Sir, I would like to quote the bye-laws of the C. B. S. E. Directorate which says that the schools affiliated to C. B. S E. shall continue to be open to inspection by the Inspection Committee deputed by the Board or the Education Department of the State in which the institution is situated. Therefore, even the State Government has the power to intervene. What I would suggest is, that the Commissioner and Secretary for Education be askedto nogotiatebetween the teachers and the management and try to settle the problem, because it is a problem which has gone to the streets. Although it is a C. B. S. E. School not coming under the purview of the State Government, the Government must think in terms of long term measures as to how we can bring these C. B. S. E. Schools under the control of the State Government. Otherwise, these schools have a tendency to do what they please and resort to all sorts of mal practice. Therefore, it is high time that the State Government think in terms of clamping down on these C. B. S. E. Schools, which escape attention from the Central Government and the State Government. The ultimate victims are the poor teachers. With these few words, I would like to conclude. Thank you.

*திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையினை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைய மாணவர்கள், நாளைய தலைவர்கள் என்ற பழமொழிக்கு ஏற்ப, சிறந்த பல திட்டங்கள் இந்தக் கொள்கைக் குறிப்பில் காணப்படுகிறது. கல்வித் துறையில் பல ஆண்டுகளாக இருந்த பல குறைபாடுகள் நீக்கப்பட்டு, தேவையான நல்ல பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. வயிற்றுக்குச் சோறு; வாழ்வுக்குக் கல்வி என்ற உயர்ந்த சிந்தனையோடு நிதியொதுக்கீடு செய்திருப்பதை அனைத்து மக்களும் பாராட்டுகிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், கடந்த காலத்தில் துவக்கப்பட்ட நர்சரிப் பள்ளிகள் புற்றீசல்கள்போல் இன்றைய தினம் வளர்ந்து கொண்டு வருகின்றன. அங்கே பணிபுரியும் ஆசிரியைகள் கொத்தடிமைகளாகவே நடத்தப்படுகிற அவல நிலையை,



1989 ஏப்ரல் 8] [திரு. செ. இராமலிங்கம்]

நாமெல்லாம் பார்க்கிறோம். இந்தப் பள்ளிகளுக்கு இருக்கின்ற கவர்ச்சி காரணமாக, பெற்றோர்களைக் கசக்கிப் பிழிந்து, நன்கொடை என்ற பெயரால் சிலர் கொள்ளை அடிக்கிறார்கள். இதை வரைமுறைப்படுத்தி, இப்படிப்பட்ட பள்ளிகளைக் கொண்டு கொள்ளையடிக்கிற கும்பலின் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் அங்கீகாரம் பெறப்பட்ட பள்ளிகளில் ஆசிரியைகளுக்கு, சரியான முறையில் அரசு அங்கீகரித்துள்ள ஊதிய விகிதத்தில் ஊதியங்கள் வழங்கப்படுவதில்லை. எனவே அவர்களுக்கு அரசு ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது ஒன்றிய ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ஏறத்தாழ 97 ஆயிரத்து 480 பேர் 1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அரசு ஊழியர்களாகக்கப்பட்டது. இன்றையதினம் வரவேற்கப்பட்டாலும் அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பல்வேறு சலுகைகள் இவர்களுக்கு அமல்படுத்தப்படவில்லை.

அதேபோன்று உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ உதவித்தொகை வழங்கப்படுவதில்லை. எனவே அவர்களுக்கும் மாதம் ரூபாய் 15 வழங்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதம் 1:30 என்ற வகையில் இருக்க வேண்டும். தொடக்கக் கல்வி அந்த விகிதத்தில் இருந்தால்தான், ஆசிரியர்கள்-மாணவர்களை ஒழுங்காக தொடக்கக் கல்வியிலே கண்காணிக்க முடியும். அந்த விகிதத்திற்கேற்ப மாற்றி அமைத்து போதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொடக்கக் கல்விக்கு பெண் ஆசிரியைகளை நியமித்தல் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அந்தப் பெண் ஆசிரியைகளையும் பட்டதாரி ஆசிரியர்களாக நியமித்தால் தொடக்கக் கல்வி சிறப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று ஒவ்வொரு தொடக்கப்பள்ளி அருகிலும் கடந்த காலத்தில், கலைஞர் அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஆசிரியர் குடியிருப்பு இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்தக் குடியிருப்பு இல்லங்கள் எல்லாம் சரியாக பராமரிக்கப்படாததால் அந்தக் குடியிருப்பு இல்லங்களில் இன்றைய தினம் ஆசிரியர்கள், ஆசிரியைகள் குடி இருக்க முடியாத நிலைமை இருக்கிறது எனவே கிராமப் புறங்களில் அந்தக் குடியிருப்பு இல்லங்களை. உடனடியாகப் பழுது பார்க்க வேண்டும். மிகவும் குக்கிராமங்களில் இருக்கிற தொடக்கப் பள்ளிகள் அருகில் புதிய குடியிருப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. இராமலிங்கம்] [1989 ஏப்ரல் 8

அதேபோன்று உயர்நிலைப் பள்ளிகளில் இன்றைய தினம் ஆசிரியர்களின் எண்ணிக்கை உயர்வுக்கு ஏற்ப அலுவலகப் பணியாளர்கள் இல்லாததன் காரணமாக பள்ளிகளின் நிர்வாகம் ஸ்தம்பித்துக் கிடக்கின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். பல உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட வசதி இல்லாத நிலைமை இருக்கிறது. பல்வேறு கிராம உயர்நிலைப் பள்ளிகளுக்கு தகுந்த ஆய்வுக் கூடங்களை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நவோதயா பள்ளிகளைப் போலவே, கலைஞர் அவர்களின் முந்தைய ஆட்சியில் புதுக்கோட்டையிலும், சென்னையிலும் இரண்டு மாதிரிப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டன. இந்தமாதிரி பள்ளிகளில் 8 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களை சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு இலவசமாக தங்குமிடம், உணவு மற்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அப்படிப்பட்ட மாதிரிப் பள்ளிகளை ஒவ்வொரு தாலுக்காவிலும், தோற்றுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அதிலும் குறிப்பாக தொழிற் கல்வி ஆசிரியர்களை உடனடியாக நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை, சிறப்பு நிலை ஆகியவற்றுக்கான ஊதிய விகிதம் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. எனவே உடனடியாக அவர்களுக்கு ஊதிய விகிதத்தை அதாவது தேர்வு நிலை, சிறப்பு நிலைகளுக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உதவி கல்வி அதிகாரி, உதவி கல்வி ஆய்வாளர் ஆகிய பணிகள் சுழற்சி முறையில் அனைத்துப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். தற்போது ஒவ்வொரு பேரூராட்சியிலே குறைந்தபட்சம் ஒன்றிய தலைநகரங்களில் இருக்கிற இடங்களிலாவது பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு டிஸ்ட்ரிக்ட் ஸ்போர்ட்ஸ் ஸ்கூல் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களின் அனைத்துப் பிரிவுகளுக்கும் சிறப்பு நிலை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் தொழிற் கல்விப் பிரிவைச் சார்ந்த ஆசிரியர்களுக்கு மட்டும் அந்த ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. அவர்கள் 400 பேர்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த ஊதிய உயர்வை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 8] [திரு. செ. இராமலிங்கம்]

மேல்நிலைப் பள்ளிகளில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு உதவித் தலைமை ஆசிரியர் பணியை வழங்குவது குறித்து தெளிவான ஆணை பிறப்பிக்கப்படவில்லை. அந்த உதவித் தலைமையாசிரியர் பணி குறித்து தெளிவான அரசாணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு எழுத்தர் என்ற முறையிலே யாவது உடனடியாக நிர்வாக வசதிகளைக் கவனத்திற் கொண்டு எழுத்தர் பணிகளைத் தோற்றுவிக்க வேண்டும்.

மாவட்டக் கல்வி அலுவலகங்களில் தற்போது ஆசிரியர் நல நிதிக் கடன் வழங்குவதில் ஏறத்தாழ ஆறு மாத காலத்திற்கு மேல் தாமதம் ஏற்படுகிறது. A.E.O. பெயரில் தற்போது இருக்கின்றது Personal Account A.E.O. பெயரில் இருக்கின்ற காரணத்தினால் இந்தக் காலதாமதம் ஏற்படுகிறது. அதை, Deputy Inspector of Schools பெயருக்கு மாற்றினால் உடன் கிடைக்க ஏதுவாக இருக்கும். எனவே, அப்படிப்பட்ட ஒரு அரசாணையை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவப்படி வழங்கப்படவில்லை. எனவே, முந்தைய அரசினால் மறுக்கப்பட்ட அந்த மருத்துவப் படியை உடனடியாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அங்கீகரிக்கப்படாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் கடந்த காலத்தில் ஏராளமாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அதில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அரசுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றிருந்தாலும் இன்றைய தினம் பள்ளிகளில் அவர்களுக்குப் பணி வாய்ப்பு மறுக்கப்படுகிறது. எனவே, அரசுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்கள் என்ற அடிப்படையில் ஏறக்குறைய இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் இன்றையதினம் பணி கிடைக்காத ஒரு நிலையில் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பணி வழங்கிட முன்னுரிமை வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அரசாங்கத் தேர்வு எழுதி வெற்றி பெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் வேலை

வழங்க வேண்டுமென்று அந்த அடிப்படையில், அங்கீகரிக்கப் படாத பள்ளிகளிலே படித்தவர்கள் தேர்வு எழுதி வெற்றி பெற்றி ருந்தால் அவர்களுக்கும் வேலை வழங்க வேண்டுமென்றார். அங்கீகரிக்கப்படாத அந்தப் பயிற்சிப் பள்ளிகளில் தரமான பயிற்சி வழங்காமலேயே கூட அரசாங்கத் தேர்வு எழுதுகின்ற உரிமையை நீதிமன்றத்தின் மூலமாக அவர்கள் பெற்றுக் கொண் டார்கள். எனவே, அந்த உரிமை வழங்கப்பட்டது. அதற்கான சர்டிபிகேட்டும் வழங்கப்பட்டு விட்டது. ஆனால் அங்கீகரிக்கப் படாத பள்ளி, தரமான பயிற்சி வழங்காத ஒரு நிலையிலுள்ள அந்தப் பள்ளியிலேயிருந்து வருகிற ஆசிரியர்களுக்கும், முறை யான பயிற்சி வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் இடையிலே தேர்வு நடத்தி அதிலே யாரை அலுவலிலே நியமிப்பது என்று அதற்கான குழு கருதுகிறபொழுது, முன்னுரிமை இயல்பாக முறையான பயிற்சி நடைபெற்ற அந்தப் பள்ளியிலே தேர்வு பெற்றவர்களுக்குக் கிடைக்கிறது. அது ஒரு இயல்பான, தேர்வு முறையிலே இயல்பாக இடம் பெறுகின்ற ஒன்று என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : துணைத் தலைவரவர்களே, இது தொடர்பாக ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். தமிழ்நாட் டில் இப்படித் தனியார் பயிற்சிப் பள்ளி என்ற பெயரில் இரண்டு இடங்கள்- ஸ்ரீமுஷ்ணம் ஒரு நல்ல சென்டர். எல்லா வகையான ஃப்ராடும் அங்கே நடக்கிறது. இதைப் போலீசில் புகார் செய்து காவல் துறைக்கு ஒப்படைத்து அவர்களைக் கைது செய்து நட வடிக்கையெடுக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : துணைத் தலைவ ரவர்களே, தகுந்த புகார், விளக்கமானதாக வழக்கறிஞராகப் பயின்ற திரு. சீனிவாசன் அவர்கள் எழுதித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவரவர் களே, அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகின்ற பொழுது, Un-recognised School Product என்று அதில்ஒரு முத்திரையைக் குத்தி வழங்குகிறார்கள். அதனால் தான் பணி கிடைக்கவில்லை. அந்த முத்திரையில்லாவிட்டால்கூட ஏனையோருக்குக் கிடைக் கின்ற வாய்ப்பு..

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : துணைத் தலைவ ரவர்களே, இந்த அரசாங்கத்திற்கு இருக்கிற ஒரேயொரு உரிமை அந்த ஒரேயொரு முத்திரை தான். (சிரிப்பு)

திரு செ.இராமலிங்கம்:மேலும் ஆசிரியர்கள் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு 'சி' பிரிவு என ஒருங்கிணைக்கப்படுகின்ற அந்த முயற்சி இன்றும்



முடியவில்லை. நெடுங்காலமாக இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உடனடியாக ஒரு தனிக் குழுவை நியமித்தாவது இவர்களை ஒருங்கிணைக்க வேண்டு மென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிப் பள்ளிகள் 'சி' பிரிவு என்று முந்தைய அரசின ரால் வகைப்படுத்தப்பட்டது. ஆனால் இன்றுவரை அவர்கள் அரசு ஊழியர்கள்தானா என்கின்ற ஒரு சந்தேகம் எல்லோரு டைய மனத்திலும் இருக்கிறது. நகராட்சிப் பள்ளிகளில் பணி புரிகின்ற உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு நகராட்சியினுடைய வருமானத்திலிருந்து ஊதியம் கொடுக்கின்ற காரணத்தால் பல்வேறு நகராட்சிகள் வேறு பணிகளையே செய்ய முடியாத ஒரு அவல நிலைமை இன்றைய தினம் இருக்கிறது. குறிப்பாகக் கும்பகோணத்தில் மட்டும் இருபதுஇலட்சம் ரூபாய் இந்தஆசிரியர் களுக்கு வழங்கிய ஊதியம் அரசிடமிருந்து வர வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, உடனடியாக அவர்களுக்கு அரசு நேரடியாக ஊதியம் வழங்குகிற ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் கல்லூரி ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்யாமல் அவர்களது பணியை வரன்முறை செய்து தர வேண்டும். இறுதியாக என் னுடைய தொகுதியைப் பற்றிய கோரிக்கைகள் சிலவற்றை கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில், மாநிலத் திலேயே சிறந்த ஒரு கூட்டுறவுச் சங்கமாகிய திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கம் என்று ஒரு சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்தினுடைய Common Good Fund லட்சக்கணக்கில் இருக்கிற காரணத்தால், அவர்கள் நெசவாளர்கள் சங்கம் என்ற அடிப்படையில் ஒரு Textile Technology Course ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கேட் டிருக்கிறார்கள். தேவையான அளவிற்கு அவர்களுடைய சங்க நிதியிலிருந்து வழங்குவதற்கு அனுமதி கேட்டிருக் கிறார்கள். எனவே, அந்த Textile Technology Course துவங்குவதற்கு, தொழில் பள்ளி துவங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே தற்போது ஒரு அரசு உயர்நிலைப்பள்ளி இருக்கிறது[ அதற்கு போதிய கட்டிட வசதி இல்லை. திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கத்தினுடைய Common Good Fund-லிருந்து பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு அருகிலே இருக்கிற தொழில் பேட்டையில் ஐந்து ஏக்கர் நிலம் கேட்டிருக்கிறார்கள். தொழில் பேட்டைக்காக 100 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, தற்போது 10 ஏக்கர் நிலத்தில்தான் அந்தத் தொழில் பேட்டை

இயங்கிக் கொண்டிருக்கிறது. மீதியிருக்கின்ற இடத்தில் ஒரு ஐந்து ஏக்கர் இப்பள்ளிக்காக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல திருமங்கலக்குடி மாதர் மன்றம் உயர்நிலைப் பள்ளி என்கிற பெயரால் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒரு உயர் நிலைப் பள்ளி அங்கீகரிக்கப்பட்டது. மூன்று ஆண்டுக் காலத்திற்கு முன்பே அப்பள்ளிக்கு அங்கீகாரம் வழங்கியும், அதிலே பணியாற்றுகிற ஆசிரியர்கள் சம்பளமே வாங்கவில்லை. இதனால் அங்கே பணியாற்றுகிற ஆசிரியர்களும், ஏனைய பணியாளர்களும் பசி, பட்டினியோடு அங்கே பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். உடனடியாக அந்தப் பள்ளிக்குத் தேவையான பணியிடங்களை சாங்ஷன் செய்து தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதியில் அம்மன்குடி, கதிராமங்கலம், கோணளாம்பள்ளம் ஆகிய இடங்களில் இருக்கிற நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றவும், திருச்சேறையில் இருக்கிற உயர் நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றவும் அரசிடம் விண்ணப்பித்து இருக்கிறார்கள். உடனடியாக அவற்றிற்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஆகிய இரண்டு ஒன்றியத் தலைநகரங்களிலாவது இரண்டு பெண்கள் உயர் நிலைப் பள்ளிகளை இந்தக் கல்வியாண்டிலே துவங்க அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகத்தான் விரைந்து தன்னுடைய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துகிறது என்பதற்கு இந்தக் கல்வி மானியத்தில் அரசு அறிவித்திருக்கிற திட்டங்கள், சலுகைகள் சான்றாக அமைந்திருக்கின்றன. நல்ல அழகான தமிழில், தொடங்கும் பொழுதே மேலும் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தூண்டுகிற தூய தெள்ளு தமிழில் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பை நமக்கு அளித்திருப்பதற்காக நான் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அதுமட்டுமல்லாமல், தமிழ்க் குறிப்பையும் ஆங்கிலக் குறிப்பையும் படித்துப் பார்க்கும்பொழுது முதலில் தமிழில் எழுதி பின்பு அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. ஆங்கிலத்தில் எழுதி



தமிழில் மொழி பெயர்க்கக்கூடிய காலம் மாறி, இப்போது தமிழில் எழுதி ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கக்கூடிய காலம் வந்திருக்கிறது என்பதிலிருந்து தமிழ் எவ்வளவு தூரம் இந்த அரசால் பாராட்டப்படுகிறது, போற்றப்படுகிறது என்பது தெரிகிறது. அதுவும், தமிழ்த் துறைக்குத் தலைவராகயிருந்த பேராசிரியர் ஒருவரால் வழி நடத்தப்படுகிறது இந்தத் துறை என்பதிலிருந்து தமிழுக்கு எவ்வளவு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்பதும் இந்தக் குறிப்பிலிருந்து நம்மால் உணர முடிகிறது. எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

நம்முடைய மொத்த நிதிநிலை ஒதுக்கீடுகளில் ஏறக்குறைய 22 சதவீதத்தை 900 கோடி ரூபாயை கல்விக்காக நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்பதிலிருந்து நாம் பெறக்கூடிய செல்வங்களில் எல்லாம் கேடில்லாத செல்வம் 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்பதை நாம் உண்மையாகப் பாராட்டுகிறோம் என்ற அளவிற்கு, இந்தக் கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து செயல்படும் தமிழக அரசின் தன்மை பாராட்டப்படக்கூடிய ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் மகிழ்ச்சி ஏற்படுகிற இந்த நேரத்திலே நாம் கொஞ்சம் பார்வையை மேலே செலுத்திப் பார்த்தால், மிகுந்த வேதனை ஏற்படத்தான் செய்கிறது. இன்னும் படிக்காதவர்கள் நம்முடைய நாட்டிலே எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள். கல்விக் கண்கள் திறக்கப்படாமல் இன்றைக்கும் தான் வாழ்கிற ஊரைப் பற்றியும், உலகத்தைப் பற்றியும், தான் வாழ்கிற சூழ்நிலையைப் பற்றியும் தெரிந்துகொள்ளாத அளவிற்கு, வெளி உலகத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு அன்றாடம் தப்பித்தவறி சில கிராமங்களுக்கு வருகிற பத்திரிகைகளைக் கூட யாராவது படித்துச் சொன்னால்தான் புரிந்துகொள்ள முடியும், அதுவும் அரைகுறையாக, தாமாகப் படிக்க முடியாது என்ற அளவிற்கு நம்முடைய மக்கள், கோடிக்கணக்கான மக்கள், நம்முடைய ஜனத்தொகையில் ஏறக்குறைய 60 சதவீத மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்களே என்பதை நாம் எண்ணிப் பார்க்கும்போது, உண்மையிலே வேதனை ஏற்படுகிறது.

பல திட்டங்களை நாம் வகுக்கிறோம். இவ்வளவு கோடிக் கணக்கான ரூபாயைச் செலவழிக்கிறோம். ஆனால் நம்முடைய கிராமங்களிலே பள்ளிகளுக்கு வருபவர்கள், அப்படியே தப்பித் தவறி வந்தாலும் கூட, அவர்கள் நின்று கடைசிவரையிலும்

படிக்க முடியாத சூழ்நிலை இன்னும் நிலவிக்கொண்டிருக்கிறது. நாம் செலவழிக்கிற இந்தப் பணம் கல்வியைப் பரப்பவேண்டும் என்று இருக்கிற நம்முடைய எண்ணம், நம்முடைய அடிப்படைக்கொள்கை, அத்தனையையும் நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எந்த அளவிற்குத் தேவையான தொடர் நடவடிக்கைகளிலே நம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம், தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இந்தக் கல்வி என்பது, அதுவும் எல்லோருக்கும் கல்வி என்பது பாராட்டப்படக்கூடிய ஒன்று. எல்லோருக்கும் கல்வி என்பது நடைமுறை சாத்தியமான ஒன்று என்ற அளவிற்கு வருமே தவிர, 900 கோடி ரூபாயைச் செலவழிக்கிறோம் உண்மைதான். நம்முடைய வருமானத்திலே ஒரு கணிசமான தொகையைச் செலவழிக்கிறோம், ஆனால் அப்படிச் செலவழித்தாலும் ஆண்டுக்காண்டு நம்முடைய படிப்பறிவில்லாதவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டு வருகிறதே தவிர, அது குறைந்தபாடில்லை என்ற நிலைமை இருக்குமானால், அது குறித்து அரசு மாற்றுத் திட்டங்களை வகுக்கவேண்டும். எல்லாப் பிள்ளைகளுக்கும், அதுவும் குறிப்பாக 14 வயது வரை உள்ள பிள்ளைகளுக்கு கம்பல்சரி எஜுகேஷன், கட்டாயக் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற ஒரு கொள்கையை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற சூழ்நிலையில், எத்தனை பேர்களுக்கு இந்தக் கட்டாயக் கல்வி என்ற அடிப்படையிலே 14 வயது நிறைந்த நம்முடைய சிறார், சிறுமியர்களுக்கு நாம் கட்டாயக் கல்வியாக, கல்வியைப் போதிக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான், நம்முடைய கொள்கையை நாமே எந்த அளவிற்கு மதிக்கிறோம் என்பதை, அது நமக்கே விளக்கம் கொடுக்கக்கூடியதாக அமையும் என்பதை நான் மிகுந்த வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இங்கே பல்கலைக்கழக மானியக் குழுவின் சிபாரிசை அமுலாக்க வேண்டும் என்று அரசை பல்லாண்டுக் காலமாக ஆசிரியர்கள் சமுதாயம் கேட்டுக்கொண்டிருந்தது. காதிருந்தும் கேட்காதவர்களாக இருந்தார்கள்; கண்ணிருந்தும் பாராதவர்களாக இருந்தார்கள். இங்கே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதும், அழுதபிள்ளைதான் பால் குடிக்கும் என்ற அடிப்படையிலே, அழுவதற்கு ஆசிரியர்கள் தயாராகிக்கொண்டிருந்த நேரத்திலே, அவர்கள் எதிர்பார்க்காத அளவிற்கு, மானியக் குழுவின் சிபாரிசின்படி, சம்பளம் அளிக்கப்படும் என்று அரசு அறிவித்ததைத் தொடர்ந்து ஆசிரியர்கள் சமுதாயம் மகிழ்ச்சியையும் அடைந்தது. அதிர்ச்சியையும் அடைந்தது என்றுதான் சொல்லவேண்டும். ஏன் என்றால், அவர்கள் அதிர்ச்சி அடையும் அளவிற்கு இவ்வளவு விரைந்து நாம் எதிர்பார்க்காத ஒரு நேரத்திலே அறிவித்தது





Quite unexpectedly என்று ஆசிரியர்களில் சிலரே என்னிடத்திலே சொன்னார்கள். ஆகையினாலே யாரும் எதிர்பார்க்காத அளவிற்கு இந்த அரசு முன்வந்து, அதை அளித்திருப்பது இந்த ஆட்சி ஆசிரியர்கள் மீது கொண்டிருக்கிற அக்கறையைக் காட்டுகிறது. ஆசிரியர்கள் சமுதாயத்தினுடைய நலனிலேதான் மாணவர் சமுதாயத்தினுடைய நலனும் இருக்கிறது. ஆசிரியர்கள் இன்னல் அகன்ற ஒரு இன்ப வாழ்க்கையை வீட்டில் பெற்றால்தான், கவலை இல்லாத ஒரு குடும்ப வாழ்வை வீட்டில் பெற்றால்தான், அவர்கள் வகுப்பறைகளுக்கு வரும்போது, மாணவர்களுக்கு மகிழ்ச்சியாகவும், உணர்ச்சியாகவும் பாடத்தைச் சொல்லிக் கொடுக்க முடியும் என்பதை அறிந்து, தெரிந்து, அதற்கான தெளிவைப் பெற்று, கேட்காமலேயே கொடுக்கக்கூடிய ஒரு அரசாக இந்த அரசு ஆசிரியர் சமுதாயத்தினுடைய ஒட்டுமொத்தமான நம்பிக்கையையும், அதனுடைய பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது. அதற்காக நானும், ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பாக, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஆனால் ஒன்று. இந்தக் கல்விக்காக நாம் செலவழிப்பது இருக்கிறதே, நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். ஓராண்டுக்கு ரூபாய் 900 கோடிக்கு பல தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் எவ்வளவு பேருக்கு இன்று வேலை கிடைக்கும் ? (குறுக்கீடு).

**பேராசிரியர் க. பொன்னுசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறுகிறபோது இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன் தான் இந்தப் பல்கலைக் கழக நிதியுதவிக் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையிலே அந்த ஊதியத்தை உடனடியாகப் பெற்றுத் தந்திருக்கிறது என்று சொல்லுவதிலே சற்று நாங்கள் மாறுபடுகிறோம். இந்தப் பல்கலைக் கழக நிதியுதவிக் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில் ஊதியம் வழங்க வேண்டுமென்று பன்னெடும் காலமாக கோரிக்கைகள் இருந்தபோது, அந்த ஊதியம் 1—1—1986 முதல், முன் தேதியிட்டு நடைமுறைப்படுத்தப்படும், அப்படியே நடைமுறைப்படுத்தப்படும் என்ற அறிவிப்பை ஜூலை 1987-லே அறிவித்தது இதற்கு முன்னாலே இருந்த அரசு என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அத்தோடு கூட அந்த நேரத்திலே அதற்கான அரசு ஆணையும் பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அந்தப் பணம் வராத காரணத்தால் அது தரப்படாமல் இருந்தது. இப்போது அந்தப் பணம் இந்த அரசு பொறுப்பு ஏற்ற நேரத்திலே வந்து விட்டது. அதை நடைமுறைப்படுத்த இருக்கிறது இந்த அரசு என்பதை மட்டும்

உறுப்பினர் அவர்களுக்குக் குறிப்பிட்டு ஆசிரியர் சமுதாயத்தின் சார்பிலே நானும் அதற்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். ஆனால் இதைக் கொண்டு வந்தது, அறிவித்தது, செயற்படுத்தி நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பித்தது இதற்கு முந்தைய அரசு என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதற்கும், பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் சொன்னதற்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. அவரே ஒத்துக் கொண்டார்கள் கடந்த கால அரசு சிந்தித்திருக்கிறது என்று. வேண்டுமென்றே ஆசிரியர்களை நிந்தித்துக் கொண்டு இருந்தது. சிந்திப்பதிலும், நிந்திப்பதிலும் தான் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நடை முறைப்படுத்தியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் பொன்னுசாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பேராசிரியர் அல்லவா ? ஆகவே அவருக்கே உரிய முறையில், அதை விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். நானும் அவரிடத்தில் மாறுபடுவதற்கு விரும்பவில்லை. நான் சொல்லியதைத்தான் அவரும் சொல்லியிருக்கிறார்கள். எனவே அவர்களிடத்திலே வாதம் செய்வதற்கு நான் தயாராக இல்லை.

**பேராசிரியர் க. பொன்னுசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசு ஆசிரியர்களை நிந்தித்துக் கொண்டு இருந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சொல்லை தயவு செய்து இந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் முன்பு ஆணையிட்டது அந்த அரசு என்று சொல்லியிருக்கிறேன். அரசு ஆணையைப் பிறப்பித்தது முந்தைய அரசு. அந்த அரசு ஆணையின்படி, பணம் வந்ததற்குப் பின்னாலே நடைமுறைப்படுத்துவதிலே ஏற்பட்ட தாமதம் தான் அதற்குக் காரணம். இப்போதுகூட, இன்னும் பணப் பற்றாக்குறை காரணமாகத் தரப்படாமல் நிலுவையில் இருக்கிறது. ஆகவே புதியதாக இந்த அரசு பெற்றுத் தந்தது என்பதை நான் வன்மையாக மறுக்கிறேன். முன்பே அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. மத்திய அரசு ஆணைக்கேற்ப இங்கே ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. ஏற்றுக் கொண்டது முந்தைய அரசு, ஒத்துக் கொண்டது அது தான். ஆணை பிறப்பித்தது அந்த அரசு தான் என்பதை நான் மீண்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன வார்த்தையை நீக்க வேண்டிய அவசியமில்லை.



**திரு. எம். அப்துல் லத்தீப் :** தலைவர் அவர்களே, பேரா
சிரியர் அவர்கள் விளக்கம் சொல்ல உரிமை பெற்றார்கள்.
நானும் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அரசியல் ஆதா
யத்தைப் பெறவேண்டுமென்பதற்காக அவர்கள் உண்மையை
மாற்றிச் சொல்லக்கூடாது என்பதை மட்டும் நான் அவர்களுக்குச்
சொல்லிக் கொண்டு, கடந்த காலத்திலே அதற்கான குறிப்பு
இருந்திருக்கலாம். பல்கலைக் கழக மானியக் குழுவின் அந்தச்
சிபாரிசுப்படி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கு அரசு
முயற்சி செய்யவேண்டுமென்ற அந்தக் குறிப்பு ஏதாவது நம்மு
டைய கல்வித் துறையிலே இருந்திருக்கலாம்.

(பிற்பகல் 12—10)

ஆனால் தேர்தல் அறிக்கையில் இது இடம் பெறவில்லை
என்று நான் கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தி
னுடைய தேர்தல் அறிக்கையிலே இடம் பெறவில்லை என்றாலும்
முன்னுரிமை வழங்கி எடுத்த எடுப்பிலே, மற்றவர்களைப் பற்றி
யெல்லாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு பிறகு
சிந்திக்கலாம் பிறகு வேண்டுமானால் அறிக்கையிலே சேர்க்கலாம்
என்றெல்லாம் கருதப்பட்ட நிலையிலே முன்னுரிமை வழங்கி
ஆசிரியர் சமுதாயத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் நடை
முறைப் படுத்தியிருக்கிறதே என்பதைத்தான் பொன்னுசாமி
அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நானும் அதைத்தான்
சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படித்
தந்ததற்காக நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன் .

ஆனால் இதிலே மிக முக்கியமான பிரச்சினையைக் கவனிக்க
வேண்டும். இது ஒரு சோஷியல் இன்வெஸ்ட்மெண்ட். தொழிற்
சாலைகளுக்கோ மற்றவைகளுக்கோ அதைப் பயன்படுத்தினால்
லட்சக் கணக்கான மக்களுக்கு நாம் வேலை வாய்ப்பை ஏற்படுத்த
லாம். ஆனால் இது ஒரு சோஷியல் இன்வெஸ்ட்மெண்ட்
என்ற முறையிலே Quid proquo இதிலே ஒன்றும் இல்லை.
கல்வியைத் தருபவர்கள் அத்தனை பேரிடம்இருந்து பிரதிபலனாக
செலழிக்கக்கூடிய சமுதாயம் ஒன்றும் பெறுவது இல்லை.
ஆனால் சமுதாயம் எதிர்பார்க்கிறது. இன்றைக்கு யாருக்கு
படிப்பு அறிவு கொடுக்கிறோமோ அவர்கள் தருங்காலத்தில்
நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன் உடையவர்களாக இருப்பார்கள்
என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்த மாபெரும்
சமுதாய முதலீட்டை, சோஷியல் இன்வெஸ்ட்மெண்ட்டை,
ஒரு ஆண்டுக்கு 900 கோடி ரூபாய் அளவிற்கு, ஏழை எளியவர்கள்,
படிப்பு அறிவு இல்லாதவர்கள் என்று சொல்லக்கூடிய மக்கள்
கொடுக்கிற பணத்திலேயிருந்துதான் நாம் செலவழிக்கிறோம்
என்பதைக் கருத்திலே கொண்டு படிப்பவர்களும், மாணவர்
களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களும் முழுமை

யாகப் பயன்படுத்தி நாளைக்கு வருகிற சமுதாயத்தை நல்ல சமுதாயமாக உருவாக்கக்கூடிய பொறுப்பு, சம்பளம் அதிகம் பெற்றுக் கொண்டோம் என்று சொல்கிற அந்த அறிவார்ந்த சமுதாயத்திற்கு உண்டு என்று சொல்லக் கூடிய பொறுப்பு எனக்குண்டு.

எனவே அதை நாம் எதிர்பார்க்கிறோம். மாணாக்கர்கள் என்ற அந்த அழகான தமிழ்ச் சொல் வேறு எங்கேயும் இல்லை. ஆங்கிலத்தில் கூட ஸ்டூடண்ட் என்று தான் சொல்வார்கள். மற்ற மொழிகளிலே வெவ்வேறு இருக்கின்றன. நான் அதற்குள் எல்லாம் போகவில்லை. ஆனால் மாணாக்கர்கள் என்ற அந்த. அழகான தமிழ்ச் சொல் 'மாண்பை ஆக்குபவர்கள்' என்பதைக் குறிக்கிறது. அந்த மாண்பை ஆக்கி அவர்கள் எல்லாம் கொடுத்தால் தான் இங்கே இருப்பவர்கள் எல்லாம் மாண்பைப் பெற்றுக் கொள்வோம் அல்லது நாம் மாண்பை ஆக்கி மாண்பைப் பெற்றுக் கொள்கிறோம் என்ற அளவுக்கு மாணாக்கர்கள் தான் மாண்பை ஆக்குபவர்களாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன.

திரு. எம். அப்துல் லத்தீப் : ஆகையினால் அந்த பொறுப்போடு அவர்கள் நடந்து கொள்ள வேண்டும். அதே மாதிரியாக ஆசிரியர்களும் நடந்துகொள்ள வேண்டும். மற்றவர்கள் எல்லாம் கொஞ்சம் தயக்கத்தோடு சொல்வார்கள். ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் பொன்னுசாமி அவாகளும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். தயவுசெய்து அவர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆசிரியர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. சம்பளத்தைக் கொடுத்து விட்டிருக்கிறோம். அவர்களுக்குத் தர வேண்டிய பணத்தை அதிகமாக்கியிருக்கிறோம். அதே நேரத்திலே அதிகமான பலனை அவர்களிடத்திலே இந்தச் சமுதாயம் எதிர்பார்க்கிறது. ஆசிரியர்கள், குறைகளை அகற்றுபவர்கள். ஆசிரியர்களாகவே இருக்க வேண்டும். மாசு பிரியர்களாக அவர்கள் மாறக் கூடாது. மாணாக்கர்கள் மாண்பை ஆக்குபவர்களாக இருக்க வேண்டுமே தவிர, சமுதாயத்தினுடைய மாண்பைக் குலைக்கக் கூடியவர்களாக இருக்கக் கூடாது. நாட்டிலே நடைபெறுகிற மகத்தான மாறுதல்களோடு அவர்களும் ஒன்றிப் போக வேண்டும். திறமையை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். உலகத்தை அவர்கள் கண்ணால் பார்க்க வேண்டும். காதால் கேட்க வேண்டும் ஆனால் அதே நேரத்தில் எதற்காக அவர்களுக்குப் பணம் செலவழிக்கப்படுகிறதோ அதனால் முழுமையான பலனை அவர்கள் பெற்று வருங்காலத்தில் நல்லதொரு சமுதாயத்தை நாடு பெறுவதற்கான வழியிலே அந்தக் கல்விச் சாலைகள் எல்லாம் பயன்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



என்னுடைய நண்பர், ஆங்கிலோ இந்தியச் சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் ஆசான் பள்ளியைப் பற்றிச் சொன்னார்கள். அதைக் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அது ஒரு தனியார் பள்ளிக்கூடம். நம்முடைய நிர்வாகத்திற்கு உட்பட்ட பள்ளிக் கூடம் அல்ல. ஆனால், ஒட்டு மொத்தமாகப் பலரை வேலையிலிருந்து நீக்குவது என்பது நம்முடைய கவனத்தை ஈர்க்கக் கூடிய ஒன்று. ஏனென்றால் நம்முடைய மாநிலத்திலே தான் அவர்கள் வாழுகிறார்கள். அதனாலே நம்முடைய கட்டுப்பாட்டிற்கும் அவர்கள் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அரசு விதிமுறைப்படி, குறைந்த பட்சம் அதிலே அரசு அக்கறை எடுத்துக் கொண்டு அதிலே தலையிட்டு அவர்களுக்குள் சுமூகத்தை ஏற்படுத்தி, 40 பேர்களுக்கு மேல் ஒரே நாளைக்குள் வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னால், என்ன காரணம் என்பதையாவது அரசு தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி அனுப்பக்கூடிய உரிமை இருக்கிறது என்று சொன்னால் மாஸ் டிஸ்மிஸல் மாஸ் சஸ்பென்ஷன் என்ற அளவுக்கு செய்வது என்பது தர்ம நியாயத்தின்படிக் கூடச் சரியல்ல. அதைச் சுட்டிக் காட்ட வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டம். அதை வரவேற்கிறேன். இந்தச் சத்துணவுத் திட்டம் இந்த நாட்டிலே நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு மாணவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு அதிகமாகி இருக்கிறது? அது இதுவரையில் நமக்குச் சரியாகத் தெரியவில்லை. அதற்கு முன்னால் எவ்வளவு மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். சத்துணவுத் திட்டம் ஆரம்பித்த பிறகு எவ்வளவு பேர் படிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்? கிராமத்திலே இதனால் என்ன விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன? அதிகமான மாணவர்கள் ஈர்க்கப்பட்டு இருக்கிறார்களா? அப்போது எவ்வளவு மாணவர்கள்? இப்போது எவ்வளவு மாணவர்கள்? கடைசி வரையிலே எவ்வளவு மாணவர்கள் படித்து வருகிறார்கள்? இவைகளைப் பற்றிய குறிப்பு இங்கே கொடுக்கப்பட்டிருந்தால் நான் ஏற்றுக்கொண்டிருப்பேன். கல்வியிலே ஒழுக்கமும் சேர்ந்து இருக்க வேண்டும் என்று சொன்னால் மாணவர்களுக்கு அற நெறியைப் போதிக்க வேண்டும். அல்லது அவரவர்களுடைய மார்க்கத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு அவர்களுடைய மார்க்க அற போதனைகளை— இந்து மாணவர்களாக இருந்தால், அவர்களுடைய அற போதனைகளை அவரவர்கள் சேர்ந்துள்ள ரிலீஜியஸ் எஜுகேஷன், மாரல் எஜுகேஷன் என்ற அடிப்படையிலே அதையும் இணைத்துத் கற்பிக்க வேண்டும் அல்லது திருக்குறளைப் பற்றிச் சொல்லுங்கள் மற்ற திருமூலருடைய அல்லது வள்ளலாருடையவைகளைப் பற்றி எல்லாம் சொல்லுங்கள். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. அவர்கள் சிறிய பிள்ளைகளுக்கு மார்க்கத்தைப்

போதிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தைப் போதிப்பதோடு பல்வேறு சமுதாயங்களுக்கு இடையே இருக்கக்கூடிய நல்லுணர்வை, அவர்களுக்குள் இருக்கக்கூடிய நல்லுறவை அவர்கள் பேணிக் காக்கும் வகையில், சமுதாயங்களுக்கிடையே இருக்கக் கூடிய பழைய காலக் குப்பைச் சரித்திரங்களையெல்லாம் எடுத்து விட்டு, அவர்களுக்குள் ஒரு பரஸ்பர ஒப்புதல், பரஸ்பர பொருத்தம், பரஸ்பர நம்பிக்கை, அன்பு மலர்ந்திடும் வகையில் நம்முடைய சரித்திரத்தை, நம்முடைய பாடங்களைப் போதிக்க வேண்டும் என்ற சமுதாய சௌஜன்யத்தை சமரசத்தை, சகோதரத்துவத்தை, மாணவர்களிடையே ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, பேதா பேதங்களையெல்லாம் மறந்து, வேற்றுமைகளையெல்லாம் அகற்றி, உலக சகோதரத்துவத்தைப் பேணக்கூடிய அளவுக்கு அவர்களிடத்திலே சில உணர்வுகளை ஏற்படுத்துவதற்கு வழிவகைகளைக் காணுவது இன்றைக்குத் தேவையாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

இந்தித் திணிப்பைப்பற்றிச் சொன்னார்கள். அது எந்த வகையிலே வந்தாலும், அது திணிக்கப்படுகிறது. சந்தேகமேயில்லை. நவோதயா பள்ளிக் கூடங்களைப் பற்றி நேற்றைய தினம் இங்கே விரிவான விவாதங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. யார் எது சொன்னாலும் அந்த நவோதயா பள்ளிக் கூடங்களுடைய நோக்கங்கள், அது எந்த அளவிற்குச் செயல்படுகிறது என்பதை ஓரளவிற்குத் தெரிந்திருக்கின்ற காரணத்தால் நான் ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தெலுங்குக்காரர்கள், கன்னடக்காரர்கள், மலையாளக்காரர்களுக்கு ஒருவேளை இந்தி ஓரளவிற்குப் புரியலாம். அவர்களுடைய மொழியின் அடிப்படையிலே அது அவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால் தமிழர்கள் அதுவும் குறிப்பாகத் திராவிடர்களுக்கு அவர்களுடைய கலாச்சாரத்தின் அடிப்படையிலே, அவர்களுடைய பண்பாட்டின் அடிப்படையிலே, அவர்களுடைய உள்ளுணர்வுகளின் அடிப்படையிலே எந்தக் காலத்திலும் (மணியடிக்கப் பெற்றது) இந்தி என்பது அவர்கள் பேசுகின்ற மொழியாகவும், எழுதுகின்ற மொழியாகவும் அது ஆகாது. It is quite alien to Dravidian temperament. இந்தி லாங்குவேஜ் இருக்கிறதே அது நிச்சயமாக இந்த நாட்டிலே எடுபடாது. அதையும் அவர்கள் மீறிச் செய்வார்கள் என்று சொன்னால், கல்விச் சாலைகள், கல்விச் சாலைகளாக இருக்காது, அது வேறு நிலையங்களாக மாறிவிடும். அதுவும் ஒரு குறிப்பிட்ட வகையிலே பெரும் பணம் செலவு செய்து மேல்குடி மக்கள் தான் படிக்க வேண்டும் என்ற அளவுக்கு இந்தியைத் திணிப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக மத்திய அரசு பயன்படுத்தினால், அதைத் தமிழகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. அதை எதிர்க்கும். மீறி நடந்தால், அப்படி நடக்கக்கூடியவர்களை,



எந்த நேரத்திலே எப்படிச் சந்திக்க வேண்டுமோ அப்படித் தமிழ்
மக்கள் சந்திப்பார்கள் என்பதை மட்டும் அவர்களுக்கு எச்
சரிக்கையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது பேசக்கூடிய
இந்த சிறுபான்மை மக்களுக்கும் அவரவர்களுடைய மொழி
யைப் படிக்கக்கூடிய அளவுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித்
தர வேண்டும். 20 மாணவர்கள் ஒரு வகுப்பு அறையிலே
மலையாளம் படிக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு ஒரு
ஆசிரியர் நியமனம் செய்து கொடுக்க வேண்டும். எங்களைப்
பொறுத்தவரையில் உருது மொழி பேசக்கூடியவர்கள் இங்கே
நிறைய இருக்கிறோம். எனவே உருது மொழி பாடசாலைகள்
பல இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. சென்னையிலே
உருது பாடசாலைகள் மூடப்பட்டிருப்பது மட்டுமல்ல. நம்
முடைய மாநகராட்சி மன்றங்கள் நடத்திக்கொண்டிருந்த
உருது பாடசாலைகளை மூடியதோடு, அந்த உருது பாட
சாலைகள் நடந்து கொண்டிருந்த கட்டிடங்களைக் கூட விலை
கூறி விற்று இருக்கிறார்கள். இந்தக் கொடுமை நடந்திருக்
கிறது. அதுவும் என்னுடைய தெருவிலே நடந்திருக்கிறது
என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்
காட்டுவதோடு தயவுசெய்து உருது வளர்ச்சிக்காக தமிழ்
நாட்டிலே, ஆந்திராவிலே, கர்நாடகத்திலே, கேரளாவிலே,
மற்ற மாநிலங்களிலே இருப்பதைப் போல்—உருது அக்கா
டமி ஒன்றை விரைந்து நீங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே பல அரபிக் கல்லூரிகள் இருக்கின்றன.
அதிலே அரபு மொழி, இஸ்லாமிய கலாச்சாரம், வரலாறு,
அரபு அடிப்படையிலே ஏற்படுகிற கல்வி இவைகள் எல்
லாம் போதிக்கப்படுகின்றன. இவைகளை எல்லாம் ஒருங்
கிணைத்து, இந்த அரபிக் கல்லூரிகளை எல்லாம் ஒருங்கிணைத்து
அதற்கு என்று ஒரு தனிப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்த
முடியுமா என்பதையும் அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 12-20)

ஏனென்றால் அது கூட, அந்த அராபிக் கல்லூரி கூட நம்
முடைய ஒரு நிர்வாகத்திற்குள், குறைந்த பட்சம் கல்வித்துறை
யினுடைய ஒரு நிர்வாகத்திற்குள்—அதிலே தலையிடுவதற்
காக அல்ல. அது அட்டானமஸ் பாடி, ஆனால் அதிலே ஒரு
ஒழுக்கம், ஒருங்கிணைப்பு கொண்டு வருவதற்காக—இவைகளை
யெல்லாம் இணைத்து அல்லது தனி ஓரியண்டல் யுனிவர்
சிட்டி என்ற அளவிற்கு ஏற்படுத்த முடியுமா என்பதைப்
பற்றியும் அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று இந்த
நேரத்தில் நான் கேட்டுக்கொள்வதோடு மொத்தத்தில் நம்

முடைய முயற்சி, நல்ல முயற்சி. மிகப் பெரும் தொகையை நாம் செலவழிக்கிறோம். அதேநேரத்தில் சமுதாயம் பெரிய பயன்களை எதிர்பார்க்கிறது. அதைக் கல்லூரிகளிலே படிப்பவர்களும், பள்ளியிலே படிப்பவர்களும் படிக்க வைப்பவர்களும் எண்ணத்தில் வைத்து, நம்முடைய சமுதாயப் பொறுப்பை, 'சோஷியல் கமிட்மெண்ட்' அதை நினைவில் வைத்துச் செயல்பட்டால்தான் நாம் சமுதாயத்திற்கு நன்மை செய்திருக்கிறோம், இவ்வளவு ரூபாய் செலவழித்து என்ற அளவிற்கு பெருமைக்குரியவர்களாக இருப்போம்; ஆனால் நெளிவு சுளிவுகளைக் காட்டுவோமானால் தேர்வுகளிலே கூட ஒழுங்கீனத்தை நாம் அனுமதிப்போமானால், அவர்கள் காப்பி அடிப்பது எங்களுடைய ரைட், பேசிக் ரைட் என்று சொல்வார்களேயானால், அதை விட்டுவிடுவது எங்களுடைய ரைட் என்று ஆசிரியர்கள் சொல்வார்களேயானால், படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்காக அல்ல, வேறு காரியங்களுக்குத்தான் கல்லூரிகளுக்கும், ஸ்கூல்களுக்கும் போகிறோம் நாம் என்ற நிலை உருவாகுமானால், நடக்காது. ஒழுக்கம் அங்கே இருந்து தான் உருவாகி நாட்டுக்குப் போகவேண்டும். அந்த ஒழுக்கத்தை நிலைநிறுத்த, நல்ல கல்வியை நம்முடைய மாணவர்களுக்குப் போதிக்க ஆசிரியர்களும் பொறுப்போடு இருந்து, அவர்களும் பீஸ் கன்செஷன் என்று வாங்குகின்ற........ (மணியடிக்கப் பெற்றது) பீஸ் கன்செஷன் என்று வாங்குகின்ற, ஸ்காலர்ஷிப்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதிக நேரம் பேசுவது உங்களுடைய ரைட்டா?

திரு. எம். அப்துல் லத்தீப் : முடிக்கத்தான் வருகிறேன். I am just landing; the plane is just landing, you must understand. Therefore, Mr. Deputy Speaker, இதை நாம் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும். இதை, நான் ஏன் வற்புறுத்திச்சொல்கிறேன் என்று சொன்னால் பள்ளிகளுடைய, கல்லூரிகளுடைய சூழ்நிலைகள் மாறிவிட்டு இருக்கின்றன. சமுதாயம் அவர்களிடத்திலே எதிர்பார்க்கிறது. எனவே, அந்த ஒழுங்கீனங்களை எல்லாம் நீக்குகின்ற வகையில் சர்க்கார் அவர்களோடு கொஞ்சம், டிசிப்ளினைப் பேணவேண்டும் என்பதில் ஸ்ட்டிரிக்டாக இருக்க வேண்டும். இங்கே இருக்கிற பேராசிரியர்களும் ஒப்புக் கொள்வார்கள். அவர்களே ஒரு பேராசிரியர். எனவே, அந்த வகையிலே நான் எடுத்துச் சொல்லி, வேறு பல விஷயங்கள் இருந்தாலும், அது பற்றியெல்லாம் பேசுவதற்கு நேரம் இல்லை என்பதைச் சொல்லி, தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, கற்கை நன்றே. கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே என்று சொன்னார்கள். வேறு எதற்கும் பிச்சை புகக்கூடாது, பிச்சை வாங்கக்கூடாது.





பிச்சை வாங்குவதை விட செத்துப் போகவேண்டும். ஆனால் இதற்கு மட்டும் சொன்னான் தமிழன், கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே, கல்லான் ஒருவன் குல நலம் பேசுதல் நெல்லினுட் புகுந்த பதராகும்மே, எல்லாம் நெல்லாக வரட்டும், களஞ்சியத்திற்கு நெல்லாக வரட்டும், பதர்கள் அகற்றப்படட்டும். அப்படி நம்முடைய பயிர், இந்தக் கல்விப் பயிர் நாட்டிற்குப் பயன் அளிக்கட்டும் என்று சொல்லி, விடைபெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெயர் குறிப்பிட்டுச் சொன்னதன் காரணமாக, விளக்கத்தை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு அனுமதி வேண்டுகிறேன். பொறுப்பான ஆசிரியர்கள் இருக்க வேண்டும். அது பேராசிரியர் அவர்களுக்குத் தெரியும் என்று சொன்னார்கள். நேற்று நான் இந்த அவையிலே பேசியதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்களா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அப்போது கூட நான் சொல்லியிருக்கிறேன். ஆசிரியர்கள் கடமையுணர்வோடும், பொறுப்புணர்வோடும் இருப்பதற்கு இந்த அரசு ஆசிரியர்களுக்கான நடத்தை விதிகளைக் கொண்டு வரவேண்டுமென்பதைக் கூடச் சொல்லியிருக்கிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியது என்னுடைய கடமை. அதோடு கூட, சில தவறான தகவல்களை இங்கே கொடுப்பதாக....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, ஒவ்வொரு உறுப்பினரும், அவரவர் கருத்தை ஒரு முறை சொல்லலாமே தவிர, ஒவ்வொருவர் பேசும் கருத்துக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் விளக்கம் சொல்வது என்று ஆரம்பித்தால் இந்த மன்றத்தில் அமைச்சர் பதில் சொல்லவே முடியாது. பதில் சொல்ல நேரம் இருக்காது. எனவே, விளக்கம் கிடைக்காது. எனவே அந்தக் கருத்துக்கள் அவரவர் தனி உரிமை என்ற முறையில் அவைகளை விட்டு விடக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போதும். நீங்கள் அமருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : இந்த அவையினுடைய நேரத்தை, உறுப்பினர்கள் தனி விளக்கங்கள், அதுவும் பேச்சுக்குப் பேச்சு விளக்கம் என்ற முறையில், எடுத்துக் கொள்வது முறையல்ல. அப்படித் தாங்கள் அனுமதிப்பதாக இருந்தால், இந்த அவையில் தாங்கள் எதிர்பார்ப்பதைப் போல, குறித்த நேரத்தில் இந்த வாதம் முடியாத நிலைமை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

[1989 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் பொன்னுசாமி, அமருங்கள். போதும். அடுத்து, திரு, வெங்கடேஸ்வர தீட்சிதர். (குறுக்கீடு)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு டெபுடி ஸ்பீக்கர் அவர்களே, கல்வி மானியத்தில் எனக்கும் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்ததற்கு முதலிலே வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வி மானியத்தின் போது இங்கே இருக்கிற ஸ்ட்ரெங்தைப் பார்த்தாலே கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதை இங்கே நாமே தெரிந்து கொள்ள முடியும். மெம்பர்கள் ரொம்பக் குறைந்து விட்டார்கள். ஆனால் மினிஸ்டர்கள், அவர்களும் இல்லை. (குறுக்கீடு) இருக்கிறீர்கள் ஏதோ 2, 3 பேர் இருக்கிறீர்கள். இருந்தாலும் 234 பேர் உள்ள இந்தச் சபையில் எண்ணி, கணக்குப் பார்த்தால் ஒரு 24 பேர் தான் இருக்கிறார்கள். அதனால் கல்விக்கு சிரத்தை இல்லை என்று தெரிகிறது. தொள்ளாயிரம் கோடி ரூபாயை நாம் செலவு செய்கிறோம். ஒரு கோடி இல்லை, 2 கோடி இல்லை, தொள்ளாயிரம் கோடி ரூபாயை — நம்முடைய திரு. லத்தீப் அவர்கள் கூட சொன்னார்கள் — செலவு செய்கிறோம். இந்தக் காலத்தில் விலைவாசி ஏறியிருக்கிறபோது இந்தத் தொள்ளாயிரம் கோடி ரூபாய் என்பது ஒன்றும் பிரமாதம் இல்லை. இது எதற்கும் லாயக்கு இல்லை என்று தெரிகிறது. ஆனால், நம் பட்ஜெட்டில் நான்கில் ஒரு பங்கு அதாவது 25 சதவீதத்தை ஒதுக்கியிருக்கிறார் நம்முடைய கலைஞர் அவர்கள். வரவு-செலவுத் திட்டத்தில் என்ன உறுதி கூறினாரோ அதை நிறைவேற்றுவதற்கு நிச்சயமாக அதை ஒதுக்கியிருக்கிறார்.

நம்முடைய கல்வியைப் பற்றிப் பல அபிப்ராயங்கள் இருக்கின்றன. கல்வி என்பது காற்று, மழை, வெயில் போல் பொதுவாக இருக்க வேண்டும். யாருக்கும் சொந்தமாக இருக்கவே கூடாது. எந்த நாட்டிலும் அப்படித்தான் இருக்கிறது. நம் நாட்டில் பலவிதமான கஷ்டங்கள், விஷயங்கள் இருக்கின்றன. எத்தனையோ விதமான பேதங்கள், படிப்பதற்குச் சிரமங்கள் கணக்கில் அடங்காமல் இருக்கின்றன. கல்வியை யார் வேண்டுமானாலும் வாங்கலாம் என்று இருந்தால் தான் கல்வி வளரும். இல்லை, இங்கே தடங்கல், அங்கே தடங்கல் என்றால் அது நிச்சயமாக வளரவே வளராது. வளருவது கஷ்டம். ஆரம்பக் கல்வி, நடுநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, மேல் நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, பொறியியல் கல்வி, மருத்துவக் கல்வி இப்படி எத்தனையோ விதமான கல்வி இதிலே போடப்பட்டிருக்கின்றன. இதை வாசிப்பதற்கே அரை மணி நேரம் ஆகும். ஆனால் எங்களுக்கு கொடுப்பது 10 நிமிடம் தான். இந்தக் கல்வி இத்தனை



1989 ஏப்ரல் 8] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

விதமாக இருக்கும்போது; இத்தனைக் கல்லூரி, இத்தனை விதமான படிப்புச் சொல்லிக் கொடுக்கும்போது அவைகள் எல்லாம் நல்லது தான். இத்தனை விதமான படிப்பையும் இந்த அறிக்கையில் கொடுத்து இருக்கிறீர்கள். சொல்லிக் கொடுக்காத படிப்பு என்ன என்றால் திருட்டு, கொள்ளை, சாராயம் காய்ச்சுவது, லஞ்சம் வாங்குவது இவைகளுக்குத் தான் படிப்பு இல்லை. மற்ற அனைத்துக்கும் படிப்பு சொல்லிக் கொடுக்கிறோம். இதற்கு மட்டும் தான் படிப்பு இல்லை. ஆனால் படிப்பு இல்லாமலேயே அது வளர்கிறது. இத்தனை வாத்தியார் வைத்து இவ்வளவு சொல்லிக் கொடுக்கிறோம், இது ஏறாமல் அந்தப் படிப்பு மட்டும் நம்மை அறியாமல் ஏறிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) இயற்கை என்று சொல்லுகிறார். இதற்குத் தெய்வாதீனமாக அனுக்கிரகம் கிடைக்கிறது. மற்ற முக்கியமான தேவையான படிப்புக்கு அனுக்கிரகம் கிடைக்கவில்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் லஞ்சம் பெறுவதற்கு அந்தக் கலையைப் பயிற்றுவிப்பதற்கு ஒரு கல்லூரி அமை[illegible] வேண்[illegible] என்று [illegible]? (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டில [illegible] சொல்லுகி[illegible] [illegible]ல்லூரி அமைக்காமலேயே அதைக் கற்றுக் கொள்கிறார்கள் என்று சொல்[illegible]ன். அ[illegible] புரிந்து கொள்ளவில்லை. திட்டம் போடாமல், பணம் ஒதுக்காமல், எந்தவிதமான ஆசிரியரும் இல்லாமல், பேராசிரியர்கள் இல்லாமல், கட்டிடம் இல்லாமல் இது நடக்கிறது என்பதற்கு நான் உதாரணமாகச் சொல்கிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையிலும் நாம் பல சட்டங்கள் போடுகிறோம், திட்டங்கள் போடுகிறோம். மக்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்களா என்று நாம் பார்க்க வேண்டும். நாட்டில் இங்கிலிஷ் படிப்பு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. எல்.கே.ஜி., யூ.கே.ஜி. படிப்பதற்கு இடம் கிடைக்கவில்லை என்றால் தான் மற்ற ஆரம்பக் கல்விக்குப் போய்ச் சேருகிறான். அதுவும் கிராமப்புறத்தில் இருக்கிறவன் தான் அப்படிச் செய்கிறான். நிச்சயமாக நகர்ப்புறத்தில் இருக்கிறச் [illegible] சாதாரண ஏழையாக இருந்தால் கூட எப்படியாவது தன்னுடைய பிள்ளையை நர்சரி பள்ளியில் சேர்த்துவிட வேண்டும் என்று எண்ணுகிறான். நர்சரி பள்ளி வளராமல் என்ன பண்ணும்? ஜனங்கள் பிரியப்படுகிறார்கள், வருகிறது. நாம் அதற்குக் கடிந்து கொள்ள முடியுமா? நர்சரி பள்ளி

ஏராளமாக வளர்கிறது. இங்கிலிஷ் மீடியம் ஏராளமாக வளர்கிறது என்றால் ஜனங்கள் அதை ஒத்துக் கொள்கிறார்கள், வளருகிறது. அதற்கு என்ன நீங்கள் மானியமாகத் தருகிறீர்கள்? எல்லாம் செல்ப் பைனான்ஸ். அவன் பணம் போட்டு நடத்துகிறான். அங்கே போய் இவர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டு இங்கிலிஷ் மீடியம் கேட்கிறான் என்றால் என்ன செய்வது? எல்.கே.ஜி.யில் என் பிள்ளையைச் சேர்க்க வேண்டும் என்றால் எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்று கேட்கிறான். மறைமுகமாக இவ்வளவு? நேர்முகமாக இவ்வளவு? என்று நிறைய வாங்குகிறான். இன்னும் கொண்டு போய்ச் சேர்க்கிறான். எங்களுடைய ஊரிலே கேம்பியன் ஸ்கூல் என்று ஒன்று இருக்கிறது. அங்கே போய்ப் பாருங்கள். கொண்டு போய்க் குழந்தையை விடும்போது ஒரு கார் போகுது. சாப்பாட்டுக்கு ஒரு கார் போகுது; கொண்டு வந்து விடுவதற்கு ஒரு கார். எங்கெங்கே பணம் இருக்கிறதோ அவர்கள் எல்லாம் போய் அங்கே சேருகிறார்கள். அட்மிஷன் கிடைப்பதில் பலவிதமான இன்னல்கள் இருக்கின்றன. எல்லோரையும் சேர்க்க முடியாது. இப்போது காலேஜிலிருந்து, எலிமெண்டரி ஸ்கூலிலிருந்து தேர்வு வைத்து இருக்கிறான். பையன் என்ன படிக்கிறான், எவ்வளவு உயரம் இருக்கிறான், எவ்வளவு சின்னவனாக இருக்கிறான் என்று பார்க்கிறான். சாமான்யமாக எங்கேயும் அட்மிஷன் கிடைப்பது இல்லை. அதுவும் இங்கிலிஷ் மீடியம் பள்ளியில் சேர்க்கவே முடியவில்லை. காலேஜில் அட்மிஷன் சரியாகக் கிடைக்கவில்லை. பிரின்சிபால் பார்க்கிறான், பையனைப் பார்க்கும்போது நல்ல தடியாக, உயரமாக இருந்துவிட்டால் சீட் கிடைக்காது, போய்விடு என்று சொல்லிவிடுகிறான். பயப்படுகிறான். இந்தப் பையன் பின்னால் ஏதாவது நமக்கு சங்கடத்தை ஏற்படுத்துவான் என்று நினைக்கிறான், பின்பு அவனுடைய நிலைமை என்ன என்று பார்க்கிறான். பையன் சின்னவனாக இருக்க வேண்டும் என்று பார்க்கிறான்; இளைத்து இருக்க வேண்டும் என்று பார்க்கிறான்; அதற்கு மேல் தான் பணம். பணத்தைக் கொடுக்கிறவனும் சொல்ல மாட்டேன் என்கிறான், வாங்குகிறவனும் சொல்ல மாட் மாட்டேன் என்கிறான். ஏதோ காதில் பட்டதை நாம் சொல்கிறோம். அதற்குத் தான் இந்த பட்ஜெட்டில் கல்வி இலவசம் என்று போட்டு இருக்கிறோம். கூடிய மட்டும் அறிவு வளர வேண்டும் என்பதை நாம் எல்லோரும் ஒத்துக் கொள்கிறோம். காலேஜ் எஜுகேஷன் வரை இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று நம்முடைய கலைஞர் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். கல்லூரி வரை எல்லோரும் படிக்கட்டும், அதற்கு இந்தத் தொள்ளாயிரம் கோடிக்கு மேலும் இன்னும் நூறு கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுங்கள்;





(பிற்பகல் 12-30)

அதிலே ஒன்றும் பாதகம் இல்லை. அதற்காக வரி போட்டாலும்கூட ஜனங்கள் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். கல்விக்காகத் தானே வரி போடுகிறோம். பள்ளிக் கல்வியிலேயிருந்து கல்லூரிக் கல்வி வரை தமிழ் நாட்டிலே எல்லாம் இலவசம் தான். இருந்தாலும்கூட அதற்கு ஒரு கட்டுத் திட்டம் போடுங்கள். இருந்தாலும், நிச்சயமாக ஃபிரியாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும். நாம் சுதந்திரம் பெற்று 42 ஆண்டுகளான பிறகும் இன்றைய கல்வியின் தரம், கல்வித் தரத்தின் நிலைமை என்னவென்றால் 32 சதவிதம்தான் கற்றவர்கள் இருக்கிறார்கள். தேர்தல் கமிஷன் அறிக்கையிலே கூட என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்—ஏன் உங்கள் நாட்டில் உள்ள பெண்கள் ஓட்டுப் போடவில்லையென்றால்—இன்னும் கல்வி வளர்ச்சி அப்படி ஏற்படவில்லை என்றும், இப்படி இருந்தால் எப்படிக் கல்வி வளர்ச்சி ஏற்படும் என்றும், இன்னும் 68 பர்சென்ட் மக்களுக்குக் கல்வியறிவே இல்லையே எப்படி பெண்கள் ஓட்டுப் போடுவார்கள் என்றும் அவர்களுடைய அறிக்கையிலே இருக்கிறது. நம்மோடு சுதந்திரம் வாங்கியவனெல்லாம் எங்கோ போய் விட்டான். நாம் இன்னும் பின்தங்கியே தான் இருக்கிறோம். கம்பல்சரி மிலிட்டரி டிரெயினிங் கொடுக்கும் அளவிற்குப் பல்வேறு நாடுகளில் நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் நம் நாட்டிலே சாதாரண எழுத்தறிவைக்கூட நம்மாலே இன்னும் நம் மக்களுக்குக் கொடுக்க முடியவில்லை. ஐ.ஏ.எஸ். கேட்டகிரியைப் பார்த்தால், 42 ஆம் வருடத்திலேயிருந்து பார்த்தால் அப்படியே குறைந்து கொண்டே போய் இன்றைக்கு 2 பர்சென்ட் தான். அதில் கூட யாரோ தான் வெற்றி பெறுகிறார்கள். ஆனால் அவன் தமிழனாக இருக்க முடியாது. காரணம் என்ன? நம்முடைய கல்வித் தரம் குறைந்து கொண்டே வந்து விட்டது தான். நம் நாட்டில் கல்லூரியிலே படிக்கின்றவர்களிலேயிருந்து டெக்னிகல் எஜுகேஷன் படிக்கின்றவர்கள் வரை, படித்துவிட்டு மேல்நாட்டுக்குத் தான் செல்கிறார்கள். நம் நாட்டில் இருப்பதில்லை. என்னுடைய பிள்ளை மேல்படிப்புக்காக, ஹையர் ஸ்டடிக்காக வெளிநாடு செல்கிறான் என்று சொல்கிறார்கள். அப்படியானால் இங்கே கற்பிக்கப்படுவது லோ ஸ்டடியா? இங்கே கற்பிக்கப்படுவது ஹையர் ஸ்டடி இல்லையா? அமெரிக்கா போகிறான், லண்டன் போகிறான், ஜப்பான் போகிறான், வெஸ்ட் ஜெர்மனி போகிறான் மேல் படிப்புக்காக என்று சொல்லிக் கொண்டு. அப்படிப் போனாலும் அவர்கள் மறுபடியும் தமிழ் நாட்டிற்கு வருவதற்கு விரும்புவதில்லை. ஹையர் ஸ்டடிக்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 ஏப்ரல் 8

காக வெளிநாடு செல்கின்றவர்களில், 10 பேருக்கு, 2 பேர்கள் தான் திரும்புகிறார்கள். அதுகூட கம்பல்ஷன் பேரில்தான் திரும்ப வேண்டியிருக்கிறது. அந்த அளவிலே கல்வித் தரமானது குறைந்து கொண்டே வருகிறது. எனக்குத் தெரிந்த, நாட்டினுடைய நிலைமைகளைத் தான் இப்போது நான் இங்கே சொல்கிறேன். நான் ஒன்றும் குறிப்புகளை வைத்துக் கொண்டு சொல்லவில்லை. டெக்னிகல் எஜுகேஷனிலிருந்து சாமான்யமான டிகிரி கோர்ஸ் படித்தவன் கூட நான் அமெரிக்கா சென்று மேல் படிப்பு—ஹையர் ஸ்டடி—படிக்கப் போகிறேன் என்று சொல்கிறான். அப்படி மேல்படிப்புக்காகச் சென்று படிப்பதோடு அங்கே வேலையும் பார்க்கிறார்கள். அங்கே கல்வியையும் கொடுத்து, வேலையையும் கொடுக்கிறார்கள். நம்முடைய கல்வித் தரம் உயருவதற்கு 900 கோடி ரூபாய் ஒதுக்கியதைப் பற்றிச் சொல்லவில்லை. இந்த மாதிரி, நாம் சுதந்திரம் பெற்று 42 ஆண்டுகளாக மாநில அரசும் சரி, மத்திய அரசும் சரி, கோடிக்கணக்கான ரூபாயைக் கணக்கில்லாமல் ஒதுக்கியும் நம்முடைய கல்வித் தரத்தினுடைய பர்சென்டேஜ் இன்னும் உயராமல் இருக்கிறது. நீங்கள் கொடுக்கின்ற கணக்கெடுப்பெல்லாம் சென்சஸாகக் கொடுப்பதோடு முடிந்துவிடுகிறது. ஃபுளோட்டிங் பாப்புலேஷன் நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே வருகிறது. அங்கே ஒரு 200 பேர் வேலை செய்கிறார்கள். இங்கே ஒரு 200 பேர் வேலை செய்கிறார்கள். அந்த மாதிரி உள்ளவர்களில் எவ்வளவோ பேர்களுக்கு எழுத்தறிவே கிடையாது. அவர்களுடைய லாங்வேஜ் என்னவென்று நமக்குத் தெரியாது. 16 லாங்வேஜ் வரைக்கும் இருக்கின்றன. ஆனால் அவர்கள் பேசுகின்ற, பழகுகின்ற லாங்வேஜ் வேறு.

அடுத்ததாக, கவர்மெண்ட் கல்லூரி வேறு, தனியார் கல்லூரி வேறு என்று குறை சொல்கிறார்கள். ஒரு காலத்திலே, நம்முடைய கலைஞர் ஆட்சியிலே நாவலர் என்ற பெயரை வைத்து திருச்சியிலே கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. அங்கே வாத்தியார்கள் அதிகம். சாதாரணமாக, படிக்கின்ற மாணவர்கள் 40 பேர்கள் இருந்தால், சொல்லிக் கொடுக்கும் வாத்தியார் ஒருவர்தான் இருப்பார். அங்கே லெக்சரர்ஸ்-தான் நிறையப்பேர் இருக்கிறார்கள். இத்தனை வருடம் ஆகியும் அந்தக் கல்லூரி இன்னும் வளரவில்லை. சர்க்கார் நடத்துகின்ற கல்லூரிகள் கடனில் இருப்பதாகவும், தனியார் துறையினரால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு, கல்லூரிகளுக்குக் கடன்கள் இல்லையென்றும், அப்படி இருந்தாலும் குறைவாகவே இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் ஒரு கல்லூரியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கல்லூரி பற்றிப்



1989 ஏப்ரல் 8] [திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்]

பேராசிரியர் அவர்களுக்கும் தெரியும். திருச்சியிலே நாவலர் பெயரால் கல்லூரி ஏற்படுத்தினீர்களா, இல்லையா? அதனுடைய நிலைமை இப்போது எப்படி இருக்கிறது? கவர்ன்மெண்ட் கல்லூரிகளை விட்டுவிட்டு முதலில் தனியார் கல்லூரிகளுக்குச் சென்று அட்மிஷன் வாங்குவதற்கு முற்படுகிறார்கள். நேஷனல் கல்லூரிக்குச் சென்று அட்மிஷன் கொடுக்க முடியுமா, முடியாதா என்று சண்டைக்குப் போகிறார்கள். அதற்குப் பிறகு வேறு ஒரு கல்லூரிக்குப் போகிறார்கள், அங்கேயும் அட்மிஷன் கிடைக்கவில்லையென்றால் படிக்க வேண்டுமே என்ற உந்துதலோடு கடைசியாக சர்க்கார் கல்லூரிக்கே வந்து சேருகிறார்கள். முதலிலேயே ஏன், ஈ.வே.ரா. கல்லூரியிலே சேரவில்லை என்று கேட்டால், அங்கே என்ன சார், தமிழ் மீடியம் தானே இருக்கிறது என்று தலையைச் சொறிகிறார்கள். அப்ளிகேஷன் 'கால் பார்' பண்ணும் போது, 2,000 பேர் இங்கிலீஷ் மீடியம் வேண்டுமென்று அப்ளிகேஷன் போடுகிறார்கள். அப்படியென்றால் நம்முடைய தமிழ்க் கொள்கை எப்படி இருக்கிறது? இங்கிலீஷ் மீடியத்திற்கு வாய்ப்பு இருக்கிறதா? தமிழ் மீடியத்திற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஜனங்கள் எதிலே ஆர்வமாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஜனங்கள் போகிற போக்கிலே சென்றால்தான் எஜுகேஷன் வளரும். அதைச் செய், இதைச் செய் என்று சொன்னால் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வளரும். அட்மிஷன் கேட்கும்போது என்ன கேட்கிறான் என்று சொன்னால் இங்கிலீஷ் மீடியம் கொடுங்கள் சார் என்று தான் கேட்கிறான். தமிழ் மீடியம் என்றால், அப்பாவும் மகனும் சேர்ந்து வேண்டாம் என்கிறார்கள். கடைசியாக இங்கிலீஷ் மீடியத்திலே அட்மிஷன் கிடைக்கவில்லையென்றால், தமிழ் மீடியத்திலே சேருகிறான். அப்படியில்லையென்றால், அடுத்த வருடம் இங்கிலீஷ் மீடியம் கொடுத்தால் கல்லூரியிலே சேர்ந்து படிக்கிறேன் என்று கூறுகிறான். அந்த அளவிலே நாட்டினுடைய கல்வி வளர்ச்சி இருக்கிறது. அதற்குப் பணம் ஒதுக்கி பிரயோஜனம் இல்லை.

அடுத்ததாக, ஆசிரியர்கள் பற்றிக் கூற விரும்புகிறேன். அந்தக் காலத்திலே ஆசிரியர்கள் டர்பன் கட்டிக் கொண்டு அங்கவஸ்திரத்தோடு வந்தால் வாத்தியாருக்கும், புரடசருக்கும், பையனுக்கும் வித்தியாசம் தெரியும். இப்போது இரண்டு பேரும் ஒன்றாகவே இருக்கிறார்கள். யார் வாத்தியார், யார் பையன் என்று வேறுபாடு தெரியவில்லை. எல்லோரும் ஒன்றாக இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, இப்போது மரியாதையும் இல்லாமல் போய்விட்டது. புரபசர் சொல்லிக் கொடுத்தாலும் பையன் இருக்கிற நிலைமையிலேதான் இருந்து கொண்டிருக்கிறான்.

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1989 ஏப்ரல் 8

பழகுவதிலிருந்து, அலங்காரத்திலிருந்து, படிக்கிறதிலிருந்து
எல்லாம் ஒன்றாக இருக்கிறது. இதுதான் இன்றைக்கு நிலைமை.
சம்பளத்தைப் பற்றிச் சொன்னார்கள். சம்பளத்தைப் பற்றி
நமக்குக் கவலையில்லை. ஏதோ யூ.ஜி.சி. ஸ்கேலில் கொடுக்
கிறோம். நாம் சொல்கிறோம், பாங்க் ' சம்பளம் ஜாஸ்தி ;
இந்தச் சம்பளம் ஜாஸ்தி என்று. ஆனால் கொடுக்க வேண்டிய
காலத்தில் நாம் எதைக் கொடுத்தாலும் போதாது. கொடுத்து
விட்டு, வீட்டுக்கு வருவதற்குள் மீண்டும் விலைவாசி ஏறிவிடு
கிறது.

இன்னொன்று, எதற்காக நாம் சுதந்திரம் வாங்கினோம்?
நம்முடைய சமுதாயத்தைக் கல்வியில் முன்னேற்ற வேண்டும் ;
வெள்ளைக்காரனால் நாம் முன்னேற முடியவில்லை : நம்
முடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்பதற்காகத்தான்
சுதந்திரம் பெற்றோம். ஆனால் இன்றைக்கு நிலைமை எப்படி
இருக்கிறது? இன்னும் ஏரோப்பிளேனைப் பார்க்கிற கூட்டம்
ஜாஸ்தியாகத்தான் இருக்கிறது. மினிஸ்டர் பிளேனில் வரு
கிறார் என்றால் ஆயிரம் பேர் பிளேனைப் பார்க்கச் சென்று
விடுகிறார்கள். ஏன்? அவர்களுக்குப் படிப்பு இல்லை. ஆகையால்
நல்ல படிப்பு, ஜனங்கள் ஒத்துக் கொள்ளக்கூடிய கல்வி, நல்ல
கல்வி மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று
சொல்லி, சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் தலைவருக்கும் நன்றி
கூறி, விடைபெறுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்திலே எனக்குப் பேசு
வதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்
கிறேன்.

இந்தக் கல்வி மானியக் கொள்கைக் குறிப்பைத் தயாரித்துக்
கொடுத்து, இந்தக் கல்வி மானியத்திற்கு அதிகமான தொகை
யான 900 கோடி ரூபாயை ஒதுக்கி இங்கே சமர்ப்பித்திருக்கிற
கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்கு
நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வியானது நமது தமிழ்நாட்டிலே எவ்வாறு இருக்கிறது?
அதிலே எவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன, கல்வியின் தரம்
தமிழ்நாட்டில் எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதைப்
பற்றி எல்லாம் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

" இளைஞர்கள் அறிவாற்றலும் தொழில் கல்வியும் தன்னம்
பிக்கையும் பெறுவதற்கு ஏதுவாகவும் கல்வியை நாம் அளிக்க
வேண்டும் " என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில்



1989 ஏப்ரல் 8] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

சொல்லியிருக்கிறார்கள். நமது இளைஞர்கள் அறிவாற்றலைப்
பெற வேண்டும்; தொழில் கல்வியைப் பெற வேண்டும்; தன்னம்
பிக்கையைப் பெறவேண்டும் என்பதுதான் கல்வித்துறை மானியக்
கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால்
தமிழ்நாட்டிலே நமது படித்த இளைஞர்கள் தன்னம்பிக்கை
யோடு இருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை என்று
தான் சொல்ல வேண்டும். இன்றைக்கு அவர்கள் தன்னம்பிக்
கையை இழந்துவிட்ட நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறார்
கள். அவர்கள் கல்வியைக் கற்றவுடன் வேலை கிடைக்கும்,
வேலை வாய்ப்புப் பெறுவோம்; நம்முடைய குடும்பத்தைக்
காப்பாற்றுவோம் என்று நினைக்கின்ற இளைஞர்களுக்கு ஏமாற்
றம்தான் இருக்கிறது. ஆகையால் இன்றைக்குத் தன்னம்பிக்கையை
இழந்திருக்கிறார்கள். An army or unemployed people அதாவது,
இங்கே, ' அன் எம்பிளாய்டு பீப்பிள் ' இருக்கிறார்கள். வேலை
வாய்ப்புத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் எம்பிளாய்மென்ட் ஆசிபீல்
பதிவு செய்திருக்கிறவர்களை விட பதிவு செய்யாதவர்கள் அதிக
மாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வேலை தேடி அலையக்
கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்ன
திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது? வேலை வாய்ப்பைப் பெறு
வதற்குப்பல்வேறு தொழிற்சாலைகளை அமைத்துக் கொடுத்
தால், தொழில் கல்வியை வளர்த்து, வேலை வாய்ப்புக்
கொடுக்கலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள்
'பாப்புலேஷன் எக்ஸ்ப்ளோஷனை'த் தடுப்பதற்கு கல்விச்
சாலைகளில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று சொன்
னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால் ஜனத்
தொகை வளர்ந்து கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்து
வதற்குரிய கல்வியை ஆரம்பப் பள்ளியிலிருந்தே தரவேண்டும்.
இப்போது கல்விச் சாலைகள் எப்படி இருக்கின்றன என்று
பார்த்தால் அடிப்படை வசதியே இல்லை. குறிப்பாக, கிராமப்
புறங்களில் இருக்கிற பள்ளிக்கூடங்களில் அடிப்படை வசதி
சிறிதும் கிடையாது; போதுமான இட வசதி கிடையாது. அடிப்
படை வசதிகள் இல்லாத பள்ளிகளுக்கு அந்த வசதிகளைச்
செய்து கொடுப்பதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்
கிறது. இந்தத் தொகை போதுமானதல்ல. ஏனென்றால்
பல்வேறு பள்ளிகளுக்குக் கழிப்பறை வசதி இல்லை. குடிதண்ணீர்
வசதி இல்லை. குடிதண்ணீர் வசதி இல்லாத பள்ளிகளுக்கு,
அங்கே அடிபம்பு போட்டு அந்த வசதியை ஏற்படுத்திக்கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல பள்ளிகளுக்குக் கட்டட வசதி கிடையாது. என்
தொகுதியில் ஆண்டிபட்டி என்ற ஊரில் இருக்கிற பள்ளி
கூடத்திற்குக் கட்டடம் இல்லாமல் கோவிலில் வைத்து பள்ளி

[திரு. எஸ். எஸ். ராமசப்பு] [1989 ஏப்ரல் 8

கூட்டத்தை நடத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. அங்கே கட்டடம் கட்டிக்கொடுத்து, படிக்கின்ற பிள்ளைகளுக்கு நல்ல வழிவகை செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்து விளையாட்டைப் பொறுத்தவரையில் விளையாட்டுச் சாமான்கள் இல்லாத அடிப்படைப் பள்ளிகள் அனேகமாகப் பல கிராமங்களில் இருக்கின்றன. அவற்றுக்கு நீங்கள் வசதி செய்து கொடுக்க வேண்டும். நாற்காலிகள், மேஜைகள், போன்றவை இல்லாத, அடிப்படை வசதிகள் இல்லாத பல பள்ளிகளுக்கும் அனைத்து அடிப்படை வசதிகளையும் அதிகமாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல பள்ளிகள் இடிபாடான நிலைமையிலே இருக்கின்றன. அந்தப் பள்ளிகளை எல்லாம் நல்ல முறையில் சீர்திருத்தம் பண்ண வேண்டும். அந்தப் பள்ளிகள் மிக முக்கியமானவை.

கான்ட்ராக்டர்கள் அவற்றைக் கட்டுகின்றபோது சரியான முறையில் கட்டவில்லை. எனவே இது குறித்தெல்லாம் தக்க நடவடிக்கை எடுத்து நல்ல பள்ளிகளை அருமையாகக் கட்டிக் கொடுத்து கிராமப்புறப் பிள்ளைகள் படிக்க வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர்களுக்கு 50 தொடக்கப்பள்ளிகளை உருவாக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்கள் பெரும்பாலும் தமிழகத்தில் நிறைந்து காணப்படுகிறார்கள். எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில் ஆலங்குளம் தொகுதியில் பல ஆதி திராவிட மக்கள் வாழக்கூடிய மானூர், ஆலங்குளம், கீழப்பாவூர் போன்ற வட்டாரங்களில் ஆரம்பப் பாடசாலைகள் கூட இல்லாத நிலைமை இருக்கின்றது. ஆகவே அவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பார்ட் டைம் ஒர்க்கர்ஸ் என்ற அடிப்படையில் பலர் இருக்கிறார்கள். சரியான தகுதியைப் பெற்றிருந்தாலும்கூட அவர்கள் இன்னும் பார்ட் டைம் ஒர்க்கர்ஸ்-ஆகவே இருக்கிறார்கள். அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 8] [திரு. எஸ். எஸ். ராமசப்பு]

அடுத்து புதிதாக 60 மேல் நிலைப் பள்ளிகள் இந்த ஆண்டில் கட்டப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே ஆலங்குளம் போன்ற தொகுதிகளில் பல ஊர்களில் கட்டப்பட வேண்டிய மேல்நிலைப்பள்ளிகளைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

தமிழகத்தில் எங்கெங்கெல்லாம் மேல்நிலைப் பள்ளிகள் இல்லாமல் இருக்கின்றனவோ அங்கெல்லாம் மேல்நிலைப்பள்ளி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாதிரிப்பள்ளி. அதாவது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு மாதிரிப்பள்ளியைக் கட்டி அங்கே 40 ஏக்கர், 50 ஏக்கர் என்ற அளவில் இடத்தை எடுத்து விவசாயம், கிராப்ட் போன்ற பல கல்விகளை ஏற்படுத்த வேண்டும். அந்த அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்று கட்டி அங்கே ஆசிரியர்களுக்கான குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுத்து அங்கேயே மாணவர்களுக்கு இலவச உணவு, உடை ஆகியவற்றைக் கொடுத்து உரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இந்த வகையில் மாதிரிப் பள்ளிகளை உருவாக்கிக் கொடுத்தால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் உருவாக்கிக் கொடுத்தால்—அது ஒரு மாதிரியாக இருந்து நல்ல முறையில் கல்வி வளர ஏதுவாக இருக்கும்.

கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். நல்ல வகையில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தி மாணவர்களின் வளர்ச்சியை உயர்த்த வேண்டும்.

அடுத்து, சுயநிதிக் கல்லூரிகளில் படித்துவிட்ட எத்தனையோ மாணவர்கள் இன்று நடுரோட்டில் நிற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதை அரசு கவனிக்க வேண்டும். அந்த மாணவர்களைச் சொல்லி என்ன பயன்? அவர்கள் அப்பாவிகள். அந்த மாணவர்களின் கதி அம்போ என்று இருப்பதை அரசு கவனித்து அந்த மாணவர்களுக்கு உரிய நல்ல சலுகைகளை அளித்து யூனிவர்சிட்டியிலேயும் ரெகக்னைஸ் பண்ணி அவர்களையும் அந்த யூனிவர்சிட்டியிலே சேர்ப்பதற்கான வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தமிழ் வளர்ச்சிப் பண்பாடு பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டிற்காகக் கோடிக் கணக்கான ரூபாய் செலவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது உண்மைதான். தமிழ் வளர்ச்சிக்காகப் பெரும் பணத்தைச் செலவிட வேண்டும். தமிழ்க் கலைஞர்கள், அதிலும் கிராமப்புறக் கலைஞர்கள் மிகவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். வில்லிசைக் கலைஞர்கள்,

கரகாட்டக் கலைஞர்கள் போன்ற இவர்கள் எல்லாம் மிகவும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து நல்லதொரு வாழ்வை அளிக்கவேண்டுமென்று நான் அரசிடம் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து லா யுனிவர்சிட்டி, சட்டத் துறைக்கு ஒரு யுனிவர்சிட்டி வேண்டுமென்று சொல்லப்பட்டது. அது மைசூருக்குச் சென்றுவிட்டது. அதைப்போல ஒரு யுனிவர்சிட்டியை ஏற்படுத்தினால் இங்கே படிக்கிற நமது மாணவர்கள் எம்.ஃபில் பண்ணுவதற்கான நல்ல வசதி, வாய்ப்பு ஏற்படும். அந்த வகையில் ஆராய்ச்சி செய்வதற்கு ஏதுவாக ஒரு யுனிவர்சிட்டியை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பாளையங்கோட்டையிலே இருக்கின்ற கல்லூரியைப் பல்கலைக் கழகமாக மாற்றி அங்கே ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மத்திய அரசின் உதவியினால் இங்கே பல திட்டங்களை நமது தமிழகத்திலே கல்விக்காக ஏற்படுத்தி பணத்தைச் செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள். கரும்பலகைத் திட்டம். பள்ளி அறிவியல் கல்வியை மேம்படுத்துவதற்காக மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களைப் பொறுத்தவரையில் 218 இலட்சம் ரூபாயும், பள்ளிகளிலே சுற்றுப்புறச் சூழ்நிலைகளைச் சீரமைப்பதற்காக 34 இலட்சம் ரூபாயும் செலவழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளிலே தொழில் சார்ந்த பாடங்களைக் கற்றுத் தருவதற்காக 192 இலட்சம் ரூபாயை மத்திய அரசு அளித்துள்ளது. ஆதலால், மத்திய அரசானது நமக்கு எத்தனையோ உதவிகளை இந்தக் கல்விக்காக இங்கே செயலாற்றியிருக்கிறது என்பதை இந்தக் கொள்கை விளக்கத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

நவோதயா பள்ளி என்பது ஒரு முக்கியமான பள்ளி ஆகும். மாண்புமிகு லத்தீப் அவர்கள் பேசும்போது திராவிட நாடானது, நமது தமிழ்நாடு மட்டும்தான் என்று சொன்னார்கள். ஆனால் கேரளா, ஆந்திரா, மைசூர் மற்றும் தமிழகம் இதெல்லாம் சேர்ந்துதான் திராவிடநாடு என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இந்த நவோதயா பள்ளிகள் நமது இடங்களிலும் அந்த ஸ்டேட்டுகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்பதை அங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பணத்தை அங்கே செலவிடவேண்டும். நவோதயா பள்ளி அங்கே மேட்டுக்குடி மக்களுக்குத் தான் என்பதல்ல. 80 பர்செண்ட் கிராம்புற பிள்ளைகளும் அங்கே படிப்பதற்கும் ஏழை-எளிய மக்கள் படிப்பதற்கும் அதை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைஅவர்கள் ஒத்துக்கொண்டு......(குறுக்கீடு).





மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் நேரம் கேட்பது என்றால் என்னிடம்தான் கேட்க வேண்டும் டைமக் ஆப்ரேட்டர்களிடம் இல்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தி திணிக்கப்படுகிறது என்று அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தி அங்கே திணிக்கப்படவில்லை. இந்தி படிப்பதற்காகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் பயிற்சி மொழியாகவேண்டும் என்பதை நாங்களும் அங்கே ஒத்துக் கொண்டிருக்கிறோம். அதைப்பயிற்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று நாங்களும் அங்கே கேட்கிறோம். நீங்களும் கேட்க வேண்டும். அதே சமயத்தில் இந்தி படிக்கக் கூடாது என்று நாம் சொல்லப்போனால், எத்தனையோ நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் பிள்ளைகள் கூட இன்று இந்தியைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர்கள் பிள்ளைகள் கூட இந்தியைத் தமிழகத்திலே படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அத்தனைப் பள்ளிகளையும் நாம் எடுத்துவிடமுடியுமா ? எல்லா இடங்களிலும் படிப்பதற்கு நாம் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு ஆதாரத்தை வைத்திருக்கிறீர்களா? கையிலே ஆதாரம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். இப்போது நீங்கள் சொன்னதற்கு ஆதாரம் இருக்கிறதா?

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : ஆதாரம் இல்லை. இருந்தாலும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையிலே ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது என்று தெரியும் அல்லவா உறுப்பினர் அவர்களுக்கு. தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். ஏற்கனவே நிறையப் பேசியாகிவிட்டது.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே தீர்ப்புச் சொல்லியாகிவிட்டது. அத்துடன் விட்டுவிடுங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே பேசவில்லை. திராவிட நாடு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ஏன் அதெல்லாம் ?

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், தமிழ்நாடுதான் திராவிடநாடு என்று நான் சொன்னதாகச் சொல்கிறார்கள். அதைத்தான் கேட்கிறேன். எனக்குத் திராவிடநாடு பற்றித் தெரியாத மாதிரி, திராவிடநாடு பற்றிச் சொல்லிக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது. திரு. ராமசுப்பு சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : ஆதலால் அந்தப் பள்ளியை இங்கு ஏற்படுத்தி இங்குள்ள மக்களுக்கு அதற்கு வழிவகுத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்க வேண்டுமென்பதை நீங்கள் கேட்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையில் பேசுவதற்கும், எங்களுடைய இயக்கத்தின் சார்பாகக் கருத்துக்களைச் சொல்வதற்கும் நீங்கள் அனுமதித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்த அளவுக்கு எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் பல நேரங்களிலே கல்வி மானியக் கோரிக்கையில் பேசுகிற நேரத்தில், நாம் எல்லாம் ஒரு காலத்தில் ரசித்துக் கேட்டிருக்கிறோம். பேராசிரியர் அவர்கள் வாயிலிருந்து வருகின்ற ஒவ்வொரு வார்த்தையும்—தமிழகத்திலே கல்விக்காக நல்ல பணிகளைச் செய்ய வேண்டும் என்று ஒரு காலத்தில் போராடிய மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் இன்று ஆளுங்கட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு முதன் முதலாகக் கல்வி மானியக் கோரிக்கையை தாக்கல் செய்திருக்கிறார்கள். நிறைந்த திட்டங்கள் கொண்டதாக இருக்கும் என்று சொல்லி ஆவலாக நான் புத்தகங்களைத் திருப்பித் திருப்பிப் பார்க்கிறேன். ஆனால் பேராசிரியர் அவர்கள் பெருமைப்படுகின்ற அளவுக்கு அல்லது அவருடைய கட்சியைச் சார்ந்தவர்கள் பெருமைப்படக்கூடிய அளவுக்கு இந்த மானியக்கோரிக்கையில் ஒன்றுமில்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் 1985லே பேசியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர் பேசுகின்ற நேரத்திலே சொல்லியிருக்கிறார்கள் ஒவ்வொரு கல்வி மானியக்கோரிக்கை நேரத்திலும், நான் பேசிய காரணத்தினால் கல்வி வளர்ந்ததோ



இல்லையோ, என்னுடைய பயிற்சி வளர்ந்திருக்கிறது என்று அப்போது தங்களுக்குப் பயிற்சி இருப்பதாகவும் அதன் மூலமாக வருங்காலத்திலே நிரம்பச் செய்ய முடியும் என்ற உணர்வோடும் அன்றைக்குப் பேசியிருக்கிறார்கள். இதை நான் மட்டும் சொல்லவில்லை. இந்த மானியக் கோரிக்கையில் ஒன்றும் இல்லை என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகவும் விசுவாசமாக இருக்கின்ற தோழமைக் கட்சியினுடைய தலைவர் திரு. லத்தீப் அவர்கள் பேசிய நேரத்தில் சொல்லியிருக்கிறார்கள். அவராவது இந்த மானியக் கோரிக்கையைப் பாராட்டிப் பேசுவார்கள் என்று ஆவலாகப் பார்த்தேன். ஆனால் அவர் பேசிய நேரத்தில் இந்த மானியக் கோரிக்கையைப் பாராட்டிப் பேச முடியவில்லை. காரணம் சரக்கு ஒன்றும் இல்லாத காரணத்தினால் அதைப் பாராட்டிப்பேச முடியவில்லை. அதிலே பாராட்டிப் பேசப்பட்டதெல்லாம் அங்கே ஆசிரியர்களுடைய சம்பளப் பிரச்சினைதான். அதை மட்டும் வைத்துக் கொண்டு 10 நிமிடங்களை போக்கிவிட்டு அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12—50)

ஆனால் நாங்கள் சொல்லியபடி இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்த அளவிற்கு, இதற்கு இவ்வளவு பெரிய பேராசிரியர், அறிவாற்றல் மிக்கவர், இன்றைக்குக் கல்வித் துறையை மிக எளிதாகக் கையாளக்கூடிய இந்தப் பேராசிரியர் அவசியமா என்றால், இந்த மானியக் கோரிக்கைக்கு அவசியம் இல்லை. சாதாரணமாக எங்களைப் போன்ற பத்தாம் கிளாஸ் படித்தவர்களே இந்த மானியக் கோரிக்கையை உண்டாக்கியிருக்க முடியும். காரணம், இதிலே ஒரு சரக்கும் இல்லாமல் இருப்பதால் இதற்கு ஒரு பேராசிரியர் அளவிற்கு, கல்லூரியிலே போய் படித்து இருந்த அளவிற்கு, அனுபவம் உள்ளவர் வேண்டியதில்லையென்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்னாலே......

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி சரக்கு, சரக்கு என்கிறார், வியாபார நோக்கத்திலே பேசுகிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இரண்டு பேரும் விருதுநகரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அடிக்கடி வியாபார ஞாபகம் வருகிறதுபோல் தெரிகிறது. (சிரிப்பு)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் ஒரு நேரத்தில்—நாங்கள் ஆளுகிற கட்சியில் பொறுப்பிலே இருக்கிற காலத்தில்—அன்றைக்கு இதே கல்வி மானியத்தில் பேசியிருக்கிறார்கள். காலையில் வரும்போதே அன்றைக்குப் பாரதியார் பாட்டைப் படித்துவிட்டு வந்திருப்பார் என்று நினைக்கிறேன். அவர்

பாரதியார் பாடலைப் படிக்கிற நேரத்திலே 'காணி நிலம் வேண்டும்' என்று சொல்லி, பராசக்தியை நோக்கி பாரதியார் பாடிய பாட்டைப் படித்து விட்டு வந்து அன்றைக்குப் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசிய நேரத்திலே ஒரு கருத்தை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொல்லியதெல்லாம, ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஒவ்வொரு ஆரம்பப் பள்ளிக்கூடத்திலேயும் குறைந்த அளவுக்கு ஒரு கட்டிடமாவது கட்டாயம் இருக்க வேண்டும், அதைச் சுற்றி ஒரு தோட்டம் இருக்க வேண்டும், ஒரு ஏக்கர் அளவுக்காவது அந்தத் தோட்டம் இருக்க வேண்டும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் காணி நிலம் வேண்டும் என்பதில், பள்ளிக்கூடத்தைக் கட்டச் சொல்கிறாரா பாரதியார். . . (சிரிப்பு)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பாரதியார் வீடு கட்டுவதற்குப் பெரிய பிரச்சினையாக வந்திருக்கிறார். ஆனால் மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்கள் அதே பாணியில் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்திலே ஒரு சிறு கிணறு வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே ஒரு குடிநீர்க் குழாய் இருக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள. அந்தப் பள்ளிக்கூடத்தின் ஓரத்திலேயே ஒரு சிறு நூலகமும் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் முடியுமானால், அதையொட்டி சிறிய அளவிலே பொது மக்கள் கூடக்கூடிய ஒரு சிறு கூடமும் இருக்க வேண்டுமென்பதையும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் :! இது பாரதியார் சொன்னதா, பேராசிரியர் சொன்னதா ? அதில் பாட்டுக் கலந்திடவே ஒரு பத்தினிப் பெண் வேண்டுமென்று எங்காவது வருகிறதா ? (சிரிப்பு)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பொது மக்கள் கூடக் கூடிய ஒரு கூடம் இருக்க . வேண்டுமென்று அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். இதைச் சொல்லியதனுடைய அடிப்படைக் காரணம், பள்ளிக்கூடத்தினுடைய சுற்றுப்புறச் சூழல். பள்ளிக்கூடத்தினுடைய அமைப்பு இவையெல்லாம் படிக்கிற குழந்தைகளுக்கு ஒரு பக்குவமான சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு அதை அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, இக்க



அரசாங்கம், இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வருடத்திற்கு 100 கிராமம் என்று திட்டமிட்டு 10 வருடத்திற்குள்ளே 12 ஆயிரம் கிராமங்களில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு ஒரு பெரிய திட்டத்தைப் போட வேண்டுமென்று சொலலி, அன்றைக்கு ஆளுகின்ற பொறுப்பிலே இருந்த எங்களுக்கு யோசனை சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், அந்த யோசனை எங்களுக்கு மட்டும்தானா ? உங்களுக்கும் இல்லையா என்பதைப் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட திட்டமும், கிணறும், பள்ளிக்கூடமும் இந்தப் பட்ஜட் புத்தகத்திலே எங்காவது இருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றும் இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய ஆட்சிக் காலத்திலே தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகக் கிராமங்களில் எல்லாம் ஒரு பள்ளிக்கூடத்திற்கு ஒரு கட்டிடமாவது அவசியம் இருக்க வேண்டுமென்ற உணர்வோடு எங்களுடைய தங்கத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் கட்டிடம் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். உங்களுடைய கட்டிட அறிக்கைகளைப் பார்க்கிற நேரத்தில் புதிய கட்டிட வசதிக்கு மிகக் குறைவான பணத்தைத்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்குச் சுமார் 150 லட்சம் ரூபாய். . . .

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, பள்ளிக்கு என்று குறிப்பிடுவது தொடக்கப் பள்ளியைக் குறிப்பிடுகிறாரா அல்லது உயர்நிலைப் பள்ளியைக் குறிப்பிடுகிறாரா ? தொடக்கப் பள்ளியும் பொறுத்தவரையில் என்.ஆர்.இ.பி. திட்டத்திலிருந்து செல வழிக்கப்படுகிறது : எஜுகேஷன் பண்டிலிருந்து அல்ல. அவர் எந்தப் பள்ளியைக் குறிப்பிடுகிறார் என்பதை விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் நன்றாக இருக்க—அட்மாஸ்ப்யர்—சுற்றுப்புறச் சூழல் நன்றாக இருக்க வேண்டுமென்று சொல்லித்தான் அன்றைக்குப் பேராசிரியர் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே எல்லாப் பள்ளிக்கூடங்களிலும்—அட்மாஸ்ப்யர்—சுற்றுப்புறச் சூழல் நன்றாக இருக்கும்படி, படிக்கிற குழந்தைகள் சீரான கல்வியைப் பெறுவதற்கான சூழ்நிலை இருக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

13694
V 211,31 'N89
N189.8.3

[திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [1989 ஏப்ரல் 8

இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்கள்
கட்டுவதற்காக சுமார் 150 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கி
யிருக்கிறார்கள். இதிலே பழைய வேலையை முடிப்பதற்காக—
எங்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, கவர்னர் ஆட்சிக்
காலத்திலும் சரி—முடிக்கப்பட்ட வேண்டிய 202 திட்டங்களை
எடுத்திருக்கிறார்கள். மேல்நிலைப் பள்ளியைக் கட்டுவதற்காக
நிதி ஒதுக்கீடு ஒன்றும் செய்யவில்லை. நான் இதை என்
பேராசிரியர் அவர்களுக்குச் சொல்லுகிறேன் என்று
சொன்னால், உங்களுடைய கருத்து ஒரு காலத்தில் நல்ல
கருத்தாக இருந்தது. அந்தக் கருத்தை ஏன் இன்றைக்கு
உங்களால் நடைமுறைக்குக் கொண்டு வர முடியவில்லை
என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே வினாவாகக் கேட்கக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், எங்களுடைய ஆட்சிக்
காலத்திலே எம்.ஜி.ஆர். இருந்த வரை ஒவ்வொரு ஆண்டும்
புதிய பள்ளிக்கூடத் துவக்கம் பற்றிய அறிவிப்புகள் இருக்கும்.
உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள், மேல்நிலைப் பள்ளிக்கூடங்கள்,
பல்கலைக் கழகங்கள் புதியதாகத் துவங்கப்பட இருக்கின்றன
என்று சொல்லக் கூடிய அளவுக்கு அறிவிப்புகள் இருக்கும்;
புதியதாக ஆரம்பிக்கப்பட்ட காலம் இருந்தது. எங்களுடைய
எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலம், கல்வியைப் பொறுத்தவரையிலே
ஒரு பொற் காலமாக, தமிழ்நாட்டின் சரித்திரத்திலே
இருக்கிறது. ஆனால், இன்றைக்கு உங்களுடைய ஆரம்ப
பட்ஜெட்டிலேயே, புதிய பள்ளிக்கூடங்கள் பற்றிய அறிவிப்பு
கள் இல்லை; வருமா என்று பார்த்தால் அதுவும் இல்லை.
அதே போன்று அறிவியல் கல்வியைப் பொறுத்த அளவிற்கு
உயர்நிலைப் பள்ளியிலே அறிவியல் கூடங்களோ, மேல்நிலைப்
பள்ளியிலே ஆய்வுக் கூடங்களோ எதுவும் புதியதாக இல்லை.
இன்றைக்குப் பேராசிரியர் அவர்கள் ஒன்றுமே இல்லாத
மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள்
என்பதை மட்டும் இந்த நேரத்திலே ஒரு குற்றச்சாட்டாக
நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், எங்கள் ஆட்சிக்
காலத்திலே, ஏறத்தாழ 7 பல்கலைக் கழகங்களை நாங்கள்
உண்டாக்கி இருக்கிறோம். உங்கள் காலத்திலே பல்கலைக்
கழகங்கள் புதிதாக இல்லை. அது மட்டுமல்ல, ஒரு தெளிவுக்
காகக் கேட்கிறேன், மேல்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்
களுக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறோம். இந்த
ஆண்டிலே, புதிதாக வேறு பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சிக்கு
நீங்கள் விரிவாக்கம் செய்யப் போகிறீர்களா, இல்லையா
என்ற கேள்வியையும் இந்த நேரத்திலே கேட்டு, பதிலை எதிர்
பார்க்கிறேன்.



1989 ஏப்ரல் 3] [திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

இங்கே பேசியவர்கள் அத்தனை பேர்களும் ஐ. ஏ. எஸ்.
படிப்பிலே தமிழகத்திற்கு உரிய முக்கியத்துவம் இல்லை, நம்
முடைய குழந்தைகள் படிக்கவில்லை, நம்முடைய பையன்கள்
ஐ. ஏ. எஸ். தேர்வில் தேர்ச்சி பெற்றுத் தேறவில்லை, நம்முடைய
தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக ரொம்
பப் பேர் வரவில்லை என்று இவரைக்கும் குறை சொன்னார்கள்.
நாங்கள் ஆளுகிற காலத்திலும் குறையாகச் சொன்னார்கள். அன்
றைக்குச் சொல்லிய நேரத்திலே எங்களுடைய பாடத்திட்டம்
சரியாக இல்லை, தமிழக அரசு இதில் அக்கறை எடுக்கவில்லை
யென்றார்கள். ஆகவேதான் ஐ.ஏ.எஸ். தேர்வில் அன்றைக்கு
வெற்றி பெற முடியவில்லையென்று இன்றைக்கு ஆளுகிற பொறுப்
பில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்
அன்றைக்கு எங்கள் மீது குற்றமாகச் சொன்னார்கள். நான்
மாண்புமிகு பேராசிரியருக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம்
அன்றைக்கிருந்த சூழ்நிலையில் அவ்வாறிருந்தது; வருகிற ஆண்டு
களில், ஐ.ஏ.எஸ். தேர்வுகளில் அதிகமான பேர்கள் கலந்து
கொண்டு, தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அதிக அளவு ஐ.ஏ.எஸ்.
தேர்வில் வெற்றி பெறுவதற்கு இந்த அரசாங்கம் என்ன நட
வடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை மட்டும் நான் பணிவன்
போடு கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே மாதிரி இன்னொன்றும் சொல்லியிருக்கிறார்கள். பட்
டப்படிப்பிலே, பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம்., வகுப்புகளில் தமிழ
அமுலில் உள்ளது. இப்பொழுது, எம்.ஏ., எம்.எஸ்ஸி., வகுப்பு
களைத் தமிழிலே கொண்டு வரப் போகிறோம் என்று பெருமை
யோடு சொல்லியிருக்கிறார்கள். நான் மனதாரப் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே நான் பேராசிரிய
ருக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம் தமிழ் படித்தவர்கள் இன்
றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஒரு காலத்தில் தமிழ்
படித்த புலவர்கள் என்று சொன்னால், பஞ்சத்திலே இருந்தவர்
கள் தான் தமிழ் படித்த புலவர்கள் என்று இருந்தது. அதே
நிலைமைதான் தமிழில் படித்தவர்களுக்கு நம்முடைய காலத்தில்
இருக்க வேண்டுமா என்ற கேள்வியை மதிப்பிற்குரிய பேராசிரிய
ருக்கு நான் கேள்வியாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று பேராசிரியர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை
யைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்குப் பாடத்
திட்டங்கள் நிறைய மாறிக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு
சிலபஸ் அடிக்கடி மாறி புதிய உத்திகளை நாம் அறிமுகம் செய்து
கொண்டிருக்கிறோம். ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒரு வருஷம், இரண்டு
வருஷத்திற்கொரு முறை புதிய அணுகு முறையைப் பெறுவதற்
காக, இன்றைக்கு டிரெயினிங் எடுத்துக் கொண்டிருக்கிறார். ஆனால்
நம்முடைய ஆசிரியர்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே படித்
ததை வைத்துக் கொண்டு இன்றைக்கு இருக்கிற சிலபஸை

நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இது சரியாக இருக்குமா என்பதை மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் கவனித்து, அக்கறை கொண்டு, நம்முடைய ஆசிரியர்களைப் புதிய சிலபஸுக்கு ஏற்றாற் போல், மாற்றுவதற்கு டிரெயினிங் கொடுத்தாக வேண்டும்.

அதேபோல், இங்கே பேசிய அத்தனை பேர்களும் பள்ளிகளில் நன்கொடை வாங்குவதைப் பற்றி மிகக் கடுமையாகப் பேசியிருக்கிறார்கள்; எங்கள் காலத்திலும் பேசியிருக்கிறார்கள்; இன்றைக்கும் பேசுகிறார்கள். அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் காரசாரமாகப் பேசியிருக்கிறார்கள். இந்தத் தவறுக்கெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உடந்தையாக இருக்கிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நான் மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்களைப் பார்த்து கேட்டுக் கொள்வதெல்லாம் இதை நீங்கள் எப்படித் தடுக்கப் போகிறீர்கள், எங்களால் முடியவில்லை, நீங்கள் எப்படித் தடுக்கப் போகிறீர்கள் ? என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள், என்ன கடுமையான நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்பதையெல்லாம் நாங்கள் உங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறோம்.

அது மட்டுமல்ல, இன்றைக்குக் கல்லூரிகளிலே பி.காம். அட்மிஷன் வாங்குவதற்குக் கூட பணம் வாங்குகிறார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். அன்றைக்கு எங்களால் தடுக்கமுடியவில்லை, இப்படித் தவறுதலாகப் பணம் வாங்கினார்கள் என்றால், நீங்கள் கடுமையான நடவடிக்கை மூலமாக அந்தப் பள்ளியை நடத்துகிற உரிமையை இல்லாமல் செய்கிற அளவுக்கு உங்களால் செய்ய முடியுமா என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே கேள்வியாகக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களும் மரியாதைக்குரிய முதல் அமைச்சர் அவர்களும் சத்துணவுத் திட்டத்தை இங்கே பாராட்டி இருக்கிறார்கள். ஒரு காலத்திலே கேலி செய்தவர்கள், தமிழ்நாட்டுக் குழந்தைகளை எல்லாம் பிச்சை எடுக்க வைத்தார்கள் என்று சொல்லியவர்கள் இன்றைக்கு உண்மையை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-00)

இன்றைக்கு எங்களுடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஏழையெளிய குழந்தைகள் வறுமையின் காரணமாகப் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கக் கூடாது என்பதற்கு அத்தாட்சியாக சத்துணவுத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு இந்த அரசு முட்டை போட இருப்பதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் குழந்தைகளுக்கு எல்லாம் கோழி முட்டை கொடுப்போம் என்று சொன்னார்கள். அதையும் தன்னுடைய பிறந்த நாளிலிருந்து கொடுப்பதாகச் சொன்னார்கள். அதற்குரிய நிதி எங்கேயிருந்து வந்தது என்று பார்த்தபோது, எங்களுடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். கொண்டு வந்திருந்த இலவசக் காலணித் திட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் எடுத்திருந்தார்கள். அதை நீங்கள் விட்டிருக்கிறீர்கள். அதற்குரிய பணத்தை வைத்துக்கொண்டுதான்....

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு யாராவது தவறான தகவலைக் கொடுத்திருந்தால் திருத்திக்கொள்ள வேண்டும். காலணித் திட்டத்தை இந்த அரசு நிறுத்தவில்லை.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருந்தால் பாராட்டுகிறேன். ஆனால் இந்தப் புத்தகத்தில் இல்லை.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே, அந்தக் காலணித் திட்டம் குறித்து, அதற்குரிய அமைச்சர் அவர்கள் அந்த மானியக் கோரிக்கை வருகின்ற நேரத்தில் அதைச் சொல்வார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று சத்துணவுத் திட்டத்திலே முட்டை சேர்க்கப்படுமா என்று சட்டமன்றத்திலே கேள்வி கேட்கப்பட்ட போது அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபோன்ற திட்டம் எதுவும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். அப்படிச் சொன்ன உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து என்னுடைய பிறந்த நாளிலிருந்து தொடங்குவோம், அதற்காக 20 கோடி ரூபாய் செலவாகும் என்றும் சொன்னார்கள். இன்றைக்குச் சத்துணவுத் திட்டத்திற்காக 173 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இது முன்பு நாங்கள் ஒதுக்கியதைவிடக் குறைவு. இன்னும் சொல்லப்போனால் இப்போது சனிக்கிழமையையும் ஞாயிற்றுக்கிழமையையும் விட்டிருக்கிறீர்கள். எதிலிருந்து இந்த ரூபாயைக் கொடுக்கலாம் என்று இல்லை. மேலும் எந்த நிதியும் இதற்காக என்று ஒதுக்கப்படவில்லை என்பதைத்தான் எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொறடா அவர்கள் விளக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபோது வாரம்தோறும் முட்டை கொடுத்தால் 20 கோடி ரூபாய் செலவாகும், எனவே 15 நாளைக்கு ஒரு முட்டை என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்ல பசி நேரத்தில் முட்டையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு நான் பதிலளிக்கும் போது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேன். முழுமையாக அரசின் பரிசீலனையில் இல்லை என்று நான் குறிப்பிடவில்லை. விடுமுறை நாட்களில் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கின்ற திட்டம் இந்த அரசால் கைவிடப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றி இன்னும் அரசு பரிசீலனை செய்யவில்லை. பல மாண்புமிகு உறுப்பினர்கள் சத்துணவுக் கூடங்களிலே பணியாற்றுகின்ற சத்துணவு அமைப்பாளர்கள் அமைத்திருக்கிற சங்கங்களின் சார்பாக ஆண்டு முழுவதும் பணியாற்றுகிற அவர்களுக்கு வாரத்திலே ஒரு நாளாவது விடுமுறை விட வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அவர்களுடைய கோரிக்கை இன்றைக்குப் பரிசீலனையில் இருக்கிறதேயல்லாமல் அது இன்னும் திட்டவட்டமாக வெளியிடப்படவில்லை என்பதையும் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது அரசினிடத்தில் அது பரிசீலனையில் இல்லை என்று சொன்னதற்கும் உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து சொன்னதற்கும் இடைவெளி, ஒரு நிமிடம் கூட ஆகவில்லை. அவர் பேசிவிட்டு அமர்ந்தார். உடனே முதலமைச்சர் எழுந்து இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும் என்றார். அதற்கு 20 கோடி ரூபாய் செலவாகும் என்றும் சொன்னார். நேர வித்தியாசம் 10 செகண்ட் கூட ஆகியிருக்காது. ஆக, 20 கோடி ரூபாய் எந்த நிதி ஒதுக்கீட்டிலே வரும்? கேபினெட்டிலே விவாதம் என்று சொல்லுவார்களே, இங்கே கூட அமைச்சரவையிலே பேசாமல் செய்துவிட்டார்கள் என்று சொல்லுகிறார்களே—அதைத்தான் இதிலும் குறிப்பிடுகிறேன்—இதையும் அப்படிச் செய்தார்களா என்றால் இல்லை, பட்ஜெட்டிலும் இதற்கான அறிவிப்பு இல்லை. முதலமைச்சர் சார்பில்தான் அறிவிப்பு வந்திருக்கிறது. அதுகுறித்து எந்தக் கேபினெட்டிலும் விவாதிக்கப்படவில்லை. முதலமைச்சர் தான் அன்றைக்கு அறிவித்தார். ஏதாவது திட்டத்திலே இதற்கென்று நிதி ஒதுக்குங்கள் என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்.



மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைக்குப் பதில் சொன்னது துறையிடமிருந்து வந்த பதிலை வைத்துக் கொண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குப் பதில் சொன்னது அமைச்சரவையிலே விவாதித்த கருத்தை வைத்துக்கொண்டு. துறையிலிருந்து வருகிற பதிலை பொறுத்தவரையில், ஏறக்குறைய ஒரு வாரம் அல்லது 6 நாட்களுக்கு முன்பு வருகிற பதிலை வைத்துக் கொண்டுதான் படிக்கிறோம். ஆக, அதற்குப் பின்னர் ஏற்படுகிற கருத்துக்கள் பற்றி உடனடியாக ஓர் அமைச்சர் அறிவித்திருக்க முடியாது. அந்தப் பொறுப்பிலே இருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர். ஆகவேதான் அவர்கள் அன்றைக்கு அந்த அறிவிப்பைச் செய்தார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகள் அனுபவமிக்க மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அவர்கள் இப்படி விளக்கம் அளிப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. வேண்டுமானால் சமாளிப்பதற்காக அப்படிச் சொல்லலாமே தவிர துறையினுடைய அதிகாரிகள் கொடுத்த பதிலை, 6 நாட்களுக்கு முன்பு வந்தாலும் சரி அல்லது அதற்கு முன்னர் வந்திருந்தாலும் சரி அதையேதான் அமைச்சர் வாசிக்க வேண்டும் என்பது கட்டாயம்.

அதற்கு முன்னாலே மந்திரி சபைக் கூட்டத்திலே அதுபோலப் பேசி, முடிவெடுத்திருந்தால், அந்த அறிவிப்பைத்தான் அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமே தவிர, அதை விட்டு 10 நாட்களுக்கு முன்னால் வந்த பைலைப் படித்தார்கள் என்பது நியாயமா? இது பதிலா?

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவையில் வாதம் நடைபெறுகிறபோதுகூட, கடைசிக் கட்டத்தில் மாதம் ஒரு முறையா, 15 நாட்களுக்கு ஒரு முறையா அல்லது ஒவ்வொரு நாளும் வழங்க முடியுமா என்று கேள்வி எழுந்தபோது, இதை மேலும் ஆராய்ந்து முதலமைச்சரவர்கள் முடிவெடுக்கலாமென்ற கருத்து தெரிவிப்பதுண்டு. ஒரு துறையினுடைய அமைச்சர் எதையும் தானே அறிவித்துவிட முடியாது. முதலமைச்சர், நிதியமைச்சராகவும் இருக்கிற காரணத்தால், அந்தப் பொறுப்போடு அவர்கள் இந்த அவைக்கு விளக்கம் தருவதற்காகச் சொன்ன பதில் அது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, அப்படியென்றால் சம்பந்தப்பட்ட அமைச்சருக்குச் சொல்லாமல், தெரியாமல், முதலமைச்சர் எதையும் அறிவிக்கலாம், அதற்கு அவருக்கு உரிமையுண்டு. அது வேறு பிரச்சினை. ஆனால் ஒரு துறையினுடைய அமைச்சருக்குத் தெரியாது, சொல்லப்படவில்லை, கலக்கப்படவில்லை. முதலமைச்சர் அறிவித்தார். பரவாயில்லை, அறிவித்தவரையில் சரி. முட்டைகள் போடுவதை நாங்கள் வரவேற்கிறோம். அதற்கு நிதி எங்கே? அது தான் கேள்வி. அது சம்பந்தப்பட்ட அமைச்சருக்குச் சொல்லப்படாமல், இங்கே முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார் என்பதுதான் எங்களுடைய வாதம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய கருத்தின் அடிப்படையில் முடிவெடுத்து, பின்னர் இன்னதுதான் அறிவிக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டபோது, ''தற்போது அந்தப் பிரச்சினை ஆய்வில் இல்லை'' என்ற குறிப்பை அமைச்சர் இங்கே அளிக்கிறார். ஏற்கெனவே ஆலோசிக்கப்பட்ட அடிப்படையில் ஒரு முடிவைத் தெரிவிக்கலாம் என்ற உரிமை முதலமைச்சருக்கு இருக்கிற காரணத்தால் இந்த அவையிலே உள்ளவர்களுக்கு, ''இது ஆய்வில் இல்லை'' என்பதோடு நின்றுவிடாது, இந்த வகையில் செய்யப்படுமென்று தெரிவிக்கிறார். அந்த உரிமை முதலமைச்சருக்குண்டு, அரசாங்கத்திற்கு உண்டு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொல்வதற்கு எல்லா உரிமையும் உண்டு. அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். ஆனால் அமைச்சர் என்ன சொல்ல வேண்டுமென்றால், முதலமைச்சர் அதை அறிவிப்பார் என்றுதான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நாம் கல்வியை விட்டு, ரொம்ப தூரம் முட்டைவரை வந்து விட்டோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, சேவல் முட்டையிடாது என்று சொல்லிவிட்டார்கள். சூரியன் முட்டையிடுமென்று சொல்லி, முட்டை தரப்படுமென்று சொன்னோம். (சிரிப்பு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது சைன்டிபிக்காக சரி. சேவல் முட்டை போடாது. சூரிய வெப்பம் முட்டை போடுவதற்குத் தேவை. இதுவும் சைன்டிபிக்காக கரெக்ட். நாங்கள் முட்டை போடுவதை வரவேற்கிறோம். ஆனால் தினமும் போடுங்கள், இது தான் வேண்டுகோள்.



திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த முட்டை போடுகிற விஷயம் இவ்வளவு பெரிய விவாதமாகிவிட்டது பசி நேரத்தில், முட்டைபோட மறந்து போய்விடாமல்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்கள் பேச்சில் முட்டை போட்டிருக்கக்கூடாது. (சிரிப்பு).

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே, வாரத்திற்கு இரண்டு முறை முட்டை போடும் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அதைப் போல மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் சத்துணவு போடும் திட்டத்தையும் நிறுத்திவிடாமல் ஏழைச் சிறார்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். 1987-லே 5,000 ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையிலே நாங்கள் நியமனம் செய்தோம். எல்லோரும் அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். 2,000 ஆரம்பப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களின் பணி ஒழுங்குபடுத்தப்பட்டு விட்டது. மீதமுள்ள 3,000 ஆசிரியர்களின் பணி இன்றைக்கு ஒழுங்குபடுத்தப்படாமல் இருக்கிறது. அந்த ஒழுங்குபடுத்தி, அந்த ஆசிரியர்களுக்கு நல்வாழ்வு தர வேண்டியது இந்த அரசாங்கத்தினுடைய கடமை என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் அன்றைக்கு ஆளும் பொறுப்பில் இருந்த காலத்தில் சுய நிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கினோம். அதைப்பற்றி இங்கே விமரிசனம் செய்தார்கள். நான் பணிவன்போடு சொல்லிக் கொள்வதெல்லாம், இன்றைக்கு உங்களால் புதிதாக ஒரு உயர்நிலைப் பள்ளியைக்கூட ஆரம்பிக்க முடியவில்லை. இதையெல்லாம் கருத்திலே வைத்துக்கொண்டு, அரசாங்கத்திலே பணம் இல்லாததால்தான், அன்றைக்கு எங்களுடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் மூலம் புதிதாக சுய நிதிக் கல்லூரிகளை ஏற்படுத்தியதன் மூலம் இந்தத் தமிழகத்தில் படிக்கிற மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் அளவுக்கு நல்ல பணிகளைச் செய்தார்கள். அதிலே பல நேரங்களிலே தவறுகள் இருந்திருக்கலாம்.

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் தலைவரவர்களே, அப்படிச் செய்தது யாருக்காக? பணக்காரர்களுக்காக, அளவுக்கு மீறிப் பணத்தை வைத்திருப்பவர்களுக்காக, அளவுக்கு மீறிப் பணத்தை முதலீடு செய்து, அதை வியாபாரமாக நடத்துவதற்கு அரசாங்கம் உதவி செய்தது.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மரியாதைக்குரிய துணைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் கல்லூரிக்குச் சென்றிருப்பார் என்று நினைத்தேன். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மரியாதைக்குரிய பேரவைத் தலைவரவர்களே என்று அழைக்கலாமே.

(பிற்பகல் 1-10.)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மரியாதைக்குரிய பேரவைத் தலைவரவர்களே, முன்னாள் துணை சபாநாயகர் திரு. சீனிவாசன் அவர்கள் கல்லூரிக்குப் போயிருப்பார் என்று நினைத்தேன். இப்போது சந்தேகம் வந்துவிட்டது. காரணம், நாங்கள் சுய நிதிக் கல்லூரிகளை ஆரம்பித்தாலும் கூட, அந்தக்கல்லூரிகளில் 50 சதவீதம் அளவுக்கு மாணவர்களை 'மெரிட்' அடிப்படையில்தான் எடுக்க வேண்டும். அரசாங்கம் நிர்ணயித்த, தேர்வு செய்த 50 சதவீத மாணவர்கள் பணம் ஏதும் செலுத்தாமலேயே அந்தக் கல்லூரிகளுக்குப் போகலாம். மீதம் இருக்கிற 50 சதவீதத்தில்தான் கல்லூரிகளை நடத்த, கல்லூரிகளைக் கட்டுவதற்காக, தளவாடங்களை வாங்கப் பணமாக வாங்குகிறார்கள். நாங்கள் உத்தரவு போடு கிற நேரத்திலேயேகூடக் குறிப்பிட்டோம். ஆண்டுக்கு ஒரு முறை இயக்குநர் அவர்களும் — அதற்காக என்று அப்போது ஒரு குழுவைப் போட்டோம் — அந்தக் குழுவைச் சார்ந்தவர்களும் கல்லூரிகளுக்கு நேரில் சென்று, அவற்றைப் பார்வையிட்டு, அவை சரியாக இருக்கின்றனவா என்று பார்த்து, வருஷா வருஷம் தற்காலிகமாக 'ரெனியூவல்' செய்ய வேண்டும் என்றுதான் அன்றைக்கே உத்தரவு போட்டோம். எனவே இப்போது அவை கள் சரியாகச் செயல்படுகின்றனவா இல்லையா என்று பார்க்க வேண்டும். சரியாகச் செயல்படவில்லை என்றால் அதற்குக் கடுமையாக நடவடிக்கை எடுங்கள். அதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கே தெரியும். அன்றைக்கு சுய நிதிக் கல்லூரிகளை எங்களிடம் வாங்கியவர்கள், வாங்கி வைத்திருப்பவர்கள், இன்றைக்கு ஆளுகிற கட்சிக்கு பயந்து கொண்டு உங்கள் பக்கத்தில்தான் வந்து உட்கார்ந்து கொண்டிருக் கிறார்கள். எனவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம் 'தவறு செய்தால்' தயவுசெய்து நீங்கள் நடவடிக்கை எடுங்கள். அல்லது இன்றைக் கிருக்கிற அனைத்து சுயநிதிக் கல்லூரிகளையும் தேசிய மயமாக் குங்கள்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சுயநிதிக் கல்லூரி களை முந்தைய அரசில் பெற்றுக் கொண்டு, தவறுகளைச் செய்து கொண்டு எங்கள் பக்கத்தில் வந்து உட்கார்ந்திருப்ப தாகச் சொன்னார்கள். யார் யார் அவர்கள் என்று சுட்டிக் காட்டினால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேவைப்பட்டால் தனியாகவும் தரலாம்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களே இது உங்களுக்கே தெரியும். எங்கள் கட்சியில் இருந்த ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர் களே கூட இன்றைக்கு உங்களுக்குச் சாதகமாக அறிக்கை விட்டுக் கொண்டிருப்பதற்கான காரணமே, அந்தக் காரணம்தான். எனவே தயவுசெய்து, தவறு செய்பவர்கள்மீது தைரியமாக நடவடிக்கை எடுங்கள். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் . . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. ஆலடி அருணா தான் நேற்றைக்கு முன்தினம்கூட அறிக்கை விட்டிருக்கிறார். அவரா ?

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் தெரிந்தவர் முதலமைச்சர். யார் யார் வந்தார். போனார். எப்படிப் போனார் என்பதைப் பற்றியெல்லாம் எங்களையே கிண்டிக்கேட் கிறார். (சிரிப்பு) அவரைப் பேச்சில் நாங்கள் ஜெயிக்க முடியாது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம் தவறு செய்திருப்போம் என்று நினைத்தால் அல்லது சுயநிதிக் கல்லூரிகளை வாங்கி யவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று நினைத்தால் தயவுசெய்து தைரியமாக அவற்றை நீங்கள் தேசியமய மாக்குங்கள். அதை உடனடியாகச் செய்ய முடியாது என்றுகூடச் சொன்னார்கள். ஒரு 5 வருஷ காலம் என்று வைத்துக் கொள் ளுங்கள். படிப்படியாக சுய நிதிக் கல்லூரிகளைத் தைரியமாக எடுங்கள். நீங்கள் உடனடியாகக்கூட பணம் கொடுக்க வேண் டாம். காரணம் அவர்கள் ஓரளவுதான் முதலீடு செய்திருக்கிறார் கள். மீதியெல்லாம் மாணவர்கள் மத்தியில் வாங்கியதுதான். அப்படி வாங்கித்தான் அந்தக் கல்லூரிகளைக் கட்டியிருக்கிறார் கள். அப்படிப்பட்ட நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தைரியமாக எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன். . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் தன்னிச்சையாகக் கொடுத்து, தவறு செய்து விடுவீர்கள். நாங்கள் தேசிய மயமாக்க வேண்டும். இல்லையா?

[1989 ஏப்ரல் 8

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது நாங்கள் தன்னிச்சையாகக் கொடுத்தோம் என்று சொன்னார்கள். நாங்கள் கொடுக்கிற நேரத்தில் பணம் இல் லாத காரணத்தால் கொடுத்தோம். சரியாக நடத்துவார்கள் என்று சொல்லிக் கொடுத்தோம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர் களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உண்மையான காரணம் தெரிந்ததுதான். சுயநிதிக் கல்லூரிகள் ஏன் அனுமதிக்கப்பட்டதென்றால், 50 சதவிதம் காமன் கோட்டா வில் ஒதுக்கப்படும். மீதியுள்ளது பணம் கட்டி—கேப்பிடேஷன் ஃபீ—கட்டியவர்களுக்கு என்று போட்டார்கள். காரணம் எம்.பி.பி.எஸ்., பி.ஈ., போன்ற படிப்புக்காக நம் மாநிலத்தில் பிளஸ் 2 படித்தவர்கள் இந்தியாவில் உள்ள பல்வேறு இடங் களுக்கும் போனார்கள். கேரளாவுக்குப் போய்ப் பணத்தைக் கொடுத்தார்கள். கருநாடகத்திற்குப் போய் அங்கே ரூ. 2½ லட்சம், 3 லட்சம் என்று கொடுத்தார்கள். மேலும் ஆந்திரா, பம்பாய் போன்ற வட மாநிலங்களுக்செல்வம் போனார்கள். பொதுவாக தமிழ்நாடு தவிர மற்ற மாநிலங் களுக்கெல்லாம் போய் அங்கே பணத்தைக் கொடுத்து விட்டுச் சேர்ந்தார்கள். அவர்கள் இங்கே பணத்தைக் கொடுத்து படிக்கட்டும் என்ற காரணத்தால்தான் முதலில் அந்தத் திட்டம் இங்கே கொண்டு வரப்பட்டது. அதிலே ஏதாவது தவறு இருந்தால்—எந்த அளவுக்கு நிர்ணயிக்கப்பட்டதோ அதற்கு மேலே வாங்கினால்—அது தவறு என்று சொல்லி—ஒரு கல்லூரிக்கு இவ்வளவு என்று நிர்ணயித்திருக்கிறார்கள்—நீங்கள் நடவடிக்கை எடுங்கள். ஆனால் நாங்கள் கொண்டு வந்ததன் நோக்கம் இதுதான்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேள்வி கேட்டதால் சொல்கிறேன். உதாரணமாக வைத்தியக் கல்லூரி பற்றி டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் மைய அரசுக்கு "ஹெல்த் சர்விசஸ் ரிப்போர்ட்" என்று ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். அதில் 10 லட்சம் மக்களுக்கு ஒரு வைத்தியக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அப்படியானால் தற்போது தமிழ்நாட்டில் 50 வைத்தியக் கல்லூரிகள் இருக்க வேண்டும். எனவே, அறிஞர்கள் சொன்னதை மனதில் வைத்துக் கொண்டுதான் செயல்பட்டோம். ஒரு டாக்டருக்கு 4,410 மக்கள் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். கேரளத்தில் 2,020 மக்களுக்கு ஒரு டாக்டர் இருக்கிறார். வளர்ந்த நாடுகளில் 1,000 பேருக்கு ஒரு டாக்டர் என்று இருக்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் வைத்துக் கொண்டு, நம் நாடும் வளர



1989 ஏப்ரல் 8] [திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் இதைச் செய்திருக் கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம் இன்றையதினம் சுயநிதிக் கல்லூரிகள் தவறு செய்தால் அதைக் கண்காணிக்க அதிகாரிகளைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு போட்டிருக்கிறோம். அந்த அதிகாரிகளே தவறு செய்வார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் நினைப்பாரானால், சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து எந்தக் கல்லூரி சரியில்லை என்று பார்த்து நடவடிக்கை எடுக்கலாம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், உங்களுடைய மொழிக் கொள்கையில் குழப்பம் இருக்கிறது. ஒரு காலத்திலே இரு மொழிக் கொள்கை என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். இப்போது 15 மொழிகளையும் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறீர்கள். போன தடவை இதையே சொன்னீர்கள். எனக்குப் புரியவில்லை. டில்லிக்கு. . . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அதிகம் சிரமப்படத் தேவையில்லை. அது அறிஞர் அண்ணாவே சொன்னது.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : இல்லை. பேரவைத் தலைவரவர்களே, நான் பேராசிரியர் அவர்களிடம் கேள்வியாகக் கேட்கிறேன். 15 மொழிகளையும் ஆட்சி மொழியாக்கிவிடுவோம்—அப்படியென்றால் இங்கே தமிழ் நாட்டில் படித்துப் போகிற பையன், டில்லி அரசாங்க வேலைக்கு போகிற பையன் எந்த மொழியிலே படிக்க வேண்டும்? எது இணைப்பு மொழி. (குறுக்கீடு) மரியாதைக் குரிய தலைவரவர்களே, இதிலே, . . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அதிகம் சிரமப்படத் தேவையில்லை. தமிழே ஆட்சி மொழியானால், தமிழே போதும். மத்திய அரசாங் கத்திலே 15 தேசிய மொழிகளும்—அறிஞர் அண்ணா சொன்னதுபோல—ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப் பட்டால் தமிழ்நாட்டிலிருந்து போகிறவர்களுக்குத் தமிழே போதும். மொழி பெயர்ப்புக்காக யார் வேண்டு மானாலும் எந்த மொழி படித்தும் மத்திய அரசு அலுவலகத் துக்குச் செல்லலாம்.

[198 ஏப்ரல் 89

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, நாங்கள் ஆளும் கட்சியாக
இருந்தபோது பேராசிரியர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.
1985–86 வரைக்கும் நான் புத்தகத்தை படித்துப்
பார்த்திருக்கிறேன். அதிலே பூராவும் இரு மொழிக்
கொள்கையைத்தான் வலியுறுத்திக் கொண்டே இருந்து
இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : அண்ணாபேரால்
ஒரு கட்சி நடத்திக் கொண்டு, அதிலே அமைச்சராக
இருந்த ஒருவர் இப்படிப் பேசுகிறபோது, உள்ளபடியே நமது
மொழிக் கொள்கையை விளக்க வேண்டியதாகிறது. தமிழ்
நாட்டில், தமிழக அரசால் நடத்துகிற கல்வி நிலையங்களில்
மாணவர்கள் மும்மொழித் திட்டத்தை ஏற்றுப் படிக்கத்
தேவையில்லை ; இரு மொழி படித்தால் போதும். தனிப்
பட்டவர்கள் எத்தனை மொழி படிப்பது பற்றியும் இந்த
அரசு தடை செய்யவில்லை. அதே நேரத்தில் மத்திய அரசு
இந்தி மொழியை மட்டும் ஆட்சி மொழியாக ஆக்குகிற
முயற்சியை மேற்கொண்டபோது ஆங்கிலத்தை நீங்கள்
தொடர்ந்து நீடிக்க வேண்டும். எதுவரையில் நீடிக்க
வேண்டுமென்றால் என்னுடைய தமிழ் மொழியும் அதைப்
போன்று பிற தேசிய மொழிகளும் மைய ஆட்சி மொழி
களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வரையில். ஆங்கிலத்தைப்
பயன்படுத்துகிற எங்களுடைய உரிமையை நீங்கள் மறுத்து,
இந்தியைப் புகுத்தக் கூடாது என்பதுதான் தொடக்கத்
திலேயே கூறப்பட்டது. அந்த வாதம் இன்றைக்கும் இருக்கிறது.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த வாதத்தை
நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு உங்களோடு
சேர்ந்திருக்கிற கட்சிக்காரர்கள் எல்லாம் நிறையச் சொல்லி
யிருக்கிறார்கள். ஆகவேதான் நாங்கள் சந்தேகப்படுகிறோம்.
நாங்கள் தெரியாமல் சொல்லவில்லை. நாங்களும் உங்கள்
அளவிற்கு அண்ணாவோடு பழகாவிட்டாலும்கூட,
மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். காலத்திலே வாழ்ந்திருக்கி
கிறோம். மரியாதைக்குரிய கலைஞர் காலத்திலே வாழ்ந்
திருக்கிறோம். நாங்கள் சொல்வதெல்லாம், . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : கொஞ்ச காலம்
தான் வாழ்ந்திருப்பதாக நண்பர் சொல்கிறார். காங்கிரசோடு
உறவு வருகிற காலத்தில் யாருக்கு என்ன கொள்கை என்ற
பிரச்சினை நிச்சயமாக வரும். காங்கிரசுக்கு ஒரு கொள்கை ;
உங்களுடைய கட்சிக்கு ஒரு கொள்கை. அதைப் போலத்
தான் தி.மு.க. வினுடைய கொள்கை. தி.மு.க. என்றைக்கும்



1989 ஏப்ரல் 8] [பேராசிரியர் க. அன்பழகன்]

விட்டுத் தராது. தேசிய முன்னணி என்பது எங்களுடைய
கொள்கையை நாங்கள் காப்பாற்றிக் கொள்ள இடம் தருகிற
ஒரு முன்னணிக்குப் பெயரே தவிர, எமது கொள்கையைக்
கைவிடுகிற நிலைக்கு ஆளாக்கும் அணியின் பெயர் அல்ல.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்பு
மிகு பேரவைத் தலைவரவர்களே, காங்கிரசைப் பற்றிப்
பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் நேரு
காலத்திலிருந்து இன்றைக்கு வரைக்கும் அதிலே தெளிவாக
இருக்கிறார்கள். இந்தி மொழி பேசாத மக்கள். . . . .

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,
தேசிய முன்னணியில் தொடக்கத்தில் அவர்கள் கொண்டுவந்த
71 திட்டங்களில் ஒரு திட்டமாக இந்தியா முழுமையும் மும்
மொழித் திட்டம் என்று ஒன்றை அறிவித்தார்கள். அந்தக்
கூட்டத்திலே கலந்துகொண்ட நாங்கள் இதை வாபஸ் பெறா
விட்டால் தேசிய முன்னணியில் நாங்கள் இருக்கமாட்டோம் என்று
அறிவித்து விட்டோம். அதற்குப் பிறகு அதை மாற்றிக்
கொண்டார்கள். அதை 'இந்து' போன்ற பத்திரிகைகள்
எல்லாம் அப்பொழுதே பாராட்டி இருக்கின்றன என்பதை
மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்துகிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்பு
மிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே தேவிலால் பேட்டி
கொடுத்ததை எல்லாம் வைத்திருக்கிறேன். அதற்குள் நிறைய
விமர்சனம் தேவையில்லை என்றுதான் விடுகிறேன். அவர்,
''உங்களுடைய கருத்து எனக்கு ஒத்துப்போகவில்லை'' என்று
மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார். ஆகவே நாங்கள்
சந்தேகத்தோடுதான் கேட்கிறோமே தவிர, அவ்வாறு காங்கிர
சிலே இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் பணி
வோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தேவிலாலுக்கு
மொழிப் பிரச்சினை இல்லை. அவருடைய கருத்து அது.
அவருடைய கட்சியின் கருத்து அது. இப்போது நீங்கள்
காங்கிரசோடு உறவு கொண்டிருக்கிறீர்கள். அண்ணாவினுடைய
15 மொழிக் கொள்கைகளை அவர்கள் ஒத்துக்கொள்வார்களா?
இந்தியாவிலே தமிழும் ஆட்சிமொழியாக்கப்பட வேண்டுமென்
பது அண்ணாவினுடைய கொள்கை. அதை காங்கிரஸ் ஒத்துக்
கொள்வார்களா? ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஒத்துக்
கொள்ள முடியாது; அவர்களுடைய கொள்கை அது. அதற்
காக நீங்கள் அவர்களோடு உறவுகொள்ளாமல் இருக்க
முடியுமா? அது அரசியல் ரீதியான உறவு ; ஆனால் கொள்கை
களை விட்டுக்கொடுத்துவிட்ட உறவாக அல்ல.

(பிற்பகல் 1-20)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காங்கிரசைப்பற்றிச் சொன்னார்கள். நான் அது விவாதமாகப் போக வேண்டாம் என்று நினைத்தேன். காங்கிரசைப் பொறுத்த அளவிற்கு, இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரை ஆங்கிலம் இருக்கலாம். அதை ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் தேசிய முன்னணியில் இடம் பெற்ற லோக்தளக் கட்சியின் தலைவர், அரியானா மாநில முதலமைச்சர் தேவிலால், நேற்று சென்னையில் நிருபர்கள் மத்தியிலே பேசும் பொழுது, தி.மு.க. கருத்தை ஏற்க மறுத்து விட்டார். ''ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்பது தி.மு.க. கருத்து. இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்று கோரும் நேரு கொடுத்த உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று தி.மு.க. கேட்கிறது. இந்த இரண்டையும் நான் ஏற்க மாட்டேன்'' என்று தேவிலால் சொன்னார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தேவிலாலே தேசிய முன்னணி அல்ல. தேசிய முன்னணியிலே தேவிலால் அந்தக் கருத்தைச் சொன்னால் ஒன்று. தேசிய முன்னணியில் தேவிலால் இருக்க வேண்டும் ; இல்லாவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்க வேண்டும் என்று சொல்ல திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தயங்காது.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மரியாதைக் குரிய பேரவைத் தலைவரவர்களே, நான் மரியாதைக் குரிய கலைஞருடைய இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்கள் அளவில் ஏ.ஈ.ஓ-க் களைப் போட்டிருக்கிறீர்கள். ஆனால் அவர் போய் கிராமங்களை நோக்கிச் சென்று அந்த ஆசிரியர்களுடைய நடவடிக்கையைப் பார்க்க முடியவில்லை. அவர்களுக்கு நிச்சயமாக வாகன வசதிகளைக் கொடுக்கக்கூடிய அளவிற்கு வசதி வாய்ப்புகளை நீங்கள் செய்து கொடுக்க வேண்டும்.

அதேபோல, ஆசிரியர்கள் மீது புகார் வந்தாலும் சரி அல்லது கல்வியினுடைய தரம் குன்றிவிட்டது என்று சொல்லி ஆசிரியர்கள் மீது குற்றச்சாட்டு வந்தாலுங்கூட இன்றைக்கு நடவடிக்கை எடுப்பதிலே காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை மாற்றுவதற்காக மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்கள், வக்கீல்களுக்கு பார் கவுன்சில் போல, டாக்டர்களுக்கு மெடிகல் கவுன்சில் போல, ஆசிரியர்களுக்கெனத் தனியாக டீச்சர்ஸ் கவுன்சில் போட்டு, விரைவாக இந்த



நடவடிக்கைகளை முடுக்கிவிடக்கூடிய அளவிற்கு நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்லூரியிலே படிக்கின்ற எஸ். டி., எஸ். ஸி. பையன்களுக்கும், பி. சி. பையன்களுக்கும் இலவசமாக நீங்கள் கல்வியறிவு கொடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நான் பணிவன்போடு பேராசிரியர் அவர்களை விளக்கமாகக் கேட்டுக் கொள்வதெல்லாம், பி.ஏ., பி.எஸ்ஸி.,—யிலே எஸ்.டி., எஸ்.சி. பையன்களுக்கும் சரி, பி.சி.க்கும் சரி, பயிற்சிக் கட்டணம் இதுவரைக்கும் இல்லை; அதேபோல ஸ்பெஷல் பீஸ் மட்டும் வாங்கப்பட்டது. அதுவும் இப்பொழுது ஸ்காலர்ஷிப்பிலே சரி செய்து கொள்ளப்பட்டு விட்டது. இப்பொழுது நீங்கள் எதிலே புதிதாக இனாமாகச் செய்கிறீர்கள்? அதைப் பேராசிரியர் அவர்கள் கொஞ்சம் விளக்க வேண்டும்.

பி.சி. மாணவர்களுக்கு இலவசக் கல்வியில் கட்டுப்பாடு இருந்தது. வருஷ வருமானம் 12,000 என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைப்போல எஸ்.டி. சம்பந்தப்பட்ட பையன்களுக்கு வருமான வரம்பு இல்லை. ஆனால் இந்தப் பையன்களுக்குப் பரீட்சை நேரத்திலே பீஸ் வசூலிக்கப்படுகிறது. அந்த பீஸ் வாங்கப்படுமா என்பதையும் மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்திலே பதிலாகச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழ் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் நாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு ஒன்றுமே இல்லை என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லிக் கொள்கிறேன்.

தமிழகத்திலே நூலகங்களைப் பொறுத்த அளவிற்கு மாவட்ட நூலகங்கள் 18 தான் இருக்கின்றன. அதைக் கூட்டி, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட நூலகங்களை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியிலே ஒரு கல்லூரி, என்ஜினியரிங் காலேஜ் எதுவுமே கிடையாது. விளாத்திகுளம் தொகுதியைப் பொறுத்த அளவிற்கு அதிலே பேராசிரியர் அவர்கள் தயவுசெய்து (குறுக்கீடு)விளாத்திகுளம் தொகுதி, புது தொகுதி— அந்தப்பகுதியில் அரசாங்கத்தினுடைய கவனத்தோடு

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1989 ஏப்ரல் 8

அந்தப் பகுதிக்கு வேண்டிய புதிய வாய்ப்பு வசதிகளை நீங்கள்
கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, பேச
வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன், நன்றி,
வணக்கம்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவையினு
டைய தலைவர் அவர்களே, கல்விக்காக நிதி ஒதுக்க வேண்டு
மென்ற வேண்டுகோளின் அடிப்படையில், இந்த மன்றத்தில்
நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பல்வேறு வகையான
விளக்கங்களை, அதன் மூலமாகப் பல குறைகளை எடுத்துரைத்து,
கல்வித் துறையினுடைய பணி மேலும் சீராக, செம்மையாக
நடைபெற வேண்டுமென்ற ஆர்வத்தை வெளியிட்ட அனைத்து
சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்துக் கட்சியைச்
சார்ந்த உறுப்பினர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றி
யையும், மகிழ்ச்சியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

எதிர்க்கட்சியில் பல ஆண்டுக் காலம் இருந்து, கல்வி
மானியத்தின் மீது, என்னுடைய கருத்துக்களை எடுத்துச்
சொல்கின்றபோது எவையெவை நிறைவேற்றப்பட வேண்டு
மென்று அப்பொழுது நான் எண்ணிக் குறிப்பிட்டேனோ அவை
கள் இப்பொழுது நான் அமைச்சராக வந்தும் நிறைவேற்றப்
படவில்லை என்பதைக் குறிப்பாக எதிர்க்கட்சியினுடைய முன்
னணியிலே உள்ள திரு. இராமச்சந்திரன் அவர்கள் வலியுறுத்தி
எடுத்துச் சொன்னார்கள்.

உண்மையாகவே அதை எண்ணுகிறபொழுது நானே வருத்
தப்படுகிறேன். நான் அமைச்சராக வந்தும் செய்ய முடிய
வில்லையே, ஏன் செய்ய முடியவில்லை என்று எண்ணிப் பார்க்
கிறேன். ஒரு 10, 12 ஆண்டுக்காலம் தமிழ்நாடு குறிக்கோள் இல்
லாதவர்களுடைய ஆட்சியில் தொடர்ந்து நடைபெற்று விட்ட
காரணத்தால், ஒரு திட்டமிட்ட செயல்பாடு இல்லாமல் போய்
விட்ட காரணத்தால் இந்த விளைவு ஏற்பட்டிருக்கிறது. உள்ள
படியே, இதை நான் சொல்லுகிறபோது, யார் வைத்த
கொள்ளியோ வீடு வெந்து விட்டது, நான் எண்ணிப் பார்த்த,
எடுத்துக் கூறிய எண்ணங்கள் வெற்றி பெறவில்லை. 'யார் பெற்ற
பிள்ளையோ அநாதையாக அலைகிறது. இப்போது தூக்கிச்
சுமக்க வேண்டிய பொறுப்பு எனக்கே ஏற்பட்டிருக்கிறது.
அதுவும் ஒன்றும் பெரிய தவறல்ல. ஏற்பட்டுப்
போன விளைவைத் தாங்கித் தீரவேண்டிய ஒரு கட்டத்தில்



189 ஏப்ரல் 8] [பேராசிரியர் க. அன்பழகன்]

இந்த அரசு இருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் கூடக்
கடைசிக் கட்டத்திலே அந்தப் பொறுப்பை, இந்த ஆட்சிக்கு,
இந்தக் கட்சிக்கு வழங்கினார்களே தவிர, இடையில் தமிழ்
நாட்டு மக்கள் எண்ணிப் பார்க்கவில்லையே என்று நான்
கவலைப்படுகிறேன். அரசியல் என்பது எல்லா நேரத்தி
லும் மக்கள் தெளிவாகச் சிந்திக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்
படுத்துவதில்லை என்பதை நான் அறிந்தவன்.

இங்கே பேசிய திரு. இராமச்சந்திரன் அவர்கள் தன்னு
டைய தொகுதியில் கல்லூரி இல்லை. கல்வி வளர்ச்சிக்கான
அமைப்புகள் எதுவும் இல்லை, அவைகள் ஏற்படுத்தப்பட
வேண்டும், அது நான் அண்மையில் சென்ற புதிய தொகுதி,
விளாத்திகுளம் தொகுதி என்று சொன்னார்கள். அப்
போதுதான் ஒரு உண்மை புரிந்தது. அந்தத் தொகுதியை
அவர் ஏன் தேர்ந்தெடுத்தார் எனும் உண்மை எனக்கு அப்
போதுதான் புலனாயிற்று. இருந்தாலும் கூட, இவைகள்
அரசியலில் தோன்றுகிற எண்ணங்கள் என்று மிகச் சாதாரண
மாகக் கருதத்தான் விரும்புகிறேன். உண்மையாக
கல்விக்காகச் செலவிடப் படுகிற தொகை 900 கோடி ரூபாய்
என்பது மட்டுமல்லாமல், இது தவிர கல்வி தொடர்பாக
பிற்பட்டோர் நலனுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுடைய
முன்னேற்றத்திற்காக, சமூக நலனுக்காக, அதைப்போல
மருத்துவக் கல்விக்காக, வேளாண்மைக் கல்விக்காக, செவிலி
யர் பயிற்சிக்காக இப்படிச் செலவிடப்படுகிற தொகை ஏறத்
தாழ இன்னும் 200 கோடி ரூபாய் கல்வி தொடர்பாகத்
தான் செலவிடப்படுகிறது என்பதையும் நான் நினைவூட்ட
விரும்புகிறேன்.

உண்மையாகவே கல்வித் துறையில் ஆற்ற வேண்டிய
பணிகள் அதிகம். இடையில் ஏற்பட்டிருக்கிற குறைகளும்
அதிகம். இந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்,
மாற்ற வேண்டும் என்பதில் நான் உள்ளபடியே கருத்துச்
செலுத்த முனைகிறேன். இருந்தாலும் குறைகள் கண்ணுக்குத்
தெரிகிறபோதுகூட அந்தக் குறைகளை எப்படி மாற்றி
யமைப்பது என்று ஆலோசிக்க வேண்டிய அவசியம் ஒவ்வொரு
கட்டத்திலும் ஏற்படுகிறது. எனவே, அப்படிப்பட்ட நேரத்
தில் இந்த அவையில் உள்ள உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன
பல்வேறு குறைகளும் நிச்சயமாக ஆய்வு செய்யப்படும்.
ஆய்வு செய்து இந்தக் குறைகளை நீக்கவும் மக்கள்
விரும்பத்தக்க நிலையை ஏற்படுத்தவும் திரு. லத்தீப் அவர்கள்
சொன்னதைப் போல கல்வியால் நல்ல பயன் ஏற்பட வழிவகை
காணவும் முயற்சிக்கப்படும் என்பதை முதலில் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கருத்துக்களையெல்லாம் நான் வழக்கமாக விளக்கமாகப் பேசுவதைப் போல இன்றைக்குப் பேசுவதற்கு உரிய நேரம் இல்லை என்பதை இந்த அவை உணரும். எனவே, நான் சுருக்கமாகக் கருத்துக்களை விளக்க விரும்புகிறேன். அரசின் அனுமதி பெறாமலும், முறையான அமைப்பு இல்லாமலும், வெறும் விளம்பர அமைப்புகளாக ஏற்பாடு செய்யப்பட்டு அந்தக் கல்வி நிலையங்களின் பெயரால், திரு. பாண்டியன் அவர்கள் சொன்னதைப் போல 'பட்டங்கள் வழங்குவது' வெளிநாட்டுப் பட்டங்கள் வழங்குவது, வேறு மாநிலப் பல்கலைக் கழகப் பட்டங்களை வாங்கித் தருவதாகக் கூறுவது, இப்படி நடைபெறுகிற மோசடிகளைத் தடுப்பதற்கான முயற்சியிலே இந்த அரசாங்கம் நிச்சயமாக ஈடுபடும். அவைகள் பட்டங்கள் வழங்குவதன் மூலமாகக் கல்வியிலே மக்கள் தகுதி பெற வாய்ப்பளிக்கிற ஒரு நிலை இல்லையென்று சொன்னால், அவை உள்ளபடியே நம்முடைய மக்களுக்கு இடையே தவறான ஒரு கண்ணோட்டம் ஏற்படுவதற்கும், பட்டம் பெற்றதாக சிலபேர் ஏமாற்றுவதற்கும் அவை பயன்பட்டுவிடும். இன்னும் சொல்லப் போனால், டாக்டர் பட்டம் பெற்றதாகச் சொல்லி, நான்கு பேர்களிடத்தில் அப்படி சொல்லிக்கொண்டு மூன்று பெண்களை மணம் செய்கிற அந்தப் பித்தலாட்டத்தைப் போலத்தான் இந்தப் பித்தலாட்டமும். எனவே, அப்படி ஒரு நிலை ஏற்பட வேண்டுமென்றால், பல்கலைக் கழகமோ அல்லது அரசாங்கமோ அல்லது இன்னொரு மாநிலத்தின் பல்கலைக் கழகமோ ஏதாவது ஒரு அடிப்படையில் அங்கீகரித்து இருந்தால் தவிர, அப்படிப்பட்ட மோசடிகளை நிறுத்திவிடத் தகுந்த முயற்சியெடுக்கப்படும்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஆங்கிலோ இந்தியச் சமூகத்தின் பிரதிநிதியாக உள்ள உறுப்பினர் அவர்களும் இன்னும் சில உறுப்பினர்களும் கூட L.K.G., U.K.G., Lower Kincer Garten, Upper Kincer Garten என்ற அந்தப் பெயரோடு 3–4–5 வயது குழந்தைகளுக்கு நடத்தப்படுகிற படிப்பைப் பற்றிக் குறிப்பிட்டு, அதற்காக பணம் வசூலிக்கப்படுகிறது என்பதையும் குறிப்பிட்டு அப்படி ஒரு படிப்புத்தேவையா என்று கூட சில உறுப்பினர்கள் கேட்டார்கள்.

(பிற்பகல் 1-30)

இப்படிப்பட்ட மழலைப்பள்ளிகள் அரசாங்கத்தினுடைய முயற்சியினாலே நடைபெறுவன அல்ல. மக்கள் தங்களுடைய குழந்தைகளை நல்ல தரமுள்ள கல்வி பெற்ற பிள்ளைகளாக வளர்க்க வேண்டுமானால், இப்படிப்பட்ட பள்ளிகளிலே சேர்க்க வேண்டும் என்ற ஒரு விருப்பத்தை, ஆர்வத்தை இன்றைக்குக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆர்வம் இருக்கிற காரணத்தால் அந்தக் குழந்தைகளை அவர்கள் விரும்புகிற பள்ளிகளிலே சேர்ப்பதை நாம் தவறு என்று சொல்லித் தடுப்பது நியாயமல்ல.





இரண்டாவது, இதில் நேரடியாக அரசாங்கத்திற்குச் செலவில்லை. ஆனால் பொதுமக்களுடைய நன்மைக்கு மாறாக, பொது நோக்கத்திற்கு மாறாக இவைகள் நடைபெறுமானால், அது தடுக்கப்பட வேண்டும். எனவே இந்த எல்,கே.ஜி., யு.கே;ஜி., போன்ற பள்ளிகள் எல்லாம் இன்றைக்கு செமி-அர்பன் ஏரியா வரையில், கொஞ்சம் பேரூராக இருந்தால், அந்த ஊர் வரையில் கூட இந்தப் பள்ளிகள் தொடங்கப்படக்கூடிய நிலைமையிருக்கிறது. அது பெற்றோர் விருப்பம், தனியார் முயற்சி, ஆனால் அதிலே குறைபாடுகள் இல்லாமல் அவற்றையெல்லாம் ரெகுலரைஸ் செய்வதன் மூலம் சில வரன்முறைகளுக்கு உட்பட்டுத்தான் அவை இயங்கவேண்டும், அந்த வரன்முறைகள் அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுகிற முறையில் விதிகளாகத் தீர்மானிக்கப்பட்டு, அவைகளுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற ஒரு எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதற்கான கருத்து ஆய்வை இந்த அரசாங்கம் நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய திரு. லத்தீப் அவர்கள் யு.ஜி.சி. ஊதிய விகிதத்தை பல்கலைக் கழகக் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கியது பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டதை எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள் தாங்கிக் கொள்ள முடியாமல், அது நாங்கள் ஏற்கெனவே அறிவித்தது தான் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், அவ்வாறு ஊதியம் வழங்க அரசாங்க அறிவிப்பு ஒன்று வரவேண்டுமானால், ஜி.ஓ. ஒன்று வெளியிடப்படவேண்டும். அப்படி எந்த ஜி.ஓ.-வும் அவர்களுடைய கட்சி ஆட்சியிலேயிருந்த காலத்திலே வெளியிடப்படவில்லை. மாறாக ஒரு விளம்பரம் மட்டும் தரப்பட்டது. அதற்குப் பின்னால் குடியரசுத் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் கவர்னர்தான் ஊதியம் வழங்கப்படும் என்று மாநில அரசின் எக்சிகியூடிவ் கமிட்டியினைக் கூட்டி தீர்மானித்து ஒரு ஆர்டர் வழங்கினார்கள். ஆனால் அவர்களும் அதற்குரிய சம்பளத்தை இன்ன தேதியிலிருந்து இப்போது வழங்குவோம், மிச்சத் தொகையைப் பின்னர் வழங்குவோம் என்ற முறையில் கூட வழங்கவில்லை. காரணம் நிதிநிலை அவ்வளவு சிறப்பாக நிருவகிக்கப்பட்டு இருந்தது. நிதி பல்வேறு தலைப்புகளில் வெவ்வேறு விதமாகச் செலவழிக்கப்பட்ட வரலாறு உண்டு. இன்னும் சொல்லப் போனால், பார்ட்-2 ஸ்கீம் என்று போடப்பட்ட அந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டியதாக அறிவிக்கப்பட்டிருந்த ஏறத்தாழ 150 கோடி ரூபாயும் அந்தத் துறைகளுக்குச் செலவிடப்படாமல், ஒரு 20, 25 கோடிதான் செலவிடப்பட்டது என்ற புள்ளி விவரமும் எனக்குத் தெரியும். எனவே எப்படியோ ஒரு சூழ்நிலையில் அறிவிக்கப்பட்ட ஆளுநர் ஆட்சியிலே கூட அடுத்த மாதம் முதல்,

தேதியிலிருந்து கூட அந்த ஊதியம் வழங்கப்படவில்லை. எனவே அந்தப்பொறுப்பு இந்த அரசாங்கத்திற்குத்தான் ஏற்பட்டது. இந்த அரசு வழங்கியிருக்கிறது. உள்ளபடியே அப்படி வழங்குவது முறைதான் என்பதற்குத்தான் ஏற்கெனவே இருந்த ஆட்சி விளம்பரப்படுத்தியது சான்றாகிறதே தவிர, வழங்குவதற்குத் திட்டமிட்டதற்கு அது சான்று அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சுய நிதிக் கல்லூரிகளைப் பற்றிச் சொல்லும் போது ஏராளமான மாணவர்கள் உயர் கல்வி பெற வேண்டும், பொறியியல் கல்வி பெறவேண்டும், பல தொழில் நுணுக்கக் கல்வி பெற வேண்டும் என்று விரும்புகிற ஒரு சூழ்நிலை இருக்கிறபோது, அரசாங்கத்தால் அப்படிப் பட்ட கல்வி நிலையங்களை அமைக்க முடியாதபோது, அதற்கு வசதி இல்லாதபோது, சுயநிதிக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு எங்களுடைய அரசு அனுமதித்தது என்று மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அரசு அப்படி, மக்களுடைய சேவைக்காக, மாணவர்களுடைய சேவைக்காக கல்வி நிலையங்களை, குறிப்பிட்ட இடங்களில் அமைக்க முடியாதபோது 1985–86-லேயிருந்து அப்படி அனுமதி வழங்கப்பட்டது என்று சொல்லிவிட்டு, ஏதோ ஏற்கெனவே இருந்த திரு. எம்.ஜி.ஆர். அரசு எல்லாத் துறைகளிலும் நிதி வசதியோடு மக்களுக்குப் பல நல்ல கடமைகளைச் செய்ததைப் போலவும், இந்த அரசு வந்தவுடன், திறமையற்ற ஒரு அரசு நல்ல திட்டங்களை நிறைவேற்றாததைப் போலவும் இங்கு குறைபட்டுப் பேச நியாயமில்லை. நீங்கள் ஆட்சி நடத்தியபோது, நிதி வசதி இருந்தது. இருந்தும் கூட தனியார்கள் பலரையும் அழைத்து, நீங்களே கல்லூரிகளை நடத்திக் கொள்ளுங்கள், வசூல் செய்து கொள்ளுங்கள், நாங்கள் கேட்பதற்கு சட்டத்திற்காக கேபிடேசன் ஃபீ இல்லை என்று எழுதிக் கொடுங்கள் என்று பேசி அனுமதிக்கப்பட்டுள்ளது. கேபிடேசன் ஃபீ வசூலிப்பது இல்லை என்று கையெழுத்தே போட்டிருக்கிறார்கள். நான்கு ஆண்டுக் காலம், அந்த ஆட்சிக் காலத்திலேயே இந்த நிதி வசூலிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் மிகவும் கோபப்பட்டார்கள். அவரே அவைத் தலைவராக இருந்தபோது, கோபப்பட்டு, அந்த அமைச்சரைக் கண்டித்திருந்தால், இந்தத் தொல்லையே எங்களுக்கு வந்திருக்காது. இதை நான் தனிப் பட்ட உணர்வுக்காகச் சொல்லவில்லை. பிரச்சினை அப்போது வளர்க்கப்பட்டது. ஏறத்தாழ 28 பொறியியல் கல்லூரிகள், 72 பாலிடெக்னிக்குகள் நடத்தும் உரிமை நாங்கள் இந்த ஆட்சியிலே வந்து அமர்வதற்கு முன்னால் வழங்கப்பட்டது. இதிலே ஏறத்தாழ மூன்றிலே ஒரு பங்கு—நான் சொல்கிற எண்ணிக்கை சற்றேறக்குறைய அமைந்தது—சரியான எண்ணிக்கை அல்ல, மூன்றிலே ஒரு பங்கு—கல்வி நிலையங்கள், பாலிடெக்னிக்குகள்,



அல்லது என்ஜினியரிங் கல்லூரிகள் முறையாக நடக்கவில்லை. தரமான பயிற்சி இல்லை. போதுமான கருவிகள் இல்லை, கட்டிடங்கள் இல்லை, மாணவர்களுக்குத் தகுந்த பயிற்சி வழங்கப்படவில்லை.

மூன்றில் ஒரு பகுதியினரின் அந்த நிர்வாகம், உள்ளபடியே பயிற்சி தருவதில் அக்கறையாக இருக்குமானால் ஒரு ஐந்து ஆண்டுக் காலத்தில் செம்மைப்படுத்தலாம். இன்னும் மூன்றில் ஒரு பகுதி சுய நிதிக் கல்லூரிகள் நிறைவாக இருக்கின்றன. இனி குறைபாடு ஏற்படாமல் தொடர்ந்து வளர்ச்சிப் பணிகளைச் செய்யலாம். அதை ஆளும் கட்சியின் சார்பிலே ஒரு அமைச்சராக இருக்கின்ற நான் தீர்மானிக்கக் கூடாது. எனவே அதற்காக இந்தத் துறையிலே வல்லுநராக விளங்குகின்ற டாக்டர் குழந்தைசாமி அவர்கள் தலைமையில் இந்தத் துறையைச் சார்ந்தவர்கள், அதே போன்று பல்கலைக் கழகத்திலே பெரும் பொறுப்பில் உள்ளவர்கள், அவர்களைக் கொண்ட ஒரு குழுவே நியமிக்கப்பட்டு, இந்தத் தொழில் பயிற்சி நிலையங்கள், தொழில் நுணுக்கக் கல்லூரிகள் இவைகளைப்பற்றி அதுவும் சுய நிதிக் கல்லூரிகளைப் பற்றி உடனடியாக ஆய்வு நடத்தி, தேவையானால், 'இன்ஸ்பெக்ஷன்' நடத்தி, அவைகளிலே எவை தொடர்ந்து அனுமதிக்கப்படலாம் என்று தீர்மானியுங்கள், எவை சீர்திருத்தப்படலாம் என்பதையும் தெரிவியுங்கள், எவை அடியோடு நிறுத்தப்பட வேண்டுமென்பதையும் தெரிவியுங்கள் என்று அவர்களுக்கே அந்த ஆலோசனையை நாங்கள் வழங்கியிருக்கிறோம். அவர்கள் தருகிற ஆய்வின் அடிப்படையில் இன்னும் ஓரிரு திங்களில் தகுந்த முடிவு எடுக்கப்படும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இன்னும் ஒரு கருத்து. பல்கலைக் கழகங்கள் பல்வேறுபட்ட விதிகளுடன் கூடிய சட்டதிட்டங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். (குறுக்கீடு).

**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள பொறியியல் கல்லூரி தனியாருக்கு வழங்கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். வைத்தியக் கல்லூரிகளை தனியார் சுய நிதித் திட்டத்தின் கீழ் எத்தனை பேருக்கு வழங்கியிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியைப் பற்றி நான் நேரடியாக ஆதாரத்தோடு தெரிவிக்க உரிமையில்லை. இருந்தாலும் கருத்தளவிலே மூன்று இடங்களிலே வழங்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன்.

அவ்வாறு வழங்கப்பட்டதற்குப் பின்னர், அதைப்பற்றி எப்படி ஆய்வு செய்யப்பட வேண்டுமென்பது இனிமேல்தான் ஆலோசிக்கப்பட வேண்டுமென்று நான் எண்ணுகிறேன்.

இன்று பொறியியல் கல்லூரிகள் பலப்பல திறக்கப்பட்ட காரணத்தால் அதுபற்றி உடனடியாக ஆராய வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதிலேயும் பாலிடெக்னிக்குகள் என்ற முறையில் திறக்கப்பட்ட நிலையங்கள், பல இடங்களில் வெறும் கொட்டகைகளில்தான் இருக்கிறது என்றும், 4 கொட்டகைகளைப் போட்டு, ஒரு பல தொழில் பயிற்சி நிலையம் என்று இசைவு பெற்றுத் தொடங்கியவர், அதற்குப் பின்னால் இன்னொரு இடத்திலே போய், 4 கொட்டகைகளைப் போட்டு, மறுபடியும் பாலிடெக்னிக் தொடங்க உரிமை பெற்றுள்ளார் என்றெல்லாம்கூட நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே, அதனுடைய விளைவு மாணவர்களைப் பாதிக்கும் என்ற காரணத்தினால், பயிற்சி பெறுகிற மாணவர்கள் தகுதி பெறாத நிலையில் அதனால் பாதிக்கப்பட்டு, சமூகம் பாதிக்கப்படும் என்ற காரணத்தால், இவை உடனடியாக ஆராயப்படுகின்றன. பல்கலைக் கழகங்களுடைய சட்டதிட்டங்கள் ஒவ்வொரு காலக்கட்டத்தில் ஒவ்வொரு சட்டதிட்டம் என உருவான காரணத்தால் அதிலே சில வேற்றுமைகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த வேற்றுமைகளைக் கூடுமானவரையில் குறைத்து ஒரே சட்டமாக உருவாக்க முடியுமா என்பது குறித்து ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஆய்வு முடிந்து, அமைச்சரவைக் கூட்டத்தில் அதை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னர், அதற்கான தகுந்த சட்டம் ஒன்று இந்த அவையில் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நவோதயா வித்யாலயங்கள் என்ற பெயரைக் கூட, தமிழ்நாட்டிலே உச்சரிக்கிறபோது, சரியாக உச்சரிப்பது இல்லை. இருந்தாலும்கூட, நவோதயா வித்யாலயங்களை 5, 6 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் மத்திய அரசு புதிய கல்விக் கொள்கை என்று அறிவித்தபோது, அப்போதே எதிர்ப்புத் தெரிவித்த கட்சி தான் திராவிட முன்னேற்றக் கழகம். அதேபோன்று அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் சார்பிலும் எதிர்ப்புதான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு உள்ள உண்மையான காரணங்கள் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்வதற்காக நான் சொல்கிறேன். தமிழ்நாட்டில் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் 4,709 இருக்கின்றன. நடுநிலைப்பள்ளிகள் அதாவது 8 ஆவது வகுப்பு வரையில் உள்ள பள்ளிக்கூடங்கள் 5,707 இருக்கின்றன. மேலநிலைப பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள் 36 இலட்சம் பேர். நடுநிலைப் பள்ளிகளிலே படிக்கின்ற மொத்த மாணவர்கள் 29 இலட்சம் பேர். இந்த 29 இலட்சம் பேரில், 6, 7, 8 ஆவது



வகுப்பில் படிக்கக் கூடிய மாணவர்கள் ஏறத்தாழ 12, 13 இலட்சம் பேர். ஆக, நவோதயா பள்ளிக்கூடங்கள் எந்த வகுப்புகளுக்காக ஏற்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறதோ, அதே வயதுள்ள காலக்கட்டத்திலே படிக்கின்ற தமிழ்நாட்டு மாணவர்கள் 48 இலட்சம் பேர். பெரிய மாவட்டங்களிலே 2½, 3 இலட்சம் பேர். சிறிய மாவட்டங்களிலே 1½ இலட்சம் பேர். அப்படி இருக்கிற மாவட்டங்கள் இப்போது 20. நவோதயா பள்ளிக்கூடங்களை, 20 பள்ளிக் கூடங்களை அங்கே ஏற்படுத்துவார்கள், ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்ற அளவில். ஒரு மாவட்டத்திற்கு 200 பள்ளிகள், 250 பள்ளிகள் இருக்கிற இடத்தில், ஒரேயொரு பள்ளிக்கூடம், மத்திய அரசுப் பணத்தில். நம்முடைய பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்கு ரூ. 10, ரூ. 15 இலட்சங்கூடச் செலவிட முடியாத போது, அவர்கள் ரூ. 1 கோடி செலவிட்டு ஒரேயொரு பள்ளிக்கூடம் அமைப்பர்.

(பிற்பகல் 1–40)

2½ இலட்சம் மாணவர்கள் ஒரு மாவட்டத்திலே இருந்தால், நவோதயாவில் இடம் தரப்போவது 500, 600 மாணவர்களுக்கு. இந்த 500, 600 மாணவர்கள் வெள்ளிக் கிண்ணத்திலே பால்சோறு சாப்பிடுவார்கள். கலயத்திலே கஞ்சி கூடக் குடிக்க வழியற்ற பிள்ளைகள் மற்றப் பள்ளிக்கூடங்களிலே படிப்பவர்கள். இந்த வெள்ளிக் கிண்ணம்—வெள்ளிக் கரண்டி ஜாதியை தமிழ்நாட்டில் ஏற்படுத்த இந்த அரசு விரும்பவில்லை. 500, 600 பேர்களுக்கு தரப்படுகிற வசதிகள், அந்த ஆசிரியர்கள் சம்பளம், அந்தக் கட்டிட அமைப்பு இவையெல்லாம் விரும்பத்தகாதது அல்ல. 100 மாணவர்களில் 2 மாணவர்களுக்கு அந்த வாய்ப்பை அளிக்கிற போது, மத்திய சர்க்கார்தான், மக்கள் மத்தியில் மக்களுக்காகக் கோடிக்கணக்காகச் செலவிடுகிற அரசாக இருப்பது போன்ற ஒரு தவறான உணர்வு ஏற்படும். இந்த Posh அட்மாஸ்பியர், பிரபுக்களுடைய வர்க்கச் சூழலை இங்கே உருவாக்கி, அந்த இடத்திலே இந்தியைக் கற்றுக் கொடுத்தால் உள்ளபடியே மாணவர்கள் அந்த வசதியிலே மயங்கி அதைப் படிக்கக் கூடும். இந்தி படித்தால் இந்த வசதி வாய்க்கும் என்ற எண்ணம் நம்முடைய மக்களுக்கு, வறுமையிலே வாடுகிற மக்களுக்கு, ஏழ்மையிலே இருக்கிற மக்களுக்கு, வேலையில்லாத் திண்டாட்டத்திலே இருக்கிற மக்களுக்கு ஏற்படும். இந்தி என்ற அந்த மொழியைத் தமிழ்நாட்டு மக்களிடம் புகுத்துவதற்கு இது உள்ளபடியே ஒரு மீன் தூண்டில். சாதாரணத் தூண்டில அல்ல. தங்கத் தூண்டில்.

அந்தத் தங்கத் தூண்டில் அனுமதிக்கப்படத் தேவையில்லை என்ற அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான், மாணவர்களுக்கு இடையிலே தேவையில்லாத ஒரு வேற்றுமை; தமிழ்

நாட்டு மக்களுடைய கல்வி வளர்ச்சிக்கு நேரிடையாகப் பயன்படாத ஒரு காரியம், மிகப் பெரிய நிதிப் பொறுப்பை மாநில அரசு ஏற்று நிறைவேற்றுவதைப் பற்றிக் கவலைப்படாமல், மத்திய அரசு முத்திரையைக் குத்துவதற்காக ஏற்படுத்துகிற இந்தப் பள்ளி, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, எந்த மாநிலத்திலும் கூட, கேடு பயக்கும். மற்றவர்கள் உணர்ந்திருக்கிறார்களோ இல்லையோ, நாம் உணர்ந்திருக்கிறோம். உணர்ந்திருக்கிற காரணத்தினாலேதான் இன்றைக்கு மறுப்புச் சொல்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இங்கே பேசிய உறுப்பினர்கள் எம்.எஸ்.சி., எம்.காம்., அதைப்போன்ற பட்ட மேற்படிப்புகளையெல்லாம் தமிழிலே படிக்க வேண்டுமென்ற கொள்கை இருந்தது. அந்த முயற்சி சரியாக நடைபெறவில்லை என்று குறிப்பிட்டார்கள். இன்னும் சிலர் குறிப்பிடுகிறபோது தமிழிலே படிக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால், தமிழிலே படிப்பவர்களுக்கு, அலுவலகங்களுக்குத் தேர்வு செய்யும் போது முதன்மை தரப்படுவதில்லை. அதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கருத்தையும் தெரிவித்தார்கள். வேலை கிடைக்கிறதா, கிடைக்கவில்லையா என்பது இன்னொரு வகையான பிரச்சினை. ஆனால், தமிழிலே படிக்கிற வாய்ப்பை அளிக்க வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. வாய்ப்பு இருக்க வேண்டும். வேலை கிடைப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். இந்தியாவிலே வேலை இல்லாத் திண்டாட்டம் இருக்கிற காரணத்தால் பள்ளிக்கூடங்களை மூடிவிட முடியாது. எனவே, அப்படிப்பட்ட அடிப்படையில் இந்தக் கல்வி தமிழிலே வழங்கப்பட வேண்டும் என்பதற்கு இன்றைக்குத் தடையாக இருப்பது தகுந்த பாடப்புத்தகம் இல்லை என்பது, பட்டப் படிப்புக்கு இருக்கிற புத்தகங்கள் கூட முழு அளவுக்குப் போதுமானதாக இல்லை என்ற குறை இருக்கிறது. தமிழிலே எழுதப்பட்ட புத்தகங்கள் எல்லாம் 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே எழுதப்பட்ட நூல்களாக இருக்கின்றன. பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் மாணவர்கள் தாங்கள் விரும்பிய வண்ணம் படித்து வளர்ச்சி அடைய வேண்டுமானால் 1-க்கு நான்காகத் தகுந்த புத்தகங்கள் தமிழிலே வரவேண்டும். ஊக்கத்தோடு செய்ய வேண்டிய அந்த முயற்சி இடைக்காலத்திலே தடைப்பட்டுப் போய்விட்டது. இனி தொடர்ந்து பட்டப் படிப்புக்கான நூல்கள் பலப்பல வெளிவருவதற்கும் இது போன்று மேல் பட்டப்படிப்புக்கான தமிழ் ஏடுகள் உடனடியாக இயற்றப்பட்டு வெளிவருவதற்கும், உரிய முறையில் இந்த அரசு முயற்சிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று மாணவர்கட்கு ஊக்கத் தொகை வழங்கப்படுவது குறித்தும் குறிப்பிட்டனர். இப்போது பட்டப்படிப்பிலே தமிழிலே படிப்பதற்கு ஊக்கத் தொகை, உதவித் தொகை வழங்கப்படுகிறது. சட்டக் கல்லூரியிலே கூட வழங்கப்படுகிறது.



ஆனால், அவர்கள் பல புத்தகங்களை ஆங்கிலத்திலேதான் படிக்கிறார்கள். சில நூல்கள்தான் தமிழிலே இருக்கின்றன. இன்னும் அதிகமான நூல்கள் தமிழிலே வெளிவரவேண்டும். அப்படி வெளிவருவதன் மூலமாக எந்த உயர் நிலையிலேயும் தமிழிலே படிக்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்த இந்த அரசாங்கம் முயற்சிக்கும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

இங்கே ஒரு கருத்து. ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதி வெற்றி பெறுவதிலே தமிழ்நாடு பின் தங்கிவிடுகிறது, தமிழ்நாட்டு மாணவர்கள் தகுந்த தேர்ச்சி பெற முடியவில்லை என்கின்ற அந்தக் குறையைப் பல உறுப்பினர்களும் எடுத்துக் காட்டினார்கள். அந்தக் குறை ஒரு கட்டத்திலே ஏற்படுகிற குறை அல்ல. பல நிலையில் பல்வேறு விதமாக ஏற்படுகிற குறைகளுடைய மொத்த விளைவு அது. அதிலே ஒரே ஒரு குறை நீங்கினால் கூட, இந்தக் குறையைத் தவிர்க்க முடியும். போட்டியிடுகிற மாணவர்கள், அதற்காகச் செல்லுகிற மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். 700 பேர்கள் போவதற்குப் பதில் 2 ஆயிரம் பேர் போகிற முறையில் அதன் எண்ணிக்கை கூடி, அந்தப் போட்டியிலே ஈடுபட்டாலும் கூட, இந்தக் குறை நீங்கிவிடும். போட்டியிடுகிற மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இது ஒரு காரணம். 500 பேர்களுக்கு 5 பேர் தானே என்பது ஒரு கேள்வி. 500 பேர்கள் ஆயிரம் பேர்களாகப் போட்டியிடக்கூடிய அளவுக்கு அதிலே முனைப்பு ஏற்படுத்துவதற்கு, ஊக்கம் தருவதற்கு ஒரு முயற்சி வேண்டும். மற்றொன்று, பல்கலைக்கழகக்கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும். அது குறித்து ஆய்வுரைகூற திரு. கார்த்திகேயன் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கை ஆலோசனையில் இருக்கிறது. அதிலேயும் பல்வேறு கட்டங்களில் நம்முடைய மாணவர் தகுதியை உயர்த்த வேண்டியிருக்கிறது. கல்வித்தரம் உயர கல்லூரியிலே உள்ள நூல்நிலையங்களில் அதிகமான நூல்கள் இருக்க வேண்டும். மாணவர்களுக்கிடையிலே கருத்துப் பரிமாறிக்கொள்வதற்கான பட்டிமன்றம் டிபேட் அதிகமாக வளர வேண்டும். மாணவர்களுடைய எக்ஸ்பிரஷன், பேச்சுக்கான ஆற்றல் வளர்க்கப்பட வேண்டும். மாணவர்களுடைய ஜெனரல் நாலெட்ஜ், பொது அறிவு உயர்வதற்கான முறையில் பள்ளித் தேர்வுகளிலிருந்து கல்லூரித் தேர்வு வரையில் ஜெனரல் நாலெட்ஜ் இடம் பெற வேண்டும். இப்படிப் பல ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆலோசனைகளை மெல்ல நிறைவேற்றுவதற்கு பல்கலைக்கழகங்கள் மூலமாக உரிய முறையில் இந்த அரசு முயற்சிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல இன்னொன்று. ஆங்கிலத்தினுடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதிலே இரண்டு விதமான கருத்து உண்டு. ஒருவர் ஆங்கிலத்திலே நல்ல தேர்ச்சி உடையவராக

இருப்பார். ஆனால், அந்த நல்ல தேர்ச்சி கூட அவர் ஆங்கிலத்திலே புளுயண்ட்டாகப் பேசுவதற்குரிய அந்த ஆற்றலைத் தராது. ஆங்கிலம் பேச்சிலே சாதாரணத் தேர்ச்சி இருக்கும். மற்றவர்களை விட அவர் ஆங்கிலத்திலே வல்லவராகப் பேசுவார்.

An expert in the English language may not be able to express himself so well, but an ordinary student of English may be able to express himself better than the expert.

இது உலகத்து இயற்கை. எனவே, அதன் காரணமாக நல்ல முறையில் ஆங்கிலத்தில் பேச்சுத் தேர்ச்சி பெற வேண்டும் என்ற ஒரு கருத்து நிபுணர்களாலே தரப்பட்டிருக்கின்றது. அது எனக்கு முழு உடன்பாடானது அல்ல. அந்த அடிப்படையிலேதான், தொடக்கப் பள்ளியிலே முதல் வகுப்பிலேயே ஆங்கிலத்தை பேச்சு மொழியாக அவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான கான்வர்சேஷனல் லாங்குவேஜ்-உரையாடல் மொழியாக ஆங்கிலத்தை பேச்சு முறையில் அவர்களுக்குக் கற்றுத் தருவதற்காக முதல் வகுப்பிலே ஆங்கிலம் தொடங்குவதற்கு ஒரு பாடத் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. நம்முடைய தாய் மொழிக் கல்வியிலே ஒரு செம்மை நிலை பெறுவதற்கு முன்னதாக தொடக்க நிலையிலேயே " ஆங்கிலம் " புகுத்தப்படுவது முறையாகத் தோன்றவில்லை. Onestep forward, ஒரு நிலை முன்னிலையிலே தாய் மொழியிலே கல்வி பெறுவதற்கு முன்னால் ஆங்கிலக்கல்வியைப் பிள்ளைகளிடத்திலே பேச்சு மொழியாக கற்றுத தந்தால் தாய்மொழிப் பற்று உருவாகாது என்பது கூட அல்ல, தமிழில் பேசுகின்ற அந்த ஆர்வமே குன்றிப் போய்—தொடக்கத்திலேயே பெற்றோர்களிடத்திலேயே நிச்சயமாகப் பிள்ளைகள் ஆங்கிலத்திலே பேசுவார்கள். இரண்டு காரணம். ஒரு புதிய மொழியில் பேசுகிறோம் என்பதில் ஒரு பெருமை. அவர்கள் என்ன தவறாகப் பேசினாலும் பெற்றோருக்குத் தெரியாது என்பது அது ஒரு பெரிய வாய்ப்பாகத் தோன்றுவது. ஆகவே, சிறுகுழந்தைகளை ஆங்கிலம் பேச வைத்து நம்முடைய நாட்டில் தமிழில் பேசுகின்ற அந்த இயற்கை ஆர்வத்தைக்கூடக் கெடுத்துவிடக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான் முதல் இரண்டு வகுப்பில் ஆங்கிலத்தைப் பயிற்றுவிக்கத் தேவையில்லை, ஏற்கெனவே இருந்ததைப்போல் மூன்றாம் வகுப்பிலே தொடங்கினால் போதும் என்ற முடிவு இந்த அரசால் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், முதல் இரண்டு வகுப்பில் இந்த ஆங்கிலப் பேச்சு மொழிக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் பாதி நேரமாவது தமிழிலே தரும் பயிற்சியை வளப்படுத்துவதற்கு, பிள்ளைகளுக்குத் தெளிவு ஏற்படுத்துவதற்கு அந்த நேரத்தை ஒதுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேறு எந்தப் பாடங்களுக்கு மிச்ச நேரத்தை ஒதுக்குவது என்பதும் ஆலோசிக்கப்படும். மூன்றாம் வகுப்பிலிருந்து......



திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே சென்னை போன்ற பெரு நகரங்களில் வசதி வாய்ப்பு உள்ள குழந்தைகள், அதிகாரிகளுடைய குழந்தைகள் இவர்களெல்லாம் எல்.கே.ஜி., யூ.கே.ஜி.,யிலிருந்து ஆங்கிலத்திலே பேச ஆரம்பிக்கிறார்கள், படிக்கிறார்கள். மூன்றாம் வகுப்பு என்று சொல்கின்ற போது இது யாரை பாதிக்கும் என்றால் சாதாரண ஏழை எளியவர்களுடைய குழந்தைகள், கிராமங்களிலே வாழ்கின்ற குழந்தைகளைத்தான் பாதிக்கும். இந்த வாய்ப்பு அவர்களுக்குத் தடுக்கப்படுகின்றபோது அல்லது மறுக்கப்படுகின்றபோது. பின்னாலே அவர்கள் கம்ப்பீட் பண்ண வேண்டுமென்று சொன்னால்—புரொபெஷனல் கோர்ஸஸ் போகின்ற போது எல்லோரும் ஒரே மாதிரிதான் எக்ஸாம் எழுத வேண்டும். இங்கே படிக்கின்றவர்களும், கிராமத்திலேயிருந்து வருபவர்களும் ஒரே தேர்வு எழுத வேண்டும். அப்போது இங்கே படித்தவர்கள், இந்த வாய்ப்பை ஏற்கெனவே பெற்றிருந்தவர்கள் அதிலே வெற்றி பெறவும், புரொபெஷனல் கோர்ஸஸ் சேரவும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். எம்.பி.பி.எஸ்., பி.ஈ., பெறவும் வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பு இல்லாமல் கிராமத்தில் இருக்கின்ற விவசாயிகளுடைய குழந்தைகள், ஆதி திராவிடர்களுடைய குழந்தைகள், ஏழைகளுடைய குழந்தைகள், இதனாலே பாதிக்கப்படுவார்கள். இந்த வாய்ப்பையும் அதிலே தருவதிலே தவறு இல்லை. தமிழ் பேசுவது என்பது—மீன் குஞ்சுக்கு நீந்துவதற்கு நீங்கள் கற்றுத் தர வேண்டியது இல்லை. தமிழ் மொழியிலே பேசுகின்ற பயிற்சி தன்னாலே வரும். ஆங்கிலம் தான் வராது. அதிலே பிரத்யேக சலுகை கொடுத்து இங்கிருப்பதைப் போல அங்கும் செய்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் கல்வி நிலையங்களிலே இருக்கின்ற வேறுபாடுகளை இங்கே உணர்த்தினார்கள். இங்கேயுள்ள கான்வென்ட் பள்ளிக்கூடங்களில் அந்தப் பிள்ளைகள் எந்தச் சூழ்நிலையிலே படிக்கிறார்கள் ? அங்கேயுள்ள ஆசிரியர்கள் எத்தகைய பயிற்சி பெற்றவர்கள் ? துவக்கப் பள்ளியிலே அதே பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நீங்கள் எதிர்பார்க்க முடியுமா? உங்களால் நடத்த முடியுமா ? இன்னும் எத்தனை ஆண்டுக் காலம் ஆகும் ? மேலும், இங்கு பேசிய திரு. இராமச்சந்திரன் அவர்கள் சொன்னார்கள். ஒரு அறை கூட இல்லாத பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்றார். கான்வென்ட் பள்ளிக்கூடங்களோ, அதுபோன்ற பள்ளிக்கூடங்களோ எந்தச் சூழ்நிலையில் நடத்தப்படுகின்றன ? அவர்களுக்குக் கிடைக்கின்ற வசதி என்ன ? ஆகவே, அந்தச் சூழ்நிலையில் இல்லாத பிள்ளைகளிடத்திலே ஆங்கிலத்தைச் சொல்லித் தருவது தவறான விளைவை ஏற்படுத்தும் என்று தான் கூறுகிறேன்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [1989 ஏப்ரல் 8

**ஆனால்,** மாறாக, மூன்றாவது வகுப்பிலேயிருந்து அந்தப் பிள்ளைகளிடத்தில் ஆங்கிலப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை அதிகப்படுத்தலாம். அதற்கான தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு ஆங்கிலம் எத்தனை மணி நேரம் நடத்தப்படுகிறதோ, அதைவிட அதிகமாகவே ஓரிரு மணி நேரம் வாரம்தோறும் நடத்தி, முதல் வகுப்பிலே பேச்சு மொழியாக ஆங்கிலத்தைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற தவறான முறையை அவர்களிடத்திலே ஏற்படுத்தாமல் மூன்றாவது வகுப்பிலிருந்து 10ஆவது வகுப்பு வரை அந்த அளவிற்குள் அவர்கள் பெற வேண்டிய ஆங்கில அறிவை, நிறைவுடையதாக ஆக்க, பயனுடையதாக ஆக்க, தெளிவுடையதாக ஆக்க அந்தப் பாடத் திட்டமும் அதற்குரியதாக அமைக்கப்பட, அதற்காக எந்த அளவு தகுதியுள்ள ஆசிரியர்கள் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டுமோ, அதற்காக அவர்கட்குத் தனிப் பயிற்சி வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அதற்கான திட்டங்கள் அரசாங்கத்திலே இருக்கின்றன.

(பிற்பகல் 1–5( )

ஆங்கிலத்தை எந்த முறையில் அந்தப் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிப்பதன் மூலமாக, ஆங்கிலத்திலே தேர்ச்சியின்மை காரணமாக ஏற்படக்கூடிய குறைபாட்டை மாற்றலாமோ அந்த முயற்சியை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொளகிறேன். இவைகள் மூலமாக ஓரளவிற்கு அகில இந்தியப் போட்டித் தேர்வுகளில் நம்முடைய மாநிலத்துப் பிள்ளைகள் கலந்துகொள்கிறபோது இன்றைக்கு ஏற்படுகிற வீழ்ச்சி நிலை மாற்றப்படும் என்று எதிர்பார்க்கலாம். இவையெல்லாம் 10 ஆண்டு, 12 ஆண்டு ஆகக்கூடியவை. இதற்கிடையில் ஐ.ஏ.எஸ். தேர்வுக்காகச் செல்லக்கூடிய கல்லூரி மாணவர்கள் அதற்காகத் தனிப் பயற்சி பெறுகிற ஒரு நிலை இருக்கிறது. அந்தத் தனிப் பயிற்சியை இன்னும் தரமுடையதாக ஆக்க அல்லது தேவையானால் அதை இன்னும் இரண்டு மாதம், மூன்று மாதம் அதிகப்படுத்த, அந்தப் பயிற்சி மூலமாகத் தேர்வுக்குப் போகிற மாணவர்கள் இப்போது பெறுவதைவிட இன்னும் சிறப்பான தகுதி பெற ஏதேனும் வழி செய்யலாமா என்பதும் ஆலோசிக்கப்படும். அதுமட்டுமின்றித் தமிழிலேயும் ஐ.ஏ.எஸ்., தேர்வு எழுதலாம் என்று ஏற்கப்பட்டுள்ளது. ஆனால், நம்முடைய பிள்ளைகளுக்கு அந்த உரிமை இருந்தும்கூட தமிழிலே நல்ல ஊக்கத்தோடு அந்தத் திறமையை ஊட்டி வளர்க்காத காரணத்தால் தமிழிலே எழுதலாம் என்று சொன்னாலும்கூட, அவன் ஆங்கிலத்திலே தேர்ச்சி பெறவில்லை என்பது ஒரு பக்கம் இருந்தாலும், தமிழிலே பெற்ற தேர்ச்சியிலே நம்பிக்கை இல்லாதவராக நம்முடைய மாநிலத்துப் பிள்ளைகள் பல பேர் இருக்கிறார்கள். எனவே, இன்னொரு பக்கம் தமிழிலேயும் எழுதலாம் என்ற உரிமையைப் பயன்படுத்திக் கொள்ள தமிழிலே நல்ல ஆற்றல் பெறுவதற்கும் ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். பொது அறிவு ஓங்குவதற்கும் ஒரு வழி காணப்படும்....



1989 ஏப்ரல் 8]

**திரு. பெ. சீனிவாசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, திரு. திருநாவுக்கரசு அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினையின் அடிப்படையில் அதற்குப் பரிகாரமாக, அந்த என்ட்ரன்ஸ் எக்ஸாம் வரும்போது நம்முடைய க்ரூப்-1, க்ரூப்-2 இப்படி வருகிறது—புரொபஷனல் காலேஜ் என்ட்ரன்ஸ் எக்ஸாம் வரும்போது கிராமப்புறத்திலே படித்த மாணவர்களுக்கென்று '' ஹேண்டி கேப்ஸ் '' மார்க் கொடுக்கப்படுமா? அப்படி ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாக இதைச் சரிக்கட்ட முடியுமா என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கிரேஸ் மார்க்ஸ் என்று........

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** தமிழ்நாட்டிலே இருக்கிற (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கிற ஏறக்குறைய 70 இலட்சம் குழந்தைகள், குடும்பங்கள், ஏழை எளிய மக்களுடைய வாழ்வு, வருங்காலம் பற்றிய பிரச்சினை. இப்போதே கூட நீங்கள் முடிவை அறிவிக்க வேண்டியதில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, அதற்குப் பின்னாலே எப்படி இதுபோல் கார்ப்பரேஷன் அளவிலே இருக்கிற பெரிய நகரங்களில் எல்லாம் அந்த வாய்ப்பு இருக்கிறதோ, அதுபோல் மூன்றாவதில் இருப்பதை—பள்ளி வசதிகளைப் பற்றிச் சொன்னீர்கள்.— மூன்றாவதற்கும் அதே வசதிதான். ஒன்றாவதற்கும் அதே வசதிதான். 5ஆவது வரைக்கும் இருக்கிற பள்ளிக்கூடம் தான் கிராமங்களிலே இருக்கின்றன. அதிலே மூன்றாவதிலிருந்து துவங்கினாலும் அதற்குப் பிரத்தியேக வசதிகள் அந்தப் பள்ளியிலே கிடைக்கப் போவதில்லை. ஆகவே, ஒன்றாவது வகுப்பிலேயிருந்தே செய்தால் என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷன் வரும்போது எல்லோருக்கும் ஈக்குவல் ஆப்பர்ச்சூனிட்டீஸ் வரும். இல்லையெனில் ஏழை எளிய குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள். அல்லது அவர் சொன்ன மாதிரி, நம்முடைய அருமைச் சகோதரர் திரு. சீனிவாசன் சொன்னது மாதிரி, என்ட்ரன்ஸ் எக்ஸாம் வருகிறபோது கிராமத்திலிருந்து வருகிற குழந்தைகள், இப்படி மூன்றாவது, நான்காவதிலிருந்து படிக்கின்ற வாய்ப்புப் பெற்றவர்களுக்கு ஏதாவது ஒரு ஆப்பர்ச்சூனிட்டி, பர்சன்ட்டேஜ் சலுகை தரவேண்டும். அதிலே வாய்ப்புக் கிடைக்கிற விதத்திலே கிரேஸ் மார்க் போடலாம். இப்படி ஏதாவது சலுகை செய்ய வேண்டும். ஆனால், சட்டத்திலே சிக்கல் வரும். சட்டப்படி பிரச்சினைகள் வரும். கோர்ட்டுக்குப் போனால் பிரச்சினை வரும். ஆதலால் முதலிலிருந்து இப்படி ஆரம்பித்துவிட்டால் பிரச்சினை இருக்காது. முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் பேசி பின்னாலே கூட அறிவிக்கலாம். இது சாதாரணமான பிரச்சினையல்ல. மக்களுடைய வாழ்வோடு சம்பந்தப்பட்ட பிரச்சினை. பின்னாலே கூட அறிவிக்கலாம். இதை வலியுறுத்தாமல், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முதலமைச்சரோடு கலந்து பேசி பின்னாலே கூட அறிவிக்கலாம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, டிரான்ஸ்பர்மேஷன் ஸ்டேஜ் என்னும் நிலையில் கல்வி நிலையிலே மாற்றங்கள் உருவாகிற பல காலக் கட்டங்களில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் இந்தப் பிரச்சினைகள் ஆய்விலேதான் தொடர்ந்து நீடிக்கும். ஆய்விலே இருக்கவேண்டிய நிலைமை எதனால் என்றால், ஆட்சி மொழியான தமிழ், இன்னும் நடைமுறையில் முழு அளவுக்கு நிலைபெறுவதற்கு வழிசெய்யப்பட வேண்டியுள்ளது. தலைமைச் செயலகத்திலிருந்து பிறக்கிற ஆணைகள் எல்லாம்கூட இனி தமிழிலேயே பிறப்பிக்கப்பட வேண்டும். ஆங்கிலத்திலே மட்டும் வெளியிடக் கூடாது என்று தெரிவித்திருக்கிறோம். இருந்தாலும் ஒன்றிரண்டு இடங்களில் தமிழில் மாறுவதற்கு, சில காலம்—இரண்டு மூன்று மாதம்—ஆகலாம். அப்படி நாம் ஆணையிட்டாலும்கூட, வேறு பல கட்டத்தில், பல்கலைக்கழகத்தில், தொழில் நுணுக்கக் கல்லூரியில், மருத்துவக் கல்லூரியில் பயிற்று மொழியாகத் தமிழைக் கொண்டு நடத்துவது என்று சொன்னால், மூன்றாண்டு, ஐந்தாண்டு, திட்டமிட்டுத்தான் செயலாற்ற வேண்டும். அப்படியுள்ள நிலையில் ஆங்கிலத்தை நாம் புறக்கணிக்கவில்லை. ஆனால் தமிழுக்கு ஊக்கம் தராமல் விட்டுவிடுவோமானால் கிராமத்திலேகூட மாணவர்கள் ஆங்கிலத்திலேதான் படிக்க வேண்டும் என்று எண்ணத் தொடங்கி அவர்களுடைய மனப்பான்மையில் தமிழை விட ஆங்கிலம் உயர்ந்தது என்ற எண்ணம் ஊன்றிப் பதிந்துவிடும். அந்தப் பிள்ளைகளும் அந்தச் சமூகமும் எதிர்காலத்தில் பாதிக்கப்படும். ஆனால் அதற்கு மாறாக ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே நடைபெற்றபோது மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவர்களுக்குத் தேர்வு நடத்தப்பட்டபோது 'ரூரல் பேக்கிரவுண்டு' என்ற அடிப்படையில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட மதிப்பு எண்களில் 5 அல்லது 10 அதற்கு என்று ஒதுக்கப்பட்டு "Rural Background in terms of backwardness of the area," என்னும் தலைப்பில் அந்தப் பின்னடைவுக்காக எண்கள் வழங்கப்பட்டன. இப்போது இங்கே கூட திரு. பாண்டியன் அவர்கள் நுழைவுத் தேர்வு பற்றி இந்த அரசு என்ன முடிவு செய்துள்ளது என்று கேட்டார்கள். பொறியியல் கல்லூரிக்கு, மருத்துவக் கல்லூரிக்கு கடந்த ஆண்டு எந்த நுழைவுத் தேர்வு நடைபெற்றதோ அந்த நுழைவுத் தேர்வு இந்த ஆண்டும் நீடிக்கும். ஏன் என்றால் அதை முழுமையாகப் பரிசீலனை செய்து மாற்ற வேண்டுமா, வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க நமக்குப் போதுமான நேரம் இல்லாத காரணத்தால் கடந்த ஆண்டு முறையே இந்த ஆண்டும் நீடிக்கும். தேவையானால் அடுத்த ஆண்டு அது பரிசீலனைக்கு உரியது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அப்போது நேர்முகத் தேர்வுக்கு அதிக முக்கியத்துவம் இருந்த காலம். அந்த நேர்முகத் தேர்வில் பிற்படுத்தப்பட்ட வட்டாரத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்குச் சில தனி உரிமைகள், சலுகைகள் வழங்கப்பட்டன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அதுமட்டுமல்ல, இப்போது அமைந்து இருக்கிற பாடத்திட்டம், தொடக்கப்பள்ளியிலிருந்து 10-வது வகுப்பு வரையில் அல்லது பிளஸ் 2-மேல்நிலை வகுப்பு வரையில், அந்தப் பாடத்திட்டங்கள், புதிதாக அண்மைக் காலத்தில் நிபுணர் குழுவால் உருவாக்கப்பட்ட அந்த பாடத்திட்டங்களை இப்போது நடைமுறைப்படுத்த தொடங்கி இருக்கிறார்கள். அது முதல் வகுப்பு, 3-வது வகுப்பு அதற்குப் பின்னர் 6-வது வகுப்பு என்று தொடங்கியிருக்கிறது. அடுத்த ஆண்டு 2-வது வகுப்பு, 4-வது வகுப்பு ; அதற்கு அடுத்த ஆண்டு 3-வது வகுப்பு, 5-வது வகுபபு என்று இப்படி ஒரு முறையிலே அது இடம்பெற உள்ளது. அந்த முறைப்படி வரும் பாடத்திட்டங்களில் சில பாடஙகள் மாணவர்கள் தாங்கமுடியாததாக அல்லது கிராமத்துப் பள்ளியில் சொல்லித்தர முடியாததாக அல்லது விளங்காததாக சற்று சிக்கலாக இருக்கிற பாடங்களும் இருக்கின்றன. சில பாடங்கள் மாணவர்கள் அடுத்த வகுப்பில் படிக்கக்கூடியதாக இருக்கின்றன. அவையெல்லாம் கூட ஆய்வு செய்யப்பட்டு அந்தப் பாடத் திட்டங்கள் நிபுணர் குழுவால் தெரிவிக்கப்பட்டாலும் கூட நடைமுறையில் மாணவர்கள் பயில்வதற்கு ஏற்றதாக உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதிக நேரம் நான் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் கூட, சில செய்திகளை இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினைகளின் அடிப்படையில்தான் தெரிவிக்க வேண்டும். பேசுகிற முறையிலே எடுத்துச் சொன்னால் அதிக நேரம் ஆகும் என்ற காரணத்தால் அவற்றை நான் படித்துவிட விரும்புகிறேன்.

ஆசிரியர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன. அந்தக் குறைகளைப் போக்குவதற்குத் தொடக்கப்பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், அனைவரின் பணிகளும் ஏற்கெனவே முறைப்படுத்தப்பட்டுள்ளன. ரெகுலரைஸ் ஆகியிருக்கிறது.

உயர்நிலைப் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் பணிகளை முறைப்படுத்த ஆணைகள் உடனடியாகப் பிறப்பிக்கப்படும். இந்த ஆணையின் மூலம் சுமார் 898 ஆசிரியர்கள் பயன்பெறுவர். உயர்நிலைப் பள்ளிகளில் நியமிக்க பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது தேவையான கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ள தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

பள்ளி ஆசிரியர்கள் அவர்களுடைய வருங்கால வைப்பு நிதியிலிருந்து கடன் பெறுவதற்குரிய விண்ணப்பங்களும் கடன் தொகையும் இதுவரையில் அந்தந்தப் பள்ளி நிர்வாகத்தின் மூலம்

அனுப்பப்பட்டு வழங்கப்பட்டு வந்துள்ளன. இனிமேல் இந்த விண்ணப்பங்களை நிர்வாகத்தின் மூலம் பெற்று அதற்குரிய தொகைகளைக் காசோலைகள் மூலம் ஆசிரியர்களுக்கு நேரடியாக வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

பள்ளி சாராக் கல்வி முறையில் கடந்த சில ஆண்டுகளாக வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் மேற்பார்வையாளர்களாக 62 பி.எட். ஆசிரியர்கள் பணி புரிந்து வருகின்றனர். தொடர் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்படுவதன் காரணமாக வயது வந்தோர் கல்வித் திட்டம் திருத்தி அமைக்கப்படுகிறது. இதனால் ஆசிரியர்கள் ஆட்குறைப்பு செய்யப்படாமல் தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாடு ஆசிரியர் தேர்வுப் பணி வாரியம் நடத்தும் தேர்வில் அவ்வாசிரியர்கள் கலந்துகொண்டு பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்குரிய வாய்ப்பினை அவர்கள் அனைவருக்கும் வழங்குவது எனக் கருதப்பட்டுள்ளது. இது போன்றே பள்ளி சாராக் கல்வித் திட்டத்தில் சுமார் 80 இடைநிலை ஆசிரியர்கள் ஆட்குறைப்புச் செய்யப்படுவதன் மூலம் பணியிலிருந்து நீக்கப்படும் நிலையில் உள்ளனர். எனவே இவர்களை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிப்பது எனக் கருதப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் குறைகள் துறையின் பல்வேறு நிலைகளிலுள்ள அதிகாரிகளால் அவ்வப்போது கவனிக்கப்படுவது இல்லை என்ற புகார் உள்ளது. இது தொடர்பாக அரசு ஆணைகளைப் பிறப்பித்து இருந்த போதிலும் அவை திறம்பட செயல்படுத்தப்படவில்லை.

(பிற்பகல் 2-00)

குறைதீர் அமைப்பை, கிரீவன்ஸஸ் கமிட்டியை நன்கு செயல்படச் செய்வதன் மூலம் திறம்பட நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு விழைகிறது. இதன் மூலம் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளோடு, உதவிக் கல்வி அதிகாரிகள், மாவட்டக் கல்வி அதிகாரிகள், முதன்மைக் கல்வி அதிகாரிகள் ஆகியோர் நிலையில் குறைகளைக் களைவதற்கான கூட்டங்கள் முறையாக நடத்தப்படும். இக்கூட்டங்கள் வருங்காலத்தில் காலாண்டிற்கு ஒருமுறை முறையாக நடத்தப்படும். மாநில அளவில் 6 திங்களுக்கு ஒரு முறை இக்கூட்டங்கள் நடத்தப்படும். ஆசிரியர்களுடைய குறைகளை அவ்வப்போது ஆய்ந்து கவனித்து அவை நன்முறையில் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதே அரசின் விருப்பமாகும்.

அடுத்து, ஆசிரியர்களுக்கான நல நடவடிக்கைகள். ஆசிரியர்கள் எவரும் பணியில் இருக்கும்போது இயற்கையெய்தினால் அவருடைய மகன் அல்லது மகள் ஆசிரியராகப் பணிபுரிவதற்குரிய கல்வித் தகுதியைப் பெற்றிருந்தபோதிலும், அவருக்குத் தற்போது ஆசிரியர் பதவி அளிக்கப்படுவதில்லை. கடந்த காலத்தில் ஆணை அளிக்கப்படவில்லை. அதற்கு மாறாக காலியாக இருக்கும் எழுத்தர் பதவிகளில் நியமிக்கப்படுகிறார்கள். பணி



யில் இருக்கும்போது இயற்கை எய்தும் ஆசிரியரின் மகன் அல்லது மகள் இடைநிலை ஆசிரியர் பயிற்சி, பி.எட்., முதலிய கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தால் அவர் காலியாக உள்ள ஆசிரியர் பதவிகளுக்கு ஏற்ப ஆசிரியராக நியமிக்கப்படுவார். எங்கே இடம் இருக்கிறதோ அந்த ஆசிரியர் பதவியில் இதுவரை நியமிக்கப்படாவிட்டாலும், இனி பணியிலேயிருந்து இறந்து போகின்ற ஆசிரியர்களுடைய மகனுக்கோ அல்லது மகளுக்கோ, ஒருவருக்கு ஆசிரியர் பணி—தகுதிக்கேற்ப நிச்சயமாக வழங்கப்படும்.

கடந்த மூன்றாண்டுக் காலமாக ஆசிரியரின் வீட்டு வசதி வாரியம் எந்த ஒரு பணியையும் புரியவில்லை. ஆசிரியர் வீட்டுவசதி வாரியம் இருந்தது. வாரியத்திற்குத் தலைவர் இருந்தார். வாரியத்திற்கு அலுவலகம் இருந்தது. ஆனால் வாரியம், அது ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்யவில்லை. எனவே, அந்த நிலையில் இப்படிப் பல்வேறு வாரியங்கள் அரசாங்கத்தினுடைய நிதிக்கு வீண் செலவை ஏற்படுத்துகின்ற காரணத்தினால் தேவையில்லை என்ற கருத்தை முதலில் இந்த அமைச்சரவை எடுத்தது. அதற்குப் பின்னர் ஆசிரியர்களுக்காக ஏற்கெனவே தரப்பட்ட உறுதிமொழியின்படி, 2 ஆயிரம் வீடுகள் கட்டித் தருவதற்காக, அதற்காக வாரியம் ஏற்படுத்துவதாக அறிவிக்கப்பட்ட நிலையில், ஆசிரியர்களுக்கு ஒரு ஏமாற்றம் ஏற்படக் கூடாது என்பதற்காக இந்த வாரியத்தினுடைய பணியை நிறைவேற்றுகின்ற பொறுப்பை கல்வித் துறையே, கல்வித்துறை செயலாளர், அவரோடு பணிபுரிகின்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அதற்காக ஒரு தனி அலுவல் அமைப்பு கல்வித் துறையின் கீழே உருவாக்கப்பட்டு, இந்த 2 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற அந்தக் கடமையை நிறைவேற்றலாம் என்றும் இந்த அரசு கருதியுள்ளது.

இப்போது பல்கலைக் கழக ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், பேராசிரியர்கள் இவர்களுக்கெல்லாம் யூ.ஜி.சி. ஊதியம் கடந்த மாதம் முதல் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம், ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தேதியிலேயிருந்து வழங்கப்பட வேண்டிய மொத்த ஊதியத்தின் மிச்சத் தொகை இன்னும் இரண்டு மூன்று திங்களில் சேர்த்து வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தொழில் நுட்பக்கல்வி, என்ஜினியரிங் காலேஜ், பாலிடெக்னிக் இவைகளிலே பணிபுரிகின்றவர்களுக்கு இதுவரையில் அந்த ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. தொழில் நுட்ப ஆசிரியர்களுக்கு அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு பரிந்துரைத்த சம்பள விகிதம் மத்திய அரசிடமிருந்து அண்மையிலே வரப்பெற்றுள்ளது. அந்தச் சம்பள விகிதங்களைப் பொறுத்தவரையில் கல்லூரி ஆசிரியர்களுக்கும், பல்தொழில் பயிலகங்களில்—பாலிடெக்னிக்ஸ்—பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும். அவர்களுக்கு ஒரு விகிதம், என்ஜினியரிங் காலேஜ் ஆசிரியர்களுக்கு ஒரு விகிதம்,

பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில், பணியாளர்களுக்கான செலவில் 80 சதவீதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆனால் பல்தொழில் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான செலவை மத்தியஅரசு ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய அரசு அந்த ஊதியத்தை ஏற்காவிட்டாலும், தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் கடந்த 15 ஆண்டுகளாக திருத்தியமைக்கப்படவில்லை என்பதைக் கருதி அவர்தம் சம்பள விகிதங்களைத் திருத்தியமைத்து செயல்படுத்தப்படும் என்று இந்த அவையில் அரசின் சாரபில் அறிவித்துக் கொள்கிறேன். அதைத் திருத்தியமைப்பதற்காக மத்திய அரசு வழங்கியிருக்கிற ஆலோசனையின் அடிப்படையில் பொறியியல் கல்லூரிப் பேராசிரியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் ஏற்கெனவே அவர்கள் தீர்மானித்த முறையிலே நாம் வழங்குவதானாலோ, பாலிடெக்னிக் ஆசிரியர்களுக்கான ஊதியம் அவர்களாலே தீர்மானிக்கப்படா விட்டாலும் ஏற்கெனவே பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும், பாலிடெக்னிக் ஆசிரியர்களுக்கும் இடையில் எந்த விகிதாச்சாரம் இருந்ததோ அந்த விகிதாச்சாரத்தைப் பின்பற்றி அந்த ஊதியம் விரைவில் அறிவிக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, பொதுவாக உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரியிலே உள்ள இதர அலுவலர்கள், நூலகர்கள், அதே போன்று உடற் பயிற்சியாளர்கள், அந்தத் துறை இயக்குநர்கள் இப்படிப் பலருக்கு வேறு பல வகையினருக்கு, கல்லூரி பேராசிரியருக்கு இன்று யூ.ஜி.சி. ஊதிய விகிதம் வழங்கப்பட்ட நிலையில் ஊதியம் மாற்றியமைக்க வேண்டுமென்ற வேண்டுகோள் இருக்கிறது. அதுபற்றி, தமிழக அரசினுடைய அடுத்த ஊதியக் குழு அறிக்கை இன்னும் ஒன்று அல்லது இரண்டு திங்களில் அரசுக்கு கிடைத்து, அந்த ஊதியக் குழு (பே கமிஷன்) அறிக்கை அடிப்படையில் அவர்களுக்கும் ஊதியம் வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று. இங்கே திரு. லத்தீப் அவர்கள் உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிக்கூடங்களிலே எல்லாம் காலை நேரத்திலேயே பிள்ளைகளுக்கு எல்லாம் ஒழுக்க உணர்வை ஏற்படுத்துவதற்காக இறைவழிபாடு அல்லது திருக்குறள் வழிபாடு நடத்தப்பட வேண்டுமென்று சொன்னார்கள். ஒரு வகையில் ஆசிரியர்களுடைய பொறுப்பு உணர்ச்சி, குறித்த காலத்தில் குறித்த காரியத்தைச் செய்கிற உணர்ச்சி ஏற்படுவதற்காகவும் பிள்ளைகள் குறித்த நேரத்திலே பள்ளிக்கு வரவேண்டுமென்ற உணர்வு ஏற்படுவதற்காகவும் எல்லாப் பள்ளிக்கூடங்களிலேயும் காலையில் மாணவர்கள் ஒரு வரிசையில் நிறுத்தப்பட்டு, தலைமை ஆசிரியர் மற்ற ஆசிரியர்கள் இரண்டு பேரோ, மூன்று பேரோ இருந்து தமிழ் வாழ்த்து பாடுவதோ தமிழ் வாழ்த்து ஏன்று



சொல்லுகிறபோது ' நீராரும் கடலுடுத்த ' என்று தொடங்கும் பாடலைப் பாட இயலாத நிலை இருந்தால், அவர்களுக்கு அதிலே பயிற்சி குறைவாக இருந்தால் இரண்டு திருக்குறள்களைச் சொல்லியாவது மாணவர்களை ஒரு ஒழுங்குக்கு உட்பட்டு பள்ளிக்கூட வகுப்பிலே போய் அமருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. அந்தந்த ஆசிரியர்களும் ஆசிரியர்களுடைய அலுவலை மேற்பார்வை செய்கிற டி.இ.ஒ. போன்றவர்களும், ஏ.இ.ஒ. போன்றவர்களும் எல்லாப் பள்ளிக்கூடங்களும் குறித்த நேரத்திலே தொடங்கப்படுவதற்கும் மாணவர்களுக்கு ஒழுங்கு உணர்ச்சி ஏற்படுவதற்கும் எல்லோரும் ஒரு கட்டுப்பாட்டிலே செயல்படுகிறோம் என்ற எண்ணம் ஏற்படுவதற்கும் இந்த முறையை ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் எல்லாம் 9 மணி, 9-30 மணிக்குத் தொடங்கப்படக்கூடிய நிலை பல இடங்களில் இருக்கிறது. தொடக்கப் பள்ளிகள் எல்லாம் கிராமப் புறங்களில் 8-00 மணிக்கே தொடங்குவதுதான் நல்லது. அந்தப் பிள்ளைகள் வீட்டிலே படிப்பதற்கு, அவர்களுக்கு ஒரு ஊக்கம் அளித்துத் தூண்டும் நிலை கிராமப்புறங்களில் கிடையாது; அதற்கான சூழ்நிலை கிடையாது. அவர்கள் வாழ்கின்ற அந்தக் குடிசையில் வசதி கிடையாது. எனவே, தொடக்கப்பள்ளிகள் 8-00 மணிக்குக் கிராமப்புறங்களில் தொடங்கப்பட வேண்டும். சென்னை நகரில், போக்குவரத்து வசதி, பஸ் வசதி, இரயில் வசதி இவை எல்லாம் தேவைப்படுகிற மற்ற நகரங்களில் சில சிக்கல்கள் இருக்கலாம். ஆனால் கிராமப் பள்ளிக்கூடங்கள் 8-00 மணிக்குத் தொடங்குவது நல்லது என்ற ஒரு ஆலோசனையும் உயர்நிலைப் பள்ளிகள் 9-00 மணிக்குத் தொடங்குவது நல்லது என்ற கருத்தும் எண்ணவேண்டியதாகும். பல ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்குப் பள்ளிகள் கல்வி வழங்குவதிலே ஒரு புதிய ஊக்கம் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையோடு இந்த ஆலோசனையை இந்தத் துறையினருக்கு நான் தெரிவித்துள்ளேன்.

மாணவர்கட்கு நல்ல தொழில் கல்வி வழங்க வேண்டும். மேல்நிலைப் பள்ளியிலே படிக்கிற மாணவர்கள் ' ஒக்கேஷனல் கோர்ஸ் ' பயில வேண்டுமென்ற ஒரு ஆலோசனை வழங்கப்பட்டு பல்வேறு மேல்நிலைப் பள்ளிகளிலே அந்தப் பிரிவும் தொடங்கப்பட்டது. ஆனால் ஒக்கேஷனல் கோர்ஸ் என்பது தொழிலைப் பற்றிய கல்வியாக ஆகிவிட்டதே தவிர, தொழில் திறனைத் தருகிற கல்வியாக அது அமையவில்லை. மத்திய அரசிலே இன்னொரு வகைத் திட்டம் இருக்கிறது, படிக்கிற வகுப்பில் நூற்றுக்கு எழுபது மணி நேரம் — 70 per cent of the hours of working — அவர்கள் தொழிலைப் பயில வேண்டுமென்ற முறையிலே இந்த ஒக்கேஷனல் கோர்சில் ஒரு

[பேராசிரியர் க. அன்பழகன்] [1989 ஏப்ரல் 8

முறை இருக்கிறது. நமது மாநிலத்தில் நூற்றுக்கு நாற்பது விழுக்காடு மாணவர்கள் இந்தத் தொழில் பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டு, அதனுடைய விளைவாக அவர்கள் முழுத் திறமை பெற்று தொழில் நடத்தக்கூடியவர்களாக, 'செல்ஃப் எம்ப்ளாயிங் கப்பாசிட்டி' உள்ளவர்களாக அந்த மாணவர்கள் வெளி வர வில்லை. அதனால் ஏற்படக்கூடிய விளைவு அவர்களும் மற்ற வர்களைப்போல் கல்லூரிக் கல்வியைத் தேடி அலைய வேண்டியவர்களாக, கல்லூரிக் கல்வி பெறவேண்டியவர்களாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்நிலையில் மத்திய அரசு முழு தொழிற் பயிற்சி பெறுகிற தொழில் கல்விக்கு ஊக்கம் தருகிற காரணத்தால் அந்த முறையிலே கடந்தாண்டு 100 மேல்நிலைப் பள்ளிகளில் இந்தத் திட்டம் தொடங்கப் பட்டது. இந்த ஆண்டு மேலும் 100 மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்படும். அதைத் தொடர்ந்து விரிவுபடுத்துவதன் மூலமாகத் தொழில் கல்வியைப் பெற்றவர்கள் தாங்களே தொழில் செய்து, வாழ்க்கை நடத்தக்கூடியவர்களாக, ஒரு முழுமைபெற்ற தொழில் நடத்தக்கூடியவர்களாக அவர்களது பயிற்சியை நிறை வுடையதாக ஆக்க இந்த அரசு முயற்சி செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட தொழில் கல்வி பெற்றவர்கள் முழுநேரப் பயிற்சியைப் பெறாமல் ஏட்டறிவு அளவிலே அந்தக் கல்வியைப் பெற்றவர்கள் மறு பயிற்சி பெறுவதற்கு பாலிடெக்னிக் மூலமாக ஒரு ஆறு மாதப் படிப்பை ஏற்படுத்த முடியுமா என்பதையும் இந்த அரசு ஆலோசிக்கும். அப்படி ஏற்படுத்த முடிந்தால் அவர்கள் எல்லாம் முழுநேரத் தொழிற் கல்வி பெற்றவர்கள் போல், முழுநேரத் தொழில் பயிற்சி பெற்றவர்கள் போல் சுய தொழிலில் ஈடுபட முடியும் என்று நான் நம்புகிறேன்.

(பிற்பகல் 2-10)

மற்றும் ஒன்று. இதுவரையில் தொடக்கக் கல்வியிலே மாணவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு நின்றுவிடக்கூடாது என் பதற்காக அந்த மாணவர்கட்குத் தேர்வு நடத்தக்கூடாது என்ற ஒரு எண்ணம் ஏற்படுத்தப்பட்டு மூன்றாவது வகுப்பு வரையில் தேர்வே நடத்தப்படுவதில்லை. There is no examination அதாவது தேர்வு இல்லை. தேர்வு என்று சொன்னால் பிள்ளை களைப் பயமுறுத்துவதாக ஆகிவிடும் என்று எண்ணிக்கொண்டோ அல்லது தேர்வு நடத்தி முடிவு சொன்னால் பிள்ளைகள் அதற் கடுத்த ஆண்டு படிக்க வரமாட்டார்கள் என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டோ, கடந்த பத்தாண்டுகளாகத் தேர்வே இல்லை. அந்தத் தேர்வை நடத்தாத காரணத்தால் இப்போது பாடம் நடந்ததா என்பதே யாருக்கும் தெரியவில்லை. வகுப்பு நடந்ததா, பாடம் நடந்ததா என்பதே யாருக்கும் தெரியவில்லை. எனவே தேர்வு என்பது அச்சுறுத்துவதாக இருக்கக்கூடாது. ஆனை



1989 ஏப்ரல் 8] [பேராசிரியர் க. அன்பழகன்]

ஊட்டுகிற வகையில் தான் நடைபெற வேண்டும். எனவே வருகிற ஆண்டு முதல் 2-வது 3-வது வகுப்புக்களில் கட்டாயம் தேர்வு உண்டு. அந்தத் தேர்வை நடத்துவது ஆசிரியருடைய பொறுப்பு. அந்தத் தேர்வை நடத்தி, அந்தத் தேர்விலே வெற்றி பெற்ற மாணவர்கள் விகிதாச்சாரத்தைப் பார்த்தால், அந்த விகிதாச்சாரம் அதாவது தோல்வி அடையக்கூடியவர்கள் நூற்றுக்கு 2 பேர், 5 பேர் என்ற அளவுக்கு மேல் இல்லாமல் பள்ளித் துறை இயக்குநரும் பள்ளித் துறை அலுவலரும் கவனித் துக்கொள்ள வேண்டும். அந்த வகுப்புகளில் 100 மாணவர்கள் தேர்வு எழுதினால் அதிலே இரண்டு, மூன்று பேருக்கு மேல் தோல்வி அடையும் நிலை ஏற்படாமல் கவனித்திடவேண்டும்.

அதேபோன்று முதல் வகுப்பிலே கூட தேர்வு நடத்தலாம். அதை யாரும் நிறுத்தத் தேவையில்லை. தேர்வு என்ற ஒன்று நடந்து அதிலே அமர வேண்டும்; அதிலே உட்கார்ந்து எழுத வேண்டும். எழுதத் தெரியவில்லை என்றால் காக்காய் படமாவது போட வேண்டும். அப்படிப் போட்டதற்குப் பிறகு ஆசிரியர் அதற்கு ஒரு மார்க்கு போடவேண்டும். இல்லட்டரேசி யினுடைய அழுத்தம், அறியாமையினுடைய அழுத்தம் எழுத் தறிவில்லாத் தன்மையினுடைய அழுத்தம் இருக்கிறபோது பிள்ளைகளை ஊக்குவிப்பதற்காக ஒரு தேர்வை நடத்தி, பரீட் சைக்குப் போகிறோம் என்று வீட்டிலே தெரிவித்துக்கொள்கிற வகையில் அந்தப் பிள்ளைக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்து, பரீட்சை முடிந்த பிறகு ஒரு துண்டு அட்டையிலே அந்தப் பிள்ளைகள் தேர்வு எழுதியதற்கு, வெற்றி பெற்றதற்கு ஒரு சான்றிதழ், ஒரு சர்ட்டிபிகேட் வழங்குகிற முறையை இந்த ஆண்டு முதல் மேற் கொள்ளவேண்டும் என்று அந்தத் துறையினரை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

பாட நூல்களைப் பொறுத்தவரையில் அதாவது 'டெக்ஸ்ட் புக்ஸ்' என்பனவற்றைப் பொறுத்தவரையில் ஒரு பிள்ளைக்கு இலவசமாக 15 ரூபாய், 20 ரூபாய் என்ற அளவுக்கு வழங்கப் படுகிறது. இந்த நிலையில் ஒரு அட்டைக்கு 5 பைசா, 10 பைசா தான் ஆகும். அதை பிளாஸ்டிக் பையிலே போட்டுக் கொடுத்தால் அந்தப் பிள்ளைகள் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகிற போது, பள்ளிக்கூடம் போகவேண்டுமென்ற ஆர்வம் வரும். படிப்பதற்காகத்தான் போகிறோம் என்ற நினைவு வரும். இல்லை என்றால் அந்த ஊக்கம் இருக்காது. ஆகவே அந்த ஊக்கத்தை ஏற்படுத்துவதற்கு தேர்வு முறை இருக்கவேண்டும் என்பது கருதி தேர்வு நடத்த வேண்டுமென்ற ஆலோசனையை நான் அந்தத் துறையினருக்கு வழங்கி இருக்கிறேன்.

அடுத்து இதுவரையில் மேல்நிலைப் பள்ளியில் படித்த மகளிர், அதற்கு மேல் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு மகளிருக்கு என ஒரு பயிற்சி வழங்கப்பட்டது. ஒரு

பள்ளிக்கூடத்திலே 20 பேர், 25 பேருக்கு என்று வழங்கப்பட்டது. அது தகுந்த பயிற்சியாக அமையவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அந்தத் துறையிலே உள்ளவர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். அதற்கான வாய்ப்பும், சூழ்நிலையும் இல்லை. மகளிருக்கு ஒரு வாய்ப்பு என்ற முறையில் இந்த ஆசிரியர் பயிற்சி அளித்ததனால் இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் 10,000 பேர், 15,000 பேர் படித்து, தகுதி பெற்றவர்கள் என்ற முறையில் வெளியே வர இருக்கிறார்கள். இது தொடருமேயானால், பயிற்சி பெற்று வேலை கிடைக்கவில்லை என்ற ஏமாற்றம் மிகுந்தவர்கள் அதிகமாகிவிடுவார்கள். பயிற்சியும் தகுந்த பயிற்சியாக இல்லை. ஆகவே அந்தப் பயிற்சி நிறுத்தப்படுகிறது. அது அரசாங்கப் பள்ளியாக இருந்தாலும் நிறுத்தப்படுகிறது.

அதற்குப் பதிலாக மாவட்டந்தோறும் ஆசிரியர் பயிற்சியை நல்ல தரம் உள்ளதாக வழங்க, மாவட்டந்தோறும் அரசாங்கத்தின் சார்பாக நடத்தப்படுகிற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுடைய தரத்தை உயர்த்துவதற்கும் ஒரு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இது தொடர்ந்து நடைபெறும்.

இன்னொன்று. ஆசிரியர்கள் பயிற்சியினை அவ்வப்போது ஆய்வு நடத்தி மேம்படுத்துவதற்கு வாய்ப்பாக மாநில அளவில் அந்தத் துறையைச் சேர்ந்த சைதாப்பேட்டையில் இருக்கின்ற பயிற்சிப் பள்ளியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு மத்திய அரசின் உதவியோடு ஒரு திட்டம் நிறைவேற இருக்கிறது.

பொதுவாகவே கல்வித் துறை என்பது தொண்டுத் துறை. ஆசிரியர்களுக்கு எப்படியோ ஒரு சூழ்நிலையின் காரணமாக-வேண்டுமென்று அவர்கள் திட்டமிட்டுச் செய்கிறார்கள் என்று நான் குற்றம் சாட்ட மாட்டேன், சூழ்நிலையினால் தாக்கப்படாத மனிதனே இல்லை—இந்தச் சூழ்நிலையினுடைய விளைவு காரணமாக கடமையுணர்ச்சி குன்றிப் போகும் நிலைமை ஆசிரியர்கள் பலரிடத்தில் இருக்கிறது. அதற்கு மற்றொரு காரணம் இந்தத் துறையைச் சேர்ந்த மேலதிகாரிகள் அதாவது இன்ஸ்பெக்ஷன் ஸ்டாஃப் தங்களுடைய கடமைகளை முழுமையாக நிறைவேற்றுகிற பழக்கத்தைக் கைவிட்டுவிட்டார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு டீ. இ. ஓ. வருகிறார் என்றால் அந்தப் பள்ளிக்கூடத்தில் உள்ளவர்கள் தனிக் கவனம் செலுத்துவார்கள். அதற்குப் பதிலாக இப்போது டி.இ.ஓ. வருகிறார் என்றால் அதைப்பற்றி அங்கே எண்ணிப்பார்க்கிற உணர்வே இல்லை. 'நோ ரெஸ்பான்ஸ்'. அதேபோன்று அங்கே போகிற அதிகாரிக்கும் தான் ஆற்றவேண்டிய கடமை பற்றி நினைவு இல்லை. இது எதனால் கெட்டுப்போனது என்று நான் விளக்கம் சொல்லவில்லை. ஆனால் கல்வி மேம்பட வேண்டுமென்றால் இன்ஸ்பெக்ஷன் தரமாக நடைபெறாவிட்டால் நிச்சயமாக நோக்கம் வெற்றி பெறாது.



பள்ளிக்கூடங்களுக்கு பஞ்சாயத்துத் தலைவரோ, மற்றைய தலைவர்களோ போய் ஆசிரியரைக் கேள்வி கேட்டால் ஆசிரியர் வருத்தப்படுவார். ஆனால் பள்ளிக்கூடத்தில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் என்ற அமைப்பு இருக்கிற காரணத்தால் அந்தத் சங்கத்திலே உள்ளவர்கள் அந்தப் பள்ளி நிர்வாகத்தில் அக்கறையோடு ஆர்வம் காட்டவேண்டும்.

அதற்காக பெற்றோர் ஆசிரியர்கள் சங்கம் இன்னும் சிறப்பாக நடைபெறவேண்டும் என்றும், அந்த பெற்றோர் ஆசிரியர்கள் சங்கத்தினுடைய கண்காணிப்பு ஆசிரியர்களை ஊக்கப்படுத்தவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறேன். அதுபோலவே இந்தத்துறையினுடைய மேற்பார்வையாளர்கள் அவர்களுடைய பொறுப்பை நிலைமைகளுக்கு ஏற்ப ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது ஒவ்வொரு பள்ளியும் கண்காணிக்கப்படுகிறது, இன்ஸ்பெக்ஷன் நடக்கிறது, என்ற நிலையை ஏற்படுத்தவேண்டும்.

அதற்காக ஏ.ஈ. ஓ., டி.ஈ.ஓ. போன்று இருக்கின்ற டெபுட்டி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ், அசிஸ்ட்டென்ட் எஜுகேனல் ஆபீசர் என்று இருக்கின்ற இந்தப் பதவிகளையெல்லாம் ஏறத்தாழ ஒரே அமைப்பாக இணைத்து பஞ்சாயத்துப்பள்ளிகளுக்காக ஒருவர், மற்ற பள்ளிகளுக்காக ஒருவர் என்ற நிலையில்லாமல் ஒன்றாக இணைத்து இந்த ஆய்வு, மேற்பார்வை ஆகிய பணிகளை அதன் பயன்களை அதிகப்படுத்துவதற்கான முயற்சியை அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ் வளர்ச்சிக்காக இந்த அரசு அதிகமாக ஒன்றும் செய்யவில்லை என்பதை திரு. இராமச்சந்திரன் அவர்கள், அதுவும் எனக்குச் சொன்னார்கள், அதிலே எனக்கு மகிழ்ச்சி. ஏனென்றால் அப்படிச்செய்ய நீங்கள் ஒன்றும் விட்டுவைக்கவில்லை அல்லவா? இருந்தாலும்கூட, செய்யவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. அந்த முறையில் தமிழ் வளர்ச்சிக்காக ஆற்றப்படவேண்டிய கடமைகளில் ஒன்று பல்கலைக்கழகங்களின் தமிழ்த் துறைகள் ஆற்றுகின்ற பணிகளை ஊக்கப்படுத்துவது. அதற்குரிய வழிமுறைகளில் ஆய்வுத்திறன் உயர்வதற்கு வழி காணப்படும்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய பணி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தினுடைய பணி உயர்வதற்கு தமிழிலே உள்ள நூல்கள், சங்க இலக்கியங்கள் போன்ற இலக்கியங்கள் ஆங்கிலத்திலே மொழிபெயர்க்கப்பட்டு ஆங்கிலம் முதலான பிற மொழிகளிலேயுள்ள சிறப்பான நூல்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டு எல்லாம் ஒருகால சட்டத்திலே தொடர்ந்து நிறைவேற்ற வேண்டிய முயற்சியாக மேற்கொள்ளப்படும். தமிழக வரலாறு, தொல் பழங்காலத்திலே தொடங்கிய வரலாறு, இடைக்காலத்திலே, இடைப்பழங்காலம் ஒன்று இடையிலே வந்து

காரணத்தினால் சரியாகத் தொடர்ந்து நடைபெறாது நின்று போய், இப்போது அதற்கான குழு மறுபடியும் நியமிக்கப்பட்டு, அந்த விடுபட்ட வரலாறு அல்லது சற்று ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கின்ற அந்த வரலாற்றையும் நிறைவுடையதாக ஆக்கி வெளியிடுவதற்கான முயற்சியும், அதற்குரிய தகுதி உடையவர்கள் மூலமாகத் தொடங்கப்பட்டிருக்கிறது.

மொழி ஞாயிறு, பன்மொழிப் புலவர் தேவநேயப்பாவாணர் அவர்கள், தமிழ் மொழியினுடைய பேராற்றல் உலகத்திற்கு புலப்படத்தக்க அளவுக்கு, ஈழத்தில் வாழ்ந்த ஞானப்பிரகாசர் என்ற பன்மொழிப்புலவர் ஆன அறிஞர், தமிழ் வேர்ச் சொற்கள் உலகத்திலேயுள்ள மொழிகளிலே எல்லாம் காணக் கிடக்கின்றன என்று 50 ஆண்டுகளுக்கு முன்னாலே கண்டு அறிவித்த அந்த ஆய்வைத் தொடர்ந்து, வேர்ச் சொற்கள் ஆய்வு அடிப்படையிலே ஒரு அகராதி, தமிழ் மொழி அகர முதலி ஒன்றை அவர்கள் உருவாக்கினார்கள். ஆனால் பாவாணர் அவர்கள் நீண்டநாட்கள் வாழ முடியாமல் மறைந்துவிட்ட காரணத்தினால் அப்பணி ஒரு பகுதியோடு நின்றுவிட்டது. ஆனால் அவரைத் தங்களுடைய குருவாக, ஆசிரியராக, வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற தமிழ் அறிஞர்களிலே சிலர் அந்த பணியை நிறைவேற்றக்கூடியவர்கள் சிலரே உள்ளனர். அந்த பணி சற்று முடங்கிப்போய் விட்டது. அந்தப் பணியை விரைவாக நிறைவேற்றுவதற்கும் உரிய வழி காணப்படுகிறது. அந்த 'அகர முதலி' பணியும் நடைபெறும், தமிழக வரலாறும் நிறைவு செய்யப்படும்.

அதுபோல, இன்றைக்கு பழஞ்சுவடிகள் பாதுகாப்பகம் ஒன்று சென்னையிலே இருக்கின்றது. அந்தப் பழஞ்சுவடிகளை பாதுகாக்கும் முறைகளில் பாதுகாப்பதுடன் அவற்றிலே எவை அச்சிடப்படவேண்டுமோ அதைப்பற்றியும் ஆய்வு நடத்தி அச்சிட்டு வெளியிடுகிறார்கள்.

அதுபோல வரலாற்று அடிப்படையிலே ரெக்கார்டுகளை பாதுகாக்கின்ற (Archives) அலுவலகம் இருக்கிறது. அந்த ரெக்கார்டுகளை எல்லாம் தேர்ந்தெடுத்து, வரலாற்றுச்சிறப்புடைய ரெக்கார்டுகளை எல்லாம் ஆராய்ந்து அச்சடித்து வெளியிடுகின்ற முயற்சியையும் அரசு மேற்கொண்டுள்ளது. அது போன்ற முயற்சிகள் பல. பழம் பொருள்களைப் பாதுகாக்கின்ற மியூசியம் போன்றவைகள் தொடர்ந்து நல்லமுறையில் நடைபெறும் வழி காணப்பட்டுள்ளது. அறிவு இயல் வளர்ச்சிக்குத் தேவையான முறையில் ஒரு பிளானடோரியம் ஒன்று அண்மையில், ஏற்கெனவே இருந்த அரசு காலத்திலே பிர்லா நிறுவனம் தந்த அந்த நன்கொடையிலே உருவாகியிருக்கிறது. அறிவியல் துறையிலே ஓரளவுக்குச் சிந்திக்கக்கூடியவர்கள், புரிந்துகொள்ளக்கூடிய அளவில் 'வான் கோள் காட்சி அரங்கம்' இதுவரை



மூன்று அரங்கங்கள் நடைபெற்று இருக்கின்றன. இன்னும் தொடர்ந்து நடைபெறும். அது முழு நிறைவு உடையதாக இருக்கிறது. அதையொட்டி பெரிய அளவில் பெரியார் அறிவியல் காட்சி மண்டபம், ஏறத்தாழ 4 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டு வருகிறது. அதனுடைய தொடர் பணியாக, பிள்ளைகள், இளைஞர்கள் யாராக இருந்தாலும், அங்கே வைக்கப்பட்டிருக்கின்ற காட்சிப் பொருளைத் தொட்டுப்பார்த்து அந்த உணர்வோடுகூட அந்த அறிவு இயல் தெளிவு பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையில் அந்தக் காட்சிநிலையம் உருவாக்கப்படுகிறது. மேலும் தமிழ்ப்புலவர்களைப் பாராட்டுகின்ற வகையில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய 99வது பிறந்த நாள் வருகிற ஏப்ரல் 29ஆம் தேதி அன்று வருகிறது. அவருடைய கவிதைகளையும் நூல்களையும் அவருடைய அரும் நூல்களை எல்லாம் மொத்தமாக நாட்டுடைமையாக்க வேண்டுமென்று திரு. குமரிஅனந்தன் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். புரட்சிக்கவிஞர் குடும்பத்தைச் சேர்ந்த பாவேந்தர் மகன் திரு. மன்னர் மன்னன், அதைப்போல அவருடைய மகள் இருவர் ஆகியோர் அவர்களுடைய அருமைத் தந்தையார் புரட்சிக் கவிஞர் நூல்களை நாட்டுடைமையாக்குவதை தாங்கள் மனமார விரும்புவதாகவும், ஏற்கெனவே அதற்குப் பேச்சு வார்த்தை நடத்த வந்தபோது எங்களுடைய வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, ஆதலால் அதை ஒத்துக்கொள்ள முடியாமல் இருந்தோம் என்றும் இப்போது முதல்வராக விளங்கும் கலைஞர் அவர்கள் பாவேந்தர் பெருமையை அறிந்தவர் என்ற முறையில், எங்களுடைய வேண்டுகோளை ஏற்று, பாவேந்தர் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களிடம் பேசி, அவர்களுடைய இசைவைப் பெற்று, அதற்கு என்ன முறையில் உரிய நன்றிக் கடன் செலுத்த வேண்டுமோ அதைச் செலுத்தி நாட்டுடைமையாக்க முயற்சிக்கப்படுமென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

பாவேந்தர் பாரதிதாசனுடைய பிறந்த நாளில் இதுவரையில் தமிழக அரசால் பாவேந்தர் பெயரில் வழங்கப்பட்ட விருது கடந்த 2 ஆண்டுகளாக வழங்கப்பட வேண்டியதாக இருக்கிறது. இப்போது 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் 29க்கும் ஒருவருக்கு வழங்கப்படவேண்டும். இந்த அரசு பாவேந்தர் பெயரில் அந்த விருது வழங்குகிற கடமையில், பாவேந்தர் பரம்பரை என்று சொல்லத்தக்க தகுதிபெற்ற கவிஞர்களுக்கு வழங்க வேண்டுமென்ற அந்த முறையில் ஆர்வத்தோடு கடமையாற்ற முன் வருகிறது. 1987 ஆம் ஆண்டு பாவேந்தர் பெயரால் வழங்கப்படும் விருது, பாவேந்தரைப்போல அவருடைய வழியில்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1989 ஏப்ரல் 8

மிகச் சிறந்த காவியத்தைப் படைக்கிற ஆற்றல் பெற்ற கவியரசன் முடி அரசனுக்கு வழங்கப்பட இருக்கிறது. 1988ஆம் ஆண்டு, பாவேந்தர் விருது அவருடைய லட்சிய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய முறையிலே கவிதை எழுதக்கூடிய ஆற்றல் மிகுந்த கவியரசு பொன்னி வளவன் அவர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது. 1989 ஆம் ஆண்டு விருது புரட்சி வேந்தர் பாவேந்தர் அவர்களுடைய சிந்தனையைப் பின்னீடாகக் கொண்டு புதுக் கவிதை இயற்றுகிற கவிஞர் அப்துல் ரகுமான் அவர்களுக்கு வழங்கப்பட இருக்கிறது.

இந்த விழாவிலேயே தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் பெயரால் வழங்கப்பட வேண்டியதாக இருக்கும் கடந்த ஆண்டுகளின் விருதுகளையும் சேர்த்து வழங்கப்படும். இல்லையென்றால் செப்டம்பர் வரையிலே கடந்த கால திரு. வி.க. விருதுகள் காத்திருக்க நேரிடும், எனவே 1986 ஆம் ஆண்டுக்கான திரு.வி.க. விருது கவிஞர் கா. மு. ஷெரிப் அவர்களுக்கு வழங்கப்படும். 1987 ஆம் ஆண்டுக்கான விருது, தமிழில் நூற்றுக்கணக்கான நூல்களை, விஞ்ஞானக் கருத்து அடிப்படை நூல்களையும் தத்துவச்சிந்தனையுள்ள ஏடுகளையும் இலக்கிய ஏடுகளையும் வழங்கியிருக்கிற பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்களுக்கு வழங்கப்படும். 1988 ஆம் ஆண்டு திரு. வி.க. விருது மிகச் சிறந்த முறையில் விஞ்ஞானக் கருத்துக்களையும் அதைப்போல சமூக வாழ்வியல் கருத்துக்களையும் எல்லாம் தமிழிலே வெளியிடுவதோடு, ஆங்கிலத்திலே இருந்து ஏராளமான கருத்துக்களை மொழி பெயர்த்து கலைக் களஞ்சியம்போல வெளியிடுவதில் வல்லுநராக விளங்கி வரும் 'கூரியர்' ஏட்டினை வெளியிடுவதற்குக் காரணமாக இருக்கிற மணவை முஸ்தபா அவர்கட்கு வழங்கப்படும். மேலும் மற்றவற்றிக்கு எல்லாம் விடைசொல்லி முடிப்பதென்பது இயலாத காரியம். இருந்தாலும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

கல்வித் தரத்தை உயர்த்துவதற்குப் பலவகையில் பல்வேறு முனைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆசிரியர்களுடைய குறைகள் நீங்குதற்கு வழி காணப்படும். அதைப்போல உயர் நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாவது குறித்தும் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாவது குறித்தும் ஏதும் அறிவிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அது வழக்கமாக இந்த அறிக்கையிலே அறிவிக்கப்படுவதில்லை. எப்போதுமே, அது ஒரு ஆய்வுக் கட்டத்திலிருக்கும் நிலையில் இந்த ஆண்டு 30, 40 பள்ளிகள் என்று அறிவிக்கப்படுவது வழக்கம். மாவட்டந்தோறுமுள்ள ஒவ்வொரு பள்ளியினுடைய நிலையையும் ஆய்வு செய்து, பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக உள்ள பகுதி



1989 ஏப்ரல் 8] [பேராசிரியர் க. அன்பழகன்]

தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக உள்ள பகுதி, அடுத்த பள்ளியிலிருந்து நீண்ட தொலைவில் உள்ள பள்ளி, அதிக எண்ணிக்கையுள்ள மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் பள்ளி என்ற முறையில் 'பிரையாரிட்டி கன்சிடரேஷன்' என்ற முறையில் அது கருதப்பட்டு, அந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்படும் என்றாலும் கடந்த ஆண்டே அரசாங்கத்திலே போதுமான நிதியில்லை என்ற நிலையால் ஏறத்தாழ 20, 30 பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக, உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்துவதற்கு அப்படி உயர்த்துகிறபோது அந்த ஆண்டுக்காகும் ஆசிரியர் ஊதியச் செலவை அந்தப் பள்ளி நிர்வாகமே ஏற்றுக்கொள்வதாக உறுதிமொழி கொடுத்ததால், வழங்கியிருக்கிறார்கள். அந்த உறுதிமொழி அடிப்படையில் தொடங்கப்பட்ட 30, 40 பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அப்படிப்பட்ட மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில், உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில், முதல் ஆண்டு ஒரு வகுப்புக்கு ஆகிற செலவுத்தொகையை, அடுத்த ஆண்டு இரண்டு வகுப்புகளுக்கு ஆகிற செலவுத் தொகையை ஏற்றுக்கொள்கின்றனர் என்ற அடிப்படையில் ஏறத்தாழ 30, 40 பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. என்னிடம் புள்ளி விவரங்கள் இருக்கின்றன. நான் அதற்குள் சென்றால் நேரம் அதிகமாகும். கடந்த ஆண்டு இப்படி வழங்கியிருக்கிற நிலையில் இந்த ஆண்டு மேலும் ஏறத்தாழ 200 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக வேண்டியிருக்கிறபோது, முன்னுரிமை தருகிற வகையில் 30, 40 பள்ளிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டாலும் நிச்சயமாகப் பற்றாக்குறை இருக்கும். எனவே, தனியார் நிறுவனங்கள் அல்லது பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் அல்லது பொதுமக்கள் யார் முன்வந்து இந்த ஆண்டு ஆகிற செலவையும் அதற்கு அடுத்த ஆண்டு 2 வகுப்புகளுக்கும் ஆகிற செலவையும் ஏற்றுக்கொள்வதாக உறுதிமொழி கொடுக்கின்றார்களோ, அந்தப் பள்ளிகளை உயர்த்த இந்த அரசு முன்வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லாவற்றையும் விட, அடிப்படையில் கிராமங்களில் உள்ள பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்காக 'ஆப்பரேஷன் பிளாக் போர்டு' என்ற திட்டம் தமிழக அரசால் முழு அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டு—வேறு சில மாநில அரசுகள் இத்திட்டத்தைப் பயன்படுத்துவதில் தாமதம் இருந்தாலும்—தமிழகத்தில் உள்ள துவக்கப்பள்ளிகளில் ஏறத்தாழ 100க்கு 50 பள்ளிகள் இன்னும் ஆறு திங்களில்—தொடக்கப்பள்ளி முதல் நடுநிலைப்பள்ளி வரை இந்தத் திட்டத்தின் அடிப்படையில்—ஒரு வகுப்பு அறை உள்ள பள்ளிக்கூடமாக இருந்தால் மற்றொரு அறை கட்டப்படவும் அங்கே ஒரு சிறிய நூலகம் ஏற்படுத்தவும் அங்கே அவர்களுக்குத் தேவையான பெஞ்ச், நாற்காலி, மேசை போன்றவைகளை அளிக்கவும், பிளாக் போர்டு மட்டுமல்லாமல்

அவசியமான விஞ்ஞானக் கருவிகள் வழங்கவும் உயர்நிலைப்பள்ளிகளுக்குக் கூட ஒரு சிறிய விஞ்ஞானக் கூடம் கிடைக்க தேவையான நடவடிக்கைகளையும் தமிழக அரசு மிகத் தீவிரமாக மேற்கொண்டிருக்கிறது. இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் நானே பார்த்து மகிழக்கூடிய வகையிலே இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது தொடர்ந்து, விரைந்து, எந்தவிதமான சுணக்கமும் இல்லாமல் நிறைவேற்றப்படும். அப்படி நிறைவேற்றப்படுகிறபோது மேலும் தரமான கல்வி கிடைக்க நாம் வழி செய்தவர்களாவோம் என்ற நம்பிக்கையோடு, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன எல்லாக் குறைகளும், கருத்துக்களும் எந்த வகையிலும் புறக்கணிக்கப்படமாட்டாது, அவை அனைத்தும் ஆய்வில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவை அத்தனைக்கும் பதில் அளிக்க வேண்டுமானாலும் என்னால் முடியும். ஆனால் உங்களால் மேலும் தாங்க முடியாது என்றெண்ணுகிறேன். ஏனென்றால் பசி நேரத்திலே உங்களை உட்கார வைத்துக் கொண்டிருப்பது முறையல்ல. அறிவுக்காக பசியைப் பொறுக்கலாம் என்றாலும் கல்வி பற்றிய விளக்கத்திற்காக தாங்கிக் கொண்டிருக்க முடியாது என்ற காரணத்தால், உங்கள் நேரத்தை அதிகம் எடுத்துக்கொள்ள முடியாத ஒரு கால கட்டத்தில் இந்தக் கல்வி மானிய வேண்டுகோளை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யு.ஜி.சி. பரிந்துரை அடிப்படையில், பல்கலைக் கழகங்களிலே பணியாற்றுகிற பேராசிரியர்களின் ஓய்வுபெறும் வயதை 60 ஆக உயர்த்தலாம் என்று செய்யப்பட்ட பரிந்துரையை மத்திய அரசு ஏற்று அதற்கான அரசாணையை, ஜி. ஓ. வை வெளியிட்டு, பல மாநிலங்களிலே அது பின்பற்றப்பட்டு வருகிறது. நம்முடைய மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மத்தியிலும் எல்லோருக்கும் வயது வரம்பு 58 என்று இருந்தாலும் அலத 60 ஆக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை பல நாட்களாக இருந்து வருகிறது. பொதுவாக ஓய்வு பெறுகிற வயது 58 என்று இருந்தாலும், நீதிபதிகள், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போன்ற பல்வேறு பிரிவுகளில் விதிவிலக்கு ஏற்கெனவே இருக்கிறது. எனவே மத்திய அரசு வெளியிட்டிருக்கிற அரசாணையின் அடிப்படையிலே பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்களின் ஓய்வு பெறும் வயதை 58 லிருந்து 60 ஆக உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இது ஒன்று, அடுத்தது, புதிதாக தமிழகத்தில் சுமார் 100 பள்ளிகளை ஆரம்பிக்க இருக்கிறீர்கள். அதையெல்லாம் கட்சிக் கண்ணோட்டத்துடன் இல்லாமல், எல்லாத் தொகுதிகளிலும் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆதிதிராவிடர் பள்ளிகள் 50 மற்ற வகைப் பள்ளிகள் 50 என்று 100 பள்ளிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட இருப்பதால் அவற்றை



எல்லாத் தொகுதிகளிலும் ஆரம்பிக்க வேண்டும். அதற்கான உத்தரவாதம் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் பரிந்துரை எப்படி இருக்கும் என்று எங்களுக்கும் தெரியும். நாங்களும் ஆட்சியில் இருந்திருக்கிறோம். (சிரிப்பு) பொதுவாக அதிகாரிகளின் சிபாரிசு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிகாரிகளைப் பற்றி மிக அருமையாக அறிந்து வைத்திருக்கிறீர்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பொதுவாக என்ன செய்வார்கள் என்றால் ஆளும் கட்சியில் இருப்பவர்கள்தான் கேட்பார்கள் என்று வற்புறுத்துவார்கள். இருந்தாலும் எதிர்க்கட்சியினரின் தொகுதிகளையும் சேர்த்து அரசாணை வெளியிடப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக ஆசிரியர்கள் அல்லது கல்லூரி ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயதை 58லிருந்து 60 ஆக ஆக்க முடியுமா என்பது வெறும் 'எண்' பிரச்சினையல்ல. அது ஒரு சமுதாயப் பிரச்சினை. அந்தச் சமுதாயப் பிரச்சினையை ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு கோணத்தில் அணுகும். எனவே அதைப்பற்றி இந்த அரசு முறையாக ஆய்ந்து பார்த்துத்தான் முடிவு எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, புதிதாக வழங்கப்படுகிற பள்ளிகளை ஆளும் கட்சி என்ற கண்ணோட்டத்தில் ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளுக்கு மட்டும் வழங்கப்படாமல் எல்லோருக்கும் வழங்கப்படுமா என்று கேட்டார்கள். முந்தைய அரசினுடைய முறைகளை இந்த அரசு பின்பற்றும் என்று தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு மேல் விவாதம் இல்லை. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(பிற்பகல் 2-30)

திருவாளர்கள் சி. கோவிந்தராஜன், ஆர். சிங்காரம், ஜி. பழனிச்சாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் எனது வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறேன். சட்டக் கல்லூரியில் 'பிரேக் சிஸ்டத்தை' நீக்க

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1989 ஏப்ரல் 8

வேண்டுமென்று மாணவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அதற்கு ஏதாவது அறிவிப்பு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறீர்களா என்று கேட்டால், உறுப்பினர் ஊடே ஏதாவது பேசினால், பேரவைத் தலைவர் ஏதாவது கோபமாகத் திட்டினால் வருத்தப்படக்கூடாது. ஒரு வாய்ப்புக் கொடுத்தால் அந்த வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்று இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தக்கூடாது. உங்களுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா, இல்லையா?

திரு. எஸ். டி. உகம்சந்த் : இல்லை.

திரு எஸ். டி. உகம்சந்த் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 899,72,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 10—4—1989 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

47. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1979—80 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).



1989 ஏப்ரல் 8]

48. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1980—81 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்).

49. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

50. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1982—83 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீ பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

51. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1983—84 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை, [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

52. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1987-88ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

54. கோரிக்கை எண். 17—தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு—1989—90. (தமிழ், ஆங்கிலம்).

55. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி பற்றிய செயல் முறைத் திட்டம், 1989—90. (ஆங்கிலம்).

56. தமிழ்ப் பல்கலைக் கழகம்—ஓர் அறிமுகம். 1989 (தமிழ்)

57. அண்ணா பல்கலைக் கழகம்—ஒரு முகப்புரை. (தமிழ், ஆங்கிலம்).

58. மதுரை காமராசர் பல்கலைக் கழகம்—அமைப்பு—வளர் நிலை 1966—1989. (தமிழ், ஆங்கிலம்.)

59. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

[1989 ஏப்ரல் 8

60. 'பாரதியார் பல்கலைக் கழகம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

61. 'பாரதிதாசன் பல்கலைக் கழகம்' என்ற புத்தகம். (தமிழ் ஆங்கிலம்).

62. 'அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

63. அழகப்பா பல்கலைக் கழகத்தின் செயல் விளக்க அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

64. சென்னைப் பல்கலைக் கழகம் பற்றிய தகவல் சிற்றேடு. (தமிழ், ஆங்கிலம்.)

65. கோயம்புத்தூர், அவிநாசிலிங்கம் மனையியல் உயர்கல்வி பெண்கள் நிறுவனம் பற்றிய தகவல் இதழ். (தமிழ், ஆங்கிலம்).

66. சென்னை கணித அறிவியல் பற்றிய ஒரு சுருக்க அறிக்கை ஆங்கிலம்.)

67. திருச்சி, வட்டார பொறியியல் கல்லூரி பற்றிய சிறு குறிப்பு. (ஆங்கிலம்).

68. தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம்—ஒரு கண்ணோட்டம். (தமிழ்)

69. 'பெரியார் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம்' என்கிற புத்தகம். (ஆங்கிலம்.)

V2ll,31 N89
1N89.8.3
600 009 ★ 138694

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House. 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.